# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 கதிர் 288 ஆவணி 25ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 10 செப்ரெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 30
பக்கங்கள்: 56


## கடமையிலிருந்த சிப்பாய் துப்பாக்கியுடன் மாயம்!

*பலாலி படைத் தலைமையகத்தில் சம்பவம்*

யாழ்ப்பாணம், செப்.10

பலாலி இராணுவ முகாமில் கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கியுடன் மாயமாகியுள்ளார். படைத் தலைமையகத்தில் உள்ள காவலரணில் கடமையில் இருந்தவரே காணாமல் போயுள்ளார். நேற்று அதிகாலை பதில் கடமைக்கு வேறொரு சிப்பாய் சென்றபோதே அவர் மாயமானது கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக இராணுவத் தரப்பால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்படவில்லை என்று கூறப்படுகின்றது. காணாமல் போயுள்ள சிப்பாய் தொடர்பான விவரங்களும் வெளியிடப்படவில்லை.

காணாமல் போயுள்ள சிப்பாயைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன என்று பலாலிப் படைத் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற-8)

## பெற்றோல் பரல் வெடித்ததில் தந்தை, மகனுக்கு எரிகாயம்

யாழ்ப்பாணம், செப். 10

சேகரித்து வைத்திருந்த பெற்றோல் பரல் வெடித்தமையால் தந்தையும் மகனும் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் விசுவமடுவி லுள்ள கடை ஒன் >> 53



சபாஷ் சரியான போட்டி...



## மல்வத்து பீட நாயக்கருடன் திடீரென நேற்று விக்கி சந்திப்பு

*தான் இனவாதி அல்லன் எனவும் எடுத்துரைப்பு*

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 10

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவினர் நேற்று முற்பகல், மல்வத்து பீடத்தின் மகா நாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கலவைச் சந்தித்தனர்.

"கூட்டாட்சி என்பது நாட்டைப் பிரிப்பது அல்ல. அது நாட்டை ஒன்றுபடுத்துவது. இதனை மல்வத்துபீட மகாநாயக்க தேரருக்கு நான் எடுத்துக் கூறினேன்" என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் மாகாண அமைச்சர்கள் க.சிவநேசன், அனந்தி சசிதரன் ஆகியோரும் பங்கேற்றனர். இந்தச் சந்திப்பில் தமிழ் மக்கள் பேரவையின் சார்பில் ஒருவர் பங்கேற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்பின்போது மல்வத்த மகாநாயக்கருக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் தான் ஒரு இனவாதியல்ல என்பதை எடுத்துரைத்ததுடன், தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்துத் தெளிவுபடுத்தினார்.

"வடக்கில் 89ஆயிரம் குடும்பத்தை தலைமை தாங்கும் பெண்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு தொழில் வசதிகள் இல்லை. வாழ்வாதாரம் இல்லாத நிலையில் உள்ளனர். இராணுவத்தினரின் உதவியுடன் தென்னிலங்கை மீனவர்கள் வடக்கில் மீன்பிடியில் ஈடுபடுகின் >> 53

## அதிகாரங்கள் பகிரப்பட்டால் நிறைவேற்று அரச தலைவர் முறைமை கட்டாயம் தேவை

*சு.கவின் நிலைப்பாடு இது*

கொழும்பு, செப். 10

"அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாகப் பகிரப்படும் அதிகாரங்கள் கண்காணிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட வேண்டும். அதிகாரங்களைப் பகிர்ந்துவிட்டு சும்மா பார்த்துக்கொண்டிருக்கமுடியாது. அதிகாரத்தை நிர்வகிப்பதற்கு அரச தலைவர் நிறைவேற்று முறைமை தேவை. அதனைத் தொடரவேண்டும் என்று நாம் கோருவதற்கும் இதுதான் காரணம்"

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலரும், அமைச்சருமான துமிந்த திசநாயக்க தெரிவித்தார்.

சிங்களத் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்புத் திருத்தத்தின்போது மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம். 13ஆம் திருத்தச் சட்டம் திருத்தப்பட வேண்டும். நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமையை நீக்குதல், புதிய தேர்தல் முறைமையைக் கொண்டு வருதல் மற்றும் மாகாண >> 53

## கிளிநொச்சியில் குழு மோதல் வாள்வெட்டில் ஒருவர் காயம்

*மோட்டார் சைக்கிள் ஒன்றும் தீக்கிரை*

கிளிநொச்சி, செப். 10

கிளிநொச்சி பாரதிபுரத்தில் இரு கும்பல்களுக்கிடையேயான மோதலைத் தொடர்ந்து வாள் வெட்டு நடத்தப்பட்டது. அதில் படுகாயமடைந்த ஒருவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மோட்டார் சைக்கிள் ஒன்றும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது.



இந்தச் சம்பவங்கள் கிளிநொச்சி, பாரதிபுரம் சாலையில் நேற்று மாலை 5.30 அளவில் இடம்பெற்றன. >> 53

## தவராசாவை விமர்சித்ததால் விக்கிக்கு டக்ளஸ் பாராட்டு

யாழ்ப்பாணம், செப். 10

வடக்கு மாகாண எதிர்கட்சித் தலைவர் சி.தவராசாவை விமர்சித்து மாகாண சபையில் உரையாற்றியமைக்காக நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் செயலாளருமான டக்ளஸ் தேவானந்தா அலைபேசியில் தொடர்பு கொண்டு பாராட்டுத் தெரிவித்தார். இதனை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உறுதிப்படுத்தினார்.

வடக்கு மாகாண சபையின் வினைத்திறன் தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா, ஜுலை மாதம் 21ஆம் திகதி உரையாற்றியிருந்தார். >> 53

## 3 லட்சம் ரோஹிங்யாக்கள் பங்களாதேஷில் தஞ்சம்

டாக்கா, செப். 10

மியன்மாரில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு நடந்த வன்முறையின் காரணமாக இதுவரை 3 லட்சம் ரோஹிங்யா முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேறி பங்களாதேஷுக்கு புலம் பெயர்ந்துள்ளதாக ஐ.நா. தெரி >> 53

## செயலாளர்களை மாற்றுவதில் வடக்கு அமைச்சர்கள் மும்முரம்

*மூன்றாம் தரப்புகள் ஊடாக ஆளுநருக்கு அழுத்தம்*

யாழ்ப்பாணம், செப். 10

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் சிலர் தமது அமைச்சுச் செயலாளர்களை மாற்றம் செய்யுமாறு ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அறிய முடிகின்றது.

வடக்கு மாகாணத்தில் சில வாரங்களுக்கு முன்னர் அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டிருந்தது. அமைச்சர்களின் அமைச்சுப் பொறுப்புக்களும் மாற் >> 53

## வடமாகாண சபைக்கு 2018இல் ரூபா 10,310 மில்லியன் தேவை

*கொழும்பு அரசிடம் கோரிக்கை முன்வைப்பு.*

கொழும்பு, செப். 10

அடுத்த ஆண்டு அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு வட மாகாணத்துக்கு 10 ஆயிரத்து 310 மில்லியன் ரூபா தேவை என்றும், அந்த நிதியை வழங்குமாறும் கொழும்பு அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு அரசின் நிதி அமைச்சால் எதிர்வரும் நவம்பர் மாதம் 9ஆம் திகதி வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதற்குமுன்னதாகஒவ்வொரு மாகாண சபைகளும் அடுத்த ஆண்டுக்கு எவ்வளவு நிதி தேவை என்ற கோரிக்கையை கொழும்பு அரசுக்கு முன்வைக்கவேண்டும். அதனடிப்படையில் வடக்கு மாகாண சபை 10 ஆயிரத்து 310 மில்லியன் ரூபாவை கோரிக்கையாக முன்வைத்துள்ளது. கடந்த ஆண்டு 10 ஆயிரத்து 200 மில்லியன் ரூபாவை வடக்கு அரசு கோரிக்கையாக >> 53




# மாந்தை மேற்கில் மட்டும் 5,300 ஏக்கர் காணிகள் திணைக்களங்களின் வசம்

## பிரதேச செயலகத்தில் சிறப்பு விசாரணை

மன்னார், செப். 10
மன்னார் மாவட்டம் மாந்தை மேற்குக் கிராமத்தில் இரு திணைக்களங்களால் கையகப்படுத்தப்படுள்ள அரச காணிகளை விடுவிப்பது தொடர்பான சிறப்புக் கூட்டம் நேற்று மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.



தனியார் மற்றும் அரச காணிகளை வனவளத்திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் கையகப்படுத்தியுள்ளனர். அவற்றை விடுவிப்பது தொடர்பாக, அரசதலைவரின் உதவிச் செயலாளர் பொரளஸ் தலைமையில் நேற்றுச் சிறப்பு ஆராய்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் பாப்பாமோட்டை முதல் தேவன்பிட்டி வரையான மக்களின் வாழ்வாதாரக் காணிகளை வன ஜீவராசிகள் திணைக்களம் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அபகரித்துள்ளது. அதில் மக்களுக்குச் சொந்தமான 3 ஆயிரத்து 150 ஏக்கர் காணிகளும், அதேபோன்று 2 ஆயிரத்து 150 ஏக்கர் காணியை மக்கள் போர் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் காடு வளர்ந்த காரணத்தால் வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டது.

அத்துடன் பரப்புக்கடந்தானில் 250 குடும்பங்களுக்கு அரை ஏக்கர் வீதம் வழங்கப்பட்ட 125 ஏக்கர் காணியை தனியார் ஒருவரும் அபகரித்துள்ளார். இது தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

அதன் பிரகாரம் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் மட்டும் 5 ஆயிரத்து 425 ஏக்கர் காணிகளின் விவரங்களை அதிகாரிகள் ஆராய்ந்தனர். அத்துடன் காணிகளையும் நேரடியாகப் பார்வையிட்டனர்.

பரப்புக்கடந்தான் கிராமத்தில் 2011 ஆம் ஆண்டு தனி ஒருவர் 125 ஏக்கர் காணிகளை கையகப்படுத்தி, வேலி அமைத்து பெரியதோர் பண்ணை நடத்தி வருகின்றார். இவ்வாறு நடத்துபவரின் பெயரில் நூறு ஏக்கருக்கான காணி அனுமதிப்பத்திரம் உள்ளது தொடர்பில் வழக்கு இடம்பெறுகிறது. அதனைச் சட்டப்பிரகாரம் அணுகுவதாக முடிவெடுக்கப்பட்டது. அதேநேரம் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றின் பிடியில் உள்ள காணிகள் தொடர்பில் ஆராய்ந்ததன் அடிப்படையில், அரச தலைவருக்கு அறிக்கையிட்டு, அதன் முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும் என்று அதிகாரிகள் மக்கள் முன் தெரிவித்தனர். (ஐ-10, 101)

# கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லத்தில் துப்புரவுப்பணி

கொழும்பு.செப்.10
அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் கஞ்சிகுடிச்சாறு பிரதேசத்தில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லம் நேற்றுத் துப்புரவு செய்யப்பட்டது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் முன்னாள் போராளிகளால் தொண்டுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

"கடந்த 1993 ஆம் ஆண்டு தொடக்கம் 2006ஆம் ஆண்டு வரை இந்த மாவீரர் துயிலும் இல்லத்தில் தீபம் ஏற்றி, நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்று வந்தன. 2006ஆம் ஆண்டுடன் நினைவேந்தல்கள் இடம்பெறவில்லை. இந்த இல்லத்தில் விதைக்கப்பட்டுள்ள சுமார் 700 மாவீரர்களுக்கு நினைவேந்தல் நிகழ்வை நடத்தத் தீர்மானித்துள்ளோம். " என்று அம்பாறை மாவட்ட ஜனநாயகப் போராளிகள் கட்சியின் இணைப்பாளர் எஸ். சுதாகரன் தெரிவித்தார். (ஐ)




வடமராட்சி மாலுசந்திப் பகுதியில் டிப்பர் வாகனம் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது. வீதியை விட்டு விலகிய வாகனம் வீதியின் அருகே தடம் புரண்டு விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது. அதில் பயணித்தவர்களுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)



# 10 கிராமங்களுக்குத் தண்ணீர் தாங்கிகள்

மட்டக்களப்பு,செப்.10
மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேச செயலகத்துக்கு உட்பட 10 கிராமங்களுக்கு நேற்று தண்ணீர் தாங்கிகள் வழங்கப்பட்டன. வெல்லாவெளி மாரியம்மன் ஆலய முன்றிலில் பொதுமக்களிடம் அவை கையளிக்கப்பட்டன.

காந்திபுரம், களுமுந்தன் வெளி, வெல்லாவெளி, விவேகானந்தபுரம், சுரவணையியூர், வேற்றுச் சேனை, இளைஞர் விவசாயத் திட்டம், புன்னைக்குடா, புலாவெளி வேம்பு, தும்பங் கேணி ஆகிய 10 கிராம மக்களுக்கு அவை வழங்கப்பட்டன.

நோர்வே தமிழ் உறவுகளின் அனுசரணையுடன் சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான தண்ணீர் தாங்கிகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பிரதேச இணைப்பாளர் பா.குமாரசிங்கம் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. அதில் கட்சியின் கட்சி மாவட்ட இணைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் , பிரதேச மக்கள் கலந்து கொண்டர். (ஐ)






# வவுனியாவில் அமைதி விழிப்புணர்வு ஊர்வலம்

வவுனியா. செப். 10
மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் அமைதி விழிப்புணர்வு ஊர்வலம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. வவுனியா பட்டாணிச்சூர் பகுதியிலிருந்து ஆரம்பமான ஊர்வலம் மன்னார் வீதி , ஏ9வீதி, கண்டி வீதி ஆகிய வீதிகள் ஊடாகச் சென்று வவுனியா சைவ பிரகாச மகளிர் கல்லூரி முன்பாக நிறைவடைந்தது.

மழைக்கு மத்தியில் நடைபெற்ற ஊர்வலத்தில் இளைஞர்கள் துவிச்சக்கர வண்டிகளிலும், நடைபவனியாகவும் சென்றனர்.

ஊர்வலத்தைத் தொடர்ந்து ஒன்றுகூடல் நிகழ்வும் இடம்பெற்றது.

சர்வதேச சமாதானப் பேரவையின் வடக்கு மாகாண இணைப்பாளர் சரண்ராஜ் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

சர்வதேச சமாதான பேரவையின் ஏற்பாட்டில் இந்த ஊர்வலம் நடைபெற்றது. பேரவையின் பொதுச்செயலாளர் வைத்தா சூலா ஜெயரத்தின, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ந.சிவசக்தி ஆனந்தன் மற்றும் காதர் மஸ்தான், சமாதான பேரவையினர் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-10, 402)



# கட்டுப்பாட்டை இழந்து மோ.சைக்கிள் விபத்து

## இருவர் படுகாயம்

மட்டக்களப்பு, செப்.10

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள், வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் இளைஞர்கள் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து மட்டக்களப்பு கல்முனை நெடுஞ்சாலையில் தேத்தாத்தீவுக்கும் களுதாவளைக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்றுக் காலை நடந்தது.

திருகோணமலையிலிருந்து கல்முனை நோக்கிச் சென்று கொண்டிருந்த கல்முனை டிப்போவுக்குச் சொந்தமான இ.போ.ச. பேருந்து பயணிகளை ஏற்றுவதற்காக வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்தது. அதே வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பேருந்துடன் மோதி விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

காத்தான்குடி டீன் வீதியைச் சேர்ந்த இளைஞர்கள் இருவரே விபத்தில் படுகாயமடைந்தனர். அவர்கள் களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். விபத்துத் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-46)

## பொலிஸ் உப பரிசோதகர் திடீர் உயிரிழப்பு

முள்ளியவளை பொலிஸ் நிலைய உப பரிசோதகர் நேற்று திடீரென உயிரிழந்தார். முள்ளியவளை பிரதேசத்தில் உப பரிசோதகராகப் பணியாற்றும் டி.எம்.ஐ.பண்டார நாயக்க என்பவரே உயிரிழந்தார். உடல் சுகவீனம் காரணமாக மாவட்ட மருத்துவமனைக்குச் சென்ற அவர், அங்கு மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் மீண்டும் பொலிஸ் விடுதிக்குத் திரும்பினார். சிறிது நேரம் கழித்து அவருக்கு உணவு கொடுப்பதற்காக சக உத்தியோகத்தர் விடுதிக்குச் சென்றார். அங்கு அவர் நிலத்தில் வீழ்ந்து கிடந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. மாஞ்சோலை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

# நடமாடும் சேவை மன்னாரில் ஆரம்பம்




மன்னார், செப்.10

அரச தலைவர் நடமாடும் சேவை ( நிலமெஹெவர) தேசிய நிகழ்ச்சித்திட்டம் மன்னாரில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

மன்னார் அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையில் இந்த நடமாடும் சேவை நடைபெற்றது.

அதில் பிறப்புச் சான்றிதழ் வழங்கல் ,தேசிய அடையாள அட்டை வழங்கல், ஓய்வூதியப் பிணக்குகள் ,சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல் , மூக்குக் கண்ணாடி வழங்கல் , ஆலோசனைச் சேவை, காணிப்பிணக்குகள், முதியோர் அடையாள அட்டை வழங்கல் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டன.



இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள், சுய தொழில் உதவித்திட்டங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள் என்பன வழங்கப்பட்டன.

மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட பல ஆயிரக் கணக்கானவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் மன்னார் பிரதேச செயலகம் என்பன இணைந்து நடமாடும் சேவையை ஏற்பாடு செய்தன. மன்னார் மாவட்டச் செயலர் எம்.வை.எஸ். தேசப்பிரிய தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

அதில் விருந்தினர்களாக கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன், நாடாளுமன்ற குழுக்களின் பிரதி அவைத்தலைவர் செல்வம் அடைக்கலநாதன்,வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன், உள் நாட்டு அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

நானாட்டான் பிரதேசத்தில் இன்று நடமாடும் சேவை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10, 56)



# ஆன்மிகப் பாதயாத்திரை மாங்கேணியில் ஆரம்பம்

மட்டக்களப்பு, செப். 10

மட்டக்களப்பு வெருகலம்பதி சித்திர வேலாயுதர் ஆலய உற்சவத்தை முன்னிட்டு ஆன்மிகப் பாத யாத்திரை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன் ஐந்தாம் நாள் யாத்திரை மாங்கேணியில் இருந்து நேற்று ஆரம்பமானது.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் தலைமையில், கடந்த செவ்வாய்க்கிழமை மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து யாத்திரை ஆரம்பமானது.

ஆறு நாள்களைக் கொண்ட ஆன்மிக பாதயாத்திரை இன்று மாலை ஆலயத்தைச் சென்றடையவுள்ளது.

இந்தப் பாதயாத்திரையில் ஐந்நூறுக்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை இதனை ஏற்பாடு செய்துள்ளது. (ஐ-10)

# உணவகங்களுக்குப் பூட்டு

அம்பாறை, செப்.10

அம்பாறை பொத்துவில் பிரதேசத்தில் நான்கு உணவகங்கள் நேற்று முதல் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

பொத்துவில் பிரதேச சுகாதார அதிகாரி மருத்துவர் ஏ.எம். இஸ்ஸதீன் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் வெதுப்பகங்கள் போன்றவற்றில் நேற்று திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

அதில் நுகர்வுக்குப் பொருத்தமில்லாமையிலும், உணவுச் சுகாதாரம் பேணப்படாமை, கழிவுகளை ஒழுங்கான முறையில் அகற்றப்படாமை, வியாபார அனுமதிப் பத்திரம், வைத்திய சான்றிதழ் பெறப்படாமை போன்ற குறைபாடுகளுடன் 4 உணவகங்கள் அடையாளப் படுத்தப்பட்டன.

அதனையடுத்து நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக நான்கு உணவகங்களும் மூடப்பட்டன. குறைபாடுகளைச் சீர் செய்த பின்னரே மீளத் திறப்பதற்கு நீதிமன்றம் அனுமதித்துள்ளது. (ஐ - ரி2)





இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சமையலறைக்கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. தெல்லிப்பழைப் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்தார். இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் 15 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. (ஐ)




# அபிவிருத்தியில் தமிழர் தாயகம் புறக்கணிப்பு

## வியாழேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு



மட்டக்களப்பு, செப். 10

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் தமிழ் பிரதேசங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. முஸ்லிம் பிரதேசங்கள் மேடாகவும், தமிழ் பிரதேசங்கள் பள்ளமாகவும் காணப்படுகின்றன. இந்த நிலமை மாற்றப்பட வேண்டும். இனங்களுக்கு இடையில் பாகுபாடுகளைக் காட்டாமல் அனைவருக்கும் ஒருமித்த அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ச.வியாழேந்திரன் தெரிவித்தார்.

எல்லைக்கிராமங்களை ஏறாவூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் கீழ் இணைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்ற பகுதிகளைக் கபளீகரம் செய்யும் அல்லது மாற்ற முற்படும் நடவடிக்கைகளை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஏறாவூர் நகர சபைக்குட்பட்ட முஸ்லிம் சமூகம் வாழுகின்ற பகுதிகள் நகர சபையால் மிகவும் சிறப்பாகப் பராமரிக்கப்படுகின்றன. ஆனால் ஏறாவூர் நகர சபைக்குள் வருகின்ற தமிழ் கிராமங்களில் வீதிகளுக்கு விளக்குகள் இல்லை. கால்வாய்கள் துப்புரவில்லை. குப்பைகள் ஒழுங்காக அகற்றப்படுவதில்லை. வீதிகள் சீரமைக்கப்படவில்லை. அபிவிருத்தியில் முஸ்லிம் பிரதேசங்கள் மேடாகவும் தமிழ் பிரதேசங்கள் பள்ளமாகவும் காட்சியளிக்கின்றன" என்றார்.

மட்டக்களப்பு செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஏறாவூர் நான்காம் குறிச்சி, ஐந்தாம் குறிச்சி மற்றும் எல்லை நகர் கிராமங்களை, ஏறாவூர் நகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் கீழ் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அந்தப் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏறாவூர் ஐந்தாம் குறிச்சியிலிருந்து மட்டக்களப்பு - திருமலை பிரதான வீதியூடாகப் பேரணியாகச் சென்ற மக்கள், செங்கலடி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக முன்றிலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "பேச்சிலோ இணக்க அரசியல் செயலிலோ பிணக்கு அரசியல், தற்போதுள்ள நடைமுறையே எமக்கு வேண்டும், எல்லை நகர் வைத்திய நிர்வாக எல்லை செங்கலடியிலேயே இருக்கட்டும், நல்லாட்சி அரசே மக்கள் விருப்பத்துக்கு மாறாகச் செயற்படாதே, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சே இது உங்களின் கவனத்துக்கு" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை செங்கலடி சுகாதார மருத்துவ அதிகாரி இ.சிறிநாத்திடம் கையளித்தனர். (ஐ-10, 47)

## தங்க நகைகளுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு,செப்.10

டுபாயிலிருந்து சட்ட விரோதமாக இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட ஒரு தொகை தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கையிலிருந்து டுபாய்க்குச் சென்ற இலங்கைக் குடிமகன் ஒருவர், இவ்வாறு தங்க நகைகளைக் கடத்தியுள்ளார். சந்தேக நபரிடமிருந்து 3 தங்கச் சங்கிலிகளும், 13 காப்புகளும் கைப்பற்றப்பட்டன.

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்து சுங்கப் பிரிவினர் சந்தேகநபரைக் கைது செய்தனர். சந்தேக நபருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ)



## சுற்றுலா சென்ற பேருந்து விபத்து; மாணவர்கள் 13 பேர் படுகாயம்

கொழும்பு,செப்.10

கொழும்புக்குச் சுற்றுலா சென்ற பாடசாலை மாணவர்கள் பயணித்த பேருந்து, விபத்தில் சிக்கியது. அதில் 13 மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

இந்தக் கோர விபத்து தம்புள்ள - குருணாகல பிரதான வீதியிலுள்ள மல்சிறிபுர கொஸ்கல்ல பிரதேசத்தில் நேற்று அதிகாலை நடந்தது.

இரண்டு பேருந்துகள், மற்றும் வான் ஒன்றும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

கெக்கிராவயிலிருந்து கொழும்பு நோக்கிச் சுற்றுலா சென்று கொண்டிருந்த பாடசாலை மாணவர்கள் பயணித்த பேருந்தும், கந்தளாயிலிருந்து நோயாளர் ஒருவரை கொழும்புக்கு ஏற்றிச் சென்று கொண்டிருந்த வான் ஒன்றும், கொழும்பிலிருந்த பொலன்னறுவை நோக்கிப் பயணித்த பேருந்தும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டது.

விபத்தில் காயமடைந்த மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் மூவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

### விபத்தில் ஒருவர் படுகாயம்

கிளிநொச்சி, செப்.10

பளை, முல்லையடியில் நடந்த விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார். அவர் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இந்த விபத்து நேற்று மு.ப. 9 மணியளவில் நடந்துள்ளது. கிளிநொச்சியில் இருந்து பேருந்தில் வந்தவர் பேருந்தில் இருந்து இறங்கி வீதியைக் கடக்க முயன்ற போது எதிர்த் திசையில் வந்த பேருந்து மோதியது என்று தெரிவிக்கப்படுகின்றது.

துரைசிங்கம் உதயசூரியன் (வயது 40) என்பவரே உயிரிழந்துள்ளார். விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுள்ளனர். (ற-6)



## கடவையைக் கடந்த டிப்பர் ரயிலுடன் மோதி விபத்து

### இருவர் படுகாயம்



மட்டக்களப்பு,செப்.10

தொடருந்துக் கடவையைக் கடக்க முயன்ற சிறிய ரக டிப்பர் வாகனத்தை தொடருந்து மோதியது. அதில் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து மட்டக்களப்பு ஏறாவூர் தேவபுரம் தொடருந்துக் கடவையில் நேற்று அதிகாலை நடந்து.

வெதுப்பகம் ஒன்றின் டிப்பர் வாகனம் தொடருந்துக் கடவையைக் கடக்க முற்பட்ட போது விபத்து ஏற்பட்டது.

விபத்தில் சாரதி மற்றும் உதவியாளர் காயமடைந்தனர். அவர்கள் மட்டக்களப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

விபத்து இடம்பெற்ற நேரம் தொடருந்துக் கடவையில் பாதுகாப்புக் கடமையில் எவரும் இருக்கவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## விபத்தில் இருவர் உயிரிழப்பு மைத்திரியின் சகோதரர் சரண்

கொழும்பு,செப்.10

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்தனர். அவர்களை மோதிய வாகனம் தலைமறைவாகியது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்து பொலனறுவை ஹிங்குரங்கொட வீதியில் அத்துமல்பிட்டியப் பகுதியில் நேற்று அதிகாலை நடந்தது.

பொலனறுவையிலிருந்து சகோதரர்கள் இருவர் பயணித்த மோட்டார் சைக்கிளை எதிரே வந்த வாகனம் மோதியது எனத் தெரிவிக்கப்பட்டது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் பொலனறுவை எதுமல்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த ஹேரத்(வயது 48), புத்தாச (வயது 58) ஆகியோரே உயிரிழந்தனர்.

விபத்தை ஏற்படுத்திய வாகனம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். அதே வேளை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் இளைய சகோதரர் லால் சிறிசேன பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். விபத்து ஏற்படுத்திய வாகனத்தைத் தானே செலுத்தியதாக அவர் ஒப்புக்கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் அவரைக் கைது செய்தனர். பொலனறுவைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# அதிவேக நெடுஞ்சாலை திட்டம் எம்மீது சேறு பூசச் சதி

## ரணில் கவலை

கொழும்பு, செப். 10

மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் குறித்து எங்கள் மீது சேறுபூசும் வகையில் தனியார் இலத்திரனியல் ஊடகம் தவறான பரப்புரையை முன்னெடுத்து வருகின்றது. இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியே நிறுவனம் ஆரம்பத்தில் முன்வைத்த தொகையைவிடவும் 25 பில்லியன் ரூபா குறைவாக இந்தத் திட்டத்தை வழங்குவதற்கு எம்மால் முடிந்திருந்தது. இலங்கை அரசும் ஜப்பான் அரசும் தலையிட்டிருந்தமையால் இந்தத் திட்டம் தொடர்பில் சாதகமான மாற்றங்கள் பலவற்றை ஏற்படுத்திக்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்திருந் தது. ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிறுவனத்துடன் பேசி 25 பில்லியன் ரூபாவை குறைத்துக் கொள்ள எம்மால் முடிந்துள்ளது. செலவைக் குறைத்தது தனியார் இலத்திரனியல் ஊடகத்துக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டுக்கு 25 பில்லியன் ரூபா என்ற தொகையை சேமித்துக் கொடுத்தமைக்காக இந்த நிறுவனம் எமக்கு அவமதிப்புகளை ஏற்படுத்துகிறது. அது மட்டுமல்லாது. இதன் நிமித்தம் அவர்கள் பொய்யான பல்வேறு தகவல்களையும் கூறுகின்றனர்.

எமது தேர்தல் அறிக்கையில், கொழும்பு - கண்டி அதிவேக நெடுஞ்சாலை தொடர்பில் மக்களுக்கு உறுதிமொழி வழங்கியிருந்தோம். இந்த நெடுஞ்சாலையானது தனியொரு திட்டம் கிடையாது. அது கண்டி நகர அபிவிருத்தித் திட்டத்தின் ஓர் அங்கமாகும்.

இரு ஜப்பான் நிறுவனங்கள் மட்டுமே இந்தத் திட்டத்துக்கான விலைமனுக் கோரலை முன்வைத்திருந்தன. அதன்பிரகாரம் புஜிட்டா நிறுவனம் 147 பில்லியன் ரூபாவிலான விலைமனு கோரலையும், டயிசேயி நிறுவனம் 159 பில்லியன் ரூபாவிலான விலைமனு கோரலையும் முன்வைத்தி ருந்தன. குறைவான விலைமனு கோரலை முன்வைத்த புஜிட்டா நிறுவனத்துக்கு ஒப்பந்தத்தை வழங்குவது பொருத்தம் என்று அமைச்சரவை தீர்மானித்தி ருந்தது.

குறைவான விலைமனுக் கோரலை முன்வைத்த புஜிட்டா நிறுவனம் மிகவும் முக்கியமான இரு காரணிகள் தொடர்பாக தகுதிகளைப் பூர்த்தி செய்திருக்கவில்லையென அமைச்சரவையால் நியமிக்கப் பட்ட பேச்சுக்குழு கூறியது. கடந்த 10 வருடங்களில் புஜிட்டா நிறுவனம் இவ்வாறான பெரிய நெடுஞ்சாலை நிர்மாணங்களை மேற்கொண்டிருக்காமை இதற்குக் காரணமாக அமைந்திருந்தது.

இவ்வாறான நிலையில் மற்றைய நிறுவனமான டயிசேயி நிறுவனத்துடன் பேச்சு நடத்துவதே அடுத்ததாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கையாக இருந்தது. அவர்களுடன் பேசி தொகையை குறைத்துக்கொள்ள முயற்சிக்கவேண்டும் என பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழு தீர்மானித்தது. இந்தத் தீர்மானத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தது.

டயிசேயி நிறுவனம் தமது தொகையைக் குறைப்பதற்கும் 365 நாள்களுக்குள் நிர்மாணப் பணிகளை தமது நிதியின்கீழ் ஆரம்பிக்கவும் இணக்கம் தெரிவித்தமையால் அவர்களுக்கு ஒப்பந்தத்தை வழங்குவது பொருத்தமாக இருக்கும் என்று அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுக்குழு அமைச்சரவைக்குப் பரிந்துரை செய்திருந்தது.

இந்த நிர்மாணப்பணிகளில் புஜிட்டா நிறுவனத்தையும் இணைத்துக்கொள்வது தொடர்பில்ஜப்பான் அரசுடன் பேச்சுகள் நடத்தியிருந்தோம். அதன் பின்னரான நடவடிக்கைகளையடுத்து. அதற்கு இணக்கத்தை வெளியிட்டிருந்த ஜப்பான், இலங்கையில் இருக்கும் சட்டதிட்டங்களுக்கமைய பொருத்தமான நடவடிக்கை யொன்றை எடுக்குமாறு தெரிவித்திருந்தது.

மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் உரிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப் பட்டுள்ளது. இது தொடர்பில் எடுக்கப் பட்ட தீர்மானம் தனிப்பட்ட முடிவொன்றல்ல. பொருளாதார அலுவல்கள் பற்றிய அமைச்சரவை உபகுழு, பேச்சுக்குழு மற்றும் அமைச்சரவை என்பன எடுத்த முடிவாகும். இது தொடர்பில் ஜப்பான் அரசின் ஆலோசனை கிடைத்தது. இன்னமும் கிடைத்துக் கொண்டிருக்கிறது - என்றார். (5)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

**தாமோதரம்பிள்ளை கந்தையா**

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்,
பிரதேச சபை, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு.

கடந்த (11.08.2017) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (10.09.2017) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

இல.70/1, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். 077 595 8178

மகன் (அதிபர்)
யா சென். ஜேம்ஸ் ம.வி. குருநகர்.

## மரண அறிவித்தல்



**அந்தோணிப்பிள்ளை இக்னேசியஸ் செல்வம்**

சில்லாயைப் பிறப்பிடமாகவும், யாழ். ஈச்சமோட்டை, 1 ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோணிப்பிள்ளை இக்னேசியஸ் செல்வம் (09.09.2017) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோணிப்பிள்ளை - மரியப்பிள்ளை தம்பதியரின் கனிஸ்ரபுத்திரனும் காலஞ்சென்ற பாவிலுப்பிள்ளை மற்றும் மரியம்மா தம்பதியரின் அன்புமருமகனும் இந்திராவின் அன்புக்கணவரும் லக்கிஷனின் அன்புத்தந்தையும் அந்தோணிப்பிள்ளை ஆரோக்கியநாதரின் அன்புச்சகோதரரும் பூபதியின் அன்புமைத்துனரும் காலஞ்சென்ற நவரெட்ணம் மற்றும் லீலா, செல்வராசா (வைற் கவுஸ் உரிமையாளர்), ராயு, குலேந்திரராஜா (அப்பலோ ஒப்றிக்கல்ஸ் கொழும்பு), ஜெயந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கௌரி (பிரான்ஸ்), கௌசலா (ஜேர்மன்), கௌந்தினி, யூட்பிலிப் (பிரான்ஸ்), ஸ்ரான்லி (வைற் கவுஸ்), துஸ்யந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் கரிசன் (பிரான்ஸ்), வசி (ஜேர்மன்), சனா, பிரியா, ஜெயா, கோபி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமாமனாரும் இமெல்டா, சுபாங்கினி, அமலேஸ்வரி (சென். பெனடிக் பாடசாலை), சுமதி, ஞானேந்திரன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் பேட், ஈவா, செலின் லுதோ, யெஸ்மின், ஜெனிபா, ஜெருஷா, ஜெரோம், கன்சிகன், கிருத்தீஸ், அச்சு ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (11.09.2017) திங்கட்கிழமை பி.ப. 3.30 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து புனித கொஞ்சேஞ்சி மாதா கோயிலுக்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலி முடிவில் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி
077 724 0584

IELTS கற்பதுடன் எங்களது
கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்
கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற
Now prepare for your Academic / General
IELTS
Full time / Part time
Next exam date in Jaffna. 30th Sep. 2017
idp www. idp.com/srilanka
திருமணம் முடித்து Spouse
விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு
IELTS Life Skills A1 B1
ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்
சர்வதேச மொழிக் கற்கைநெறிகள்
ஜெர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி — Deutsch
நெதர்லாந்து மொழிப் பாடநெறி — Dutch
பிரான்ஸ் மொழிப் பாடநெறி — French
BRITISH COLLEGE of Education
More information 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
565, Peradeniya Rd, Kandy. 13, 1st Chapel Rd, Colombo -6
British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்

A level's பரீட்சையின் பின்னர்.......
கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் முல்லைத்தீவில்
Full / Part time
Diploma in Spoken English
முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளிவரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறிகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது.
Course Fee: Spoken English : 15250/= Diploma in English : 21000/=
COMPUTER COURSES | MS- OFFICE | DIPLOMA | GRAPHIC | WEB
BRITISH COLLEGE OF EDUCATION
23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 02 -4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
565, Peradeniya Rd, Kandy. Tel : 081-4949590
13, 1st Chaphel Rd, Colombo-06. Tel : 011-2362775
IELTS Exam Centre
Hot line : 0777-596148
BRITISH COUNCIL IELTS
Students Registration Centre

# இந்தியப் பாதுகாப்பு அதிகாரி இராணுவத் தளபதியுடன் சந்திப்பு



கொழும்பு, செப். 10
இந்தியத் தூதரக உதவிப் பாதுகாப்பு ஆலோசகராக, லெப். கேணல் ரவி மிஸ்ரா அண்மையில் நியமிக்கப்பட் டுள்ளார். இவர் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.
இராணுவத் தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.
இருதரப்பு இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.
இந்தியத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக இந்தியக் கடற்படை அதிகாரிகளே நியமிக்கப்படுவது வழக்கம்.
இலங்கையில் சீனத் தலையீடுகள் அதிகரித்ததை அடுத்து, உதவிப் பாதுகாப்பு ஆலோசகராக, இந்திய இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகளை இந்தியா நியமித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

# லலித், அனுஷ் திருடர்கள் அல்லர்

## புதுக்கதை விடுகிறார் எஸ்.பி.

அரசியல்வாதிகள் பொறுப்பேற்கத் தவறியதாலேயே, லலித் வீரதுங்க மற்றும் அனுஷ் பெல்பிட்ட ஆகியோர் சிறைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்கள் திருடர்களோ, ஊழல்வாதிகளோ இல்லை. இவ்வாறு கூட்டு அரசின் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.
கண்டிக்குப் பயணம் மேற்கொண்ட அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
சில் துணி விநியோக விடயத்தில் லலித் வீரதுங்கவும், அனுஷ் பெல்பிட்டவும் ஒரு சதத்தையேனும் கொள்ளையடிக்கவில்லை. நிதி மோசடியில் ஈடுபடவில்லை. இதனை நீதிமன்றமே அறிவித்துள்ளது. எனினும் விலைகோரல் ஊடாக பகிர்ந்தளிக்கப்பட்ட சமயத்தில் பின்பற்றப்பட்ட நடைமுறைமைகளிலேயே குழப்பங்கள் நிகழ்ந்துள்ளன.
அந்தச் சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்ட அரசியல் தீர்மானத்துக்கு அமைய செயற்பட்டது மாத்திரமே அவர்களது பணி. இது தொடர்பில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச பொறுப்பேற்பாராயின் அவர்களுக்கு எதுவும் நடைபெறப்போவது இல்லை. ஆனால் முன்னாள் அரச தலைவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் முடியாது. அரசியல்வாதிகள் பொறுப்பேற்க வேண்டும். இல்லையேல் பிரச்சினைகள் உக்கிரமடையும். அரசியல்வாதிகள் பொறுப்பேற்பதில் விட்ட பிழையே அவர்களைச் சிறைக்குள் தள்ளியிருக்கின்றது. அவர்கள் இருவரும் திருடர்களோ, ஊழல்வாதிகளோ அல்ல என்றார். (5)

# நீதிமன்றங்களை விமர்சிப்போருக்கு எதிராக நடவடிக்கை வேண்டும்

## சாகலவுக்கு ரணில் பணிப்புரை

கொழும்பு, செப். 10
நீதிமன்றத் தீர்ப்புகள் தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டு மக்கள் மத்தியில் நீதிமன்றம் தொடர்பாக தவறான மனநிலையை ஏற்படுத்த முயற்சிக்கும் நபர்களை அறிந்து, அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவுக்கு உத்தரவிட்டுள்ளார்.



'முன்னைய அரசைப் போல் தற்போதைய அரசு நீதிமன்ற விவகாரங்களில் தலையிடாது. அதன் சுதந்திரத்தைப் பாதுகாத்து மக்களுக்கு நியாயம் கிடைக்கக் கூடிய பின்னணியை உருவாக்கியுள்ளது. இவ்வாறான நிலைமையில், சில தரப்பினர் நீதிமன்றத்துக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் ஊடகங்கள் வழியாக கருத்துக்களை வெளியிட்டு வருவது நீதிமன்ற சுதந்திரத்துக்கு பெரும் தடையாக அமைந்துள்ளது. நீதிமன்றத் தீர்ப்புகள் தொடர்பில் திருப்தியில்லை என்றால், அந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டை செய்யும் உரிமையுள்ளது. நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் நடவடிக்கைகளை எடுக்க எவருக்கும் இடமளிக்க முடியாது' என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் சாகலவிடம் குறிப்பிட்டுள்ளார். (5)

# மைத்திரி - மகிந்த இணைப்புக்கு அமைச்சர்கள் குழு நியமனம்

கொழும்பு, செப். 10
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் செயற்படும், அணியினரை மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைத்துக் கொள்வதற்கான பேச்சுக்களை நடத்துவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் 3 அமைச்சர்கள் நியமிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
அமைச்சர்களான ஜோன் செனவிரத்ன, அனுர பிரியதர்சன யாப்பா, சுசில் பிரேமஜயந்த ஆகியோரே இதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்வரும் நாள்களில் இணைப்புக்கான கலந்துரையாடல் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

# ஐ.நா. மனித உரிமை அமர்வு ஜெனிவாவில் நாளை ஆரம்பம்

## இலங்கை விவகாரம் நிகழ்ச்சி நிரலில் இல்லை

கொழும்பு, செப். 10
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 36ஆவது கூட்டத் தொடர் நாளை திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது. ஜெனிவாவிலுள்ள இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தலைமையிலான குழுவினர், இந்தக் கூட்டத்தொடரில் இலங்கையின் சார்பாக கலந்து கொள்ளவுள்ளனர்.
ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் தலைவரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரும் உரையாற்றவுள்ளனர். இந்தக் கூட்டத் தொடரில் இலங்கையின் விவகாரங்கள் எதுவும் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படவில்லை. எனினும் பன்னாட்டு மனித உரிமை அமைப்புக்கள் தமது நேர உரைகளின் போது இலங்கை குறித்து கேள்வியெழுப்பும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (5)



# இலங்கை–இந்திய அயலுறவு அமைச்சர்கள் சந்திப்பு

கொழும்பு, செப். 10
இந்தியாவுக்கு அதிகார பூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன, இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.
இந்திய அயலுறவுத் துறை அமைச்சில் நேற்றுக் காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.
இந்தச் சந்திப்பில் இந்திய அயலுறவுத்துறைச் செயலர் ஜெய்சங்கர், இலங்கை அயலுறவுத்துறைச் செயலர் பிரசாத் காரியவசம் உள்ளிட்ட இருதரப்பு அதிகாரிகளும் பங்கேற்றனர்.
வரலாற்று ரீதியான உறவுகளின் மீது இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகவும், அண்மைய உயர்மட்டப் பயணங்களின் போது, எட்டப்பட்ட இணக்கப்பாடுகளின் தொடர்ச்சி உள்ளிட்ட இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டதாகவும், இந்திய அயலுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் ரவீஷ் குமார் தமது கீச்சகப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (5)


## கண்ணீர் அஞ்சலி

**சோமசுந்தரம் ஸ்ரீஸ்கந்தராஜா**
(ஓய்வு பெற்ற தபால்மா அதிபர்)



அவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2017) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது. அவரின் சகோதரர்கள், பிள்ளைகள், உறவினர்களுடன் நாமும் ஆத்மார்த்தமான துயரத்தைப் பகிர்ந்து கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
தகவல்:
சோ.புவனேந்திரன் குடும்பத்தினர்.
(சகோதரன்)
477, சோமசுந்தரம் கடை,
நாவலர் வீதி அத்தியடி, யாழ்ப்பாணம்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 12.08.2017 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்
அமரர்
**முருகர் சிதம்பரப்பிள்ளை**
(பௌராணிகர்)
(நாகர்கோயில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய பரம்பரை நம்பிக்கை பொறுப்பாளரும் தலைவரும்)



தோற்றம் 26.05.1935 மறைவு 12.08.2017

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.09.2017) ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் சபிண்டீ கரணக் கிரியைகள் நாளை (11.09.2017) திங்கட் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்

குடத்தனை மேற்கு, குடத்தனை.
076 809 6720
குடும்பத்தினர்.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பொன்னையா செல்லையா**
மண்ணில் 16.03.1942
விண்ணில் 30.08.2010
திதி:- அபரபக்க பஞ்சமி

எம்மைப் பெற்று கதைகள் பல சொல்லி மார்பினில் எம்மை அரவணைத்து
நல்லாசானாய் நல்லறிவூட்டி பல சுமைகளுடன் எம்மைக் கற்பித்து
நல்வழி காட்டிய எம் அன்பு அப்பாவே!
ஆண்டுகள் ஏழு என்ன ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
நீங்காது உம் நினைவு எம் இதயம்விட்டு
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.
குடும்பத்தினர்.



# அராலிப் பாலத்தடியில் பேருந்துகள் விபத்து

## போட்டிக்கு ஓடியதால் இடம்பெற்றதா?

யாழ்ப்பாணம், செப். 10

கல்லுண்டாய் சாலையில் அராலிப் பாலத்தை அண்மித்து அரச பேருந்தும் தனியார் பேருந்தும் நேற்றிரவு மோதி விபத்துக்குள்ளாகின. அரச பேருந்தில் பயணித்த ஒருவர் காயமடைந்தார். ஏனைய சிலர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டபோதும் உடனடியாகப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் செல்லவில்லை என்று பேருந்துகளில் பயணித்தவர்கள் விசனம் தெரிவித்தனர். "இரண்டு பேருந்துகளும் போட்டியிட்டுப் பயணித்தன. இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குரிய பேருந்தை தனியார் பேருந்து முந்திச் செல்ல முற்பட்டபோது விபத்து இடம்பெற்றது" என்று பேருந்துகளில் பயணித்தவர்கள் தெரிவித்தனர். இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குரிய பேருந்தின் முன்பகுதி சேதமடைந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

# கஞ்சா சுருட்டுடன் கைதானவரிடம் களவுக்கு ஏதுவான பொருள்கள் மீட்பு

சாவகச்சேரி, செப். 10

கஞ்சா சுருட்டுவைத்திருந்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்று நேற்றுமுன்தினம் 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

மிருசுவில் சந்தியில் அவர் மூன்று நாள்களுக்கு மேலாகச் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியுள்ளார். சந்தியில் தேவாலயத்தில் பொருத்தப்பட்டிருந்த இரகசியக் கண்காணிப்பு கமராவில்அவரது நடமாட்டம் பதிவாகியுள்ளது. 3 நாள்களாக அவரது நடமாட்டம் அவதானிக்கப்பட்டநிலையில் பொதுமக்கள் அவரைப் பிடித்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். பொலிஸார் விசாரணை நடத்தியதில் அவரிடம் கஞ்சா கலந்த சுருட்டு, வீட்டுக் கதவுகளைப் பிரிக்கக்கூடிய களவுக்குப் பயன் படுத்தக்கூடியதான உபகரணங்களும் இருந்ததாகப் பொலிஸார் கூறினர்.

அவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். குறித்த இரண்டு குற்றச்சாட்டுக்களுடன் இரவில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடியதாகவும் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கஞ்சா சுருட்டு வைத்திருந்த குற்றத்துக்காக 30 ஆயிரம் ரூபா தண்டமும் ஆயுதங்கள் வைத்திருந்த குற்றத்துக்காக 2 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 5 வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. இரவில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய குற்றச்சாட்டுக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 ஆட்பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

தண்டப் பணம் செலுத்தத் தவறின் அவர் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிமன்று உத்தரவில் தெரிவித்தது. (4-9)

# 30 வருடமாக சீரமைக்கப்படாது வலி. மேற்கில் 3 துறைகள்

## 2018இல் சீரமைக்க நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.10

வலி. தென்மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மூன்று முக்கிய மீன்பிடித் துறைமுகங்கள் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக மறுசீரமைப்பு இன்றி உள்ளன எனக் குற்றம் சாட்டப்பட்டது.

மாதகல் கடற்கரைப் பிரதேசத்தில் உள்ள சம்பில்துறை, குசுமந்துறை, மாதகல்துறை ஆகிய குறித்த மூன்று மீன்பிடித்துறைகளையும் மறுசீரமைப்புச் செய்ய வடக்கு மாகாண மீன்பிடித்துறை அமைச்சு முன்வரவேண்டும் என வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சி.சி.மகேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வலிகாமம் தென்மேற்குப் மீனவக் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு முக்கியமான சம்பில்துறை, மாதகல்துறை, குசுமந்துறை ஆகிய மூன்று மீன்பிடித்துறை முகங்கள் விளங்குகின்றன. கடந்த முப்பது வருடப் போரில் மேற்படி மீன்பிடித்துறை முகங்கள் முற்றாகப் பயன்பாட்டுக்கு உகந்ததாக இல்லை. மாதகல் சம்பில்துறைமுகத்தில் 50 மீனவக் குடும்பங்களும், குசுமந்துறை முகத்தில்100 மீனவக்குடும்பங்களும், மாதகல் துறைமுகத்தில் 200 குடும்பங்களுமாக மொத்தம் 250க்கும் மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வாதார இலக்கான துறைமுகங்களும் உள்ளன.

எனவே வடக்கு மாகாண முதல்வர் சி.வி. விக்னேஸ்வரனும், வடக்கு மாகாண மீன்பிடித்துறை அமைச்சரும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மேற்படி விடயத்தைக் கருத்தில் எடுத்து எதிர்வரும் 2018 ஆண்டிலாவது சீரமைப்புச்செய்யக் கூடியதாக 2017 ஆம் ஆண்டில் வரவு - செலவுத்திட்டத்தில் உள்ளடக்கவேண்டும் என்றார். (21.50)

# கிளிநொச்சி பஸ் நிலையம் அமைப்பதில் இழுபறி நிலை

## அதிகாரிகளின் தாமதமே காரணம் எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 10

சாலை அபிவிருத்தி அதிகார சபையினரின் கால தாமதத்தினால், கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்படும் புதிய தனியார் பேருந்து நிலையக் கட்டடப் பணிகள் தடைப்படக்கூடிய நிலை காணப்படுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களின் நீண்டகால கோரிக்கையின் பெயரில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் புதிதாக ஒரு தனியார் பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. கனகபுரம் சந்தியை அண்டிய பகுதியில் இது அமைக்கப்படுகிறது.

இவ்வாறு அமைக்கப்படும் கட்டடத்துக்கான அனுமதி விண்ணப்பமும் ஏக காலத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும் குறித்த விண்ணப்ப அனுமதி சாலை அபிவிருத்தி அதிகார சபையினரின் காலதாமதத்தால் தடைப்படும் அபாயம் காணப்படுகிறது என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

"குறித்த திட்டத்துக்கான இட ஒதுக்கீட்டை மட்டுமே மாவட்டச் செயலகம் மேற்கொண்டிருந்தது. இந்தப் பேருந்து நிலையத்தை அமைக்கும் நிதி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினுடையது. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தீர்மானத்துக்கு அமைய அந்த இடத்தை வழங்கினோம். இருப்பினும் இதற்கான அனுமதி விண்ணப்பங்கள்யாவும்போக்குவரத்துஆணைக் குழுவினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது " என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.அருமைநாயகம் தெரிவித்தார்.

"குறித்த விடயம் தொடர்பில் எமக்குக் கூறப்பட்டது. உரிய முறையில் கட்டுமானப் பணிக்கான பரிசீலனை இடம்பெறுகிறது. ஆனால் அந்த இடத்தில் கழிவு வாய்க்கால் ஒன்றை அமைப்பது தொடர்பில் ஆராயப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக தகவல் தேவைப்படின் நகர அபிவிருத்தி அதிகார சபையில் இடம்பெறும் கூட்டத்திலேயே பெற்றுக்கொள்ளவேண்டும்" என்று சாலை அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் அரங்கன் தெரிவித்தார். (4-101)

# பொன். சிவபாலனின் 19 ஆம் ஆண்டு நினைவு

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்ப்பாண முன்னாள் முதல்வர் பொன். சிவபாலனின் 19ஆவது ஆண்டுநினைவு தினம் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் முற்பகல் 10 மணியளவில் நிகழ்வு இடம்பெறும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (4)





சர்வதேச லயன்ஸ் கழகம், மாவட்டம் 306 (பி1)இன் புதிய ஆளுநராகப் பதவியேற்றுள்ள லயன் கமிலஸ் பெர்னான்டோ மற்றும் அவரது பாரியார் லயன் லேடி பத்மினி ஆகியோருக்கு யாழ். நுழைவாயில் லயன்ஸ் கழகத்தால் கடந்த 26ஆம் திகதி வரவேற்பளிக்கப்பட்டது. கழக அலுவலகத்துக்கு வந்த ஆளுநரை யாழ். நுழைவாயில் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் என்.தனேந்திரன், செயலாளர் லயன் எஸ்.சத்தியபவன் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்றனர். நிகழ்வில் 50 பயனாளிகளுக்கு தென்னை, கமுகு கன்றுகள் வழங்கப்பட்டன. 25 பாடசாலை மாணவர்களுக்குப் பாதணிகளும், உதவிப் பணமும் வழங்கப்பட்டன. (ற)

# தேர்தல் குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.செப்.10

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி போட்டியிடுவது தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி கொடிகாமம் வீதியில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகியோர் இதில் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி-173)

# யாழ். இந்துமகளிர் கல்லூரியில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப்.10

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும் என்று கல்லூரியின் அதிபர் தெரிவித்தார்.

முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண பிரதி தலைமைச் செயலாளர் (நிர்வாகம்) திருமதி சரஸ்வதி மோகநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (ய-ரி)

# வட்டுக்கோட்டையில் பாரதி விழா

யாழ்ப்பாணம், செப்.10

வட்டுக்கோட்டை - யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் 35ஆவது ஆண்டாக நடத்தும் 'பாரதி விழா' நாளை காலை 10.30 மணிக்கு கல்லூரியின் ஒற்லி மண்டபத்தில் நடைபெறும். நிகழ்வின் முதன்மை விருந்தினராக மருத்துவ கலாநிதி யமுனானந்தா கலந்துகொள்ளவுள்ளார். அத்துடன் பட்டிமன்றம், வில்லுப்பாட்டு, சொற்பொழிவு, இன்னிசைப் பாடல்கள், நாட்டிய நடனம் ஆகிய கலை நிகழ்வுகளும் நடைபெறும் என்று அதிபர் தெரிவித்தார். (ய-ரி)

# பகவத்கீதை விளக்கவுரை

யாழ்ப்பாணம் சின்மயா மிசனில் பிரதிஞாயிற்றுக்கிழமைகளில்காலை 7.45 மணிமுதல் 8.45 மணிவரை வதிவிட ஆச்சாரியரால் சிறிமத் பகவத்கீதை வாராந்த விளக்கவுரை நடத்தப்பட்டு வருகிறது.

இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை பகவத் கீதையின் ஏழாம் அத்தியாயமான 'ஞான விக்ஞான யோகம்' பகுதியில் அனைத்தும் இறைவனே என்ற தலைப்பில் விரிவுரை நடைபெற இருக்கின்றது. ஆர்வமுள்ளவர்கள் இதில் கலந்து பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (வ)

# இராமகிருஸ்ணமிசனில் இன்று சிறப்புப் பஜனை

யாழ்ப்பாணம்.செப்.10

யாழ்ப்பாணம் இராமகிருஸ்ண மிசன் நலன்புரி நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று மாலை 5 மணிக்கு உரும்பிராய் பிரார்த்தனை மண்டபத்தில் விசேட பஜனை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நிகழ்வில்பஜனைமற்றும் கொழும்பு இராமகிருஸ்ணமிசனின் ஸ்ரீமத் சுவாமி ரிதமயானந்தஜி மகராஜ்யின் விசேட ஆன்மிக உரை என்பன நடைபெறும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ய-ரி)

# 8 மாதங்களில் 796 பேர் வடக்கில் தற்கொலை முயற்சி

யாழ்ப்பாணம், செப்.10
வடக்குமாகாணத்தில்கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகியமாவட்டங்களில்கடந்த 8 மாதங்களில் 796 பேர் தவறான முடிவெடுத்து தற்கொலைக்குமுயன்றுள்ளனர். அவர்களில் 82 பேர் உயிரிழந்தனர் என்று மருத்துவமனைகளின்புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் ஆண்டுதோறும் செப்ரெம்பர் 10ஆம் தேதி உலக தற்கொலைமுயற்சிதடுப்புதினமாககடைப்பிடிக்கப்படுகிறது. இந்த நிலையில் வடக்கின் மேற்குறித்த மருத்துவமனைகளில்இருந்துபெறப்பட்ட புள்ளிவிபரங்களில் வடக்கின் 5 மாவட்டங்களிலும் தற்கொலை வீதம் அதிகரித்த மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டமே காணப்படுகிறது. இதனை அந்தப்புள்ளிவிவரங்கள் உறுதி செய்கின்றன. அதாவது வடக்கு மாகாணத்தின் சனத்தொகையை நோக்கினால் நான்காவது இடத்தில் உள்ள கிளிநொச்சி மாவட்டம் தற்கொலை புரிவோர் அல்லது தற்கொலைக்குமுயல்வோரின்எண்ணிக்கையில் முதலாவதாகவே காணப்படுகின்றது. இரண்டாம்இடத்தில்முல்லைத்தீவு மாவட்டம் உள்ளது. இந்த ஆண்டின் முதல் 8 மாதங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் 251பேர் தற்கொலைக்கு முயன்ற நிலையில் மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 26 பேர் உயிரிழந்துள்ளனர். இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் 117 பேர் தற்கொலைக்கு முயன்ற நிலையில் 6 பேர் உயிரிழந்தனர். இதுமாவட்டத்தின்கடந்த2016ஆம் ஆண்டைக் காட்டிலும் அதிகரித்துள்ளது. 2016ஆம் ஆண்டு 106பேர் தற்கொலைக்குமுயன்றதாகதெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில். இந்தஆண்டின்முதல்8மாதங்களிலும் 112பேர்தற்கொலைக்குமுயன்றநிலையில் 14 பேர் இறந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இதுவரை 316 பேர்தற்கொலைக்கு முயன்று சிகிச்சை பெற்றுள்ளதோடு 36 பேர் உயிரிழந்தனர். எனத் தகவல்கள்தெரிவிக்கின்றன. வடக்கின் மற்றுமொரு மாவட்டமான வவுனியாவின்நிலைதொடர்பாகஎந்தத்தகவல்களும் கிடைக்கப் பெறவில்லை.
(21,101)

## முல்லை. மந்துவில் படுகொலை நினைவேந்தல் வெள்ளியன்று

புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியில் கடந்த 1999ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் திகதி வான் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் 26பேர்கொல்லப்பட்டனர். இவர்களின்18ஆம்ஆண்டு நினைவுநாள் எதிர்வரும் 15ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு அதே இடத்தில் நடைபெறவுள்ளது.

வன்னி குறோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்புஇதனைஏற்பாடு செய்துள்ளது. இதன்போது நினைவாலயத்துக்கான அடிக்கல்லும்நடப்படவுள்ளது. இதனைமுன்னிட்டுவிமானத் தாக்குதலில் மக்கள் கொல்லப்பட்ட இடம்கடந்தவாரம் தொண்டுப் பணிமூலம் துப்புரவு செய்யப்பட்டது.

விமானத் தாக்குதலில் உயிர்நீத்த மக்களின் உறவினர்கள் தற்போது நாட்டின் பல்வேறுபட்ட பிரதேசங்க ளிலும் வசித்து வருகின்றனர். இதனால் அவர்களின்உறவினர்கள், நண்பர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறுகேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.
(ய-101)

## 13 முதிரைமரக் குற்றிகளுடன் கண்டாவளையில் ஒருவர் கைது

கிளிநொச்சி, செப்.10
புதுக்குடியிருப்பில் இருந்து கிளிநொச்சிக்குக்கடத்திவரப்பட்ட13 முதிரைமரக் குற்றிகள்பொலிஸாரால்கைப்பற்றப்பட்டுள்ளனஎன்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தவியாழக்கிழமைபுதுக்குடியிருப்பில் இருந்து மரக்குற்றிகள் கடத்தி வரப்படுவதாக கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெலிக்கன்னவின் சிறப்புப் பிரிவினருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து குறித்தவாகனம்கண்டாவ்ளை பிரதேசத்தில் வைத்து கைப்பற்றப்பட்டதுடன் சாரதியும் கைதுசெய்யப்பட்டார்.

கைப்பற்றப்பட்டபட்டாரகவாகனம்மற்றும் 13 முதிரை மரக்குற்றிகளுடன் சாரதி கிளிநொச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கிளிநொச்சிப்பொலிஸார்சந்தேகநபரை நேற்றுமுன்தினம்நீதிமன்றில்முற்படுத்தினர். அவரை 14 நாட்கள் விளக்கமறியலில்வைக்குமாறுநீதிமன்றுஉத்தரவிட்டது.
(ய-6)

## இலவச மருத்துவமுகாம் வவுனியாவில் நாளை

வவுனியா ஸ்ரீராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் நாளை பிற்பகல் 2 மணிமுதல் இலவச மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது. இங்கு இலவசமூக்குக் கண்ணாடி வழங்கல், பல் மருத்துவம், சாதாரணவியாதிகளுக்குமான மருந்துகள் வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன.

பிராந்திய சமுதாய பொலிஸ் பிரிவு, வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயம், இறம்பைக்குளம் ஈஸி மிஸன் ஆகியன இணைந்து இதனை ஏற்பாடுசெய்துள்ளன.
(ய)

## 20 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் சுதந்திரபுரத்தில் சிக்கினார்

முல்லைத்தீவு, செப்.10
புதுக்குடியிருப்புசுதந்திரபுரம் பகுதியில் 20.4 கிலோக்கிராம் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் எனச் சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

சுதந்திரபுரம்பகுதியில் வாகனமொன்றில் கஞ்சா கடத்தப்படுவதாகசிறப்புஅதிரடிப்படையினருக்குஇரகசியத்தகவல் கிடைத்தது. அதன் படி புதுக்குடியிருப்பு பரந்தன் சாலையில் சிறப்பு அதிரடிப்படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அந்தப் பகுதியால் வந்த வாகனங்கள்சோதனையிடப்பட்டன. இதன் போதே வாகனமொன்றில் பொதிசெய்யப்பட்ட நிலையில் மறைத்துக் கடத்திச் செல்லப்பட்ட 20.4 கிலோகிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. சம்பவத்தை அடுத்து கிளிநொச்சியைச் சேர்ந்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

கஞ்சாப்பொதிகள் அனுராதபுரம் நோக்கி எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாக விசாரணைக ளில் தெரியவந்துள்ளது என சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கஞ்சாக்கடத்தலுடன்தொடர்புடையநபர்புதுக்குடியிருப்புப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவரை முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவித்தன.
(21.6)

## குடும்பநல மாதுக்களுக்கு கிளிநொச்சியில் பற்றாக்குறை

கிளிநொச்சி செப்.10
கிளிநொச்சி மாவட்டத்தில் குடும்பநல மாதுக்களுக்கு பற்றாக்குறைகாணப்படுவதாக மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன

மாவட்டத்தின் மருத்துவத் துறையில் சில வெற்றிடங்கள்தொடச்சியாககாணப்படுகின்றன.

குடும்பநல மாதுக்கள் 99பேர்தேவையாகஉள்ளனர்.

தற்போது 61 பேரே உள்ளனர். இன்னும் 38 பேரின் தேவைப்பாடு காணப்படுகின்றது.

மருத்துவ நிபுணர்கள், மருத்துவஉத்தியோகத்தர்கள், பல் மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், துணைமருத்துவ சேவை உத்தியோகத்தர்கள், மருந்துக் கலவையாளர்கள், பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்கள், சாரதிகள் மற்றம் மேற்பார்வையாளர்கள் போன்ற பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன எனமேலும்தெரிவிக்கப்பட்டது.
(ய-6)

## 'யாவரும் கேளீர்' நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம், செப்.10
தேசியகலைஇலக்கியப்பேரவையின் ஏற்பாட்டில் சிவ ஆருரன் எழுதிய 'யாவரும் கேளீர்' என்ற நாவல் நூல் அறிமுகவிழாஇன்றுஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு வவுனியா கமலநலஅபிவிருத்திதிணைக்கள கமக்கார பயிற்சி மண்டபத்தில்நடைபெறவுள்ளது.

பேரவையின் செயலாளர் சு.டொன்பொஸ்கோ தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

விமர்சனத்தை யாவரும் கேளீர்நாவலின்ஆளுமைப் பண்புபற்றி என்ற தலைப்பில் எழுத்தாளர் இலக்கிய விமர்சகர் கே. அருந்தவராஜா உரையாற்றுவார். யாவரும் கேளீர் நாவலின் கிராமியப்பண்பு என்ற தலைப்பில் எழுத்தாளரும் இலக்கிய விமர்சகருமாகிய சு. வரதகுமார் உரையாற்றுவார். ஏற்புரையை நாவலாசிரியரின் தந்தை ஆ. சிவலிங்கம் ஆற்றுவார்.
(ய-402)

## மாற்றுவலுவுடையோரின் உற்பத்திப் பொருள்கள் கண்காட்சி கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம்,செப்.10
வடக்குமாகாணமாற்றுவலுவுள்ளோர் அமைப்புகளின் ஏற்பாட்டில், சமதளத்தில்ஒன்றாக என்னும் இயலாமையுடன் கூடிய நபர்களுடைய உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும்விற்பனையும் எதிர்வரும்16ஆம்திகதிசனிக்கிழமை மு.ப. 9.00 மணி தொடக்கம் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கக் குறைவு ஆற்றல் குறைவு அல்லஉழைக்கும் கரங்களை ஊக்கப்படுத்துங்கள்என்னும்தொனிப்பொருளில் நடத்தப்படும் இந்தக் கண்காட்சியில் அனைவரும்கலந்துகொண்டுஊக்குவிக்குமாறுமாகாணமாற்றுவலுவுள்ளோர்அமைப்புகள் கேட்டுள்ளன.
(ய-09)

## வவுனியாவில் மதுவை ஒழிப்போம்: இளைஞர்களால் சுவரொட்டிகள்

வவுனியா, செப்.10
வவுனியாவில் மது ஒழிப்புக் கானசுவரொட்டிகள்பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

சாராயத்திற்கும் சிறுநீருக்கும் இடையில் எத்தனை ஒற்றுமைகள்? குடிப்பவர்களிடம் கேட்டுப்பாருங்கள் எனும் வாசகங்கள்தாங்கியசுவரொட்டிகளே இவ்வாறு வவுனியா நகரம் முழுவதும் காணப்படுகின்றன.



அவற்றில் வித்தியாசமான கேள்வியுடன் குடிப்பவர்கள் பருகுவது சாராயத்தை அல்ல சிறுநீரை எனும் வகையில் மக்களுக்கான விழிப்பூட்டல் செயற்பாடாக இளைஞர்களால் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

கசப்பான, நாற்றமான சாராயத்தை சிறுநீருடன் ஒப்பிடுவது நம் முன்னோர்களின் வழக்கமாகும்.

எனவே அவ்வாறான சாராயத்தை அனைவரும்கைவிடவேண்டும்என இளைஞர்கள்தரப்பில்தெரிவிக்கப்பட்டது.
(21,ய)

# விலகினார் லிங்கநாதன்

## வடக்கு மாகாணசபை ஆலோசனைக் குழுவிலிருந்து

யாழ்ப்பாணம் செப்10

வடக்கு மாகாண சபையின், சபை நடவடிக்கைக் குழுவில் இருந்தும், அமைச்சு மட்ட ஆலோசனைக் குழுவில் இருந்தும் உறுப்பினர் லிங்கநாதன் விலகுவதாக கடிதம் அனுப்பி வைத்துள்ளார் என சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

லிங்கநாதன் தனது விலகல் கடிதத்தை அனுப்பியுள்ளார். அவரின் கோரிக்கையை ஏற்று அவரை விலக்கி அந்த இடத்துக்கு மாகாணசபை உறுப்பினர் கஜதீபனை நியமிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த குழுவில் புளொட் கட்சி சார்பில் உள்ளவர்களில் சிவநேசன் அமைச்சராக பதவிவகிக்கிறார். அதனால் அவரை நியமிக்க முடியாது. எனவே தான் இந்த குழுவுக்கு கஜதீபன் தெரிவுசெய்யப்பட்டார்.

அமைச்சு மட்ட ஆலோசனைக் குழுவில் அமைச்சர்கள் அங்கம் வகிக்கமுடியாது. இதன் காரணத்தினால் அமைச்சு மட்ட ஆலோசனைக் குழுவில் உள்ள தற்போதைய அமைச்சர்கள் விலக்கப்பட்டு அந்த இடத்துக்கு தகுதியான உறுப்பினர்கள் நியமிக்கபடவுள்ளனர். இவர்களின் விபரங்கள் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ள மாகாணசபை அமர்வில் அறிவிக்கப்படும் - என்றார்.

(ய-21,8)

### வடக்கில் முறையற்ற நியமனங்கள்:

# விசாரணைக் குழுவின் அறிக்கை மாகாணசபையில் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், செப்.10

வடக்கு மாகாணத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் முறையற்ற நியமனங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட முறைப்பாட்டுக் குழுவின் அறிக்கையை அந்த குழுவின் தலைவர் சர்வேஸ்வரன் சபையில் சமர்ப்பித்தார்.

வடக்கு மாகாணசபையின் அமர்வு கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றது. இந்த அமர்விலேயே அவர் இதனை சமர்ப்பித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் இடம் பெற்ற முறையற்ற நியமனங்கள் தொடர்பாக எமது விசாரணைக் குழுவுக்கு 172 முறைப்பாடுகள் மொத்தமாக கிடைக்கப்பெற்றன. அவற்றில் சிலவற்றை நாம் ஆராய்ந்து நிராகரித்தோம். மிகுதியாக இருந்தவற்றில் விசாரணைக்காலத்திலேயே 70 முறைப்பாடுகளுக்கு தீர்வினைக் கண்டு, அதற்கான பரிந்துரைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த விசாரணைக் குழுவின் அறிக்கையின் பிரதிகள் வடக்கு மாகாணத்தின் அனைத்து அமைச்சுகளுக்கும் அனுப்பி வைக்கப்படும். மாகாணசபை உறுப்பினர்கள் இந்த அறிக்கையை பார்வையிட விரும்பினால் வடக்கு மகாணசபையின் நூலகத்தில் பார்வையிட முடியும் என்றார்.

இதன்போது சில உறுப்பினர்கள் தமக்கும் இந்த அறிக்கையை பிரதியாகத் தந்தால் அதனை தாம் முழுமையாகப் பார்வையிட வசதியாக இருக்கும் எனக் கோரினர். எனினும், அது வீணான செலவுகள், நீங்கள் மாகாணசபையின் நூலகத்தில் வந்து பார்வையிடலாம் எனக் கூறப்பட்டது.

இதன்போது அறிக்கையை மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைத்தால் அனைவருக்கும் இலகுவாக இருக்கும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் தெரிவித்தார்.

இந்தக் கருத்தை ஏற்ற அவைத்தலைவர் அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிக்கையை மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்றார்.

(ய - 8)

# தெருவோரங்களில் போராடிச் சாகும் உறவுகளின் கண்ணீர் நாட்டை நிம்மதியாக இருக்கவிடாது

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் காட்டம்

யாழ்ப்பாணம், செப்.10

உறவினர்களைப் படையினரிடம் ஒப்படைத்தவர்கள் இன்று சாலைகளில் தகரக் கொட்டில்களில் போராட்டம் நடத்துகிறார்கள். அவர்கள் கண்ணீர் சிந்தி தமது உயிரையும் மாய்க்கும் அவலம் இன்று இடம்பெறுகின்றது. அவர்களுடைய கண்ணீர் இந்த நாட்டை நிம்மதியாக இருக்கவிடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் கடந்த 6ஆம் திகதி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் .

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி, ஆனந்தபுரத்தைச் சேர்ந்த துரைசிங்கம் ஈஸ்வரி என்பவருடைய மகன் காணாமற்போயிருந்தார். மகனை மீட்கப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அந்தத் தாய் கடந்த ஜூன்23 ஆம் திகதியன்று இறந்துவிட்டார். இதைவிட கிளிநொச்சி, உதயநகரைச் சேர்ந்த உருத்திராதேவி ஈஸ்வரன் என்பவரும் கடந்த 31.ஓகஸ்ட் அன்று காலமாகிவிட்டார்.

இதேபோல தனது மாமாவுக்காகப் போராடிய அடைக்கலம் கீர்த்திகா என்ற பதினாறு வயது மாணவி இறந்திருக்கிறார். திருவையாறைச் சேர்ந்த மகேந்திர ராஜா என்பவரும் போராடி முடிவேதும் இன்றி இறந்திருக்கிறார்.

இப்படியாக கடந்த 200 நாட்களுக்குள் 4பேர் அந்தப் பந்தலுக்குள் இறந்திருக்கிறார்கள்.

தயவுசெய்து இதனைக் கவனத்தில் எடுங்கள். பிள்ளைகளை ஒப்படைத்தவர்கள் இன்று தகரக் கொட்டில்களுக்குள் இருந்து மாய்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கண்ணீர் இந்த நாட்டை நிம்மதியாக இருக்கவிடாது.

பிள்ளைகளைப் பறிகொடுத்த தாய்மார் ஒவ்வொருவராக இறந்துகொண்டிருக்கிறார்கள்.

அவர்களுடைய கண்ணீருக்கு யார் பதில் சொல்வது? இவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும். முதலில் இந்த நாட்டிலே நீதியை வழங்குவதற்கு எல்லோரும் சிந்தியுங்கள். அப்படிச் சிந்திக்கின்ற போதுதான் விடிவு சரியானதாக அமையும்.

போர் மிக மோசமாக நடைபெற்றபோது இடம்பெயர்ந்த 4 லட்சத்து 20 ஆயிரம் மக்கள் ஒரு குறுகிய நிலப் பிரதேசத்திற்குள் கொண்டுசெல்லப்பட்டார்கள். பதிவுகளின் பிரகாரம் ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 426 பேர் காணாமல் போயிருக்கிறார்கள்.

இவ்வாறான நிலையில், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழுப் பூசணிக்காயைச் சோற்றுக்குள் புதைப்பதுபோல செய்திகளைப் பரப்ப முனைகின்றனர்.

இது உண்மைக்குப் புறம்பான நிலை. உலகம் பூராவும் இருக்கின்ற தமிழர்கள், நீதிநிலைநாட்டப்பட வேண்டும்; என்பதற்காக குரலெழுப்பி வருகின்றார்கள்.

ஆனந்தபுரத்திலும், புதுக்குடியிருப்பிலும், ஒட்டுசுட்டானிலும், உடையார்கட்டிலும், சுதந்திரபுரத்திலும், முள்ளிவாய்க்காலிலும் தமிழர்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பதற்கு உலகமே சாட்சிகளை வைத்திருக்கின்றது.

அங்கு 4,20,000 மக்கள் இவ்வாறு அடைபட்டிருந்தபோது, மகிந்த அரசு வெறும் 70 ஆயிரம் பேருக்கு மட்டும்தான் உணவுப் பொருட்களை அனுப்பியது.

அங்கிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம், மனித உரிமை அமைப்புகளின் அலுவலகங்கள் எல்லாம் பலாத்காரமாக மூடப்பட்டன. அதிகாரிகள் வெளியேற்றப்பட்டனர். மக்களையெல்லாம் தவிக்கவிட்டு அவை வெளியேறியிருந்தன.

இவை 21ஆம் நூற்றாண்டில் உலகத்திலே இந்த மண்ணில் நடந்த மிகப்பெரிய மனிதப் பேரவலத்தினுடைய சாட்சிகள். அங்கே பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள், சிங்கள மக்கள் பாதிக்கப்படவில்லை. எனவே, இதனை வேறு திசைகளுக்குக் கொண்டுசெல்லாதீர்கள்.

உண்மைகளைக் கண்டறிதல், நிலைமாறுகால நீதிப் பொறிமுறையின் அடிப்படையில் அவர்களுக்கான தீர்வை வழங்குவதற்கு அரசு சம்மதத்தை வழங்கியிருந்தது. ஆனால், இப்போது இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன. இன்றுவரை அதற்கான எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூட, 'எந்தவோர் இராணுவத் தளபதியையும் நான் காட்டிக் கொடுக்க மாட்டேன்' என்று தன் மக்களுக்காகப் பேசியிருக்கின்றார். அவருடைய அந்தப் பேச்சு அவருடைய இனமக்களுக்குரியது. ஆனால், இந்த நாட்டிலே இன்னோரின மக்களும் அவருடைய தலைமையின் கீழே இருக்கின்றார்கள். அவர்கள் பிரிவினைக்கு அப்பால், இந்த நாட்டிலே ஒரு சமஸ்டி அடிப்படையிலான தீர்வைக் கேட்டிருக்கின்றார்களே. அவர்களுக்கான செய்தி என்ன என்பதை ஏன் அவரால் சொல்ல முடியவில்லை?

இந்த நாட்டிலே இன்னும் இனவாதத்தினுடைய அடிவேர்கள் அறுக்கப்படவில்லை; அதன் ஆணிவேர் மிக ஆழமாகவே சென்று கொண்டிருக்கின்றது. தமிழ்ப்பிரதேசங்களில் எங்கு பார்த்தாலும் குடியேற்றங்களுடன் சிங்கள ஊழியர்கள் நியமனம் செய்யப்படுகின்றார்கள். தமிழர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இதயசுத்தியுடனான விடயங்களை முன்னெடுப்பதற்கு அரசு திராணியற்று நிற்பதையே காணமுடிகின்றது.

பிரபாகரன் காலத்தில் வடக்கிலும் கிழக்கிலும் கஞ்சாவை யாராவது கண்டிருப்பார்களா? மக்கள் இரவிலே தெருக்களிலே திரிவதற்குப் பயந்தார்களா? பட்டதாரிகள் உண்ணாவிரதமிருந்தார்களா? வாள்வெட்டுக் கலாசாரம் இருந்ததா? வேலையில்லாத இளைஞர்கள் இருந்தார்களா? அந்தக் காலத்திலே எல்லாவற்றுக்குமே அவர்களிடம் ஒரு தீர்வு திட்டம் இருந்தது; ஒரு தூரநோக்குப் பார்வையிருந்தது.

இங்கே இருக்கின்ற சில அமைச்சர்கள் கூட அந்தக் காலத்திலே அவருடைய நிர்வாகத்தைப் புகழ்ந்திருக்கின்றார்கள் - என்றார்.

(ய-21.101)

# நன்னீர்க் குளங்களில் 20 லட்சம் மீன்குஞ்சுகள்

யாழ்ப்பாணம்.செப்.10

வடக்கு மாகாணத்தில் உள்ள நன்னீர் குளங்களில் நடப்பு வருடத்தில் 2 மில்லியன் மீன் குஞ்சுகள் விடப்படும் என்று மாகாண நன்னீர் மீன்பிடி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபற்றி அமைச்சு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் நன்னீர் மீன்பிடியை அபிவிருத்தி செய்வதற்கு 25 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றில் குளங்களில் மீன் குஞ்சுகளை விடும் செயற்பாட்டுக்கு 4 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதியின் மூலம் தற்போது 30 வீதமான மீன்குஞ்சுகள் விடும் செயற்பாடு நிறைவு பெற்றுள்ளது. எதிர் வரும் நவம்பர் மாத இறுதிக்குள் 2 மில்லியன் மீன் குஞ்சுகள் குளங்களில் விடப்ப



டவுள்ளன. அத்துடன் குளங்களில் விடப்படும் மீன் குஞ்சு ஒன்று 2 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்படுகின்றது.

5 மாவட்டங்களில் உள்ள 28 குளங்களில் மீன் குஞ்சுகள் விடப்படவுள்ளன. யாழ்ப்பாணத்தில் 1, கிளிநொச்சியில் 7, முல்லைத்தீவில் 6, வவுனியாவில் 7, மன்னாரில் 7 குளங்களில் மீன் குஞ்சுகள் விடப்படவுள்ளன. இதுதவிர யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களிலும் மீன்குஞ்சுகள் உற்பத்திசெய்யும் இடங்கள் அமைக்கப்படவுள்ளன. இதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் குஞ்சுகளும் குளங்களில் விடப்படவுள்ளன. இதற்காக 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குளங்களைத் தெரிவுசெய்து அதன் தண்ணீர் மேற்பரப்பில் மூங்கில் மரங்களைப் பயன்படுத்தி மீன்குஞ்சுகள் பொரிக்கும் செயற்பாடுகள் நடைபெறவுள்ளது. இதன் செயற்பாட்டு வீதம் தற்போது 30 வீதமாக காணப்படுகின்றது. நடப்பு வருடத்தின் நிதி ஒதுக்கீட்டில் ஏனை செயற்பாடுகள் நிறைவுசெய்யப்படும் என்று மேலும் தெரிவித்துள்ளது. (ய-ரி)

# இலவச திருமண வைபவம்

யாழ்ப்பாணம், செப்.10

லண்டன் சைவ முன்னேற்ற சங்கத்தின் 40ஆவது வருட நிறைவை முன்னிட்டு 40 திருமணங்கள் என்னும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வறிய நிலையில் உள்ள திருமண வயதை எட்டியவர்களின் திருமணவைபவம் எதிர்வரும் 15ஆம் திகதியன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை இந்துமாமன்றத்தினது அனுசரணையுடன் திருமணங்கள் செய்து வைக்கப்படவுள்ளன. இவ்வாறான நிகழ்வு இலங்கை வரலாற்றில் முதலாவது தடவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ய- 21)

# மைத்திரியின் மனைவியை எச்சரிக்கிறார் மகிந்த

கொழும்பு, செப். 10
நற்போதைய முதல் பெண்மணி மீதும் கூட சில் துணிகளை விநியோகம் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தார் என்று வழக்கு தொடுக்கப்படலாம். இவ்வாறு முன்னாள் ஆட்சியாளர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில நாள்களுக்கு முன்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சில் துணிகளை விநியோகித்திருந்தார். அதனைப் பார்த்துக் கொண்டிருந்தார் என்று தற்போதைய முதல் பெண்மணி மீதும் வழக்குத் தொடுக்கப்படலாம். 3 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள லலித் வீரதுங்கவைச் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிடவுள்ளேன் என்றார்.

2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலின் போது, தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக் குழுவின் 600 மில்லியன் ரூபா நிதியைத் தவறாகப் பயன்படுத்தி, சில்துணிகளைவிநியோகித்தார்கள் என்று லலித் வீரதுங்க மற்றும் அனுஷ் பெல்பிட்ட ஆகியோர் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர். இந்த நிலையிலேயே, மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து சில் துணிகளை வழங்கிய அவரது துணைவியாருக்கு மகிந்த ராஜபக்ச மறைமுக எச்சரிக்கையை விடுத்துள்ளார். (5)

அரசமைப்பின்
20ஆவது திருத்தம் தொடர்பில்

## உயர்நீதிமன்ற முடிவு விரைவில்

கொழும்பு, செப். 10
அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள 20ஆவது திருத்தச்சட்ட வரைவு தொடர்பான தமது தீர்மானத்தை உயர் நீதிமன்றம் விரைவில் அறிவிக்கவுள்ளது.

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள 20ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் 13 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. உயர் நீதிமன்ற தலைமை நீதியரசர் பிரியசாத் டெப், மற்றும் நீதியரசர்கள் அனில் குணதிலக, விஜித் மலல்கொட ஆகியோரைக் கொண்ட அமர்வு இந்த மனுக்களைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டுள்ளது. இந்த நிலையில், 20ஆவது திருத்தச்சட்ட வரைவு குறித்து உயர் நீதிமன்றத்தின் முடிவு சபாநாயகருக்கும், அரச தலைவருக்கும் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று தெரியவருகிறது. (5)










# சிறுவிளம்பரங்கள்




## விற்பனைக்கு




## தேவை

### காணி விற்பனைக்கு
சுண்டுக்குளி ஈச்சமோட்டையில் ஐந்து அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட இரண்டு பரப்புடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
**077 548 5288**

### விற்பனைக்கு
2½ மாத ஊர்க்கோழிக்குஞ்சு விற்பனைக்குண்டு.
**077 019 4267/ 075 017 6630**

### தென்னந்தோட்டம் விற்பனைக்கு
இடம் : அன்புச் சகோதரர் இல்ல றோட், தாழ்வுபாடு - மன்னார்
**077 586 9600**

### காணி விற்பனைக்குண்டு
மானிப்பாய் பொன்னாலை வீதியில் மின்சார வசதி உள்ள சமுர்த்தி ஒழுங்கையில் சமுர்த்தி வங்கிக்கு அருகில் 11 பரப்பு 4.5 குளி காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
**077 443 4501/ 071 809 7994**

### காணி விற்பனைக்கு
நீர்வேலி மேற்கு கரந்தன் கேணியடியில் 13 பரப்பு தோட்டக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
**021 223 2194**

### TATA Truck விற்பனைக்கு
2015 ஆம் ஆண்டு Xenon Light Truck (றக்) விற்பனைக்கு உண்டு. நல்ல நிலையில் பாவிக்கப்பட்டது. 31000Km ஓடியுள்ளது.
**076 857 3798 / 077 871 5430**

### வீடு விற்பனைக்கு
யாழ்.நகரில் கொட்டடிச் சந்திக்கு அண்மையில் வீடு விற்பனைக்குண்டு. சுமார் 3 பரப்பில் நன்னீர் கிணற்றுடன் கூடியதுமாகும்.
**077 227 9219**

### பசுமாடு விற்பனைக்கு
அண்மையில் கன்று போடக் கூடிய நிலையில் கன்னிப் பசுமாடு விற்பனைக்குண்டு.
**077 129 8159**

### காணி விற்பனை
கொடிகாமம் புகையிரத நிலையத்திலிருந்து 15 நிமிடம் உள்நோக்கிய பயணதூரத்தில் அமைந்துள்ள 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**071 432 8243**

### தேவை
யாழ்ப்பாணத்தில் 15'x 40' அல்லது 20'x 30' தொழில் செய்யும் இடம் தேவை. வாகனத் தரிப்பிடமும் இருத்தல் விரும்பத்தக்கது நாவலர் வீதி. ஆஸ்பத்தி வீதி. யாழ்ப்பாண நகரை அண்டியதாக அமைந்திருத்தல் வேண்டம்.
**077 741 3397/ 077 706 2511**

### தேவை
1. தேங்காய். கொப்பறா. கொள்வனவு செய்யப்படும்
2. மில்லில் வேலை செய்ய விரும்புவோர் தேவை
3. பழைய கூரைச்சீற்றுக்கள் தேவை.

**077 772 2215**

### வேலைக்கு ஆள்தேவை
யாழ் நகரில் உள்ள வர்த்தக நிலையத்திற்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
**077 729 0300**

### வீடு, காணி விலைக்குத் தேவை
நல்லூர், கந்தர்மடம், திருநெல்வேலி, கலட்டி, கொக்குவில் ஆகிய இடங்களில் விரும்பத்தக்கது.
**077 361 1282**

### தேவை
பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றில் பகுதி நேரமாகவோ அல்லது முழு நேரமாகவோ வேலை செய்வதற்கு விற்பனைத்துறையில் ஆர்வம் உடையவர்கள் தேவை.
**076 745 0989**

### மணமகள் தேவை
யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 1985 ஆம் ஆண்டு பிறந்த டோகாவில் பணிபுரியும் மணமகனுக்கு படித்த நற்குணமுள்ள மணமகள் தேவை. தற்போது யாழ். வந்துள்ளார்.
**077 850 0395**

### மணமகள் தேவை
இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த யாழ்ப்பாணத்தை சொந்த இடமாகவும் கொழும்பில் சொந்த தொழில் புரியும் 47 வயதுடைய மணமகனுக்கு 35 வயதிற்கு குறைவான நற்குணத்தை உடைய அழகான மணமகள் தேவை. திருவாதிரை நட்சத்திரம் பாவக்கிரகம் 09 உடையவர் மிதுனராசி
**077 163 3001**

### U.S.Hotel நிறுவனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்
- வரவேற்பாளர் (பெண்கள்)
- விநியோக வாகன உதவியாளர் (Laber)

விண்ணப்பிக்க விரும்புவோர் 10.09.2017 இல் மேற்படி நிறுவனத்துக்கு நேரில் சமுகம் தரவும்.
**077 549 4229**

## ஏனையவை

### அறை வாடகைக்கு உண்டு
10 X 18 தனி அறை குளியலறை வசதியுடன் கல்லூரி வீதி. பிறவுண் றோட்டில். கல்வி கற்கும், தொழில் புரியும் பெண்களுக்கு வாடகைக்கு உண்டு.
**077 392 7955**

### வீடு வாடகைக்குத் தேவை
தெல்லிப்பழை தொடக்கம் இணுவில் வரை அல்லது அண்மித்த பகுதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு சிறிய குடும்பத்துக்கு வாடகைக்குத் தேவை.
**077 172 2328**

### அறைகள் வாடகைக்கு
யாழ் நகரில் 2அறைகளும் பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தியில் 3அறைகளும் தொழில் புரியும், படிக்கும் பெண்களுக்கு உண்டு. (FAN, BED, TABLE)
**070 341 4238/ 076 804 5933**

### கட்டட வடிவமைப்பு
உங்கள் விருப்பத்திற்கேற்ப வீடுகள் வடிவமைத்து தரப்படும். (Council drawing, Autocad, 3D Drawing)
**076 539 5893**

### கடை/களஞ்சியசாலை வாடகைக்கு உண்டு
கே.கே.எஸ் வீதியில் (சிவதொண்டன் நிலையத்திற்கு அருகில்) சகல வசதிகளுடன் கூடிய வீடு, கடை, களஞ்சியசாலை (ஸ்ரோர்ஸ்) வாடகைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம்.
**077 714 1444**

### கேரள அழகு சிகிச்சை
யாழ் நகரில் முதன் முறையாக கேரள முறையில் உங்கள் முடிப்பிரச்சனைகள் மற்றும் முக, அழகு சிகிச்சைகள்.

செப்டம்பர் மாதம் 11ம், 12ம் திகதிகளில் காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை

இடம் : ஹோட்டல் வலம்புரி, 148/10, புகையிரத வீதி, யாழ்ப்பாணம்.
**077 912 8944**
FLEX Graphic

### வேலைவாய்ப்பு
ஹொட்டல் ஒன்றுக்கு சமையல் ஆளும் உதவியாளரும் தேவை.
**077 741 2713/ 077 306 6615**

### காணி விற்பனைக்கு
சங்கரத்தை சந்தி. வட்டுக்கோட்டையில் 5 ½பரப்புக் காணி விற்பனைக்கு.
**077 328 8795/077 372 6685**

### வீடு விற்பனைக்கு உண்டு
சாவகச்சேரி மகளிர் கல்லூரி வீதியில் பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ள 5¾ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. (தென்னை, மா, பலா போன்ற பயன்தரு மரங்களும் உண்டு)
**077 613 9149**

### தங்க ஆபரணங்கள் ஏல விற்பனை
இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி கடன் ஒழுங்கமைப்பின் கீழ் மட்டக்களப்பு கிளையில் 31/07/2017 க்கு முன் தங்க கடனுக்காக வைக்கப்பட்ட நகைகளும் 60 நாட்களுக்கு மேல் மீட்கப்படாத தவணை கடந்த தங்க நகைகளை 21/09/2017 ம் திகதி காலை 11.00 மணி முதல் இல.187, திருகோணமலை வீதி, மட்டக்களப்பிலுள்ள ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி அலுவலகத்தில் 85வது சட்டத்தின் நிபந்தனைகள் பிரகாரம் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

ASIA ASSET FINANCE PLC
The unconventional finance company
Muthoot Finance

பொது முகாமையாளர் (கடன்மீட்பு)
இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
Hotline: 071-6531349
Tel: 0115-899300 / 0115-669922
Fax: 0112577477 Reg No: PB139

### வாடகைக்கு
கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள அறை மற்றும் கடை தனித்தனியே வாடகைக்கு விடப்படும்.
**077 919 6471**

### வீடு வாடகைக்குண்டு
சிறுப்பிட்டி வடக்கு பருத்தித்துறை வீதிக்கு சமீபமாக சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
**078 278 3903**

### விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### வீடு வாடகைக்கு
திருநெல்வேலிப் பகுதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு அல்லது அலுவலகத் தேவைகளுக்கு உகந்தது.
**076 857 3798 / 077 871 5430**

### வேலைவாய்ப்பு
வவுனியா ஓமந்தையில் அமைந்துள்ள சீமெந்து வேலை தளத்திற் விற்பனை பிரதிநிதி (பெண்) ஒருவரும் மற்றும் களஞ்சிய காப்பாளரும் (ஆண்) ஒருவரும் தேவை.
**076 826 7703**

### MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்










விசாரணை ☏ 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் கனகசபாபதி

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

இல.51, மணல்தறை வீதி, கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கனகசபாபதி நேற்று (09.09.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் துன்னாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளையின் (ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தில்லைபிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - செல்லாச்சி தம்பதிகளின் மருமகனும், சுதர்சன் (ஆஸ்திரேலியா), குமணன் (ஆஸ்திரேலியா) காலஞ்சென்றவர்களான சசிதரன், தர்மதா ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.09.2017 செவ்வாய்க் கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திருமதி யோகேஸ்வரி பத்மநாதன்

51, மணல்தறை வீதி,
கந்தர்மடம்.

### கண்ணீர் அஞ்சலி



வட்டுக்கோட்டை அரிமாக் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினரும், முன்னாள் தலைவரும், ஆளுநர் சபை உறுப்பினருமான

**லயன் வி.க.விஜயரத்தினம் J.P**

அவர்களின் மறைவு எம்மையெல்லாம் ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தியுள்ளது. அன்னார் மறைந்தாலும் அவரது சேவைகள் மறக்க முடியாதவை. அவரின் பிரிவால் கவலையுற்றிருக்கும் குடும்பத்தினர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆறுதல் கூறுவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

தலைவரும்,
செயலாளர் உறுப்பினர்களும்,
லயன்ஸ் கழகம், வட்டுக்கோட்டை.

சித்தன்கேணி.

## சிறுவர் துர்நடத்தை 6,165 முறைப்பாடுகள்

### முதல் 9 மாதங்களில் இந்த நிலமை


கொழும்பு, செப். 10

சிறுவர் துர்நடத்தை தொடர்பாக, இந்த ஆண்டில் இதுவரை 6 ஆயிரத்து 165 முறைப்பாடுகள் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குக் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

1929 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக 90 சதவீதமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும், அந்த முறைப்பாடுகளுள் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது சம்பந்தமாகவே அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்தது.

சிறுவர்களை வேலைக்கமர்த்துவது தொடர்பில் ஆயிரத்து 518 முறைப்பாடுகளும், சிறுவர்களுக்கு கல்வி கிடைக்காமை சம்பந்தமான 975 முறைப்பாடுகளும், சிறுவர் துர்நடத்தை சம்பந்தமாக 365 முறைப்பாடுகளும், சிறுவர்களை புறக்கணிப்பு செய்தல் தொடர்பாக 222 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. சிறுவர்களை யாசகம் எடுப்பதற்கு ஈடுபடுத்துவது சம்பந்தமாகவும் 222 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று சிறுவர் அதிகாரசபை தெரிவித்துள்ளது. (5)

### வைத்தியநாதர் நடேசப்பிள்ளை



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், 160, சில்வா வீதி, வட்டக்கச்சியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட வைத்தியநாதர் நடேசப்பிள்ளை 06.09.2017 புதன்கிழமை காலமானார்.


அன்னார் வைத்தியநாதர் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், கலாவதியின் அன்புக் கணவரும், ஐயாத்துரை - பவளம்மா தம்பதிகளின் மருமகனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

14ஆம் ஒழுங்கை, முல்லைத்தீவு வீதி,
பரந்தன்.

தகவல்
மனைவி.

### 14 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**Dr. ந.இராஜரத்தினம்**

மலர்வு 16.11.1938
உதிர்வு 15.09.2003

திதி: (10.09.2017)

அன்பு முகம் மறைந்தாலும்
அழியாத நினைவலைகள்
எங்கள் முன் உயிர் வாழும்
நினைவுடன் வாழும்


குடும்பத்தினர்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
தையிட்டி,
காங்கேசன்துறை.

### மாத்தறை, குருநாகல் மாவட்டங்களில் சிறுநீரக நோய் பாதிப்பு அதிகரிப்பு

மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் சிறுநீரக நோய் பரவியுள்ளதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

ராஜரட்ட பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மூத்த பேராசிரியர் சன்ன ஜயசுமன இதனைத் தெரிவித்தார்.

இதுவரை காலமும் அநுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களில்தான் சிறுநீரக நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். ஆனால், கடந்த ஆண்டில் மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் சிறுநீரக நோயாளர்கள் அதிகளவில் பதிவாகியதாகவும் அவர் குறிப்பிட்டார். (5-33)



### அம்பலவாணர் இரத்தினசிங்கம்

(World Express Services - உரிமையாளர்)

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 23.03.1945 | 08.09.2017 |

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும் பண்டாரிக்குளம் 2ஆம் ஒழுங்கையை வதிவிடமாகவும் World Express Service உரிமையாளருமான அம்பலவாணர் இரத்தினசிங்கம் 08.09.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இ.பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அம்பலவாணர் - இராசம்மா தம்பதிகளின் அன்பு புதல்வனும் பொன்னம்பலம் - வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும் சிறீ கண்ணன் (கொழும்பு), சிறீகஜன்(கொழும்பு), மயூறன் (வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிரோசினியின் மாமனாரும் காலஞ்சென்ற Dr.பொன்னுத்துரை, Dr.பரம்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கதிரவேலு, தியாகலட்சுமி, நித்திய லட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தச்சனாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 8201994/ 077 793 4911/ 077 777 9584

### நீங்காத நினைவலைகள்

முதலாம் ஆண்டு நினைவு தினம்



**தர்மலிங்கம் தர்மபாலா(பாலா)**

தோற்றம் 23.10.1973
மறைவு 10.09.2016

ஆண்டொன்று கடந்தாலும்
ஆறிடுமோ உந்தன் நினைவலைகள்
மாண்டீர் என்று சொல்ல
மனம் மறுக்குதையா
கலங்காத நெஞ்சுடனே
காலமெல்லாம் வாழ்ந்தீரே !
கலங்கவிட்டு எமையெல்லாம்
பிரிந்து சென்றதேனோ
நீர் நடந்த இடமெல்லாம்
வெறுமையாகிப் போனதையா
காலமெல்லாம் எம்முடன்
வாழ்ந்திடுவீர் என்றிருந்தோம்
காலனவன் உம்மைப் பறித்ததேனோ
எத்தனை ஜென்மம் கடந்தாலும்
ஆறிடுமோ எம் துயரம்
ஆறிடாத்துயரோடு உம் நினைவலைகளுடன்
வாழ்கின்றோம்.

31 ஆம் நாள் நினைவு தினம்



**தர்மலிங்கம் விமலாதேவி(கமலா)**

தோற்றம் 23.06.1946
மறைவு 09.08.2017

மாதம் ஒன்று கடந்தாலும்
மாறிடுமா உங்கள் நினைவு
மறக்குமா உங்கள் பாசம்
கண்ணீரை தந்து விட்டு
விண்ணோடு பாசமகன்
பாலாவிடம் சென்று விட்டீர்
உறவினர்க்கு இனியவராய்
வாழ்ந்த உங்களை
காலமெல்லாம் நினைத்திருப்போம்.


உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
குடும்பத்தினர்.
பொற்பதி வீதி, கொக்குவில்.

## ஈழத் தமிழ் இளைஞன் கனடாவில் கத்திக்குத்தில் சாவு

கனடாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கத்தியால் குத்தப்பட்டு படுகாயமடைந்த நிலையில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழ் இளைஞன் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை, கொடூரமாகத் தாக்கப்பட்டு, கத்தியால் குத்தப்பட்ட நிலையில் குகப்பிரியன் மகேந்திரராஜா (வயது-33) குற்றுயிராகக் கிடப்பதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். ஒன்றுக்கும் மேற்பட்ட முறை கத்தியால் தாக்கப்பட்டுள்ளதை மருத்துவர்கள் உறுதி செய்தனர். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த புதன்கிழமை அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் நேற்று முன்தினம் அறிவித்துள்ளனர். (5)

பழமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்
ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்
01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விடாதீர்கள்
Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)
ரகசியம் பாதுகாக்கப்படும்
ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!
ரெங்கசாமி காளியம்மா
மாத்தளை வீதி, கண்டி.
077 327 2302,
076 466 4153,
075 509 5887.





இணுவில் திருப்பதி
ஸ்ரீவேங்கடேஸ்வரர் ஆலய
கிருஷ்ண ஜெயந்திப் பெருவிழாவும்
உறியடி உற்சவமும் - 12.09.2017 செவ்வாய்க்கிழமை

அதிகாலை 6.00 மணி முதல் — மூலவருக்கு கலச அபிஷேகம்.
காலை 7.30 மணிக்கு — மகா தீபாராதனை, உபசாரம், தொடர்ந்து தர்சனம்.
முற்பகல் 10.30 மணியளவில் — யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவர்களின் இசை ஆராதனை.
மாலை 4.30 மணிக்கு — உற்சவம் ஆரம்பம்.
மாலை 5.00 மணிக்கு — நவநீதகிருஸ்ண பகவானுக்கு அலங்கார தீபாராதனை
மாலை 5.30 மணிக்கு — பகவான் உறியடி உற்சவ புறப்பாடு திருவீதியுலா.
தொடர்ந்து உறியடி உற்சவம் இடம்பெறும்.

மாலை 6.30 மணிக்கு
திருமதி. பிரியதர்சினி வாகீசன் தலைமையில்
நர்த்தனஷேத்திரா மாணவர்கள் வழங்கும்
நாட்டிய சமர்ப்பணம்

தொடர்ந்து 8.00 மணிக்கு விசேட தொட்டில் தாலாட்டுப் பூஜை, பெரியாழ்வார் அருளிச்செய்த தாலாட்டுப் பாடல் சமர்ப்பணம் செய்யப்படும்.
இரவு 9.00 மணி முதல் சத்தியசாய் சேவா நிலையம் வழங்கும் கிருஷ்ணகான நாம பஜனை.
நள்ளிரவு 12.00 மணிக்கு விசேட அபிஷேகம், விசேட நைவேத்தியம் 13.09.2017 அதிகாலை 5.00 மணிக்கு தீர்த்தவாரி.

உபயகாரர். 021 224 2300 ஆலய தர்மகர்த்தா ச.கணேசலிங்கம்.

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்
உயர்தரத்தின் பின் பட்டப்படிப்போ வேறு உயர்கல்வியோ அல்லது உயர்வேலைவாய்ப்பை பெற்று வாழ்வில் வெற்றிபெற ஆங்கிலக்கல்வி இன்றியமையாததாகும். இதனை கருத்திற் கொண்டு, A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு டிப்ளோமா ஆங்கிலக்கற்கைநெறியை DMI வழங்குகின்றது.



DIPLOMA IN ENGLISH
Spoken English

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Mon,Wed,Fri 8:00 a.m | Mon,Wed,Fri 9:30a.m | Tue, Thu 08.30 a.m. | Mon,Wed,Fri 11:00 a.m | Sat, Sun 9.30a.m |
| Mon,Wed,Fri 3:30 p.m | Tue, Thu 3.30 p.m. | Sat, Sun 10.30 a.m. | Sat, Sun 3.30 p.m. | Tue,Thu 9:30 a.m |
| Sat, Sun 3.30 p.m. | Sat, Sun 3:30 p.m. | | Tue,Thu 9:00 a.m | |

சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்
IELTS
IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு
DMI COMPUTER EDUCATION
DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

DMI COMPUTER EDUCATION

| No.113, கஸ்தூரியார் வீதி, (சயவர்ஸ் ஹோல் அருகாமை) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V.வீதி நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19,A9 வீதி, குமரபுரம் கிளிநொச்சி Tel.: 021-228 5655 |
|---|---|---|---|---|

உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறை
உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறையாக 7th World Scientific Congress இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது...
வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்
ISO 9001:2008 CERTIFIED
எந்த மாற்று வழியுமில்லை British Way
British Way®
English Academy
இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

நிட்டம்புவ | காலி | மாத்தறை | அநுராதபுரம் | நுகேகொட | கம்பஹா | யாழ்ப்பாணம்
நீர்கொழும்பு | கண்டி | குருநாகல் | கிரிபத்கொட | இரத்தினபுரி | எம்பிலிப்பிட்டிய

இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months
காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.
இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.
14, September, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

வார இறுதி வகுப்புகள் — 04 Months
காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்
வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.
சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

IELTS
சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை
சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

KIDS' Class Grade 1-10
சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்
சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது
சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

British Way English Academy
Contact (Jaffna Branch) : 021 300 55 55
நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk
No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)

### திருமண சேவை

www.thaalee.com என்பது website இல் இயங்கும் ஒரு திருமண சேவை. இந்த website இல் பல்லாயிரக்கணக்கான Unmarried, Divorce. Widow, nullified போன்றவர்களுடைய படங்கள். ஜாதகங்கள் மற்றும் முழுமையான விவரங்கள் உண்டு. இதில் ஆண்கள். பெண்கள். உள்நாட்டவர்கள் மற்றும் வெளிநாட்டவர்களும் உண்டு. ஆகவே திருமணம் செய்ய விரும்புபவர்கள் எமது www.thaalee.com என்பதைப் பார்த்து நீங்கள் விரும்புபவர்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும். மேலும் நீங்களாகவே அதில் பதிவு செய்து கொள்ளவும் முடியும். நீங்கள் எங்கும் போகாமல் வீட்டில் இருந்து கொண்டு திருமணத்தை முடித்துக் கொள்ள முடியும்.

விவரங்களுக்கு - S.Sarma, Phone - 077 539 3728, Viber - 077 829 7351

### வேப்பம் விதைகள் தேவை

நன்கு பழுத்த வேப்பம் பழத்திலிருந்து சுத்தமான முறையில் பிதுக்கி எடுக்கப்பட்ட அல்லது தண்ணீரில் அமிழ்த்தி உடனடியாகப் பிதுக்கி எடுக்கப்பட்ட நன்கு காய வைக்கப்பட்ட வேப்பம் விதைகள் தேவை. கல்/ மணல்/ காய்ந்த குச்சிகள் மற்றும் வேறு மாசுகள் கண்டிப்பாக அகற்றப்பட்டிருக்க வேண்டும்.

சாக்குப் பைகளில் பொதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

பொலித்தீன் பைகளில் பொதி செய்வதைத் தவிர்க்கவும்.

சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளப்படும்.

**HYPHAE GROWERS (Pvt) Ltd**
**104/4. Grandpass Road, Colombo 14**
**077 388 7994**

### வேலை வாய்ப்பு

இலங்கையில் 22 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் எமது GMI Company யின் கிளைகளில் பணிபுரிய இதோ ஓர் அரிய சந்தப்பம் ஆண்.பெண் இருபாலாருக்கும் ஆனது.

- நிர்வாக அதிகாரி
- செயல்திட்ட அதிகாரி
- அலுவலக உத்தியோகத்தர்
- மேற்பார்வையாளர்

மட்டுப்படுத்தப்பட்ட பதவி வெற்றிடங்களே உள்ளன.

தகைமைகள் : O/L or A/L

பயிற்சியின் போது 16 500 ரூபா - 22 500 ரூபா வரை பெற்றுக்கொள்ளலாம்.

பயிற்சியின் பின் 45.000 + EPF,ETF

**076 639 9954/ 076 886 3253**

### வேலை வாய்ப்பு

யாழ்.திருநெல்வேலி மத்தியில் அமைந்துள்ள பல்பொருள் விற்பனை அங்காடிக்கு (Super Market) விற்பனையாளர், பொதியிடுதல் வேலைகளுக்கு ஆண், பெண் கணினி அறிவுடன் தேவை. நகரின் அருகில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் முகவரிக்கு நேரில் வரலாம்.

**13.09.2017 புதன்கிழமை 9 மு.ப - 1 பி.ப**

**Sripaper Mart**
**இல.388, வைத்தியசாலை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தொடர்புகளுக்கு: 077 899 6137**

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அழகான 91 ஆம் ஆண்டு பிறந்த, ஸ்கன்டிநேவியாவில் (Scandinavia) Full qualified - MBBS படித்து அரச வைத்தியசாலையில் வேலை செய்யும் மணமகளுக்கு அதே குடும்பத்தைச் சேர்ந்த Full qualified - MBBS படித்த பொருத்தமான டொக்டர் மணமகன் தேவை. West ஐரோப்பா, East ஐரோப்பா, Asia வில் படித்த மணமகன் விரும்பத்தக்கது.

Software Engineering Expert ஐரோப்பாவில் படித்தவர்களும் விரும்பத்தக்கது. பிறந்த ஆண்டு 1985 - 1990 இற்குள் இருப்பது நல்லது.

✓ படிப்பு ✓ வேலை ✓ ஆங்கில அறிவு
✓ வயது ✓ நிறம் ✓ உயரம் ✓ நட்சத்திரம்
✓ ஊர் ✓ தற்போது எடுத்த தெளிவான போட்டோ

பொருத்தமானவர்கள் மேற்குறிப்பிட்ட தகவல்கள் அடங்கிய Bio data உடன் E-mail மூலம் தொடர்பு கொள்ளவும். முழுமையான தகவல்கள் அடங்கிய விண்ணப்பங்கள் மட்டும் கவனத்தில் கொள்ளப்படும்.

**E-mail address:- seegeer10@gmail.com**

### பெருமையுடன் வாழ்த்துகின்றேன்



திருமண பந்தத்தில் இணைந்து இன்று (10.09.2017) ஞாயிற்றுக்கிழமை வெள்ளிவிழாக் காணும்

திரு. திருமதி
**காராளசிங்கம்-கணேசலிங்கம் ஆனந்தி**

தம்பதியரை மேலும் சீரும், சிறப்புடனும் நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்

இத்தருணத்தில் அண்மையில் யாழ் மாவட்ட சர்வோதயமும், தேசோதயமும் இணைந்து நடத்திய **மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் இன் நூறாவது ஜனன தின கலைஞர் கௌரவிப்பு விழாவில் திரு.காரான சிங்கம் கணேசலிங்கம் (கிராம உத்தியோகத்தர்- வேலணை வடக்கு. சமாதான** [illegible]





Best Wishes

கலாநிதி லயன் கனகசபை சுந்தரலிங்கம்
**(காரை மணிகண்டன்)**
சமாதான நீதிவான்களுக்கான அமைப்பின்
காரைநகர் பிரதேச அமைப்பாளர்

# கருக்கலைப்பை சட்டமாக்கும் தீர்மானம் எதுவுமில்லை

கருக்கலைப்பைச் சட்டமாகக் கொண்டு வருவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. சில மருத்துவர்களே தமது வருமானத்தை நோக்காகக் கொண்டு இவ்வாறான தீர்மானங்களைக் கொண்டுவர முயற்சிப்பதாகவும் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கருக்கலைப்பைச் சட்ட ரீதியானதாக்க அரசு நடவடிக்கை எடுப்பதாகக் கர்தினால் மெல்கம் ரஞ்ஜித் அரசுக்குக் கண்டனம் தெரிவித்திருந்தார். இது குறித்து அமைச்சரிடம் வினவியதற்கே இவ்வாறு கூறியுள்ளார். (5)

# இருவேறு குற்றச்சாட்டில் வெளிநாட்டவர் இருவர் கைது

கொழும்பு, செப். 10

டுபாயிலிருந்து தங்க ஆபரணங்களை இலங்கைக்குச் சட்டவிரோதமாகக் கொண்டு வந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடம் இருந்த 288 கிராம் தங்க ஆபரணங்கள் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர் 28 வயதுடையவர் என்று தெரியவந்துள்ளது. இதேவேளை, நுழைவிசைவு அனுமதிப்பத்திரம் இன்றி இலங்கையில் தங்கியிருந்த 2 பாகிஸ்தான் நாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கொள்ளுப்பிடி பகுதியில் வைத்து அவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (5.33)

# இலஞ்ச ஊழல் விசாரணைக்குழுவில் முன்னிலையானார் சிரந்தி

கொழும்பு, செப். 10

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மனைவி சிரந்தி ராஜபக்ச இலஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையானார்.

சிரிலிய சவிய அமைப்பின் சொத்து மற்றும் உடமைகள் தொடர்பில் அவரிடம் வாக்கு மூலம் பதிவுசெய்யப்படுவதாக ஆணைக்குழுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (5.33)

# ஓட்கடோக்களுக்கு மீட்டர் கட்டாயம்

## வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

கொழும்பு, செப். 10

எதிர்வரும் முதலாம் திகதி முதல் பயணிகள் மற்றும் பொருள்களை ஏற்றிச் செல்லும் முச்சக்கர வண்டிகளுக்கு மீட்டர் பொருத்தப்படுதல் கட்டாயமாக்கும் அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

[illegible] திகதி என்பன [illegible]ருத்தல் அவசியமாகும்.

முச்சக்கரவண்டியின் சாரதியின் இருக்கைக்குப் பின் பகுதியில் பயணிகளுக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய வகையில், வாகனப் பதிவு இலக்கம், சாரதியின் பெயர், நிழற்படம் என்பனக் காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

முச்சக்கரவண்டி சாரதியாகச் சேவையாற்றும் அனைத்து சந்தர்ப்பங்களிலும், குறுகிய காலத்திற்குள் விரைவாகச் சென்றடைய கூடிய வீதியூடாகப் பயணிகள் செல்லக்கூடிய இடங்களுக்கு அவர்களை அழைத்து செல்ல வேண்டும் எனவும் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு முச்சக்கர வண்டியிலும் அதன் வலது பக்கத்தினூடாகப் பயணிகள் வண்டியில் ஏறுவதற்கோ அல்லது இறங்குவதற்கோ இடமளிக்கக் கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

# ஊடகவியலாளர்களும் சொத்து விபரங்களை பகிரங்கப்படுத்தவேண்டும்

## முன்னாள் அமைச்சர் ரவியின் கோரிக்கை இது

கொழும்பு, செப். 10

ஊடகவியலாளர்கள் தமது சொத்துக்கள், பொறுப்புகள் பற்றிய விவரங்களை வெளிப்படுத்த வேண்டும் என்று முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்துக்கள், பொறுப்புக்களின் விவரங்களை வெளியிடவில்லை என்று ஊடகத்தில் வெளியான செய்தி தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் ரவிகருணாநயக்க அறிக்கை வெளியிட்டார். இதன் போதே, ஊடகவியலாளர்களும் தமது சொத்துக்கள், பொறுப்புகள் பற்றிய தகவல்களைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்று கோரினார்.

ஊடகவியலாளர்கள் தமது சொத்துக்களின் விவரங்களை வெளியிட வேண்டும் என்று கோரும், அதிகாரம் தனக்கு இல்லை என்று சபாநாயகர் கரு ஜெயசூரிய பதிலளித்தார்.

அதேவேளை, இதனை ஊடகத்துறை அமைச்சின் ஊடாகப் பரிந்துரை செய்யு முடியும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசநாயக்க தெரிவித்தார். (5)

# அரசுக்கு எதிர்ப்பு 28ஆம் திகதி வாகனப் பேரணி

கொழும்பு, செப். 10

அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக எதிர்வரும் 28ஆம் திகதி வாகன பேரணியை நடத்த உள்ளதாகத் தாயகத்தைக் காக்கும் தேசிய இயக்கம் தீர்மானித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், தாயகத்தைக் காக்கும் தேசிய இயக்கத்தின் உறுப்பினரான முருத்தெட்டுவாவ ஆனந்த தேரர் இதனைத் தெரிவித்தார்.

இந்தப் பேரணி மாத்தறை தெவிநுவர விஷ்ணு ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி களனி விகாரையுடன் நிறைவடையும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (5,33)

# 2,560 பேருக்கு பதவி உயர்வு

கொழும்பு, செப். 10

பொலிஸ் சேவையில் 2 ஆயிரத்து 560 பேருக்குப் பதவி உயர்வு வழங்கப் பொலிஸ் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக ஆணைக்குழுவின் செயலர் ஆரியதாஸ குரே தெரிவித்துள்ளார்.

பொலிஸ் கொன்ஸ்டபிள், அலுவலர்கள், உப பரிசோதகர்கள் ஆகியோருக்கே பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது. (5,33)












## அமெரிக்கா, சீனா

# ஏட்டிக்குப் போட்டியாக சின்னையாவுடன் சந்திப்புகள்

கொழும்பு, செப். 10

கடற்படைத் தளபதியாக அண்மையில் பதவியேற்ற வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவை, அமெரிக்க மற்றும் சீன நாடுகளின் பாதுகாப்பு ஆலோசகர்கள் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

அமெரிக்கத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் லெப்.கேணல் டக்ளஸ் ஹெஸ் கடந்த வியாழக் கிழமை கடற்படைத் தலைமையகத்துக்குச் சென்று, வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவைச் சந்தித்தார். அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த அதிகாரியான லெப். கொமாண்டர் பிரையன் பேஜும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டார். இந்தச் சந்திப்பில் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதேவேளை, கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்தின் இராணுவ, கடற்படை, மற்றும் வான் படைப் பாதுகாப்பு ஆலோசகரான கேணல் சூ ஜியன்வெய் கடற்படைத் தளபதியை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின் போது, இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பரந்துபட்ட விவகாரங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது. (5)

# இலங்கையில் 217 வெளிநாட்டவர் 3ஆண்டுகளில் சாவு

கொழும்பு, செப். 10

கடந்த மூன்று ஆண்டுகளில் இலங்கையில் 217 வெளிநாட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

2016ஆம் ஆண்டில் மட்டும் 81 வெளிநாட்டவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவின்போது மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர், உதய கம்மன்பில சட்டம் மற்றும் ஒழுங்குகள் அமைச்சிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் கயந்த கருணாதிலக்க மேற்கண்டவாறு கூறினார்.

2014ஆம், 2015ஆம் மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் இலங்கையில் உயிரிழந்த வெளிநாட்டவரின் எண்ணிக்கை, அந்த உயிரிழப்புக்கான காரணங்கள் எவையென உதய கம்மன்பில கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இதற்குச் சட்டம் மற்றும் ஒழுங்குகள் அமைச்சருக்குப் பதிலாக அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்ததாவது:

2014ஆம் ஆண்டில் 49 வெளிநாட்டவர்களும், 2015ஆம் ஆண்டில் 81 வெளிநாட்டவர்களும், 2016ஆம் ஆண்டில் 87 வெளிநாட்டவர்களும் உயிரிழந்துள்ளனர். தற்கொலை, நோய், துப்பாக்கிச் சூடு, கத்திக்குத்து, மின்சாரத்தாக்குதல், விலங்குகள் தாக்குதல், நீரில் மூழ்குதல், கீழே விழுதல், ரயில் மற்றும் வாகனவிபத்துகள் காரணங்களாக உள்ளன - என்றார். (5)



## மீசாலையைச் சேர்ந்தவர் 80வயதில் பட்டம்பெற்றார்

கொழும்பு, செப். 10

அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் கனடா வளாகத்தினரின் பட்டமளிப்பு விழாவில், மீசாலையைச் சேர்ந்த திருமதி யோகரத்தினம் செல்லையா முதுமானிப் பட்டத்தை 80ஆவது வயதில் பெற்றுக் கொண்டுள்ளார்.

பட்டமளிப்புக் கடந்த வார இறுதியில் கனடா ரொரன்ரோ யோர்க்வூட் நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

இவர் திருக்குறளிற்கு ஆங்கிலத்திலும், தமிழிலும் விளக்கவுரை வழங்கியவர். பிறந்த மண்ணில் பெற்ற சுகந்தம் 4 நூலையும் வெளியிட்டுள்ளார். (5)

## முதல்கோணல் முற்றும் கோணலா ?

# பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட பா.ஜ.க. தலைவர் திலக்குக்கு வரவேற்பு

கொழும்பு, செப். 10

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பனவை, பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட சர்ச்சைக்குரிய பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் ஒருவரே முதலில் சந்தித்துப் பேசியுள்ளார்.

மூன்று நாள்கள் பயணமாக நேற்று முன்தினம் மாலை புதுடில்லி சென்ற அயலுறவுத் துறை அமைச்சர் திலக் மாரப்பனவை, பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவரான, விஜய் ஜோலி நேற்று முன்தினம் இரவு சந்தித்து, மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்றார். இதையடுத்து, இவர்கள் பேச்சுக்களையும் நடத்தியுள்ளனர்.

புதுடில்லி சட்டமன்ற முன்னாள் உறுப்பினரான விஜய் ஜோலி பாரதிய ஜனதாக் கட்சியின் வெளிநாட்டு விவகாரப் பிரிவின் முன்னாள் தலைவராவார். அந்தக் கட்சியின் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினராக இருக்கும் இவர், மீது பெண் ஒருவர் பாலியல் குற்றச்சாட்டைச் சுமத்தியதை அடுத்து, அவருக்கு எதிராகப் புதுடில்லிப் பொலிஸார் பாலியல் வன்புணர்வு உள்ளிட்ட மூன்று பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் குர்கானில் உள்ள விடுதி அறையில், தனக்கு மயக்க மருந்து கொடுத்து, விஜய் ஜோலி, வன்புணர்வுக்கு உட்படுத்தியாகப் பெண் ஒருவர் குற்றம்சாட்டியிருந்தார். விஜய் ஜோலி அதனை மறுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

**இலங்கையில் முதல் முறையாக**

**Haier** Inspired Living

## மறைமுக கட்டணங்கள் இல்லை!

**இப்பொழுது ஹையர் Wi-Fi வளிச்சீராக்கிகளுக்கு எவ்வித மேலதிக கட்டணங்களும் இன்றி**

## 2 வருட உத்தரவாதம் இலவசம்!

Comfort Made Easier

Wi-Fi Smart Control

R410A



புதுமையான மற்றும் மலிவான ஹையர் Wi-Fi வளிச்சீராக்கியை நீங்கள் இருக்கும் இடத்திலிருந்தே Wi-Fi ஆதாரத்தில் உங்கள் ஸ்மார்ட்.'.போன் மூலம் கட்டுப்படுத்த முடியும். இரவு மற்றும் பகல் நேரங்களில் வெப்பநிலையை சரிசெய்து ப்ரீசெட் செய்யவும், முன்கூட்டியே ஒரு வாரத்திற்கு புரோகிரம் செய்யவும் முடியும். மேலும், உங்கள் குழந்தைகள் வீட்டில் தனியாக இருக்கும் சந்தர்ப்பங்களில் வளிச்சீராக்கியின் பயன்பாட்டை கண்காணிக்கவும் முடியும்.

**47% துரித குளிரூட்டல்**
**17m + தூரத்திற்கு காற்றோட்டம் வீசும்**

| கொள்ளளவு | 9000BTU | 12000BTU | 18000BTU | 24000BTU |
|---|---|---|---|---|
| விலை | ரூ.74,990 | ரூ.79,990 | ரூ.99,990 | ரூ.122,990 |
| விசேட விலை | ரூ.66,990 | ரூ.72,990 | ரூ.90,990 | ரூ.112,990 |
| மாதாந்த தவணை | ரூ.4,743 | ரூ.5,056 | ரூ.6,306 | ரூ.7,743 |

வட்டியில்லா 15 மாத கொடுப்பனவு

வட்டி இல்லை ஜொலி அதிகம்

- R410a சூழல் நட்புறவுடைய எரிவாயு
- அரிப்பை எதிர்க்கும் வெளிப்புற அலகு
- Wi-Fi தொழில்நுட்பம்:
- மூட் கட்டுப்பாடு
- விசிறி வேக கட்டுப்பாடு
- டைமர் செயற்பாடு
- வெப்பநிலை கட்டுப்பாடு
- காற்று திசைக்காட்டி இயக்கம்
- பிழை கண்டறிதல்
- ஸ்லீப் கர்வ்:

நீங்கள் உறங்கும் நேர அட்டவணைக்கு அமைவாக, முன்கூட்டியே ஒரு வார காலத்திற்கான வெப்பநிலையை சரிசெய்திட முடியும். (22.00 முதல் 8.00)

Hotline: 011 5999000
A/C Projects: 0714020800

நாடளாவிய அபான்ஸ் காட்சியறைகள் மற்றும் அங்கீகாரம் கொண்ட ஏக முகவர்களிடம் பெற்றுகொள்ளுங்கள்.

**Abans**



# A/L இன் பின்

*A solid foundation for professional growth*

**IPM** Sri Lanka
The Nation's Leader in HRM



பாடநெறி ஆரம்பம் Sept. / Oct. 2017

மொழி: ஆங்கிலம்
காலம் : 2 மாதங்கள்
பாடநெறிக்கட்டணம் : LKR 19,000/-*

## FCHRM | Foundation Course in Human Resource Management

பாடநெறியினை தொடர்வதற்கான தகைமைகள்
உயர்தர பரீட்சை முடிவுகளுக்கு காத்திருக்கும் மாணவர்கள்

Educational Pathway
FCHRM 2months → CCHRM 3months → Dip. in HRM 1year → PQHRM 1year & 3months → MSc. 1year & 6months
(2years & 3months)

நாடளாவிய தொடர்புகளுக்கு அழையுங்கள்
**011 2199988**
Apply Online
**www.ipmlk.org**

Our Affiliations
APFHRM

**Institute of Personnel Management Sri Lanka (Inc.)**
(Incorporated by an Act of Parliament No. 24 of 1976)
HR HOUSE, No.43, Vijaya Kumaranathunga Mawatha, Colombo 05.

| REGIONAL CENTRES | |
|---|---|
| கண்டி | : 081 2238030 |
| குருநாகல் | : 037 2231990 |
| காலி | : 091 2231106 |

| AFFILIATED STUDY CENTRES | | | |
|---|---|---|---|
| நீர்கொழும்பு | : 031 7388001 | யாழ்ப்பாணம் | : 021 2224142 |
| கம்பஹா | : 033 3338486 | அனுராதபுரம் | : 025 2053150 |
| மட்டக்களப்பு | : 065 7572572 | திருகோணமலை | : 026 7572572 |

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## நாம் கேட்பது எமக்கென்று ஒரு நினைவிடமே!

போரில் உயிரிழந்தவர்கள் அனைவருக்குமாக ஒரு பொது நினைவுத் தூபியை அனுராதபுரத்தில் அமைக்கலாம் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான்விஜேவர்த்தனயோசனைவைத்துள்ளார். முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாமுன்வைத்தபிரேரணையின்மீதுஉரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

போரில்உயிரிழந்தமக்களைநினைவுகூருவதற்கானநினைவுத்தூபிஒன்றைஅமைத்தல்மற்றும்நினைவுகூருவதற்கான பொதுத் திகதி ஒன்றைக் குறிப்பிடுதல் என்ற தனிநபர் பிரேரணையை டக்ளஸ் முன்வைத்திருந்தார்.

போரில்உயிரிழந்தவர்கள்நினைவுகூரப்படவேண்டும்என்பதில்எவருக்கும்மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. அப்படி உயிரிழந்தவர்களை நினைவுகூரும் பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்டால் அது பொது இடத்திலும் ஒரேதிகதியிலும் இடம்பெறுவதையும்கூட ஏற்றுக்கொள்ளலாம். ருவான் விஜேவர்த்தனவின் யோசனை அதன் அடிப்படையிலானதே.

ஆனால், இந்தவிடயத்தில்தமிழர்களின்கோரிக்கைபோரில் உயிரிழந்தவர்களைநினைவுகூருவது மட்டுமல்ல. இறுதிப் போரின்போது நிகழ்த்தப்பட்ட மனிதப்படுகொலைகளையும், மனித உரிமை மீறல்களையும், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களையும் உலகுக்கும் அடுத்த சந்ததிக்கும் உரத்துச் சொல்வதே தமிழ் மக்களின் தேவை.

அத்தகைய கொடூரங்களும் குருதிச் சகதியும் மீண்டும் உருவாகக்கூடாது என்கிற எண்ணத்தையும்விழிப்புணர்வையும் இனிவரும் சந்ததியினருக்கு எடுத்துச் சொல்வதும், அவர்களின் மூத்தவர்கள் உரிமைகளை மீட்டெடுப்பதற்காகப் பட்ட துன்பங்களைவிட்டுச்செல்வதற்குமாகவேநினைவுத் தூபியும்நினைவுநிகழ்வும்வேண்டும்என்று கேட்கிறார்கள்.

தமிழ் மக்களின் இந்தத் தேவை, நோக்கம், போரில் உயிரிழந்த அனைத்து மக்களுக்குமானநினைவுத்தூபியின்ஊடாக நிறைவேறிவிடாது. அதுவும், பொதுமை என்ற அடிப்படையில்அது அனுராதபுரத்தில்அமைவதன்ஊடாகஒருபோதும் நிறைவேறாது. அப்படி அமையப்படக்கூடிய ஒரு தூபியும் பொது நினைவு நாளும் அனைத்து மக்களுக்கும் போரின் கொடூரத்தைநினைவுறுத்திவிழிப்புணர்வூட்டுவதாகஇருக்கும்என்பதில்சந்தேகமில்லை. ஆனால், அதுதமிழர்களுக்கு இந்த நாட்டில் இழைக்கப்பட்ட கொடூரங்களையும் துன்பங்களையும், இனப்படுகொலைகளையும்மனிதப்படுகொலைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக ஒருபோதும் இருக்கமுடியாது.

அப்படியான பொதுத்தூபியையும், பொது நினைவு நாளையும் அரசு கட்டட்டும்; அறிவிக்கட்டும். பெருமெடுப்பில் நினைவு நிகழ்வுகளையும் நடத்தட்டும். அதற்கு எவரும் எதிர்ப்புச்சொல்லப்போவதில்லை. ஏனெனில்போர்என்ற பெயரில் இலங்கையில் பல தரப்புகளாலும் மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். அவர்கள் எல்லோரும் நினைவு கூரப்படவேண்டியவர்களே.

அதேநேரத்தில்போரில்தமிழ்மக்கள்பட்ட அளவுக்குஇழப்புக்களையும் துயரங்களையும் வேறு இன மக்கள் எதிர்கொண்டார்கள் என்று சொல்லமுடியாது. போரின் இழப்பு எல்லோருக்கும்சமமானது என்று பொதுமைப்படுத்தப்பட்டாலும், ஒப்பீட்டளவில் அது தமிழர்களையே பெரிதும் பாதித்தது. அதிலும் குறிப்பாக, அரச பயங்கரவாதத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களே என்பதையும் எல்லோரும் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

எனவே, அனுராதபுரத்தில் அமைக்கப்படக்கூடிய பொதுத் தூபியும், அரசு அறிவிக்கும் பொதுத் தினமும் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்துவதாக இருக்க முடியாது. இந்த விடயத்தில் தாம் என்ன செய்யவேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்புகிறார்களோ, அதனைச் செய்வதற்கு அவர்களுக்கு உள்ள உரிமையை அங்கீகரிக்கவேண்டும், அனுமதிக்க வேண்டும். அதுதான்அரசிடம்இருந்துஎதிர்பார்க்கப்படுகிறது.

# அரசமைப்புக்கான 20ஆவது திருத்தமும் குழப்ப அரசியலும்

■ இந்துமதி

கூட்டாட்சி அரசு, அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தை எந்த வகையிலாவது நிறைவேற்றியே தீருவது என்பதில் உறுதியாகவுள்ளது.

ஆனால் இதற்கு மாகாணசபைகள் எதிர்ப்புத் தெரிவிப்பதால் அரசின் முயற்சி பின்னடைவைச் சந்தித்து வருகிறது. ஏற்கனவே ஊவா மற்றும் தென் மாகாணசபைகள் இந்தத் திருத்தச் சட்டவரைவை நிராகரித்துவிட்டன. ஏனைய சபைகளும் ஓரளவுக்கு அதே முடிவில் உள்ளதைக் காணமுடிகின்றது.

### 20ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டால் நாட்டில் ஒரே நாளில் தேர்தல் நடத்த வாய்ப்பு

தற்போதையநிலையில் இந்தத் திருத்தம் நிறைவேற்றப்படுமானால், நாட்டில்உள்ளஒன்பது மாகாணசபைகளுக்கும் ஒரே தினத்தில் தேர்தல்களை நடத்த இயலும். தமது பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்த மாகாண சபைகளை அதுவரை நாடாளுமன்றம்பொறுப்பேற்றுக்கொள்ளும் என்பதை மாகாண சபைகள் எதிர்க்கின்றன. இதனால் குறித்த சட்டவரைவில் சில திருத்தங்களைமேற்கொள்வது தொடர்பாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சட்டமா அதிபருடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

புதிய திருத்தத்தின் பிரகாரம் அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள் தேர்தல்கள் இடம்பெறுமெனத் தெரிகின்றது. ஆனால் அதற்கு முன்னர் தமது பதவிக் காலத்தைப் பூர்த்தி செய்கின்ற மாகாண சபைகளின் எதிர்காலம் தொடர்பாக இதுவரை தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை.

இதே வேளை வடக்கு மாகாண சபையும் உத்தேச திருத்தச் சட்டவரைவை நிராகரிக்குமெனத் தெரியவருகின்றது.

ஆனால் இறுதி முடிவு போகப் போகத்தான் தெரியவரும். இதேவேளை, வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பதவிக்காலம் முடிவடையும் மாகாணசபைகளில் தேர்தல் இடம்பெறும் வரையில் காபந்து அரசுகளை அமைக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளார். இதன் மூலம் முதலமைச்சர்பதவியில் அவர் தொடர்ந்தும் நீடிக்க இயலும்.

வடக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்துடன் முடிவடைகின்றது.

### எதிர்ப்பு அரசியலை முன்னிலைப்படுத்திச் செயற்பட முனைகிறார் வடக்கு முதலமைச்சர்

இதேவேளை, அடுத்த ஆண்டுக்குள் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இடம்பெறுமானால் புதிய திருத்தச் சட்டவரைவை வடக்குமாகாணசபை எதிர்ப்பதற்கான தேவை எழமாட்டாது. எதற்கெடுத்தாலும் தாம் அரசை எதிர்ப்பதான தொரு தோற்றத்தை உருவாக்கிவிட வேண்டும் என்பதில் சி.வி.விக்னேஸ்வரன் முனைப்புடன் உள்ளார். எதிர்ப்பு அரசியல் மூலமாகவே தம்மையொரு கதாநாயகனாக மக்கள் முன்னால் நிலைநிறுத்தமுடியுமென அவர் நம்புகின்றார். அவருக்கு உருவேற்றிக் கொண்டிருப்பவர்களும் இதைத்தான் எதிர்பார்க்கின்றனர். இதேவேளை எதிர்காலத்தில் தாம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் எந்தத் தேர்தலிலும்போட்டியிடப்போவதில்லையென மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். இந்த அறிவிப்பு அரசியல்ரீதியாக அவருக்குப்பெரும்பின்னடைவை ஏற்படுத்தப் போகின்றது. பெரும்பான்மையின மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மாறிமாறிவாக்களித்துப்பழகிப் போனவர்கள். இந்த இரண்டு கட்சிகளை விட வேறெந்தக் கட்சியாலும் அவர்களைக் கவர்ந்திட இயலாது.


இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் புறக்கணிப்பது மகிந்தவுக்கே பின்னடைவை ஏற்படுத்தப் போகின்றது. சில தினங்களுக்கு முன்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆண்டு நிறைவு விழா, மகிந்த கலந்து கொள்ளாமலேயே சிறப்பாக இடம்பெற்று முடிந்துள்ளது. இது சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைவரான மைத்திரிபால சிறிசேனவுக்குக் கிடைத்த பெரு வெற்றியென்றே கூற வேண்டும்.

### போர்க்குற்றங்கள் தொடர்பான அரச தலைவரது கருத்தால் தமிழ் மக்கள் அதிருப்தி

போர்க்குற்றங்கள் தொடர்பாக அரசதலைவர் தெரிவித்த கருத்துக்கள், போரால் பாதிக்கப்பட்ட மக்களிடையே பெரும் அதிர்ச்சியைத் தோற்றுவித்துள்ளது.

போர்க்குற்றவாளியெனக் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதிக்கு ஆதரவாக அவர் கருத்துத் தெரிவித்தமை படையினரையும், பெரும்பான்மையின மக்களையும் மனம் குளிர வைத்திருக்கலாம். ஆனால் போர் காரணமாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களில் அரச தலைவரின் அத்தகைய கூற்று அதிருப்தியை ஏற்படுத்திவிட்டது. இதனால் அரச தலைவர் மீது அவர்கள் வைத்திருந்த நம்பிக்கையும்குலைந்துபோய் விட்டது.





வடக்கு மக்களைப் பொறுத்தவரையில் அரசமைப்புக்கான 20ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பாகவோ அல்லது அடுத்த மாகாணசபைத் தேர்தல் தொடர்பாகவோ அவர்கள் பெரிதாக அக்கறைகாட்டுவதாகத் தெரியவில்லை. வடக்கு மாகாணசபை மீதுதாம்கொண்டிருந்த நம்பிக்கையை முற்றாக இழந்து நிற்கும் அவர்கள், மாகாண சபை நிர்வாகம் மீதான தமது அவநம்பிக்கையை மறுபரிசீலனை செய்வரென எதிர்பார்க்க முடியாது. மாகாண சபைத்தேர்தல் விரைவில் இடம்பெறுமாயின், பொருத்தமானதொரு மாகாணசபை நிர்வாகத்தையும் முதலமைச்சரையும் தெரிவு செய்ய வேண்டிய பொறுப்பும் கடப்பாடும் வடக்கு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. வீராவேசத்துடன் வசனம் பேசுபவர்களையும், ஊழல்வாதிகளையும் அவர்கள் இனியும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

மாகாண சபைக்குள் நிகழ்ந்த குழப்பங்களால் அவர்கள் மனம் வெறுப்படைந்த நிலையில் உள்ளனர். அவர்களை ஆற்றுகைப்படுத்துவதுதான் அரசியல்வாதிகளது இன்றைய முக்கிய தேவையாகும்.



# போர்க்குற்றவாளிகளை புத்தபெருமானும் மன்னிக்கமாட்டார்

சேரலாதன்

“ஜெனரல் ஜகத் ஜயசூரிய உட்படப் படையினர் அனைவரையும் போர்க்குற்ற விசாரணையிலிருந்து பாதுகாப்பேன்” என அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளமை தெற்கில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. தெற்கில் நிலவுகின்ற தற்போதைய சூழ்நிலையில் அவர் அப்படித்தான் கூறியிருக்க வேண்டும். அவ்வாறு கூறியிருக்காது விட்டால், அவரால் ஆட்சியில் தொடரமுடியாத நிலைதான் உருவாகியிருக்கும்.

முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய மீதான குற்றச்சாட்டுக்கள் தற்போது தீவிரமடைந்துள்ளன. இவர் போர்க்குற்றங்கள் புரிந்ததற்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாகவும், அவற்றைத் தம்மால் வெளியிடமுடியுமெனவும் இறுதிப் போர் வேளைய இராணுவத் தளபதியும், தற்போதைய கூட்டு அரசின் அமைச்சருமான சரத்பொன்சேகா கூறியுள்ளமை பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திவிட்டது. இந்த நிலையில் அரச தலைவரின் மேற்படி அறிவிப்பு வெளிவந்தமை முக்கியத்துவம் பெறுகின்றது.

இறுதிப் போரின் இறுதி நாள்களில் போர் முனையில் இடம்பெற்ற சம்பவங்கள் மிகக் கொடியவை. இவற்றுக்கு அப்போதைய அரச தலைவர், பாதுகாப்புச் செயலர், இராணுவத்தளபதி ஆகியோர் பொறுப்புக் கூற வேண்டும். முன்னாள் அரச தலைவரும், பாதுகாப்புச் செயலரும் போர்க்குற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லையென அடித்துக் கூறி வருகின்றனர். சரத்பொன்சேகாவும் இந்த நிலைப்பாட்டையே பின்பற்றி வந்தார். தற்போது திடீரென தூக்கத்தில் இருந்து விழித்தவர் போன்று ஜகத் ஜயசூரிய போர்க்குற்றத்தில் ஈடுபட்டதாகக் கூறுகிறார். ஆனால் ஜகத் ஜயசூரிய இதை முற்றாகவே மறுக்கிறார். போர் முனையில் நடந்த சகலவற்றையும் தாம் தெரிந்து வைத்துள்ளதாகவும், அப்போதைய இராணுவத் தளபதியின் உத்தரவின் பேரிலேயே அனைத்துச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் கூறுகின்றார்.

### போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ளும் நோக்கம் இலங்கை அரசிடம் இல்லை

இறுதிப்போர் முடிவடைந்து எட்டு ஆண்டுகளாகிவிட்டன. போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு விட்டது.

இலங்கை அரசு, போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, கால அவகாசம் கேட்டுக் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறது. விசாரணைகளை நடத்துவதற்கான விருப்பம் இலங்கை அரசிடம் அறவேஇல்லையென்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. தற்போது அரச தலைவரும் இதை உறுதிசெய்துவிட்டார். தற்போது மியன்மாரில் சிறுபான்மை முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. முஸ்லிம் மக்கள் வகைதொகையின்றிக் கொலைசெய்யப்படுகின்றனர். இதுவோர் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையென விமர்சிக்கப்படுகின்றது. நீண்டகாலமாக இராணுவ ஆட்சியினரால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தவரும், மனித உரிமைகள்செயற்பாட்டாளருமான ஆங் சாங் சூகியின் ஆதரவிலான மியன்மார் அரசு முஸ்லிம் மக்களுக்கு எதிரான கொடுமைகளைத் தடுப்பதற்குத் தவறியுள்ளது. மேலும் வெளியாள்கள் மியன்மாருக்குள் வந்து விசாரணையில் ஈடுபடுவதையும் ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. உள்நாட்டில் வகுக்கப்படுகின்ற பொறிமுறைகளுக்கு அமையவே விசாரணைகள் இடம்பெறுமென அரசு கூறி வருகின்றது.

### சிறுபான்மை இனத்தவர் பெரும்பான்மைத் தரப்புக்களால் ஒடுக்கப்படுவது உலக வழக்கமே

இலங்கையும் மியன்மார் அரசு போன்றே நடந்து கொள்கின்றது.

இன்று உலகளாவிய ரீதியில் சிறுபான்மையின மக்கள் பெரும்பான்மையின மக்களாலும் ஆட்சியாளர்களாலும் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுவது வழக்கமானதொன்றாகியுள்ளது.

இறுதிப் போரின் இறுதிக்கட்டத்தில் அப்போதைய அரச தலைவரான மகிந்த ராஜபக்ச நாட்டில் இருக்கவில்லை. இதனால் தற்போதைய அரசதலைவரான மைத்திரிபால சிறிசேனவே பதில் பாதுகாப்பு அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தார். இந்த வகையில் படையினர் அனைவரது செயற்பாடுகளுக்கும் இவரே பொறுப்பாக இருந்துள்ளார். ஆனால் அப்போதைய நிலையில்பாதுகாப்புச்செயலர்பதவியில் அமர்ந்திருந்த கோத்தபாய ராஜபக்சவே பாதுகாப்புத் தொடர்பான முழு அதிகாரத்தையும் கொண்டிருந்தார். அரச தலைவரைவிட இவரது கட்டளைகளையே படையினர் பெரிதும் மதித்தார்கள். அவற்றுக்கு ஏற்பவே செயற்பட்டார்கள்.

### தம்மைப் புனிதமானவர்களாக நிலை நிறுத்த முயலும் ஆட்சியாளர்களும் பாதுகாப்புப் படையினரும்

தற்போது அரசின் சார்பில் போரில் ஈடுபட்ட அனைவருமே குற்றமற்றவர்களாகத் தம்மைச் சித்திரிப்பதற்கு முயற்சி செய்கின்றனர். அரசின் முழு ஆதரவும் இவர்களுக்குக் கிடைத்து வருவதால் அது குறித்து அச்சம் இவர்களிடம் கிடையாது.

ஐக்கிய நாடுகள் சபை பெயரளவில் மட்டுமே ஒருபன்னாட்டுநிறுவனமாகக்காட்சி தருகின்றது. அதன் செயற்பாடுகள் திருப்தி தருவதாகக் காணப்படவில்லை. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமையைக் கொண்டிருக்கும் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய வல்லரசு நாடுகள் தமது விருப்பம் போன்று ஐ.நா. அமைப்பைப் பயன்படுத்தி வருகின்றன. இந்த நாடுகள் தமக்கு வழங்கப்பட்ட வீட்டோ அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு தமது எண்ணம் போன்று செயற்பட்டு வருகின்றன. ஈழத்தமிழர் விடயத்திலும் கூட ரஷ்யாவும், சீனாவும் இலங்கை அரசுக்கு முண்டு கொடுக்கின்றன. இதனால் தமழர்களுக்கு உதவமுடியாத பரிதாபகரமான நிலையில் ஐ.நா. காணப்படுகின்றது. இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் வரும்போது அவற்றைச் செயலிழக்கச் செய்வதற்கு வீட்டோ அதிகாரம் காத்திருக்கின்றது.

இலங்கையொரு பௌத்த நாடு எனக் கூறிக் கொள்கிறார்கள். புத்தபெருமான அன்பு, அகிம்சை, இரக்கம், பிற உயிர்களை வருத்தாமை ஆகிய உயர்ந்த தத்துவங்களையே தமது போதனைகளாகக் கொண்டிருந்தார். தமது அரச வாழ்வைத் துறந்து அரச மரத்தடியில் ஆண்டியாக அமர்ந்திருந்த மிகப்பெரிய மகான் அவர். ஆனால் அவரது வழியைப் பின்பற்றி பௌத்த மதத்தைக் கைக்கொள்ளும் இலங்கையில் அடிக்கடி மனித உயிர்கள் வதைக்கப்படுதையும் குருதி ஆறு பெருக்கோடும் நிலை ஏற்படுவதையும் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. புத்தபகவானும் இதை ஒரு போதுமே ஏற்றுக்கொள்ளமாட்டார்.

இறுதிப் போரின்போது தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கண்டு அவரது கண்களிலிருந்து கண்ணீருக்குப்பதிலாககுருதியேஆறாகப்பாய்ந்தோடியிருக்கும். ஆனால்அவரைப்பின்பற்றி நடப்பதாகக் கூறுபவர்கள் பொய்களைக் கூறி அவற்றை உண்மையாக்குவதற்காக முயன்று கொண்டிருக்கின்றனர்.

எவரது அழுத்தங்களுக்கும் வளைந்து கொடாது இலங்கையின் அரச தலைவர் போர்க்குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பாராயின், அவர் புத்த பகவானுக்கு நிகராக வைத்துக் கணிக்கப்படுவார்.



## ஆசிரியருக்கான கடிதம்

### எமது சிறார்களது மனநலம் சிறக்க உதவுவோமா?

யாழ். அரச செயலகத்துக்கு முன்பாக உள்ள பழைய பூங்காவுக்கும், யாழ். நூலகத்துக்கு முன்பாக உள்ள சுப்பிரமணியம் பூங்காவுக்கும் ஒரு தடவை சென்று வந்தால் அவை எமது பழைய நினைவுகளை இரைமீட்டிப் பார்க்க வழிவகுக்கும்.

எமது குழந்தைகளை வேறுநாட்டுக் குழந்தைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள் தமிழ் நாட்டு குழந்தைகளால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில்எப்படிஎல்லாம்சுட்டித்தனமாக அறிவுப்பூர்வமான தன்னம்பிக்கையோடு தைரியமாக உரையாட, பாட, ஆட முடிகிறது. சகோதர இன குழந்தைகள் முன்னைய காலகட்டங்களை விட, உடல், உள ரீதியாக மிக நல்ல வளர்ச்சி பெற்றுத் திகழ்வதை அவதானிக்க முடியும். ஆனால் எமது வடக்குக் கிழக்குக் பகுதிகளைச் சேர்ந்த தமிழ்க் குழந்தைகள் அச்சம், தயக்கம், வெட்கம் என்ற உணர்வுகளால் முடங்கிப் போய் தம்மிடமுள்ள திறன்களை வெளிப்படுத்த இயலாத நிலையில் உள்ளனர்.

வெறுமனே படிப்பு, படிப்பு என்று ஒரு பக்கம், மறுபுறம் பூங்கா, பீச், விளையாட்டுத் திடமல் என வசதிகள் எம் குழந்தைகளுக்குக் குறைவு. அவ்விதம் கிட்டினாலும் அவற்றைப் பயன்படுத்தி மனமகிழ்வு பெற அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. இவ்வாறான இடங்களுக்குச் சென்று வருவதன் மூலம் பல குழந்தைகள் கூடுமிடத்தே பழகி ஒரு மாறுபட்ட அனுபவத்தை பெற முடியும்தானே? வெளிநாட்டு உறவினர் வந்தால்தான் ஒரு சில குழந்தைகளுக்கு இவ்வாறு சுற்றுலா சென்று மகிழ வாய்ப்புக் கிட்டுகிறது. பெரும்பாலான குழந்தைகளுக்கு அத்தகைய வாய்ப்புக் கிட்டுவதில்லை.

சுப்பிரமணியம் பூங்கா, பழைய பூங்கா என்பவை தற்போதைய காலகட்டத்துக்கு ஏற்ற போதுமான வசதிகளைக் கொண்டிருக்கவில்லை. இருப்பவையும் உடைந்து, துருப்பிடித்து சேதமடைந்துள்ளன. இந்த நவீன யுகத்தில் பல விளையாட்டுச் சாதனங்கள்வந்தபின்னும்எமதுபிள்ளைகள் பழையமுறையிலானசிலவிளையாட்டுச் சாதனங்களையே பயன்படுத்த வேண்டிய நிலை. கல்லினால் உருவாக்கப்பட்ட மிருகங்களது உருவங்களைப் பார்த்து மகிழ்வதோடு அவர்களது ஆர்வம் மட்டுப்படுத்தப்படுகிறது. கொழும்பு சென்றால் தான் உயிர் உள்ள பறவைகள், விலங்குகளைக் காணமுடியும். வடபுலத்து சிறார்களுக்கு உயிருள்ள பறவைகள், சிறிய விலங்குகளைக்கொண்ட பூங்கா அமைக்கப்பட வேண்டும். யாழ். நகரிலுள்ள பூங்காக்களில் காணப்படும் பழுதடைந்த உடைந்த விளையாட்டு சாதனங்கள் உடனடியாகத் திருத்தப்படுவதுடன் புதிய சாதனங்களும் தருவிக்கப்பட வேண்டும். எமது எதிர்காலச் சந்ததியினரது நலன் கருதி உரியவர்கள் இது குறித்துவிரைந்து நடவடிக்கை எடுப்பார்களா?

வடபுலத்தான்.

உதயன் நித்திய சுகம் 335

**கேள்வி** பதில்



மருத்துவர்
எஸ்.ரி.எஸ்.சந்திரகுமார்

# நீரிழிவும் ஆலோசனைகளும்

மருத்துவர் எம். அரவிந்தன்

**கேள்வி:** 27 வயதுடைய எனது மகளின் உடல் நிறை சிறிது சிறிதாக அதிகரித்துச் செல்கிறது. தற்போதைய நிறை 92 கிலோவாகவும் உயரம் 5 அடி 4 அங்குலமாகவும் காணப்படுகிறது.மாத சுகவீனம் ஒழுங்கற்று இருக்கிறது. எமது குடும்ப மருத்துவரின் ஆலோசனைப்படி சில குருதிப் பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தோம். அந்தப் பரிசோதனை முடிவுகளின் படி நீரிழிவு நோய் ஏற்படும் ஆரம்ப நிலை அறிகுறிகள் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.மகளுக்கு திருமண ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.மிக விரைவில் திருமணம் செய்யவிருக்கிறார். இந்த மாற்றங்களால் மகளின் திருமண வாழ்வில் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா…? எனது மகளின் உடல் நிலை பற்றி விளக்கிக் கூறுங்கள்..?

**பதில்:** உங்களுடைய மகளின் உடல் நிறை மிக அதிகமாக உள்ளது. ஒருவரின் உடல் நிறையானது அவரது உயரத்துக்கேற்ப இருத்தல் அவசியமாகிறது. இதனை 'உடற்திணிவுச் சுட்டெண்' (Body Mass Index BMI) மூலம் கணித்துக் கொள்ள முடியும்.

$$\text{'உடற்திணிவுச் சுட்டெண்'} = \frac{\text{உடல் நிலை (கிலோ கிராம்)}}{(\text{உயரம் (m)})^2}$$

இந்தக் கணிப்பீட்டின் படி உங்கள் மகளின் 'உடற்திணிவுச் சுட்டெண்' ஆனது மிகவும் அதிகமாக உள்ளது.அதாவது (35.09) ஆக காணப்படுகிறது.சாதாரணமாக ஒருவரின் 'உடற்திணிவுச் சுட்டெண்' ஆனது 18.5 தொடக்கம் 23 என்ற அளவு பரிமாணத்தினுள் இருத்தல் அவசியம்.ஒருவரின் உடற்பருமன் அதிகரித்துச் செல்லும் போது பல வகையான பிரச்சினைகளும் நோய்களும் ஏற்படுகின்றன. இளம் பெண்களில் அவர்களது சூலகங்களில் (Ovaries) சிறு கட்டிகள் உருவாதல் போன்ற நோய் (Poly Cystic Ovarian Syndrome) அறிகுறிகள் ஏற்படும் போது உடற்பருமன் அதிகரிக்கும். மாதவிடாய் ஒழுங்கீனங்கள் ஏற்படும். இவர்களுடைய முகத்தில் பருக்கள் ஏற்படுவதோடு தேவையற்ற விதத்தில் ஆண்களைப் போன்ற உரோம வளர்ச்சியும் ஏற்படும்.

தவறான உணவுப் பழக்க வழக்கம், தேக அப்பியாசமற்ற வாழ்க்கை முறை (Sedentary Life Style) என்பன இவ்வாறான உடற்பருமன் அதிகரிப்புக்கு பிரதானமான காரணங்களாக அமைந்துவிடுகின்றன. இதே போன்று தைரொயிட் சுரப்பிக் குறைபாடு போன்ற சில ஓமோன் சுரப்புத் தொடர்பான பிரச்சினைகளும் இவ்வாறான உடல் நிறை அதிகரிப்புக்குக் காரணமாக அமையலாம்.

உங்களுடைய மகள் போன்று திருமண பந்தத்தில் இணையவிருக்கின்ற இளம் பெண்களின் உடற்பருமன் அதிகரிக்கும் போது பல வகையான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மாதவிடாய் சக்கரம் ஒழுங்கற்று அமைவதுடன் சிறிது சிறிதாக குறைவடைய நேரிடுகிறது. இவ்வாறான உடலியல் செயல்நிலைகளால் கர்ப்பம் தரிக்கும் சாத்தியக் கூறுகள் குறைவடையும் வாய்ப்புகள் அதிகம் உண்டு.

உங்களுடைய மகளின் குருதிப் பரிசோதனை முடிவுகளின் படி அவர் நீரிழிவுக்கு முன்னைய நிலையில் (Pre diabetes stage) இருக்கிறார்.ஆக.ஆரோக்கியமான வாழ்க்கை முறையை அவர் கடைப்பிடிக்க வேண்டும். உடல் நிறையைக் குறைப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.இல்லாவிடின் இன்னமும் சில வருடங்களில் முற்று முழுதான நீரிழிவு நோயாளியாக மாறும் சாத்தியக்கூறுகள் அதிகம் உண்டு.

இவருக்கு குருதியில் கொழுப்பின் (கொலஸ்திரோல்) அளவு அதிகரித்தல் மற்றும் உயர் குருதி அழுத்தம் (High Blood Pressure) என்பன ஏற்படும் வாய்ப்புகளும் உண்டு. எனவே இவர் மருத்துவ ஆலோசனைகளை பெறுவது கட்டாயமானது.

## நீரிழிவு

### நோயாளிகளுக்கான கவனக் குவிவு

1. நீரிழிவு நோய் கண், மூளை, இருதயம் மற்றும் சிறுநீரகங்களைப் பாதிக்கும்.
2. இந்த நோய் உள்ளோர்க்கு ஏனையவர்களை விடவும் பார்வைக் கோளாறு ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.
3. கண்களில் பாதிப்பை ஏற்படுத்தும் முக்கியமாக விழித்திரையின் குருதி நாளங்களைப் பாதிக்கும்.
4. விழித்திரையில் ஏற்படும் மாறுதல்களை கண் மருத்துவர்களினால் மட்டுமே பரிசோதித்து கண்டறிய முடியும். மூளை,இருதயம் மற்றும் சிறுநீரகங்களிலும் இதே மாறுதல்கள் ஏற்படுவதால் இந்தப் பரிசோதனை மூலம் இவற்றின் தன்மைகளையும் அறிந்து கொள்ள முடியும்.
5. நீரிழிவு நோயினால் ஏற்படும் விழித்திரைப் பாதிப்பு, நோயின் தீவிரம் மற்றும் எவ்வளவு காலம் சக்கரை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற விடயங்கள் சார்ந்து அமைந்திருக்கும்.
6. பல வருடங்கள் நோய் உள்ளவர்களில் 70 தொடக்கம் 80 சதவீதமானவர்களுக்கு விழித்திரைப் பாதிப்பு ஏற்படும்.
7. நீரிழிவு நோயாளிகளுக்கு பார்வையிழக்கும் வாய்ப்பு அதிகம். குறிப்பாக 25 மடங்கு அதிமாகக் காணப்படும்.
8. குறைந்த பார்வை அல்லது பார்வையிழப்பு ஏற்படும் வரை எந்த வித அறிகுறிகளும் தெரியாது.
9. விழித்திரைப் பாதிப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து கதிரியக்கச் சிகிச்சையளிப்பதன் மூலம் கணிசமான அளவில் பார்வை யிழப்பைத் தடுக்க முடியும்.
10. லேசர் சிகிச்சை மூலம், இருக்கும் பார்வையைப் பாதுகாக்க முடியும்.மாறாக இழந்த பார்வையைத் திரும்பப் பெற முடியாது.
11. விழித்திரைப் பாதிப்பினால் ஏற்படும் பார்வையிழப்பைத் தடுக்க நீரிழிவு நோயாளிகள் அனைவருமே 12 மாதங்களுக்கு ஒருமுறையேனும் தங்கள் கண்களை கண் மருத்துவரிடம் அவசியம் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். விழித்திரை பாதிக்கப்பட்டிருந்தால் அடிக்கடி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் கண் பார்வையை முற்றிலும் இழந்துபோகாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

## ஆலோசனைகள்

- ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தல் நன்று. இனிப்பான, சீனி சேர்த்த உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும். அதேபோன்று மாச்சத்து அதிகமுள்ள உணவுகளையும்,கொழுப்புச் சத்து அதிகமுள்ள உணவுகளையும் குறைவாக உள்ளெடுத்தல் வேண்டும். இவரது உடற்பருமனை குறைப்பதற்கு ஏற்ற விதத்தில் நாளொன்றுக்கு எடுக்க வேண்டிய கலோரிப் பெறுமானத்தை கணித்து உணவை உள்ளெடுக்க வேண்டும். இதனை மருத்துவ ஆலோசனைப்படி அறிந்து கொள்ள முடியும்.
- ஒவ்வொரு நாளும் ஆகக் குறைந்தது 45 நிமிடங்களாவது உடற் பயிற்சி செய்ய வேண்டும். குறிப்பாக உடல் வியர்க்கும் வரையில் பயிற்சியை செய்வது அவசியம். வேகமாக ஓடுதல், சைக்கிளோட்டுதல் மற்றும் இயந்திரங்களின் உதவியுடன் அப்பியாசம் செய்தல் என்பன இதற்கு உதாரணங்களாகும்.
- இவருடைய நீரிழிவுக்கு முன்னைய நிலையைக் கட்டுப்படுத்துவதற்கு மருத்துவரின் ஆலோசனைப் படி 'மேற்போமின்' மருந்தைப் பயன்படுத்த வேண்டும். இதனால் குருதியிலுள்ள குளுக்கோசின் அளவு கட்டுப்படும். பசியின் தன்மை குறைவடைந்த உடற்பருமனும் குறைவடையும்.
- இவரது உடல் நிலை பற்றிய பூரணமான பரிசோதனைகள் மேற்கொள்வது அவசியம். சில வகையான குருதிப் பரிசோதனைகளுக்கு உதாரணமாக,கொலஸ்திரோல், தைரொயிட் மற்றும் வேறு ஓமோன்கள் பற்றியதான செயன்முறைகளுக்கு உட்பட வேண்டியிருக்கும்.
- இவரது மாதவிடாய் சக்கரத்தை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு உடற்பருமனைக் குறைப்பது அவசியம். மருத்துவ ஆலோசனைப்படி குருதியிலுள்ள ஓமோன் மற்றும் ஸ்கான் (கர்ப்பப்பை, சூலகங்கள்) பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினைகளுக்குத் தேவையான மருந்தை நிபுணத்துவமான மருத்துவரின் ஆலோசனைப்படி பெற்றுக் கொள்ள முடியும்.
- இறுதியாக, ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வாழ்வதற்கு உங்களுடைய மகள் உறுதி பூண வேண்டும். அவ்வாறு வாழ்ந்து உடற்பருமனைக் குறைத்துக் கொள்ளும் போது அவருக்கு இருக்கின்ற பல வகையான பிரச்சினைகளில் இருந்து விடுபட முடியும்.

இவர் மிக விரைவில் திருமணம் செய்யவிருப்பதால் துரிதமாக மருத்துவ ஆலோசனைகளைப் பெற்று உடல் நிறையைக் குறைத்துக் கொள்ள முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவைக் கட்டுப்படுத்தி மாதவிடாய் சக்கரத்தை ஒழுங்குபடுத்திக் கொள்வது அவசியமாகிறது. இதன் மூலம் பல நீண்ட காலப் பிரச்சினைகளை குறிப்பாக கர்ப்பம் தரிக்காத நிலமையை ((Subfertilit) தவிர்த்துக் கொள்ள முடியும்.

*நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு மருத்துவ நிபுணர்,*
*யாழ்.போத்னா மருத்துவமனை.*

சூரிய காந்தி
உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
10.09.2017



# சிறுபான்மை இனமென்றால் சாவுதான் தீர்வா?










கட்டுரை

மனோஜ் குமாரசாமி

இராணுவ அடக்குமுறைக்கெதிராகக் கடுமையாகப் போராடியவர்.

அதனால் 15 வருடங்கள் வரையில் அந்நாட்டு இராணுவத்தால் வீட்டுக் காவலில் ஒடுக்கப்பட்டவர். தனது நாட்டு இராணுவ ஆட்சியை எதிர்க்க அரசியலைக் கையிலெடுத்தார். மக்களாட்சிக்கான தேசிய அமைப்பு என்றொரு அரசியல் கட்சியை ஆரம்பித்து தேர்தலில் பெரும்பான்மையைப் பெற்றார். ஆனாலும் இராணுவம் அவரது கட்சியை ஆட்சிப் பீடத்தில் ஏறவிடாது தடுத்தது. தனது நாட்டு இராணுவத்தினரின் ஒடுக்குமுறைக்கெதிராக அவரால் தொடர்ந்தும் போராட வேண்டியிருந்தது. வெளிநாட்டுப் பிரஜை ஒருவரை வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்டபடியால் அரசியல் களத்தில் கால்பதிக்க முடியாத சூழலும் உருவாகியது. இத்தகைய அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடிய அந்தப் பெண்மணிக்கு ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் மனித உரிமைகளுக்கான 'சக்காரோவ்' விருது 1990ஆம் ஆண்டு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்ததால் அதைப் பெறமுடியவில்லை. ஆனாலும் சுமார் 23 ஆண்டுகளுக்குப் பிறகு அவ்விருதை 2013இல் அவர் பெற்றுக் கொண்டார். 1992 இல் இந்திய அரசின் ஜவகர்லால்நேரு அமைதிப் பரிசு அவருக்குக் கிடைத்தது. 2007இல் கனடா அரசு இவரை அந்நாட்டின் பெருமையான குடிமகளாக அறிவித்தது. 1991இல் அமைதிக்கான நோபல் பரிசையும் அவர் பெற்றுக்கொண்டார்.

இராணுவத்துக்கெதிரான பெரும் போராட்டங்களைக் கடந்து இன்றைக்கு மியன்மாரை வழிநடாத்தும் தலைவராக உயர்ந்து நிற்கும் ஆங் சாங் சூகியே அடக்கு முறைகளைத் தகர்த்து இத்தனை விருதுகள். பரிசுகளையும் தட்டிச்சென்றவர். இத்தகைய தலைவரின் ஆட்சியின்கீழ்தான் இன்றைக்கு மியன்மாரில் ஆயிரக்கணக்கான ரொஹிங்ய முஸ்லிம்கள் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது மறைக்கமுடியாத உண்மையே!



முகநூலைத் திறந்தால் கண்கள் பனிக்கின்றன. பிஞ்சுக் குழந்தைகள் சேற்று நிலத்துக்குள் புதைந்த கால்களை வெளியே இழுத்து அநாதரவாக, அழுதவண்ணம் நடந்துகொண்டிருக்கின்றார்கள். முதியவர்கள் தடுமாறிநிற்கிறார்கள். சிலரைத் தடியில் கட்டிக் காவிச் செல்கிறார்கள். கணவன் - மனைவிமார் ஏராளம் சுமைகளைச் சுமந்துகொண்டு திக்கறியாது நடந்துகொண்டிருக்கின்றனர். தணிக்கை செய்து இவ்வா றாக ஊடகங்கள் வெளிப்படுத்தும் அவலங்களின் உண்மை உருவை முகப்புத்தகத்தில் பார்த்ததும் நெஞ்சு பதைக்கிறது. குழந்தைகளை வெட்டியும், கொத்தியும் சாவடிக்கிறார்கள். பெரிய குழிகளைத் தோண்டி அப்பாவி மக்களை அதனுள்போட்டு உயிரோடு புதைக்கிறார்கள். கிராமங்களை எரித்துச் சாம்பராக்கியுள்ளார்கள். பெண்களைக் கூட்டு வண்புணர்வுக்குட்படுத்திக் குதூகலிக்கிறார்கள். இளைஞர்கள் தந்தைகளைத் தாறுமாறாக வெட்டியும், அப்பாவி மக்கள் மீது இராணுவத்தை ஏவி அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்தும் சாகசம் புரிகிறார்கள். இத்தனையும் நடந்துகொண்டிருப்பது அமைதிக்கான நோபல் பரிசு உள்ளிட்ட உலகத்தரம் வாய்ந்த இன்னும்பல விருதுகளைத் தனதாக்கிக் கொண்ட ஒரு ஆட்சியாளரின் பிடிக்குள் இருக்கும் தேசத்தில். அதாவது ஆங் சாங் சூகியின் தேசமான மியன்மாரில். அங்குள்ள ரொஹிங்ய முஸ்லிம்களுக்கு ஆதரவாகப் போராடும் சிறு ஆயுதக்குழுவைக் காரணம் காட்டி அந்த அப்பாவி மக்கள் பலரும் இனச்சுத்திகரிப்புச் செய்யப்படுகின்றனர். இதற்குத்தானா ஆங் சாங் சூகிக்கு இத்தனை வருதுகளும் வழங்கப்பட்டன…?





குழந்தைகளை வெட்டியும், கொத்தியும் சாவடிக்கிறார்கள். பெரிய குழிகளைத் தோண்டி அப்பாவி மக்களை அதனுள் போட்டு உயிரோடு புதைக்கிறார்கள். கிராமங்களை எரித்துச் சாம்பராக்கியுள்ளார்கள். பெண்களைக் கூட்டு வண்புணர்வுக்குட்படுத்திக் குதூகலிக்கிறார்கள். இளைஞர்கள், தந்தைகளைத் தாறுமாறாக வெட்டியும் அப்பாவி மக்கள் மீது இராணுவத்தை ஏவி அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்தும் சாகசம் புரிகிறார்கள். இத்தனையும் நடந்து கொண்டிருப்பது அமைதிக்கான நோபல் பரிசு உள்ளிட்ட உலகத்தரம் வாய்ந்த இன்னும்பல விருதுகளைத் தனதாக்கிக் கொண்ட ஒரு ஆட்சியாளரின் பிடிக்குள் இருக்கும் தேசத்தில். அதாவது ஆங் சாங் சூகியின் தேசமான மியன்மாரில்.

### பிரச்சினையின் பின்னணி

மியன்மார் பௌத்தர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடு. அருகிலுள்ள பங்களாதேஷ் முஸ்லிம்களைக் கொண்ட நாடு. பங்களாதேசைப் பூர்வீகமாகக் கொண்டவர்களாகக் கருதப்படும் ரொஹிங்யர்கள் மியன்மாருக்குச் சொந்தமான ஒருபகுதி நிலத்துள் - ரக்கூன் மாகாணத்தில் நீண்டகாலமாக வாழ்க்கை நடாத்தி வந்திருக்கின்றனர். ஆனால் அவர்களுக்கு ஒருபோதுமே மியன்மார் அரசு குடியுரிமை வழங்கவில்லை. அவர்களைத் தமது நாட்டவர்களல்ல என்று மியன்மார் கூறுவதைப்போலவே அருகிலுள்ள பங்களாதேஷும்கூறுகின்றது. இப்போது இரு நாட்டிலும் உயிர்வாழ முடியாத சூழல் அந்த மக்களுக்கு. மியன்மாருக்குள் சிறுபான்மையினராகவிருக்கும் அந்த முஸ்லிம்களை அங்குள்ள பெரும்பான்மைப் பௌத்தர்கள் ஒடுக்கத்தொடங்கினர். ஒடுக்குமுறைகள் தொடர்ந்தவண்ணமிருந்தன. ஒரு கட்டத்தில் அதைப்பொறுக்க முடியாத முஸ்லிம்களுக்கு மத்தியிலுள்ள இளைஞர்கள் ஒன்றுதிரண்டு ஒடுக்குமுறையை எதிர்க்கும் ஆயுதக்குழுவானார்கள். கடந்த இரண்டு வருடங்களாக அவர்களுக்கும் ஒடுக்குமுறையாளர்களுக்குமிடையே போராட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அதன் உச்சமாக ஆயுதக் குழுவினர் கடந்த மாதமளவில் அந்நாட்டு இராணுவத்துக்குக் குறிப்பிடத்தக்க உயிரிழப்புக்களை ஏற்படுத்தி விட்டனர். இராணுவம் அந்தச் சிறு ஆயுதக்குழுவைக் காரணம் காட்டி அப்பாவி மக்களையும் சேர்த்து அழிக்கும் வேலையில் உடனடியாக இறங்கியிருக்கிறது. அச்சு அசலாக சிங்கள அரசைப்போலவே.



### ஆங் சாங் சூகி என்ன செய்கிறார்…?

மியன்மாரில் அந்த மக்கள் கொடூரமாகக் கொல்லப்படுவது பன்னாடுகளின் கவனத்துக்கு வந்ததும். அனைவரது கண்களும் ஆட்சியிலிருக்கும் அமைதிக்கான நோபல் பரிசை வென்ற ஆங் சாங் சூகியை நோக்கியதாகத் திரும்பின. ஊடகங்கள் அவரை மொய்க்கத் தொடங்கின. இந்நிலையில் முஸ்லிம்கள் வாழ்கின்ற ரக்கூன் மாநிலத்தில் பிரச்சினைகள் இருப்பதை ஏற்றுக்கொண்ட சூகி, ரொஹிங்ய இன மக்கள் அங்கு படுகொலை செய்யப்படுகிறார்கள் என்பதை மறுத்தார். ஆனாலே உண்மை அதுவல்ல. ரக்கூன் மாநிலத்தில் இருந்து கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் ஒரு இலட்சத்து 23 ஆயிரத்துக்கும் மேலான முஸ்லிம்கள் வெளியேறியிருக்கின்றனர். சமீபத்தில் நடைபெற்ற தொடர் மோதல்களால், பலர் நாட்டை விட்டு அகதிகளாக வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. எஞ்சியிருப்பவர்களும் அந்த நாட்டு அரசால் பெரும் துன்புறுத்தல்களையே அனுபவிக்கின்றார்கள். "மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக பாதுகாப்பு மறுக்கப்படுவது பற்றிப் பிறரை விட எனக்கு நன்றாகவே தெரியும். நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் பாதுகாப்பையும், உரிமைகளையும் பெறுவதை உறுதிப்படுத்துகின்றோம். அரசியல் உரிமை மட்டுமல்ல. சமூக மற்றும் மனித நேயப் பாதுகாப்பையும் வழங்குகின்றோம்" என்றும் கடிந்திருக்கிறார் சூகி.

### நோபல் பரிசு வென்றவர்கூட அரசியலைத் தக்கவைக்கவே முனைவார்.

தன் சொந்த நாட்டிலேயே நடக்கும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகச் செயல்பட நோபல் பரிசு பெற்றவர் ஏன் பின்நிற்கிறார் என்பதுபற்றிப் பல கருத்துக்கள் எழுந்துள்ளன. இதில் முதன்மையானதாக அந்நாட்டு இராணுவ ஆட்சியைக் காரணம் காட்டுகிறார்கள். இராணுவ அதிகாரிகளால் இயற்றப்பட்ட அரசமைப்புச் சட்டம், ஆயுதப் படைகள் அனைத்தும் இராணுவக் கட்டுப்பாட்டில்தான் இருக்கும் என்று அமைகின்றது. உள்நாட்டு பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களைச் சமாளிக்கும் அதிகாரங்களைக்கூடப் பொலிசாருக்கு வழங்காமல் இராணுவத்துக்கே வழங்கப்பட்டுள்ளது. இதனால் ரக்கூன் மாகாணத்தில் நிலவுவது போன்ற உள்நாட்டுப் பாதுகாப்பு-அச்சுறுத்தல் தொடர்பான விடயங்களில், இந்த அரசமைப்பின்படி இராணுவத்தின் சொற்பேச்சுப்படிதான் சூகி தலைமையிலான அரசு செயல்பட முடியும் என்று ஒரு கருத்துண்டு. ஆனாலும் ரொஹிங்ய முஸ்லிம்கள் விவகாரத்தில் தொடர்ந்து அமைதி காப்பதுடன், அவர்களின் உரிமைகளுக்காகச் சிறிதளவு கூடப் போராடுவதைத் தவிர்ப்பவராகவே சூகி அறியப்படுகிறார். அவரது தலைமையிலான ஆளும் கட்சிக்கு உள்ள அரசியல் ஆதரவைத் தக்கவைத்துக் கொள்வதே நோபல் பரிசு பெற்றவருடைய இப்போதைய முதன்மை நோக்கமாக இருக்கிறது.

அவரது கட்சி 2015ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் பெரும் வெற்றி பெற்றிருந்தாலும், ஜனநாயக மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் மிகவும் மெதுவாக நடந்ததால் மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்புணர்வால், ஏப்ரல் 2017இல் நடந்த இடைத் தேர்தல்களில் அது தோல்வியையே சந்தித்தது. இந்நிலையில் ரொஹிங்ய முஸ்லிம்களுக்கு ஆதரவான நிலைபாட்டைச் சூகி எடுத்தால், மியான்மர் மக்கள் தொகையில் 90சதவீதமாக இருக்கும் பௌத்தர்களின் ஆதரவை அவர் இழக்க நேரிடும். எனவே தற்போது அவர் எவ்விதமான அரசியல் சமரசங்களையும் செய்துகொள்ள விருப்பம் இல்லாமல் இருப்பதையே விரும்புகிறார். சுய அரசியல் ஆதாயங்களுக்காக அனைத்துப் பெரும்பான்மை இன அரசுகளும் செல்லும் அதே வழித்தடத்தில்தான் ஆங் சாங் சூகியும் பயணிக்கிறார்.

### ஆதரவளித்த சக உறவுகள் நாம்

சிங்கள, பௌத்த இனவாத அரசுகள் சிங்களப் பெரும்பான்மை இனமக்களின் ஆதரவுக்காகத் தமிழ்மக்கள் மீது நடாத்தும் குதிரைச் சவாரியை ஒத்ததாக இது இருப்பதை எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. கடந்த பல வருடங்களாக இதனை நாம் அனுபவித்து வருகிறோம். என்றாலும் மனம் பொறுக்காமல் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் எம்மவர்களில் கணிசமானோர் மியன்மாரிலுள்ள அப்பாவி முஸ்லிம் மக்களுக்கு ஆதரவாகப் போராட்டங்களைச் செய்துள்ளனர். பெரும்பாலான தமிழ் மக்கள் அந்த மக்களுக்காகத் தொடர்ந்தும் கண்ணீர் வடித்து வருகின்றனர். ஏகாதிபத்திய நாடுகளுக்காகச் செயற்படும் ஐ.நாவோ அல்லது பெரும்பான்மை இன மக்களின் ஆதரவைத் தக்கவைக்கப் பாடுபடும் சிங்கள, மியன்மார் அரசுகளோ அப்பாவி சிறுபான்மை இனமக்களுக்கு என்ன பதிலைத் தரப்போகின்றன? சாவுதான் தீர்வா…?



அறிவியல்

தவபாலன் திருநிலவன்




# தோல்வியில் முடிவடைந்த இந்தியாவின் செய்மதி ஏவல்

கிரிக்கெட்டிலோ அல்லது செய்மதி ஏவலிலோ தோல்வியடைந்தால் அதைப் பெரும் இழப்பாகப் பார்க்கும் ஒரு நாடு இந்தியா. சென்ற மாதம், இறுதி வியாழக்கிழமை இரவு. இந்தியச் செய்தித் தொலைக்காட்சிகள் அனைத்தும் நேர எண்ணலுடன் பரபரப்பாக இருந்தன. அதற்குக் காரணம் இஸ்ரோ மையம். ஆம் அன்றுதான் 'இர்ன்ஸ்-1எச்' எனும் செய்மதியை பி.எஸ்.எல்.வி - சி39 எனும் செய்மதிக் காவுகலம் சரியாக இரவு 7மணியளவில் விண்வெளிக்கு எடுத்துப் பறக்க ஆரம்பித்தது.

**'இர்ன்ஸ்-1எச்' செய்மதி**

இது 1425கிலோ எடைகொண்ட பெரியதொரு செய்மதி. இந்தியாவினுடைய எட்டாவது 'நெவிகேசன்' செய்மதி. இதனுடைய இலக்கு என்னவென்றால், இந்தியாவின் விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோவுக்கு 'நெவிகேசன்' சேவையை வழங்குவது. அதாவது ஏற்கனவே ஏவப்பட்ட ஏழு செய்மதிகளில் மூன்றுக்கு அதன் தாய்ப்பலகையில் இருந்த நேரக்காட்டி தொழிற்படாமல் விட்டநிலையில் இந்தச் செய்மதி இலகுவாக ஏனைய செய்மதிகளுடன் தொடர்பை ஏற்படுத்தக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது.

இந்தச் செய்மதி குறிப்பாக இரண்டு வேலைகளைச் செய்யக்கூடிய வகையில் வடிமைக்கப்பட்டுள்ளது. ஒன்று வழிகாட்டுதல் மற்றும் வரிசைப்படுத்தல் மற்றையது 'நெவிகேசன்' சைகைகளைப் பயனாளர்களுக்கு நேரடியாக வழங்குவது. இதை இலக்காகக் கொண்டே இஸ்ரோவால் இந்தச் செய்மதி தயாரிக்கப்பட்டது. 'இர்ன்ஸ்-1எச்' விண்ணுக்கு ஏவப்பட்ட பின். அதனுடன் இருக்கும் இரண்டு சூரியப்படலங்களும் வி ரிவடைய அது தொடர்ந்தும் இயங்க ஆரம்பிக்கும்.

**பி.எஸ்.எல்.வி- சி39 செய்மதி ஏவுகலம்**

பி.எஸ்.எல்.வி என்பது இந்தியாவால் தயாரிக்கப்பட்ட செய்மதிகளை விண்வெளிக்குக் காவிச் செல்கின்ற ஒரு காவுகணை ஆகும். இந்தியாவின் வளமுகாமைத்துவச் செய்மதிகளை விண்வெளிக்கு ஏவுவதற்காகவே இது உருவாக்கப்பட்டது. 44மீற்றர் உயரமும் 2,30.000 கிலோ எடையும் கொண்ட இந்தக் காவுகணை கடந்த 2015ஆம் ஆண்டில் 17 வரையான வெளிநாட்டுச் செய்மதிகளை விண்ணுக்கு அனுப்பியிருக்கிறது. இது திண்ம மற்றும் திரவ எரிபொருள்களைப் பயன்படுத்தி நான்கு படிநிலைகளில் பறக்கிறது. முதல் படிநிலையில் பெரிய திண்ம றொக்கெட் உயர்த்திகளைப் பயன்படுத்திப் பூமியில் இருந்து மேல் எழும்புகின்றது.

குறிப்பாக 4,800 கிலோ நியூட்டன் உந்து சக்தியை அதி உச்சமாக வழங்கிப்பறக்கிறது. இரண்டாம் படிநிலையில் வைகாஸ் எனப்படும் 40 தொன் திரவ எரிபொருள் எஞ்சின் 800 கிலோ நியூட்டன் உந்து சக்தியுடன் மேலும் மேலே பறக்கிறது. மூன்றாவது படிநிலையில் ஏழு தொன் எடைகொண்ட திண்ம எரிபொருள் எஞ்சினினால் சக்தியூட்டப்பட்டு 240 கிலோ நியூட்டன் உந்து சக்தியுடன் மேல் எழும்புகிறது. நான்காவது படிநிலையில் இரண்டு எஞ்சின் காளால் சக்தியீட்டப்பட்டு 7.4 கிலோ நியூட்டன் உந்து சக்தியுடன் இறுதி நிலையை அடைகிறது.

**'இர்ன்ஸ்-1எச்'க்கு என்ன நடந்தது...?**

1.4 தொன் எடை கொண்ட இந்தச் செய்மதி சரியாக ஏழுமணிக்கு ஆந்திரா இஸ்ரோ ஏவு மையத்தில் இருந்து ஏவப்பட்டது. ஏவுதலின்போது சரியாகச் செயற்பட்டு செய்மதியும் சரியாகத் தனது சுற்றுப்பாதையில் பயணித்தது. ஆனால் ஒரு பேரதிர்ச்சி காத்திருந்தது. காவுகணையில் இருந்து வெளிவரும் வெப்ப அலைகளில் இருந்து செய்மதியைப் பாதுகாப்பதற்காகச் செய்மதியைச் சுற்றி வெப்பக் காப்பு உறை அமைக்கப்பட்டிருந்தது. அது சரியாகச் செய்மதி பூமியின் சுற்றெல்லையை விட்டு விலகிய 3வது நிமிடத்தில் திறக்கப்பட வேண்டும்.

ஆனால், அதுவே திறக்காமலே விட்டு விட்டது. செய்மதியால் பூமியுடன் தொடர்பை ஏற்படுத்த முடிந்ததால், அந்த வெப்ப உறையைத் திறக்க வைப்பதற்கான கட்டளைகளை அனுப்புவதற்கு பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. இருந்தும் அது முடியவில்லை. இறுதி வரைக்கும் அதைத் திறக்கவே முடியவில்லை. இதனால் தனது இலக்குவரைப் பயணிப்பதற்கு அதற்கு முடியவில்லை. இறுதியாக இஸ்ரோ தலைவர் இந்தச் செய்மதி ஏவுகணை தோல்வியளித்துவிட்டது என்பதை ஏற்றுக்கொண்டார்.

**பாவம் இஸ்ரோ...**

குறிப்பாக 2010ஆம் ஆண்டு இஸ்ரோ ஏவிய இரண்டு செய்மதிகள் படுதோல்வியில் முடிந்தன. அதன் பின் இஸ்ரோவுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய தோல்வியாகவே இது கருதப்படுகிறது. இந்தச் செய்மதி வேலைத்திட்டங்களுக்காகப் பலகோடிகள் செலவு செய்யப்பட்டு அத்தனையும் வீணாகிப் போயிருக்கின்றன. இது விஞ்ஞானிகளிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது. கிட்டத்தட்ட 250 கோடிக்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரோ விஞ்ஞானிகள் இது தொடர்பாகக் கூறுகையில் தாங்கள் அந்தச் செய்மதியின் தரவுகளை ஆராய்ந்து வருவதாகவும். அதன் பின்னர்தான் என்ன தவறு நடந்தது என்பதைக் கண்டுபிடிக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளனர். ஒன்றில் இது செய்மதியில் இருந்த கணினிச் செய்நிரல்களில் ஏற்பட்ட தவறாக இருக்க வேண்டும் அல்லது சில இலத்திரனியல் கூறுகளில் ஏற்ப்பட்ட தவறாக இருக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

காவுகணையில் இருக்கும் செயற்படு முறைமையை ஒரு தடைவை மட்டுமே பயன்படுத்தக் கூடிய வகையில் வடிவமைத்திருப்பதால், அதை முன்கூட்டியே பரிசோதிக்க முடியாது. ஆகவே அதில் தவறுகள் ஏற்படுவதைத் தடுப்பது மிகவும் கடினம் என்றும் அவர்களே தெரிவிக்கின்றனர்.

> 1.4 தொன் எடை கொண்ட இந்தச் செய்மதி சரியாக ஏழுமணிக்கு ஆந்திரா இஸ்ரோ ஏவு மையத்தில் இருந்து ஏவப்பட்டது. ஏவுதலின் போது சரியாகச் செயற்பட்டு செய்மதியும் சரியாகத் தனது சுற்றுப் பாதையில் பயணித்தது. ஆனால் ஒரு பேரதிர்ச்சி காத்திருந்தது. காவுகணையில் இருந்து வெளிவரும் வெப்ப அலைகளில் இருந்து செய்மதியைப் பாதுகாப்பதற்காகச் செய்மதியைச் சுற்றி வெப்பக் காப்பு உறை அமைக்கப்பட்டிருந்தது.

**அடுத்த கட்டத்துக்குத் தயார்**

ஒருவேளை இந்தச் செய்மதி ஏவல் வெற்றியளித்திருந்தால் 'இர்ன்ஸ்-1ஏ' என்ற செய்மதிக்குப் பதிலாக இது தொடர்ந்து இயங்கி இருக்கும். என்கின்றனர். இந்த 'இர்ன்ஸ்-1ஏ' செய்மதியில் இருந்த ருபிடியம் நேரக்காட்டி பழுதடைந்து விட்டது. 'நெவிகேசன்' செய்மதிகளில் சரியான இலக்கின் தரவுகளை வழங்க இந்த நேரக்காட்டி மிக முக்கியமானதாகும்.

இதுவரை இஸ்ரோ 1420கோடி மதிப்புள்ள எட்டு 'நெவிகேசன்' செய்மதிகளை விண்ணுக்கு ஏவி இருக்கிறது. அதில் ஏழு செய்மதிகள் பூமியின் சுற்றுப் பாதையிலும் இப்போது தோல்வியடைந்த 'இர்ன்ஸ்-1எச்' இரண்டுக்கும் இடையிலும் நிலைகொண்டுள்ளன. இஸ்ரோ அதிகாரிகள் தாங்கள் தோல்வி அடைந்த செய்மதிகளுக்குப் பதில் அடுத்ததொரு செய்மதியை அனுப்பத் தயாராகிவிட்டதாகத் தெரிவிக்கின்றனர். இவைபற்றிக் கவலைப்படுவதை விடுத்து இலங்கையைத் துடுப்பாட்டத்தில் வீழ்த்தியதையே கொண்டாடிக்கொண்டிருக்கிறது இந்தியா.

**பதிவுகளின் தொடர்**

கே.ஆர்.டேவிட்



## வரலாற்றுப் பதிவுகள்

# வெள்ளச்சி எனும் போராளி

ஆண்டாண்டு காலமாய் அடிமைப்பட்டுக் கிடக்கிற எங்கட மக்களுக்கு ஒரு விடுதலையைப் பெற்றுக் குடுக்குறதுக்காகப் போராடி தன்ரை அவயவங்களை இழந்து பட்டமரமாகிவிட்ட அந்தப் போராளி தீபனுக்கு ஒரு வாழ்க்கையைக் குடுக்க நான் விரும்புறனே தவிர, இந்தக் கலியாணத்தாலை எனக்கொரு வாழ்க்கை கிடைக்கும் எண்ட எதிர்பார்ப்பு எனக்கில்ல சேர்...

“ஐயா...! வெள்ளச்சியைக் கட்டப்போற மாப்பிள்ளைக்கு ரெண்டு கையும் இல்லையாம், ரெண்டு கண்ணும் இல்லையாம்... வெள்ளச்சி இப்பதானையா எனக்குச் சொன்னாள்... என்ன கொடுமையையா இது...?” அன்னம்மா தலையில் அடித்துக் குளறியபடி கூறுகின்றாள்.

நான் உறைந்து போய்விட்டேன்.

“ஐயா நான் எவ்வளவோ சொல்லிப் போட்டன்... அவள் வாய் திறந்து கதைக்கிறாளில்லை... நீங்கள் சொன்னாத்தான் வெள்ளச்சி கேப்பாள்... தயவுசெய்து ஒருக்கா வீட்ட வந்து அவளுக்குப் புத்திமதி சொல்லுங்கோ...” அன்னம்மா குரல் வைத்து அழுகின்றாள்.

வெள்ளச்சி ஒரு புலிப்போராளி. அவள் இரண்டு தினங்களுக்கு முன்னர் வீட்டுக்கு வந்திருந்தாள். வந்ததும் தனது திருமணத்தைப் பற்றி அன்னம்மாவிடம் கூறியிருந்தாள். அதையும் அன்னம்மாதான் எனது வீட்டுக்கு வந்து கூறிச் சந்தோசப்பட்டாள். எனக்கும் சந்தோசமாக இருந்தது.

தனது இந்தத் திருமணத்துக்குத் தனது குடும்பத்தின் அங்கீகாரம் கிடைக்காதென்பதை வெள்ளச்சி சரிவரப் புரிந்து வைத்திருக்கிறாள். அதனால் தான் வீட்டுக்கு வந்தவுடன் தனது திருமணச் செய்தியை மட்டும் கூறிவிட்டு, இப்போது தான் கட்டப்போற மாப்பிள்ளைக்கு இரண்டு கண்ணும் இல்லை, இரண்டு கையும் இல்லை என்ற செய்தியைக் கூறியிருக்கிறாள்.

“அன்னம்மா! நீங்கள் போங்கோ... பின்னேரம் உங்கடை வீட்டுக்கு வந்து வெள்ளச்சியோடை கதைக்கிறன்...நான் நம்பிக்கையாய் வருவன் நீங்கள் போங்கோ” நான் கூறுகிறேன். நானும் மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையானவன். அன்னம்மாவின் வேதனையை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. இப்படியொரு திருமணத்தை எந்தப் பெற்றோர்தான் விரும்புவார்கள்...?

நான் ஒரு ஓய்வுபெற்ற ஆசிரியன். எனது வீட்டுக்கு அண்மையில்தான் அன்னம்மா குடும்பத்தினர் குடியிருக்கின்றனர். அன்னம்மா குடும்பத்தினருக்கு எனது குடும்பத்தவர்கள் மீது மதிப்பும் மரியாதையும் உண்டு. வெள்ளச்சி ஒன்பது வருடங்களுக்கு முன்பு புலி இயக்கத்துக்குப் போனவள். அன்றைய தினம் எனது கிராமத்திலிருந்து ஆறு பிள்ளைகள் புலி இயக்கத்துக்குப் போயிருந்தனர். கோவிலுக்குப் போவதாகச் சென்ற வெள்ளச்சி இரவாகியும் திரும்பவில்லை. அன்றிரவு எட்டு மணியளவில் அன்னம்மா எனது வீட்டுக்கு ஓடிவந்து செய்தியைக் கூறினாள். என்ன இருந்தாலும் அவள் பெற்றவளல்லவா, பெரும் வேதனைப்பட்டாள்.

இரண்டு வருடங்கள் வரை வெள்ளச்சி தனது குடும்பத்தினருடன் எந்தத் தொடர்பும் இன்றி இருந்தாள். மூன்றாவது வருடம் தைப்பொங்கல் தினத்தன்று வெள்ளச்சி வீட்டுக்கு வந்திருந்தாள். அதுவும் புலி உடுப்புடன் அன்னம்மா பூரித்துப்போனாள்.

வெள்ளச்சி எனது வீட்டுக்கும் வந்திருந்தாள். இந்த இரண்டு வருடங்களில் அவளிடம் எவ்வளவு மாற்றங்கள்...! அரசியல் கதைக்கிறாள். பண்பாடுகள் பற்றிக் கதைக்கிறாள். சர்வதேசப் போராட்டங்கள் பற்றிக் கதைக்கிறாள், இலக்கியங்கள் பற்றிக் கதைக்கிறாள்... எல்லா அறிவுகளும் நிறைந்த முழுமையான போராளியாக... எனக்குப் பெரும் ஆச்சரியமாக இருந்தது. எத்தகைய பெறுமதி மிக்க பெண் அவள்...! எல்லாப் பெண்களும் இவளைப்போல மாறினால்...?

அதன் பின்பும் சில தடைவைகள் வீட்டுக்கு வந்து போயிருக்கிறாள். அப்பொழுதெல்லாம் தனது திருமணத்தைப் பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசியதில்லை. ஆனால், இம்முறை தனது திருமண முடிவோடு வந்திருக்கிறாள். அதுவும், இரண்டு கண்களும், இரண்டு கைகளும் இல்லாத ஒருவனைத் திருமணம் செய்கின்ற முடிவோடு அவள் வந்திருக்கிறாள்....

\- - - -

நான் அன்னம்மாவிடம் கூறியதுபோல் அன்று பிற்பகலில் வெள்ளச்சியோடு பேசுவதற்காக அன்னம்மா வீட்டுக்குச் சென்றேன். அப்போது ஏறத்தாழ ஐந்தரை மணியிருக்கும். வசதி குறைந்த மண் வீடு. அன்னம்மாவும் வெள்ளச்சியும் என்னை வரவேற்றனர். அவர்களோடு எனக்கு முன்னர் அங்கு வந்திருந்த சபாம்பிள்ளையும் என்னை வரவேற்றார். அந்த வீட்டின் நடுக் கப்போடு வெள்ளச்சி அமர்ந்திருந்தாள். வெள்ளச்சிக்குப் பின்பக்கமாக, குசினி வாசலோடு அன்னம்மா அமர்ந்திருந்தாள். வெள்ளச்சிக்கு முன்னால் ஒரு பாயில் சாபம்பிள்ளை அமர்ந்திருந்தார். அங்கு அமர்வதற்கு வேறெந்த வசதிகளும் இருக்கவில்லை. சபாம்பிள்ளை அமர்ந்திருந்த அந்தப் பாயிலும் அமர எனது மனம் இடம்கெடுக்கவில்லை. சபாம்பிள்ளைக்குப் பின்பக்கமாக இருந்த திண்ணைக் குந்தில் நான் அமர்கிறேன்.

சபாம்பிள்ளை என்னைவிட மூத்தவர். சிறீலங்காப் பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் உத்தியோகத்தராக இருந்து ஓய்வு பெற்றவர். மிகவும் நல்லவர். அவரையும் அன்னம்மதான் அழைத்திருக்க வேண்டும் என்பதை ஊகித்துக் கொள்கிறேன்.

“நீங்கள் வருவியள் எண்டு அம்மா சொன்னவா சேர்... வீட்டில கொஞ்சம் பிரச்சினை... அதாலை உங்கட வீட்டுக்கு வாறதுக்கு நேரம் இல்லாமல் போச்சுது... நான் நாளைக்குப் போறன் சேர்... என்ரை கலியாணப் பிரச்சினை பற்றி அம்மா எல்லாத்தையும் உங்களுக்குச் சொல்லியிருப்பா...” வெள்ளச்சி தனது பேச்சை முடிக்காமல் முடிக்கிறாள்.

சபாம்பிள்ளை பேச ஆரம்பிக்கிறார்.

‘இஞ்சை பாருங்கோ சேர்... இந்த விசர்ப் பொட்டை அங்கக் குறைவான ஒரு பொடியனை... அவனுக்கு ரெண்டு கையுமில்லை, ரெண்டு கண்ணுமில்லை. அவனைக் கலியாணம் முடிக்கப் போறனெண்டு ஒற்றைக் காலில நிற்கிறாள்... நான் எவளவோ சொல்லிப்போட்டன்... அவள் வாய் திறக்கிறாளில்லை... சேர் அந்தப் பொடியனுக்கு இவளுக்குத் தாலி கட்டிறதுக்குக் கையில்லை... அதுதான் போகட்டு... அவன் கக்கா செய்தால்... இவள்தான் அவனுக்கு அடிக்கழுவி விடவேணும்... இது தேவையா சேர்... நான் வேளைக்கு வந்திட்டன்... நான் போப்போறன்... நீங்கள் கொஞ்சம் கதையுங்கோ...:” அவர் புறப்படுகின்றார்.

நானும், வெள்ளச்சியும், அன்னம்மாவும் மட்டும்தான் இருக்கிறோம். யாருமே பேசவில்லை. எனக்கு என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்று புரியவில்லை...

வெள்ளச்சி ஒரு பெருமூச்சோடு பேச ஆரம்பிக்கிறாள். அவள் ஏதோவெரு முக்கியமான செய்தியைச் சொல்லப்போகிறாள் என்பதை நான் ஊகித்துக்கொண்டு எனது காதுகளைக் கூர்மைப்படுத்துகிறேன்.

‘சேர்...! நான் அவயவங்கள் இல்லாத ஒருத்தனைக் கலியாணம் செய்ய ஏன் சம்மதிச்சன் எண்டதை நான்தான் சேர் உங்களுக்குச் சொல்ல வேணும். நான் இதுவரையில் ஆரிட்டையும்... அம்மா, அப்பா, சகோதரங்கள் உட்பட ஆரோடையும் இந்தக் கலியாணத்திலை உள்ள உண்மை நிலை பற்றிக் கதைக்கயில்லை... நான் ஏன் கதைக்கயில்லை எண்டால்... என்ர கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டினம் எண்டது எனக்குத் தெளிவாகத் தெரியும் சேர்... இந்தக் கிராமத்தில என்னைப் புரிஞ்சு கொண்டவையளிலை நீங்கள் முதலாள். அதாலை உங்களிட்டை என்ரை மனநிலையைச் சொல்லப்போறன்...” பேச்சை நிறுத்திவிட்டு நின்ற வெள்ளச்சி மீண்டும் பேச ஆரம்பிக்கிறாள்.

“ஆண்டாண்டு காலமாய் அடிமைப்பட்டுக் கிடக்கிற எங்கட மக்களுக்கு ஒரு விடுதலையைப் பெற்றுக் குடுக்குறதுக்காகப் போராடி தன்ரை அவயவங்களை இழந்து பட்டமரமாகிவிட்ட அந்தப் போராளி தீபனுக்கு ஒரு வாழ்க்கையைக் குடுக்க நான் விரும்புறனே தவிர, இந்தக் கலியாணத்தாலை எனக்கொரு வாழ்க்கை கிடைக்கும், எண்ட எதிர்பார்ப்பு எனக்கில்ல சேர்... இந்தக் கலியாணத்தை நான் விரும்பிறதுக்கான உண்மைக் காரணம் இதுதான்” வெள்ளச்சி கூறி முடிக்கிறாள்.

என்னால் பேசவும் முடியவில்லை... பேசுவதற்கு என்னிடம் எதுவுமே இருக்கவும் இல்லை. எனது மனத்தில் வெள்ளச்சி உயர்ந்து நிற்கிறாள்.... போராட்டக்களத்தில் போராளியாக நின்ற வெள்ளச்சி வாழ்க்கைக் களத்திலும் போராளியாக மாறும் இந்த உன்னத நிலையை எப்படிச் சொல்ல முடியும்.

கட்டுரை

வி. அருணாசலம்






# தமிழர்கள்

## ஒழுங்குபடுத்தப்படாத மக்கள் கூட்டம்

உலகின் முற்போக்கான மக்கள் நீண்ட விழுமியங்களுடன் இப்படித்தான் வாழவேண்டும் என்றகட்டமைப்புக்குள்ஒழுங்கு படுத்தப்பட்டவர்களாவர். ஆனால், தமிழினம் இந்தியாவிலோ, இலங்கையிலோ அவ்வாறு ஒழுங்குபடுத்தப்படவில்லை. தமக்குள் காணப்படும் ஒற்றுமையின்மை காரணமாக தமிழர்கள் ஒரு கருத்தைக் கொண்ட மக்களாக ஒருபோதும் இருப்பதில்லை. தொல்குடியான தமிழினம், ஒரு சமூக நடத்தையை அறிவியலாகக் கொண்ட அல்லது தர்க்கரீதியான ஆய்வாகக் கொண்ட ஆவணமாகத் திருக்குறளைக் கொண்டிருந்த போதிலும், அதனைப் பாடமாக்குவதும், பொருள் அறிவதும், போட்டிகளில் ஒப்புவித்துப் பரிசு பெறுவதிலும் கவனம் செலுத்துகிறதே தவிர அந்த நூலைத் வாழ்க்கையின் ஒரு பகுதியில்கூட அடித்தளமாகப் பின்பற்றவில்லை.

### ஒழுங்குபடுத்தப்பட்ட சில மக்கள் கூட்டம்

உலகின் முன்னணி இனங்களாகத் திகழ்கின்ற இஸ்ரேலியர்கள் அருட்தந்தை தியோடசினால் ஒழுங்குபடுத்தப்பட்டவர்கள். சீக்கியர்கள் குருநானக் என்பவரால் ஒழுங்குபடுத்தப்பட்டவர்கள். அதேபோன்று சிங்கப்பூர் மக்கள் லிகுவான்யூ என்பவராலும் சீன மக்கள் மா ஓ சேதுங் என்பவராலும், ரஷ்ய மக்கள் லெனினாலும் அமெரிக்க மக்கள் ஜோர்ஜ் வொசிங்டனாலும், பிரான்சியர் நெப்போலியனாலும், ஜேர்மன் மக்கள் ஓட்டோமன் பிஸ்மார்க்கினாலும், கேரள மக்கள் திப்புசுல்தான், நம்பூதிரிப்பாட் போன்றவர்களாலும் ஒழுங்குபடுத்தப்பட்டவர்கள்.

இலங்கைச் சூழலைப் பார்க்கும்போது சிங்கள மக்கள் மகாவம்சத்தை எழுதிய மகாநாம தேரராலும், அநாகரிக தர்மபாலவினாலும் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறார்கள். தமிழர்களுக்கு அவ்வாறான ஒழுங்குபடுத்தல்கள் எவையும் இருக்கவில்லை. 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழருக்குத் தலைமை தாங்கிய போதிலும் தமிழ் மக்களை ஒருங்கிணைக்கக்கூடிய கால அவகாசம் அவருக்கும் இருக்கவில்லை. ஒரு போராடும் இயக்கம் என்ற நிலையிலேயே அவரும் அழிக்கப்பட்டார்.

### ஒழுங்குபடுத்தலை விரும்பாத தமிழர் கூட்டம்

ஒரு பூர்வீக இனம் தனக்கென வெறும் நிலத்தை வைத்திருந்து பயனில்லை. அந்த நிலத்தில் தாம் எவ்வாறு நிலைத்திருப்பது என்பதே அவசியம். அவ்வாறு இருப்பதற்கு அந்த மக்கள் தமக்குள் முரண்பாடு இன்றி இருத்தல் முதன்மையானது. இஸ்ரேலிய மக்களை, வாட்டியெடுக்கும் பாலைவன நிலத்துக்கு வருமாறு அருட்தந்தை தியோடஸ் அழைத்தபோது உலகெங்கும் பரந்திருந்து மிகவும் வசதியாக வாழ்ந்த யூதர்கள் கூட அந்த வாழ்க்கையை உதறித்தள்ளிவிட்டுத் தமது தாயகமான வறண்ட பாலைவனத்தை நோக்கிச் சென்றார்கள். ஆனால் இங்கு, பிரபாகரனின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த நிலங்களை விட்டு விலத்தி இருப்பதையே அதிகளவு மக்கள் விரும்பியிருந்தார்கள்.

பிரபாகரன் தனது இனத்துக்குள்ளும், இலங்கைக்குள்ளும், வெளிநாடுகளிலும் அதிகம் எதிரிகளைச் சம்பாதித்த ஒரு தலைவராக இருந்தமையால் தமிழருக்கென ஓர் அரசியற் கட்டமைப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் குறைந்தது 25ஆண்டுகளாவது நிர்வாகம் செய்யவும்கூட அவரால் முடியவில்லை.

### நலிந்து செல்லும் தமிழினப் போக்கு

இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரை இன்றுவரைக்கும் படித்தவர்கள் வெளிநாடுகளுக்கு ஓடிவிடவே விரும்புகின்றனர். சமூகம் ஒழுங்கமைக்கப்பட்டதாக இல்லாததால் எதிர்காலத்தில் இந்த மண்ணில் எப்படி வாழ்வது என்ற சிந்தனை தமிழரிடம் உருவாகவில்லை.

ஓர் இனத்தின் இனப்பெருக்கத் தொடர்ச்சிகூட தமிழர்கள் மத்தியில் அறுபட்டுவிட்டது. 300பெண்களுக்கு ஒருவர் என்ற வீதத்தில் கூட கர்ப்பிணித் தாய்மார்கள் இல்லாத ஒரு வறண்ட சமூகமாகத் தமிழினம் மாறிவிட்டது. அதிலும் சமூக முரண்பாடுகளைக் கொண்டிருப்பதால், பிரதேசம், சாதி, மதம் போன்றவற்றால் பிளவுபட்ட இனமாகவே தமிழ் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவை எல்லாவற்றையும் கடந்து தமிழர்களை ஒரு தேசிய இனமாக உருவாக்கக்கூடிய வேலைத்திட்டங்களை மதத் தலைவர்களோ, அரசியல் தலைவர்களோ, சமூகத் தலைவர்களோ ஏற்படுத்த முனைவதாகவும் தெரியவில்லை.

### பிரிவினைகளும் பேதங்களும் கொதிநிலையில் இருக்கின்றன

வடகிழக்குத் தமிழர் நிலம் என்பது ஒரு சுய கட்டுப்பாடான நிலமாக அல்லது இணைக்கப்பட்ட நிலமாக இருக்கவில்லை. யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்புக்குமான உறவோ, யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்குமான உறவோ, யாழ்ப்பாணத்துக்கும் மன்னாருக்குமான உறவோ, யாழ்ப்பாணத்துக்கும்வன்னிக்குமானஉறவோ எந்தக் கட்டத்திலும் தமிழர்கள் ஒரு தேசிய இன மாக வளரக்கூடிய நிலையில் இருந்ததில்லை.

குறைந்த பட்சம் யாழ். குடாநாட்டுக்குள் கூட அவ்வாறு எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. தீவார், வடமராட்சியார், தென்மராட்சியார், வலிகாமத்தார், கரையூரார் என்று பிரதேசவாதமும் சாதிக்கட்டமைப்பும் இன்றைக்கும் முற்றி முறுகிப்போயே கிடக்கின்றன. தமிழ் மக்களிடம் சாதி அமைப்பு என்று ஒன்று இருக்கும் வரைக்கும் தமிழ்த் தேசியம் என்ற ஒன்று ஒருபோதுமே உருவாகாது. இதே மக்கள், பணத்தில் மோகம் கொண்டதால் திருமணத்துக்கு சீதனம் தடையாக ஆகிவிட்டது. இதனால் முதிர்கன்னிகளை அதிகம் கொண்ட சமூகமாகத் தமிழரே காணப்படுகின்றனர்.




### இணைப்புக்களில்லாமல் விடுபட்ட போக்கு

ஓர் இனம் தனது வாழிடம், சந்தோசம், ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கம், கலை கலாசார பின்னணி, உற்பத்தி போன்ற விடயங்களில் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கு அந்த இனத்தில் என்றோ ஒருநாள் ஒரு தலைவர் தோன்றியிருக்கவேண்டும். அந்த மக்கள் அனைவரையும் இணைக்கக்கூடிய மதத் தலைமைத்துவம் அல்லது அரசியல் தலைமைத்துவம், அறிவியல் தலைமைத்துவம் உருவாகியிருக்க வேண்டும். ஒரு தொல்குடி எனப் பெருமைபேசும் தமிழினம் தனது இனத்தின் நிலைபேற்றுக்காக ஒருபோதும் இணைந்து செயற்பட்டதாக இல்லை. இன்றும்கூட ஒரு குழும வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டவர்களாகவும், தனிப்பட்ட வாழ்க்கை முறைக்கு பழக்கப்பட்டவர்களாகவுமே தமிழர்கள் உள்ளனர். இலங்கை முஸ்லிம்கள் கூட மதத்தால் இணைக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

### தமிழர்கள் இலகுவாகக் கையாளப்படுவர்

ஓர் இனம் தனக்குள் அதிகம் முரண்பாட்டைக் கொண்டிருப்பதே அந்த இனம் ஒழுங்குபடுத்தப்படாததன் அடையாளமாகும். அது நிறையவே தமிழரிடம் உண்டு. முரண்பாடுகள் அதிகம் உள்ள மக்களை யாரும் எப்போதும் இலகுவாகக் கையாளக்கூடியதாக இருக்கும். அது ஈழத்தமிழருக்கே அதிகம் பொருந்தும். தொல்குடி மக்கள் எப்போதோ ஒழுங்குபடுத்தப்பட்டிருக்க வேண்டும். இன்றுவரை ஈழத்தமிழரின் ஒரு பிரிவினரை 'மற்றப்பாட்டி' என்று குறிப்பிடுவது தமிழ்த் தேசியத்துக்கு நிரந்தரமாக வைக்கப்பட்ட ஒரு முற்றுப்புள்ளியாகும்.

இவர்கள் மத்தியில் குருநானக், லீக்குவான்யு, லெலின், மண்டேலா,, நெப்போலியன், பிஸ்மார்க், ஜோர்ஜ் வொஷிங்டன், மகாநாம தேரர், அநாகாரிக தர்மபால, திப்பு சுல்தான், நம்பூதிரி பாட் போன்று யாராவது ஒருவர் உருவாகும்வரைக்கும் தமிழர்கள் இப்படியே ஒழுங்குபடுத்தப்படாத ஒரு மக்கள் கூட்டமாகவே இருப்பர். ஒரு தமிழன் இன்னொரு தமிழனை மதிக்கும் பண்பும், நேசிக்கும் பண்பும் இல்லாதவரை இந்த நிலை தொடரவே செய்யும். அதுவே தமிழினத்தின் அழிவுக்கும் காரணமாகவும் அமையும்.

# சின்னதா ஒரு அரட்டை...



அலசல்

மேரிகிரேஸ் வரதராஜன்

## அரியணையில் இந்தியத் தூதுவர்

யாழ்ப்பாணத்தில் ஐயர் இல்லாமல் கோயிலில் திருவிழா செய்ய முடியும். ஆனால், இந்தியத் தூதுவர் இல்லாமல் ஒரு விழா நடத்த முடியுமா? அண்மையில் யாழ்ப்பாணம் – கரவெட்டியில் ஒரு நூல் வெளியீட்டு விழா நடைபெற்றிருந்தது. டென்மார்க் எழுத்தாளரின் நூல் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு கரவெட்டியில் இந்திய தூதுவரின் தலைமையில் வெளியீடு செய்யப்பட்டிருக்கிறது.

அந்த நூலுக்கும் இந்தியத் தூதுவருக்கும் என்ன சம்பந்தம் என்றும் தெரியவில்லை? அவர் தலைமையில் எதற்காக அது வெளியிடப்பட்டதெனவும் தெரியவில்லை.

அமாவாசைக்கும் அப்துல்காதருக்கும்கூட சம்பந்தம் கண்டு விடலாம். ஆனால் இந்தத் தூதுவருக்கும் நூலுக்கும் என்ன சம்பந்தம் என்று கண்டுபிடிக்கவே முடியவில்லை.

யாழ்ப்பாணத்தில் எந்த விழாவாக இருந்தாலும் அது இந்தியத் தூதர் இன்றி நடத்தப்பட முடியாது என்பதையா இச காட்டுகிறது? எந்த வீதியில் இந்தியத் தூதர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டாரோ அதே வீதியில்தான் அப்பாவிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அமைதிப்படை என்ற பெயரில் வந்த இந்திய ராணுவம் மனநோயாளியைச் சுட்டுக்கொன்றது மட்டுமன்றி அவரைப் புலிகளின் மிகப்பெரிய தளபதி என்றும் பொய் கூறியது. இதே கரவெட்டியில் இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்டவர்கள் எத்தனை பேர்? இதே கரவெட்டியில் இந்திய இராணுவத்தால் வன்புணரப்பட்ட பெண்கள் எத்தனை பேர்? இதே கரவெட்டியில் இந்திய இராணுவத்தால் சேதமாக்கப்பட்ட தமிழர் சொத்துக்கள் எவ்வளவு? அத்தனையும் மறந்துவிட்டு எப்படி இந்தியத் தூதுவரை வரவேற்க முடிகிறது? அல்லது, அத்தனையையும் மறந்துவிட்டு எதற்காக இந்தியத் தூதுவரை வரவேற்க வேண்டும்? இந்திய இராணுவத்திடம் பூவரசம் கட்டையால் அடி வாங்கியவரே இன்றைக்கு இந்தியத் தூதுவரை முன்நின்று வரவேற்கிறாரே. அப்படியென்ன நிர்ப்பந்தம் வந்துவிட்டது அவருக்கு?

## நல்லூர்க் கந்தனுக்கு...



நல்லூர் முருகன் உண்மையில் சக்தி உள்ள கடவுள்போல தான் கிடக்குது! தனக்கு மேலே குண்டு போட்ட கோத்தபாயவைக்கூட கெலி கொப்டரில் தனக்குப் பூத்தூவ வைத்திருக்கிறார். எங்கோ பிறந்த வெள்ளைக்காரியைக்கூட தனக்குக் காவடி தூக்க வைத்திருக்கிறார். ஆனால் ஏனோ தன்னை நம்பிய மக்களை முள்ளிவாய்க்காலில் காப்பாற்றத் தவறி விட்டார்! புத்தருக்கு எதிரான போராட்டத்தில் அவருடைய வேலாயுதத்தால் வெற்றி பெற முடியவில்லையே...?

## மியன்மார் முஸ்லிம்கள்

ஈழத்தில் தமிழர்கள் அகதிகளாகக் கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டதுபோல் மியன்மாரிலும் முஸ்லிம் அகதிகள் கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஈழத்தில் தமிழ் அகதிகளைப் பார்வையிட வந்தது போல் மியன்மார் முஸ்லிம் அகதிகளைப் பார்வையிடவும் ஐ.நா செயலர் இனி அங்கு பயணமாவார். ஐ.நா செயலருக்குக் கம்பி வேலிக்குப் பின்னால் இருந்து ஈழத் தமிழர்கள் எப்படி நம்பிக்கையுடன் கை அசைத்தார்களோ அதேமாதிரிக் கம்பி வேலிக்குப் பின்னால் இருக்கும் மியன்மார் முஸ்லிம் அகதிகளும் நம்பிக்கையுடன் கை அசைப்பார்கள்.

ஐ.நா செயலரும் அவ்வேளை ஈழத் தமிழருக்குக் குடி தண்ணீர்ப் போத்தல்களை வழங்குமாறு எப்படி உத்தரவிட்டாரோ அதேமாதிரி மியன்மார் முஸ்லிம் அகதிகளுக்கும் தண்ணீர்ப் போத்தல்களை வழங்குமாறு உத்தரவிடுவார்.

ஐ.நாவால் மகிந்த அரசு தண்டிக்கப்படும் என்று எப்படி ஈழத் தமிழர்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்களோ அதே மாதிரி அங்கு படுபாதகம் புரியும் ஆங்சாங் சூகி அம்மையார் அரசும் தண்டிக்கப்படும் என மியன்மார் முஸ்லிம்கள் நம்பிக் கொண்டிருப்பார்கள்.

ஐ.நா செயலரோ அடுத்துத் தான் விட வேண்டிய அறிக்கை எப்படியிருக்க வேண்டும் என்பதை அமெரிக்க அரச தலைவரிடம் கேட்டுக் கொண்டிருப்பார்.



## 'நீட்' என்றால் என்ன...?



"நீட் பரீட்சையெண்டா என்னண்டு விளங்குறமாதிரிச் சொல்லுங்கண்ணே...?"

"நீ வெண்ணிலா கபடிக்குழு படம் பாத்தியா?"

"அண்ணே அது நல்ல படமண்ணே. 2 தடைவை பாத்திருக்கிறன்..."

"அதில வாற பரோட்டா காமெடி தெரியுமா?"

"அய்யோ அதுதெரியாம ஆரும் இருக்கமுடியுமா அண்ணே? அதில பேமஸ் ஆனவர்தானே அண்ணே பரோட்டா சூரி"

"தம்பி மருத்துவம் படிக்கிறதுக்கு எழுதுற 12ஆவது பரீட்சை நீட். 50பரோட்டா சாப்பிடுற போட்டியெண்டு வை. நீ 50ஐயும் சாப்பிட்டு முடிச்சாப் பிறகு...."

"விளங்கிடிச்சண்ணே...! நீ 45தான் சாப்பிட்டனீ எண்டு எண்ணிக்கையில பொய் சொல்றது தானே?"

"அவசரப்படாதயடா. அப்பிடியெண்டாக் கூடப் பரவாயில்லை. இதில நீ சாப்பிட்ட 50 பரோட்டா கணக்கிலயே வராது! இப்ப 300 பாணிபூரி சாப்பிட்டாத் தான் போட்டியில வெற்றி எண்டு சொல்லுவாங்கள். எப்டியிருக்கும் உனக்கு?"

"அய்யோ அநியாயம் அண்ணே!"

"இதுதாண்டா நீட்"



## மாணவி அனித்தா...

இது தற்கொலை அல்லல.
மத்திய மாநில அரசுகள் செய்த கொலை.
ஒரு ஏழை மாணவி தான் மருத்துவராக வேண்டும் என்று கனவு காணக்கூடாதா?
அந்த மாணவி மாநில அரசை நம்பினார். மத்திய அரசை நம்பினார். இறுதியாக உச்ச நீதிமன்றத்தையும் நம்பினார். யாருமே அவருக்கு உதவவில்லையே. எல்லோரும் சேர்ந்து அந்த மாணவியைக் கொன்று விட்டார்கள்.
இன்னும் எத்தனை அனித்தாக்களை இந்த நீட் தேர்வு காவு வாங்கப் போகிறதோ...?
எல்லா அனித்தாக்களும் தாங்களே தங்களைக் கொலை செய்து கொண்டிருப்பார்கள் என்று நினைக்க வேண்டாம்.
அனித்தாக்கள் போராடும் மாணவி வளர்மதியாக மாறுவார்கள். அத்துடன் எல்லா வளர்மதிகளையும் சிறையில் அடைத்துவிட முடியும் என்றும் எண்ணிவிட வேண்டாம். அனித்தாக்கள் கரும்புலி தாணுவாக மாறி நியாயம் கேட்க முனைந்தால் நிலைமை எப்படியிருக்கும் என்பதைக் கொஞ்சம் நினைத்து பாருங்கள். குலை நடுங்குகிறதா. இப்படி நடக்காத வரைக்கும் உடந்தையா னவர்கள் நன்றாகக் குளிர் காயுங்கள்.

## பாரிசில் ஒரு வெள்ளைக்காரி: அவள் தலையில் மல்லிகைப் பூ!

தமிழன் என்று சொல்லடா
தலையில் பூவை வையடா !!
தமிழன் என்று ஓர் இனம் உண்டு
அவனுக்கென்று தனிக்குணம் உண்டு
பரிஸ் றோட்டை மறித்து தேர் இழுக்கிறான்
மூட்டை மூட்டையாகத் தேங்காய் உடைக்கிறான்
போதாதென்று.
பிரெஞ்சுப் பெண் பொலிஸின் குடும்பியில்
பூ வைத்து மகிழ்கிறான். இப்படிச் செய்து தனது கலாசாரத்தை காப்பாற்றி விட்டதாகப் பூரிக்கிறான்
அடுத்து
"பிரெஞ்சுப் பெம்பிளைகளின் கூந்தலுக்கு இயற்கையாக மணம் உண்டா...? என்று
திண்டுக்கல் லியோனியை அழைத்துப்
பட்டிமன்றம் நடத்துவான்.
பலே...! பரிஸ் தமிழா
வேட்டியை மடிச்சுக் கட்டு
அப்படியே மீசையையும் சற்றே முறுக்கு!

தொடர் 18

ப்ரியமதா பயஸ்

# செல்லும் வழியின் தூரம்...

**இறந்த உடல்களை எம்மைத் தாண்டிச் சுமந்து கொண்டு போனார்கள். பட்டுச் சேலைகளால் போர்த்திக் கொண்டுசெல்லப்படுபவை எல்லாம் உயிரற்ற உடல்கள் தான் என்ற சிந்தனை எல்லோருக்கும் பரீட்சயமாகி விட்டது. இன்று பிற்பகல் மூன்று மணிக்குள் எம்மை ஏராளமான உடல்கள் கடந்து விட்டன. மனம் கனத்துப்போனது.**



ஒவ்வொரு அடி இடைவெளியில் கூடாரங்கள். நெருப்பாய்க் கொதிக்கும் வெயில் அதற்குள்ளிருக்கும் எமது உடல்களைப் பொசுக்கியது. நிமிடத்துக்கு ஒருமுறை வந்துவிழும் எறிகணைகளும், கொத்துக்குண்டுகளும், பொஸ்பரஸ் குண்டுகளும் உயிரைப் பறிப்பதற்குப் போட்டி போட்டுக்கொண்டிருந்தன. கொடுமையான தாக்குதல்கள் நீடித்தன. பசியும், பிணியும், அடிப்படை வசதி இல்லாத சூழலும் உயிரைத் தின்னும் போரும் "இவர்களுக்கு நம்மை மனிதர்களாகத் தெரியவில்லையா...?" என்ற ஆதங்கத்தை ஏற்படுத்திக் கொதிப்படையச் செய்தன.

**வலைஞர்மடத்தைவிட்டு விலகவேண்டிய நிலை**

இறந்த உடல்களை எம்மைத் தாண்டிச் சுமந்து கொண்டு போனார்கள். பட்டுச்சேலைகளால் போர்த்திக் கொண்டுசெல்லப்படுபவை எல்லாம் உயிரற்ற உடல்கள்தான் என்ற சிந்தனை எல்லோருக்கும் பரீட்சயமாகி விட்டது. இன்று மாலை மூன்று மணிக்குள் எம்மை ஏராளமான உடல்கள் கடந்துவிட்டன. மனம் கனத்துப்போனது. வலைஞர் மடத்திலிருந்தும் புறப்படலாம் என்று முடிவெடுத்தோம். நாம் புறப்படுவதற்குத் தயாராகிவிட்டோம். எறிகணைகள் சரமாரியாக வலைஞர் மடத்துக்குள் கொட்டப்படுகின்றன. திக்குத் திசை அறியாது எல்லோரும் தவித்து ஓடுகின்றனர். கையில் அத்தியாவசிய ஆவணங்கள் தாங்கிய பை ஒன்றைத் தவிர வேறு எதுவும் யாருடைய கையிலும் இல்லை. நாமும் அத்தகைய ஒரு பையை எடுத்துக் கொண்டு கூடாரத்துக்குள் இருந்து வெளியே வருகின்றோம்.



**கணப்பொழுதில் ஒரு கொடூரம்**

அப்போதுதான் அந்தக் கொடுமை நடக்கிறது. தனது மனைவியை ஏற்றிக்கொண்டு ஒருவர் மோட்டார் சைக்கிளில் வருகிறார். ஒரு தோள்ப் பையை அவள் கொழுவி இருந்தாள். எல்லோரும் அவசரமாக ஓடிக்கொண்டிருக்கும் வீதி வழியாக அவர்களும் வந்து சடுதியாகத் திரும்புகின்றனர். "எல்லோரும் மண்டியிட்டு ந்கர்ந்து கொண்டிருக்கும்போது இவன்மட்டும் ஏன் இப்படி வருகின்றான்" என அவர்கள் வருவதைக் கண்டவர்கள் நச்சரிக்கின்றனர். நானும்கூட. "தம்பி இறங்கி உந்த மோட்டச் சைக்கிளை விட்டிட்டு நடந்து வாடா..." என்று சொல்லி வாய் மூடமுன் "ஸ்...ஸ்...ஸ்..." என்ற சத்தத்தோடு எங்கிருந்தோ வந்த துப்பாக்கிக் குண்டு பின்னால் இருந்த அந்தப் பெண்ணைப் பதம்பார்த்தது. குண்டு அவள் தலையில் பாய்ந்து மறுபக்கமாக வெளியேறி விட்டது. எந்தச் சத்தமும் இல்லமால் கணப்பொழுதில் அவள் அந்த இடத்திலேயே இறந்து போனாள். தலையில் கைவைத்து "ஓ..." வென்று கத்திக் கதறிய கணவன் ஒரு நொடி கூட அந்த இடத்தில் நிற்க முடியாத சூழ் நிலையால், அவளுடலை அப்படியே விட்டுவிட்டு அவள் தோளில் கிடந்த பையைக் கழற்றிக்கொண்டு தொடர்ந்தும் கதறித் துடித்துக்கொண்டு எம்மோடு சேர்ந்து ஓடி வருகின்றான். நிலமை மோசமாகித் துப்பாக்கிக் குண்டுகள் அதிகமாக வருவது, இராணுவம் மிக அண்மையில் வந்துவிட்டதை உணர்த்தியது. எல்லோரும் அவலக்குரல் எழுப்பிக்கொண்டு ஓடுகின்றோம். அந்த இளைஞனை என்ன வார்த்தை சொல்லித் தேற்ற முடியும்? அவன் பைத்தியம் பிடித்தவன்போல் அலறிக்கொண்டு வருகின்றான். அவனின் துன்பத்தை எப்படிக் கட்டுப்படுத்தமுடியும் ,கண்முன்னே கணப்பொழுதில் இறந்த மனைவியின் உடலைத் தொட்டு அழக்கூட அவகாசம் இருக்கவில்லை. இறுதிக் கடமைகளைக் கூடச் செய்ய வழியற்று நடுவீதியில் போட்டுவிட்டு ஓடிவரும் அவனுக்கு ஆறுதல்சொல்ல எந்த உலகத்தில் இருந்து வார்த்தைகளை எடுப்பது...?

**அம்மா. அப்பாவைப் பிரிந்து சிதறி ஓட்டம்**

நான் பயஸின் சாரத்தை இறுகப் பிடித்துக்கொள்கிறேன். குண்டுகள் வரும் திசைகளை அவாதானித்து அவை எழும், விழும் ஒலிகளைக் கணித்து அவை விழும் தூரங்களை அவதானித்து நிதானத்துடன் எமது பாதைகளை மாற்றி மாற்றி ஓடுகின்றோம். ஓரிடத்தில் நிறைய வாகனங்கள் நிற்கின்றன. இடத்தைச் சரியாக இனம் காணமுடியவில்லை. எல்லோரும் அந்த இடத்தில் குவிந்து இருந்தனர். நாமும் என்ன ஏது என அறியாமல் அந்த இடத்தில் ஓய்வெடுப்போம் என எண்ணினோம். பயஸ் பிள்ளையை வாங்கிக்கொண்டார். "நீ கொஞ்சம் ஓய்வெடு உன் கைகள் வலிக்கப்போகின்றன" எனப் பிள்ளையை வாங்கிக்கொண்டார். அந்தச் சனங்களோடு அவ்விடத்தில் ஒரு மணிநேரம் ஓய்வெடுத்தோம். சற்றும் எதிர்பாராத விதமாக அங்கேயும் வந்து விழுந்தன எறிகணைகள். ஒரே நேரத்தில் மூன்று மூன்றாக எறிகணைகள் வந்து விழுகின்றன. எந்தத் திசையால் ஓடுவதென்று தெரியாமல் நாம் எல்லோரும் சிதறி ஓடுகின்றோம். அம்மாவும் அப்பாவும் எம்மைப் பிரிந்து எங்கோ போய்விட்டனர். அவர்கள் எந்தத் திசையில் போனார்கள் என்று அறியாமல் நானும் பயஸும் தனித்து ஓடிக் கொண்டு இருக்கின்றோம்.

**இரட்டைவாய்க்கால் நோக்கிய நகர்வு**

இரட்டை வாய்க்கால் நோக்கியதாக எமது நகர்வு இருக்கின்றது என்பது தெரியாமல் பயஸின் கைப்பிடியை விடாது நகர்ந்து கொண்டு இருக்கின்றேன். வழி நெடுகிலும் உடலங்கள் சிதைந்து, குருதி வெள்ளத்தில் கிடக்கின்றன. மனதில் பயத்தை வரவழைக்கின்றன. சிலரின் உடல்கள் துணிகளால் மூடப்படிருக்கின்றன. வாகனங்களுக்குக் கீழே ஏராளமான உடலங்கள் குருதியில் மூழ்கிக்கிடக்கின்றன. யார் யாரின் உடல்கள் என அடையாளம் காணமுடியவில்லை. மனப் பயம் அதிகமாகியது. வந்து கொண்டிருக்கும் குண்டுகள் இந்த இடத்தில் விழுந்தால் எமக்கும் இந்த நிலமைதான். உயிர் உள்ளவர்கள் ஓடவேண்டியதுதான். எல்லோரும் தம் உறவுகளுக்கு இதையே சொல்லிக்கொண்டு வருகின்றனர். "என்னைப்பார்க்காதே ஓடு... ஓடு..." என்ற குரல்கள்தான் ஒலிக்கின்றன. இப்போது வலைஞர்மடத்திலிருந்து முற்று முழுதாக விடுபட்டு விட்டோம். இரட்டை வாய்க்கால் பகுதியை அண்மித்தாயிற்று.

**'சாப்பிட்டு வந்து அடிப்பாங்கள்'**

இரட்டைவாய்க்காலில் மக்கள் கூடாரங்கள் அமைத்துத் தங்கி இருந்தனர். செல் மழை கொஞ்சம் ஓய்ந்து இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தை மக்கள் உணவு தேடவும், தேநீர் குடிக்கவும் என்று கணித்து வைத்திருந்தனர். "இராணுவமும் சாப்பிட்டு வந்து இனி அடிப்பாங்கள்" என்பதாகவே நாம் கருதி இருந்தோம். நானும் பயசும் ஒரு விடத்தல் மரத்தின் அருகில் அமர்ந்தோம். அம்மாவையும் அப்பாவையும் காணவில்லை. பயஸின் அம்மா, மாமாவைக் காணவில்லை. அண்ணன், அண்ணியைக் காணவில்லை.

தனித்துப் போய் அந்த இடத்தில் இருக்க அப்பா, மாமா, மாமி, அண்ணா, அண்ணி எல்லோரும் எம்மைக் கண்டு எம்மருகில் வந்துவிட்டனர். அம்மாவை மட்டும் காணவில்லை. நெஞ்சு பதை பதைத்துப் போனது. அம்மாவின் நிலமை என்னவோ...? என மனது அங்கலாய்த்தது. அம்மாவை நான் தேடி போய் பார்கின்றேன் என எழுந்தேன் ,எல்லோரும் அழுகையை அடக்கமுடியாமல் விம்மிக்கொண்டு இருந்தனர். "அம்மாவுக்கு என்ன ஆகியிருக்குமோ...?" என் மனம் பதை பதைத்தது. பயசிடம் பிள்ளையைக் கொடுத்துவிட்டு,எல்லோரையும் இந்த இடத்திலேயே இருங்கள் என்று சொல்லிவிட்டு, அந்த இடத்தை மனதில் நினைவுபடுத்திக்கொண்டு அம்மாவைத் தேடிப் புறப்படுகின்றேன்...

(தொடரும்)

---

கவிதை

வளவை வளவன்

## யதார்த்தவாதி வெகுசன விரோதி



அதோ பாருங்கள்
சோம்பேறிகளின் எழுத்து
இலக்கிய வயல்களில்
விதைக்கப்படுகிறது
கவிதை, கட்டுரை, சிறுகதை
சொல்லோவியம், பேட்டி என்று
பயிராகி
வதந்தி காற்றில் சலசலத்தது.

பரிசு, விருது, பட்டங்கள் என
பல பல விளைச்சல்கள்
அமோகமாகின
அறுவடைக்காக
விமர்சகத் தீரர்கள்
மரபு, யாப்பு, நவீனம்,
பின் நவீனத்துவ
செங்கோல்களை ஏந்தியவாறு

வீற்றிருக்க
குடு குடுப்பைக்காரனின் குரல்
ஓங்கி ஒலிக்க மறுத்து
மொட்டாக்குக்குள்
சைகை செய்யும்.
வயல்வெளிகளில் காத்திருந்தவர்
ஏமாந்து ஏமாந்து
மீண்டும் சோம்பேறிகளாக...



சிறுகதை

ஏழாலையூர் நிலா

# தென்னையை நட்டால்...

காலை வேளை. வழக்கம்போல தனது கடமைகளை முடித்துக் கொண்டு வெளியே வந்து மர நிழலில் உட்கார்ந்தபடி வெளி வாசற் கதவின் வாயிலை நோக்கிக் காத்திருந்தாள் பார்வதியம்மா. அவளின் உள் மனம் சொன்னது, "இன்று என்னைத் தேடி தமிழ் வருவாள்" என்று.

பார்வதியம்மாவைக் கண்ட கனகம்மா, "என்ன, தமிழ் இண்டைக்குப் பார்க்க வாறன் எண்டு சொன்னவளா? வாசல வாசலப் பாத்துக்கொண்டு இருக்கிற...?" என்று சொல்லிக்கொண்டு வந்து பார்வதியம்மா அருகில் அமர்ந்தாள்.

"சீச்சீ அவள் ஒண்டும் சொல்லேல்லை. பிள்ளைக்குப் படிக்கவே நேரம் காணாது. என்னை அடிக்கடி பார்க்க வாறதுக்குப் பேரனும் விடமாட்டார். மனசுக்கு ஏனோ அவளப் பார்த்தால தான் ஆறுதலாயிருக்கும்" என்றபடி எழுந்து நடந்தாள். வெளியே வெறும் வார்த்தையில் மட்டும் சொல்லி விட்டாளே தவிர பார்வதியம்மாவின் உள் மனதில் தமிழ் வரமாட்டாளா? என்ற எக்கமே நிறைந்திருந்தது.

"என்ன பேத்தியைத் தேடுறியள்போல. உங்களைப் பார்க்க வருவள். வெயிலுக்கை நிற்காமல் அந்த மரத்தடியில போய் இருங்கோ" என்று பார்வதியம்மாவை ஆறுதல் படுத்தினான் காவலாளி.

எப்போதுமே பார்வதியம்மாவைச் சுற்றி ஒரு கூட்டம் இருக்கும். காரணம் வயதானாலும் அவரது தோற்றம் மற்றவரைக் கவரச் செய்யும். எப்போதுமே தன்னைத் தூய்மையாக வைத்திருப்பார். எளிமையானவர். அதுமட்டுமல்ல அவரது மனமும் தூய்மையானது. எல்லோருடனும் இலகுவில் பழகுவார். மற்றவர் துன்பப்படும்போது தோளோடு தோளாக நின்று ஆறுதுல் கூறுவார். அதனாலோ என்னவோ அவரை எல்லோரும் 'வெள்ளையம்மா' என்று ம் அழைப்பர். மற்றவரை ஆறுதல் படுத்தினாலும் பார்வதியம்மாவின் மனதுக்குள் ஏராளம் ரணங்கள் புதைந்து கிடக்கின்றன.

எல்லாவற்றையும் மறைத்துத் தன்னைச் சுதாகரித்துக் கொண்டிருக்கிறாள். காலத்தின் கட்டாயமோ? அல்லது விதியின் விளையாட்டோ எப்படிச் சொல்வது. எவ்வளவோ சொந்தங்கள் இருந்தும் அவள் தனித்து விடப்பட்டு, இன்றைக்கு முதியோர் இல்லத்தில் காலத்தைக் கழித்து வருகிறாள். பிள்ளைகள் இருந்தும் யாரும் இல்லாத அநாதையாக வாழ்வது அவளுக்கு வேதனை அளிக்க அதற்கு ஆறுதல் தரும் அருமருந்தாகவே தமிழ் இருக்கிறாள்.

தமிழ் கடந்த வருடம், முதல் முதலில் தனது நண்பியுடன் இந்த முதியோர் இல்லத்துக்கு வந்திருந்தாள். அங்கே பார்வதியம்மாவைப் பார்த்தவுடன் பேச வேண்டும்போல் இருந்தது. அருகே சென்று அவரைச் சுகம் விசாரித்தாள்.

"எப்பிடி இருக்கிறீங்கள் பாட்டி?" கேட்டதும் பார்வதியம்மா ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தாள்.

"நல்லா இருக்கிறன். நீங்கள் யாரம்மா?" என்றாள் பதிலுக்கு.

தமிழ் தன்னை அறிமுகம் செய்து கொண்டாள்.

"நான் பிரியாவுடன் வந்தனான் எனக்கு உங்களைப் பார்த்தவுடன் கதைக்க வேணும்போல இருந்துது. உங்களை எனக்கு நல்லாப் பிடிச்சிருக்கு" என்றவாறு அவள் அருகே அமர்ந்தாள். பார்வதியம்மா அவளின் தோளில் தட்டி "என்ரை பேர்த்தி தானே நீங்களும்" என்று கூறினாள். அவளை அறியாமல் கண்ணீர் கசிந்தது.

"பாட்டி ஏன் அழுகிறீங்கள்? அழாதேங்கோ பாட்டி...." தமிழ் பாட்டியின் விழியோரம் வழிந்த கண்ணீரைத் துடைத்தாள்.

பார்வதியம்மா தனது நிலைமையைக் கூறி அவளைக் கவலைப்படுத்த விரும்பாதவளாய் "காலையில் என்ன சாப்பிட்டிங்கள் அம்மா?" எனப் பேச்சைத் திசை திருப்பினாள்.

தமிழும் அவரின் மனதில் கவலைகள் நிறைந்துள்ளதைப் புரிந்து கொண்டவளாய், "இடியப்பமும் சம்பலும். நீங்கள் என்ன சாப்பிட்டனீங்கள்?" எனக் கேட்டாள்.

பார்வதியம்மா, "புட்டு" எனக் கூறி விட்டு "என்க்குக் காலமைச் சாப்பாட்டில நாட்டமில்லை. மதியம் தான் பசி தீரச் சாப்பிடுவன் பிள்ளை" என்றாள்.

"பாட்டி உங்களுக்கு என்ன சாப்பாடு பிடிக்கும்?"

"இடியப்பம் ,தோசை" என்றாள் பார்வதியம்மா. இருவரும் கதைத்துக் கொண்டிருக்க, "என்ன வெளிக்கிடுவமா? வகுப்புக்குப் போகவேணும் மறந்திட்டியா?" என்றாள் பிரியா.

"ஓ.... நேரம் போனதே தெரியேல்லை மறந்திட்டன்' என்றவாறு பாட்டியைப் பார்த்து 'உங்களோட நிறையக் கதைக்கவேணும் பாட்டி இன்னொரு நாளைக்கு வாறன் சரியா? நிறைய நேரம் கதைக்கலாம்" என்றவாறு விடை பெற ஆயத்தமானாள்.



அவள் மனதில் ஏதோ ஒரு நெருடல். பாட்டிக்கு ஏதாவது கொடுத்துவிட்டுச் செல்லலாம் என நினைத்தவள் தனது பேர்ஸைத் திறந்து 500 நூறு ரூபாத் தாளென்றை எடுத்துக் கொடுத்தாள். பாட்டி மறுக்க "நீங்கள் என் பாட்டியெல்லோ...?" (பாட்டி தயங்கிக் கொண்டிருக்க) "அப்ப நான் கோவம்' எனச் செல்லமாகக் கோபித்தாள்."

'எனக்கு எதுக்கு மோனை பணம்? உன்மை அன்பு மட்டும் போதும்'; என்று அவள் கன்னத்தைச் செல்லமாக வருடி விட்டாள். அவள் விடை பெற்றுச் செல்லும்போது பாட்டி அவளைக் கட்டித் தழுவி முத்தமிட்டாள்.

இரண்டு பேருக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. பாட்டிக்குத் தனது அருமைப் பேத்தி மீது கொள்ளைப் பிரியம். அதுபோல் தமிழும் இறந்துவிட்ட தனது பாட்டி மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்தவள். அதனால் தானோ என்னவோ இருவரும் பிரிய மனமில்லாது ஒருவரையொருவர் பார்த்தபடி நின்றனர்.

"வா தமிழ் நேரம் போகுது" எனப் பிரியா அழைத்தாள். தமிழ் பாட்டியிடமிருந்து விடை பெற்றாள். அவள் இங்கு இந்தப் பாட்டியைச் சந்திப்பாள் என்ற எதிர்பார்ப்புடன் வந்திருக்கவில்லை. வகுப்புக்குப் போகும்வழியில் நண்பி பிரியா தன்னுடைய பாட்டியைப் பார்க்க அவ்வில்லத்துக்குப் போக வேண்டியிருந்தது. அவளுடன் கூடவே தமிழும் வந்திருந்தாள்.

அன்றிரவு தாயிடம் தமிழ் நடந்தவற்றைக் கூறியபோது தாய் அவளை ஆறுதல் படுத்தினால். "உனக்குப் பிடிச்சிருந்தால் நேரம் கிடைக்கும்போது அந்தப் பாட்டியைப் போய் பார்த்து வா. அவவுக்கும் ஆறுதலாய் இருக்கும்" என்றாள்.

"போகும்போது பாட்டிக்கு ஏதாவது கொண்டுபோய்க் கொடுக்கவேணும்" என்று தாயிடம் தெரிவித்தாள் தமிழ். தாயும், "அதுக்கென்ன போகும்போது ஏதாவது தாறன்" என்றாள்.

காலம் உருண்டோடியது. தமிழ் அடிக்கடி பார்வதியம்மாவைச் சந்திக்கச் செல்வது வழக்கமாயிற்று. அவர்களது நட்பு ஒரு ஆண்டைக் கடந்து சென்றது. தமிழ் வழமைபோல அன்றும் பார்வதியம்மாவைப் பார்க்கச் சென்றாள். சுகயீனம் காரணமாக அவரை வைத்தியசாலையில் அனுமதித்திருப்பதாகத் தெரிவித்தனர். அங்கிருந்த ஒருவர் "என்ன பிள்ளை அவான்ர பிள்ளையள் உயிரோடை இருக்கேக்க பார்க்க வராமல் பிறகு வந்து என்ன பிரயோசனம்!" எனப் பெருமூச்சு விட்டார்.

ஒன்றும் புரியாதவளாய் "என்ன சொல்லுறீங்கள்? எனக்கு ஒண்டும் விளங்கேல்ல" என்றாள். "பாட்டிக்குப் பிள்ளைகள் இருக்கினமா? ஏன் பாட்டி, எனக்கு இதுவரை அதைப் பற்றி எதுவும் சொல்லேல்லை! ஓ... அது தான் ஒரு முக்கியமான விசயம் சொல்லவேணும் எண்டு கதைக்க எடுக்கிறபோதெல்லாம் அழுகை வந்துவிடப் பாட்டி சொல்ல மறுத்த கதை..." எண்ணியவள் எதையும் வெளியே காட்டிக் கொள்ளாமல் பார்வதியம்மாள் சேர்க்கப்பட்ட வைத்தியாலையைக் கேட்டு அவ்விடம் நோக்கி விரையலானாள்.

தமிழின் மனதில் பாட்டி இதை எனக்குச் சொல்லாமல் இருந்ததற்குக் காரணம் இருக்கு. இப்ப அவவின் மனதைக் காயப்படுத்தக் கூடாது சுகமாகி வரவிட்டுக் கேட்கலாம் என நினைவுகள் ஓடின.

வைத்தியசாலைக்குள் நுழைந்த தமிழைக் கண்டதும் பார்வதியம்மாவின் முகம் சூரியனைக் கண்ட தாமரைபோல மலர்ந்தது.

"தமிழ் பாட்டியை பார்க்க வந்திட்டாயா?" என்று ஆவலோடு கேட்டாள்.

"பாட்டி என்ன நடந்தது! நல்லாத்தானே இருந்தீங்கள். நான் பயந்திட்டன் தெரியுமா?" என்றவாறு அவளைத் தன் கைகளால் வருடியபடி கேட்டாள்.

சிரித்தபடி "எனக்கு ஒண்டுமில்லை. நான் செத்துருவன் எண்டு பயப்படுறியா? இப்போதைக்குச் சாக மாட்டன். எனக்கு உன்ரை கையாலை ஒரு கோப்பை தேத்தண்ணீ போட்டுத் தாணை" என்றாள் பார்வதியம்மா.

தமிழ் தேநீர் போடத் தொடங்கினாள். தேநீர் போட்டுக் கொடுத்தாள். பாட்டி தேநீர் குடித்துக்கொண்டிருக்கும்போது "உங்களோட நிறைய கதைக்கவேணும். ஆனால் நீங்கள் எதையாவது சொல்லிக் கதையை மாத்திடு வீங்களே!" என்று செல்லமாகக் கோபித்தாள்.

"உன்னை பார்த்த சந்தோசத்திலை சொல்ல வந்ததை மறந்திடுவனே தவிர சொல்லாமல் விடமாட்டன் புள்ளை" என்றாள் பார்வதி.

அதிக நேரம் கதைப்பதற்கு வைத்தியசாலைச் சூழல் இடம்கொடுக்கவில்லை.

அடுத்த நாள் காலை மருத்துவப் பரிசோதனைகளை முடித்துவிட்டு பாட்டியை இல்லத்துக்கு அழைத்துச் சென்றனர் அவரைப் பார்ப்பதற்காக மதியச் சாப்பாட்டு டன் தமிழ் இல்லத்துக்கு வந்தாள்.

"என் மீது பாசமுள்ளவளுக்குஎனது கவலைகளைச் சொல்லாமல் விட்டேனே!



திடீரென நேற்று மாதிரி நெஞ்சு வலி வந்து இறந்து விட்டால் தமிழ் வேதனைப்படுவாளே!" என நினைத்தவள். சொன்னாலும் கவலைப்படுவாள் சொல்லாமல் விட்டாலும் பாவம். தன்னிலை புரியாது என்ன சொல்லுவதென ஏங்கினாள் பார்வதியயம்மா.

நேரம்பார்த்து "பாட்டி எதையோ என்னட்ட மறைக்கிறீங்க. பரவாயில்லை".என்று சொல்லியபடி பாட்டியைக் குறுகுறுவெனப் பார்த்தாள் தமிழ்.

தன்னுடைய சேகங்களைப் பரிமாறுவதற்கு ஒருவாறாக மனம் இழகினாள் பார்வதியம்மா.

"ஒண்டு சொல்லவேணும் பிறகு சொல்ல வாய்ப்புக் கிடைக்காட்டி நீ என்னைக் கோவிப்பாய். நான் சொல்லும் விசயத்தைக் கேட்டு நீ கவலைப்படக்கூடாது" எனச் சோகம் ததும்பிய குரலில் கூறினாள் பாட்டி

"சொல்லுங்கோ பாட்டி" என்று அவளருகில் ஆர்வத்துடன் தமிழ் நெருக்கமாக அமர்ந்தாள்.

"எனக்கு ஒரு ஆசை நான் கண்ணை மூட முதல் என் பேர்த்தியையும் பேரனையும் பார்க்கவேணும் எண்டு. ஆனா அது நடக்குமோ தெரியேல்ல.

எனக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் ஆண் பிள்ளை, இரண்டாவது பெண் பிள்ளை. ரெண்டயும் படிக்க வைச்சு என் கண்ணுக்குள்ளை வைச்சிருந்தன். நாட்டுப் பிரச்சினைக்குப் பயந்து

43

## வழிகாட்டுங்கள்





**ந.யோகப்பிரியா,**
**தரம் 7 ஏ**
**யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.**



**அன்றியா சுரேந்திரன்,**
**தரம் 1 சி,**
**யா/புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்**

## இவர்களைத் தெரியுமா?

**அலெக்சாண்டர் கிரகம்பெல்**



தொலைபேசியைக் கண்டறிந்தவர்.

**சாமுவேல் மோர்ஸ்**



தந்திச் சேவையைக் கண்டறிந்தார்.

## சோலைவனம்



மாலை வெயில் சூரியனின்
மஞ்சள் நிறக் கதிரொளியில்
ஆடிவரும் தென்றல் காற்றில்
அசைந்து நிற்கும் பூங்கொடிகள்

சல சல வென ஓடிவரும்
மலையருவி பளபளக்கும்
மலையருவிக் கரையினிலே
மந்தையெல்லாம் நீரருந்தும்

சோடிக்குயில் பாடிவரும்
ஆடிவரும் கானமயில்
தேடிவரும் புள்ளினங்கள்
பாடிவரும் வண்டினங்கள்


தவழ்ந்து வரும் சோடிப்புறா
தாவிச் செல்லும் குரங்கினங்கள்
பறந்து செல்லும் பறவைகளும்
இயைந்து வரும் சோலைவனம்

பாய்ந்து செல்லும் மானினங்கள்
பயந்தொதுங்கும் சின்ன முயல்
அசைந்து வரும் யானைகளும்
இசைந்து வரும் சோலைவனம்

*காவலூரான்*




## எல்லாவற்றுக்கும் நல்லதோர் தீர்வு உண்டு



மஞ்சுவின் செல்லப்பிராணியான' கியூட்டி' மற்றைய பூனைகளை விட வித்தியாசமானது. எலிகளைப் பிடித்துப் தின்பதை வெறுத்தது. தன் செல்லப் பிராணியின் இத்தகைய நற்குணத்தை மஞ்சு தன் நண்பர்களுடன் கூறி மகிழ்வாள். இதனால் மஞ்சுவின் வீட்டில் எலிகளின் அட்டகாசம் அதிகரித்தது. மஞ்சுவின் ஆடைகளையும் அவள் விரும்பி உண்ணும் சிற்றுண்டிகளையும் எலிகள் அநியாயமாக்குவது கியூட்டிக்கு எரிச்சலூட்டியது.

ஒரு நாள் எலி ஒன்று மஞ்சுவின் ஆடைகளைப் பற்களால் நறுக்கிக் கொண்டிருந்ததைக் கண்ட கியூட்டி அந்த எலி மீது பாய்ந்து அதைக் கொன்றது. மறுநாள், கியூட்டி வீட்டின் கூரை மேல் நடந்து வருவதைக் கண்ட ஒரு எலிக் குஞ்சு கண்ணீர் வடிய அழுது கொண்டிருந்தது. அருகில் சென்ற கியூட்டி, "ஏன் அழுகிறாய்" என அதனிடம் பரிவுடன் வினவியது. எலிக்குஞ்சும் அழுதவாறே "நீ நேற்று என் அம்மாவைக் கொன்று விட்டாய். நானும் என் சகோதரர்களும் அம்மாவை நினைத்து அழுது கொண்டிருக்கிறோம்" என்று கூறிக் கண்களைத் துடைத்தது. இதைக் கேட்ட கியூட்டியின் முகத்தில் கவலை படர்ந்தது. அது எலிகள் செய்யும் திருட்டு வேலைகளைக் கூறியது.


அதற்கு எலிக்குஞ்சு "எங்களுக்குத் திருட்டுமூலமாகத்தான் உணவு கிடைக்கிறது. எங்களைக் கண்டால் நீ மட்டுமல்ல மனிதர்கள் கூட பொறி வைத்துக் கொன்று விடுவார்களே" என்றது. எலிக்குஞ்சு கூறியதை ஆமோதித்த கியூட்டி "நான் கூறுவதற்கு நீங்கள் ஒத்துழைத்தால் இனிமேல் ஒருவரை ஒருவர் கொன்று, உறவுகளை இழந்து தவிக்க வேண்டிய நிலை ஏற்படாது" எனக் கூறியது.

எலிக்குஞ்சும் ஆவலுடன் கியூட்டியிடம் அந்தத் திட்டத்தைக் கூறுமாறு கேட்டது. "எனக்கு என் வளர்ப்பாளர் மஞ்சு தினமும் தரும் பாலிலும் பல்சுவை உண்டிகளிலும் உங்களுக்கும் பங்கிட்டுத் தருகிறேன் நீங்களும் அவற்றைப் பகிர்ந்து சாப்பிடுங்கள்" எனக் கூறியது.

அப்போது எலிகளும் தங்களின் திருட்டுத்தனத்தை எண்ணி வெட்கப்பட்டன. பூனையும் எலிக்குஞ்சின் கவலையைத் தேற்றி இதை உன் சகோதரர்களுக்கும் சென்று கூறு எனக் கூறியது. தூரத்திலிருந்து அனைத்தையும் செவிமடுத்துக் கொண்டிருந்த எலிக்குஞ்சின் சகோதரர்களும் கவலையை மறந்து கை கொட்டிச் சிரித்தன.

சிறுவர் சிறுமியரே! எம்மிடம் இருப்பவற்றை இல்லாதவர்களுக்கும் பகிர்ந்தளிப்போம். அவர்களைத் தீய செயல்களில் ஈடுபடவிடாமல் தடுப்போம்.

## விநோத உயிரினங்கள்



வரலாறு

அருணா செல்லத்துரை

# 2500 வருடங்களுக்கு முன்பிருந்த நாகர்களுடைய ஐந்து தலை நாக வழிபாடு

10

**இலிங்க நடுகற்கள்**

பெருநிலப்பிலுள்ள மாந்தை, திருக்கேதீச்சரம் பாலாவி போன்ற இடங்களை உள்ளடக்கிய மாதோட்டம் பிரிவு இராவண மகாராசாவின் இலங்காபுரம் இராஜதானியாகும். கி.மு. 3084ஆம் ஆண்டளவில் இராவண - இராம யுத்தம் முடிவடைந்த பின்னர் இராவண மகாராசாவுக்கு ஆதரவாக இருந்த இயக்கர்களும், நாகர்களும் அயல் பிரதேசத்தில் குடியேறியிருந்தனர். இந்தப் பிரதேசம் 'கிழக்கு மூலை', 'மேற்கு முலை' எனவும் 'அடங்காப்பற்று' எனவும் அழைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண வைபவமாலையின் ஆங்கில மொழிபெயர்ப்பில் 'இலங்காபுரம்' என்றிருந்ததை பிற்காலத்து வரலாற்றாசிரியர்கள் 'அனுராதபுரம்' என்று மொழிபெயர்த்த காரணத்தினால் வன்னி வரலாற்றில் பல குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

**இயற்கை அமைப்பு :**

இலங்கையின் வடபுலத்தில் உள்ள வன்னிப் பெருநிலப்பரப்பு உஷ்ண வலயத்தில் இருந்தாலும் இதன் இயற்கை அமைப்பு வித்தியாசமானதாகும். பெருநிலப்பரப்பின் மத்தியில் உள்ள மலைப் பகுதிகளிலிருந்தும் காடுகளில் இருந்தும் ஆறுகள் உற்பத்தியாகி ஓடுகின்றன. இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் மூன்று பிரிவினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர். வேடர்கள், இயக்கர்கள், நாகர்கள். வேட்டையாடுவதைத் தமது தொழிலாகக் கொண்டு காடுகளிலும் அதற்கு அண்மையிலும் வேடர்கள் வசித்து வந்தார்கள். பலவிதமான பாரம்பரிய பழக்க வழக்கங்களையுடையவர்கள்.

ஆற்றங்கரைகளில் மழையை நம்பி மானாவாரியாகப் பயிர் செய்த இயக்க குலத்தவர்கள் தமது விளைநிலம் அமைந்த இடங்களை அடிக்கடி மாற்றியுள்ளார்கள். இவர்கள் 'பஞ்ச கர்மாக்கள்' என வரலாற்றில் குறிக்கப்படுகின்றனர். இயக்கர்களுக்குத் தேவையான நீர்த்தேக்கங்கள் கடவுள் சிலைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றை உருவாக்குவதில் நாக குலத்தவர்கள் ஈடுபட்டிருந்தனர் என்பது வரலாற்றுத் தெளிவாகும். இவர்கள் 'விஷ்வ கர்மாக்கள்' என வரலாற்றில் குறிப்பிடப்படு கின்றனர்.

**நடுகல் வழிபாடு :**

அனைத்து சமூகத்தினரதும் இறை வழிபாட்டின் ஆரம்பமாக நடுகல் வழிபாட்டு முறையே இருந்துள்ளது. கருங்கல் துண்டங்களைத் தாம் வழிபடும் கடவுள்களாக உருவகித்து அதனை வழிபட்டு வந்த பாரம்பரியத்திற்கான பல அடையாளங்கள் பெருநிலப்பரப்பில் இருக்கின்றன. இயக்கர்குலத் தலைவன் இராவண மகாராசா இலங்காபுரத்தில் இருந்த காலத்தில் இலிங்க வழிபாடு சிறப்புற்றிருந்தது. ஆரம்பகாலத்தில் வெறுமனே கருங்கற் துண்டங்களைத் தமது வழிபாட்டுக்குரிய இலிங்க வடிவமாக உருவகித்து அவற்றைப் பிரதிஷ்டை செய்து வழிபாடுகள் நடத்தியுள்ளமை தெளிவாகிறது. இது 'நடுகல் வழிபாடு' என அழைக்கப்பட்டுள்ளது. இலிங்க வடிவம் உருவகிக்கப்பட்ட பின்னர் கருங்கல் துண்டங்களை விடுத்து கற்களை உருண்டை வடிவமாகப் பொளிந்து அதனை வழிபட்டமை இலிங்க வழிபாட்டின் வளர்ச்சிப்படியாகும். பெருநிலப்பரப்பில் காணப்படும் சில நடுகற்களில் பல விதமான அடையாளங்கள் பொளியப்பட்டுள்ளன. முல்லைத்தீவு பிரதேச செயலகப் பிரிவில் இருக்கும் வற்றாப்பளைக் கிராமத்துக்கு அடுத்திருக்கும் கேப்பாபிலவு கிராமத்தின் ஊடாக பேராறு பாய்ந்து நந்திக் கடலில் கலக்கின்றது. பேராற்றங்கரையில் இருந்த இரண்டு புராதன நடுகற்கள் எடுத்துவரப்பட்டு ஞானமூர்த்தி ஆலயச் சந்தியில் வைக்கப்பட்டிருந்தன. தற்போது ஞானமூர்த்தி ஆலயம் திருத்தப்பட்ட காரணத்தினால் நடுகற்கள் இரண்டும் அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இலிங்க வடிவில் உள்ள இந்த நடுகற்களிலும் பலவித மான பொளிவுகள் காணப்படுகின்றன.

வற்றாப்பளையில் நடுகல்



ஒட்டுசுட்டான் தான்தோன்றி இலிங்க ஈசுவரர் தீர்த்தமாடுவதற்காக புதுக்குடியிருப்பு வீதியில் கற்சிலைமடுவுக்கு அடுத்திருந்த நீர்நிலை தெரிவு செய்யப்பட்டது. ஒட்டுசுட்டானில் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கும் இலிங்கத்துக்குப் பதிலாக வெறும் கருங்கல் துண்டங்கள் மற்றும் வேல் போன்றவற்றைக் கொண்டு சென்று நீர்நிலைக்கருகில் வைத்து அதிகாலை தீர்த்தமாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒட்டுசுட்டான் தான்தோன்றி இலிங்கப் பெருமான் தீர்த்தமாடுவதற்கான நீர்நிலையைக் கருடன் காட்டியதனாலும் கருடன் பறப்பது போன்ற வடிவில் அது இருப்பதினாலும் 'கருடமடு' தீர்த்தக் கேணி என்று பெயர் பெற்றதாக வாய்வழித் தகவல்கள் தெரிவிக்கின்றன. 'மடு' என்ற பதம் நீர் தேங்கி நிற்கும் இடத்தை குறிப்பதாகும். 'கற்சிலைமடு'வில் பல புராதன சின்னங்கள் இருப்பது போல அடுத்திருந்த 'கருடமடு'விலும் பல புராதன கருங்கல் சின்னங்கள் இருந்தன. அநேகமானவை அகற்றப்பட்டு விட்டன. அளவில் பெரிய பொளியப்பட்ட வட்டவடிவக்கல் ஒன்று மட்டும் எஞ்சியுள்ளது. 'கருடமடு' கேணிக்கருகில் இலிங்க வடிவில் நடுகல் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்பட்டு வந்தது. அதனை பிள்ளையார் நடுகல் என்று வழிபட்ட காரணத்தினால் அண்மைக் காலத்தில் அங்கு பிள்ளையார் ஆலயமும் கட்டப்பட்டுள்ளது. ஆனால் புராதன இலிங்கத்தின் நடுகல்லே கருடமடுவில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது என்பது ஆய்வின் மூலம் தெளிவாகிறது.



கருடமடுரூபவ் நடுகல்

செட்டிகுளம் என்று அழைக்கப்படும் பிரதேசத்தின் பகுதிகள் 'கிழக்குமூலை' மற்றும் 'மேற்கு மூலை' பிரிவுகளோடு சேர்ந்திருந்தன. 'செட்டிகுளம்' என்ற பெயர் சிலப்பதிகாரக் காலமான 3ஆம் 4ஆம் நூற்றாண்டுகளுக்குரியது. வீர நாராயணச் செட்டியார் முத்துக் குளிப்பதற்காக இந்தப் பிரதேசத்துக்கு வந்து 'வாலை' என்ற பெயரிலிருந்த குளத்தை திருத்திக் கட்டியதாகவும் அதற்கு 'செட்டி குளம்' என்று பெயர் வைத்ததாகவும் வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது.




வௌவாலைக்கேணியில் இலிங்க நடுகல்.

சந்திரசேகரப் பெருமான் ஆலயத்தையும் செட்டியார் கட்டினார் பெருமான் தீர்த்தமாடுவ தற்காக நீர் நிலை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. இந்த நீர்நிலை சிப்பிக்குளத்தை ஒரு பக்கத்திலும் சிப்பிமேட்டை மறுபக்கத்திலும் கொண்டுள்ளது.

வாலைக் குளப் பிரதேசத்தில் இருந்ததினாலும், வௌவால் பறப்பது போன்ற வடிவில் இருப்பதினாலும் அந்த நீர்நிலை 'வௌவாலைக் கேணி'யென அழைக்கப்படுகின்றது. செட்டிகுளம் என்ற பிரதேசம் போர்த்துக்கேயர் காலத்தில் 'பறங்கிச் செட்டிகுளம்' என்றே வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. வௌவாலைக் கேணிக்கு அருகில் புராதன இலிங்க வழிபாட்டின் அடையாளமாக நடுகல் ஒன்றிருந்தது. அந்த நடுகல் தற்போது கேணிக்கருகே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தில் இலிங்க வழிபாடு இடம்பெற்றமைக்கு இந்த நடுகல் ஆதாரமாகின்றது.

(தொடரும்)

## போனால் போகட்டும் போடா...!



### கவிதை

இரா. ஜெயக்குமார்

விலைவாசி யேறினும்
விலைபேசி வாங்கிடு தோழா!
முகநூல் முடிச்சுக்களால்
முறைகேடு நேர்ந்து
கறை பட்டவர் கதை கண்டும்
அகமெலாம் 'போன்' ஐயே
அழைப்பதேன் தோழா...?

கற்பித்தல் விற்பன்னர்
கடமையிலும் போனே!

உயர்தரம் பயிலுவோர்
பைகளிலும் போனே!
சாமிக்குத் தூபம்
சாத்துகையில்
காதுக்குள் ஓதும் போனே!
எமதர்ம ஏவலர் சாரதிகளின்
சாகசக் கரங்களிலும்
போனே!
பல்லற்ற பழுத்த தலைகள்
கூட

பற்றியிருப்பதும்
போனே!

சூழல் மறந்து
சுற்றம் துறந்து
பற்றியிருப்பதும் போனே!
'தனிமை' தருவதும்
போனே!
அளவோடு 'போனால்'
அமுதம் விளையும்
அரிய பணமும் நாளும்
நிறையும்

**சினிமா**




# குரங்கு பொம்மை

இந்தியா – தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த தேனப்பன் சிலை கடத்தல்காரர். பல ஆண்டுகால அவருடைய சிநேகிதன் என்ற அடிப்படையில் பாரதிராஜா அவரிடம் வேலை செய்கிறார். பாரதிராஜாவின் மகன் விதார்த், சென்னையில் வாடகை வாகன ஓட்டுநராக வேலை செய்கிறார். தேனப்பனுடன் தன் தந்தை இருப்பதை விதார்த் விரும்பவில்லை. அவர்களது நட்பால் விதார்த்துக்குப் பெண் பார்க்கப் போகும்போது ஒரு கட்டத்தில் பிரச்சினையும் உருவாகிறது. இந்த நிலையில், தேனப்பன் கொடுத்த பயணப் பொதியுடன் மகனுக்குத் தெரியாமல் சென்னைக்கு வருகிறார் பாரதிராஜா. அந்தப் பையில் 5 கோடி மதிப்பிலான கடத்தல் சிலை ஒன்று இருக்கிறது. அதைப் பாரதிராஜா உரிய இடத்தில் ஒப்படைக்கும்போது நடக்கும் சம்பவங்கள் என்ன? அதனால் ஏற்படும் விளைவுகள் என்ன? என்பதுதான் படம். பொதியில் குரங்கு பொம்மையின் படமும் பதிப்பாகியிருக்கின்றது.

**பாத்திர வார்ப்புக்கள்**

பல இடங்களில் படத்தைப் பாரதிராஜாவே தாங்கிப் பிடிக்கிறார். பாரதிராஜாவுக்கு இணையான நடிப்பைத் தயாரிப்பாளர் தேனப்பனும் வெளிப்படுத்தியிருக்கிறார். இளங்கோ குமாரவேல் கதாபாத்திரமும் முக்கிய இடம் வகிக்கிறது. விதார்த், அறிமுக நாயகி டெல்னா டேவிஸ், கல்கி போன்றவர்களும் தங்கள் கதாபாத்திரத்தைச் சிறப்பாகத் திரையில் கொண்டு வந்திருக்கின்றனர். பாலா சிங், கிருஷ்ணமூர்த்தியின் நடிப்பும், அவர்களது கதாபாத்திரங்களும் மனதை நிறைக்கின்றன. ஆனால் பாரதிராஜா – விதார்த்துக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்தும் விதார்த் – டெல்னா காதல் காட்சிகளுக்குக் கொடுக்கப்படவில்லை.

**சம தளத்தில் கதையும் நகர்வும்**

இயல்பான கதாபாத்திரங்கள், நடிப்பு, நன்கு படமாக்கப்பட்ட பின்னணிகள் என்று ஆரம்பம் முதலே படம் சுவாரசியமாக நகர்கிறது. பொதுவாக இது மாதிரி விறுவிறுப்பும் ஆழமுமான கதைகளைக் கையாளும்போது படத்தின் விறுவிறுப்புக்காகக் கதை சிதைவதும், கதைக்காக வேகம் குறைவதும் நடக்கும். அப்படி எந்தத் தளத்திலும் தொய்வு ஏற்படாதவாறு நேர்த்தியாகத் திரைக்கதை அமைத்திருக்கிறார் அறிமுக இயக்குநர் நித்திலன் சுவாமிநாதன். 'புதிர்' என்ற அவரது முதல் குறும்படத்தின் தாக்கத்தில் உருவாகியிருப்பதுபோல் தோன்றுகின்றது 'குரங்கு பொம்மை'.

**இசை, ஒளிப்பதிவு, காட்சியமைப்பு**

பெரியவர் தவறவிட்ட பணப்பையை ஒப்படைப்பதற்காக விதார்த் செல்லும் பொலிஸ் நிலையம், கஞ்சாகருப்புவின் வீட்டுச் சுவரில் தொங்கவிடப்பட்டிருக்கும் கடிகாரம், குமாரவேல் வீட்டில் மீன் தொட்டியில் அமர்ந்து அவரது மகன் விளையாடுவது உள்ளிட்ட பல இடங்களில் சூழலும், பின்னணியும் கவனமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. என்.எஸ்.உதயகுமாரின் ஒளிப்பதிவு, அபிநவ் சுந்தர் நாயக்கின் காட்சியமைப்பு, 'அஜனீஷ் லோக்நாத்தின் இசை ஆகியவை கச்சிதம்.

**குறைகளிருந்தாலும் இரசிக்கலாம்**

சண்டையில் தொடங்கும் விதார்த் – டெல்னா அறிமுகம், பின்னாளில் காதல், பாசம் என்று மலர்வது சரியாகக் காட்சிப்படுத்தப்படவில்லை. தன் அலைபேசி வைத்த இடத்தைக்கூட மறந்துவிடுகிற பாரதிராஜாவிடம் 5 கோடி சிலையைக் கொடுத்து அனுப்புவது, அவரைத் தேடித் தேனப்பன் சென்னைக்கு வரும்போது நடக்கும் துப்பாக்கிச் சூடு ஆகியவை காட்சிகளோடு ஒன்றாமல் கடந்து செல்கின்றன.

சடலத்துடன் கூடிய 'குரங்கு பொம்மை' பல இடங்களுக்கும் இடம் பெயர்கிறது. ஒரு இடத்தில் கூடவா அது துர்நாற்றம் வீசாது? என்ற கேள்விக்கும் பதிலில்லை. இப்படிச் சில குறைகள் இருந்தாலும், இயல்பாக நகரும் 'குரங்கு பொம்மை'யின் வித்தை கொஞ்சம் ரசிக்கும் படிதான் இருக்கிறது.





இசையமைப்பாளர் ஆகவேண்டும் எனும் குறிக்கோளோடு இருக்கும் விஜய் சேதுபதிக்கும் இசை ஆசிரியையாகப் பணிபுரியும் காயத்திரிக்கும் சில சந்திப்புகளில் காதல் மலர்கின்றது. காதல் வளர்ந்து கொண்டிருக்கையில் விஜய் சேதுபதியின் அலைபேசிக்குக் காதலியின் அந்தரங்க ஒளிப்படம் ஒன்று வருகிறது. அதிர்ச்சியடைந்த அவர், தனக்கு அந்த ஒளிப்படத்தை அனுப்பியவர் யார் என்பதைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறார். இதற்குள், புடவைக் கடையின் உடைமாற்றும் அறைக்குள் நின்றபடி காயத்ரி புதிய சல்வாரைப் போட்டுப் பார்க்கும் காட்சியும் காணொலியாக அவரது கைபேசிக்கு வருகிறது. இவற்றை அறிந்த காயத்திரி தற்கொலைக்கு முயல்கிறார். காயத்ரியைக் காப்பாற்றி அவரைத் தன்னுடன் தங்கவைத்துக் கொள்கிறார் விஜய் சேதுபதி.

அடுத்து விஜய்சேதுபதியின் நெருங்கிய இரண்டு நண்பர்களில் ஒருவர் தற்கொலை செய்துகொள்ள, மற்றவர் போதைப்பொருள் வழக்கில் கைதாகிச் சிறை செல்கிறார். காதலி, நண்பர்களைக் குறிவைத்துத் தாக்கும் அந்த மர்ம நபரை விஜய் சேதுபதியால் கண்டறிய முடிந்ததா? அவர் யார்? எதற்காக இப்படிச் செய்கிறார்? இதுதான் 'புரியாத புதிர்'.

**பாத்திரவார்ப்புகள்**

காதலியின் அந்தரங்க ஒளிப்படத்தைச் சைபர் க்ரைம் பொலிசாரிடம் ஆதாரமாகக் கொடுக்க முடியாமல் தவிப்பதிலும், காதலியை எப்படியாவது இந்த இக்கட்டில் இருந்து மீட்டுவிடவேண்டும் என்று துடிப்பதிலும் தனித்து மிளிர்கிறார் விஜய் சேதுபதி. சிறிது நேரமே வரும் மஹிமா நம்பியார் அழகு. நடிப்பதற்குக் கிடைத்த வாய்ப்பை நாயகி காயத்திரியும் நன்கு பயன்படுத்திக் கொண்டுள்ளார். 'மெல்லிசை' எனப் பெயரிட்டு, 3 ஆண்டுகளுக்கு முன்பே படப்பிடிப்பு முடித்து, நீண்ட போராட்டத்துக்குப் பின்பு பெயர் மாறி வந்துள்ள திரைப்படம். அதனால், விஜய்சேதுபதி வழக்கமான துறுதுறுப்போடு, மிக இளமையாகவும் தெரிகிறார். இப்போதைய சூழலுக்குக் கதை மிகச் சரியாகப் பொருந்துவதால், 3 ஆண்டு இடைவெளி உறுத்தலாக இல்லை.

**பரவாயில்லை ரகம்**

# புரியாத புதிர்



**இசை, கமரா**

பின்னணி இசையில் இசையமைப்பாளர் சாம் சி.எஸ். உழைப்புத் தெரிகிறது. விறுவிறுப்புக் காட்சிகளுக்குக் கூடுதல் வலுச் சேர்க்கிறது. நாயகன், நாயகி இசைத்துறை சார்ந்த கதாபாத்திரங்கள் என்பதால், பாடல்களுக்கான இசையிலும் இன்னும் கொஞ்சம் ஈடுபாடு காட்டியிருக்கலாம். கமரா நகர்வுகளை ஒரு உத்தியாகக் கையாண்டு, விறு விறுப்பை அதிகப்படுத்த முடியும் என்பதில் வெற்றி பெற்றுவிடுகிறார் ஒளிப்பதிவாளர் தினேஷ் கிருஷ்ணன். குற்ற உணர்ச்சியால் உந்தப்படும் முதன்மைக் கதாபாத்திரம் ஒன்றின் பழிவாங்கும் கதை. வழக்கமான பழிவாங்கல் கதை என்றாலும், அதற்குத் திரைக்கதை அமைத்த விதத்தில் கவர்கிறார் அறிமுக இயக்குநர் ரஞ்ஜித் ஜெயக்கொடி. ஆனால், பார்வையாளர்களைத் திசைதிருப்ப ராணி திலக் கதாபாத்திரத்தை நுழைத்திருப்பது, மர்ம ஆண்குரலைப் பயன்படுத்தியிருப்பது போன்றவை வழமையான உத்திகள்.

தகவல் தொடர்பு சாதனங்களான அலைபேசிகள், சமூக வலைத்தளங்களை அடுத்தவர் அந்தரங்கத்தைப் பதியவும், பகிரவும் பயன்படுத்துபவர்களின் பொறுப்பற்ற அணுகுமுறையை, நேர்த்தியான திரைக்கதை மூலமாகச் சாடியதன் மூலம், நல்லதொரு படமாக ஈர்க்கிறது 'புரியாத புதிர்'.

கட்டுரை

தி. அரவிந்தன்



# மதுவை மதியால் வெல்ல வேண்டும்

மேற்கத்தேய நாடுகளில் குளிரைத் தாங்கிக் கொள்வதற்கான மருந்தாகவும் மது பாவிக்கப்படுவது. அதாவது 'அற்ககோல்'.
மேலைத்தேய நாடுகளில் தான் அது மது. ஆனால் தென் ஆசிய நாடுகளில் குறிப்பாக, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மக்களின் வாழ்வியலைப் பீடித்திருக்கும் பெரும் புற்றுநோயாகவே அது மாறியிருக்கிறது.

**மதுவை ஏற்றுக்கொள்ளும் மனநிலை எப்படி?**

போருக்குப் பின்னான வடக்குக் கிழக்கில், அதிலும் குறிப்பாக வடக்கில் புத்தகங்கள் உள்நுழைவதாயின் அதற்குத் தடைகள் சில நடைமுறையில் இருக்கின்றன. ஆனால் உலகில் உள்ள அத்தனை போதைப்பொருள்களும் இலகுவாக வந்திறங்கிவிடக்கூடிய பெரியதொரு போதைப்பொருள் மையமாக இன்றைக்கு வடக்கு மாறி இருக்கிறது.
போர் முடிந்த அத்தனை நிலங்களிலும் ஆதிக்க சக்திகளால் கந்தகைப் புகை நாற்றத்தை மறைப்பதற்காகவும், அழிக்கப்பட்டவர்களின் வலிகள் வலிமைப் படக்கூடாது என்பதற்காகவும் போதைப்பொருள் பாவனை விதைக்கப்படுது சாதாரணமான விடயம் தான். அந்த வகையில் நாமும் விதி விலக்கானவர்கள் அல்ல. ஆனால் அவற்றுக்கு எதிர்ப்பாளர்களாக மாற வேண்டிய நாம் அவற்றை ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இருப்பதற்கு என்ன காரணம்...?
15 வயதை அடைந்துவிட்டால், "ஒருக்கால் அந்த மதுவை மணந்து பார்க்க வேண்டும்" என்ற சிந்தனை பிறப்பது அந்தப் பருவத்தினருக்கு இன்றைக்கு எழுதப்படாத விதியாய் மாறி இருக்கின்றது. அதற்கான காரணம் என்ன? "இப்ப ஆர் தான் குடிக்காமல் இருக்கிறான்?" என்று சாக்குப் போக்குச் சொல்லியவாறு என்றைக்குமே ஏற்றுக்கொள்ள முடியாத மதுவை ஏற்றுக்கொள்ளும் மனநிலை எப்படி எம்மவர்கள் மத்தியில் உருவானது. இது ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

**பண்பாடு எப்படி அடியோடு மாறியது...?**

புராணக்கதைகளை ஆராய்ந்து பார்த்தால், ஆரிய - திராவிடப் பண்பாட்டில் 'சூரா' என்கிற போதைப் பானத்தை அருந்துபவர்கள் சூரர்கள் அதாவது தேவர்கள். அந்தப் பானத்தை அருந்தாதவர்கள் அசுரர்கள். அதாவது இராவணன் போன்றவர்கள். பண்பாட்டு ரீதியாகவே திராவிடக் குடும்பத்தைச் சேர்ந்த நாங்கள் மது அருந்தாதவர்கள். ஆனால் இப்போது நம் பண்பாட்டை மறந்து, அடையாளத்தைத் துறந்து எமது முன்னைய சந்ததியின் தியாகங்களைப் புறந்தள்ளி மதுப்போத்தல்களுடன் கடற்கரைகளிலும் அவ்விடங்களில் எமது பொருளாதாரத்தையும் பண்பாட்டையும் அழிப்பதற்காகத் திட்டமிட்டே கட்டப்பட்டிருக்கும் இராணுவ விடுதிகளிலும் கூத்தாடுகிறோம். அடிப்படையில் எமது அதிகாரவர்க்கம் எதிர்பார்ப்பது இதைத்தான். நாமோ எதிர்ப்பின்றி அதற்கு இரையாகிறோம்.
நடந்து முடிந்த போரில் அனைத்தையும் இழந்து ஒழுங்காக மூன்று நேர உணவு உண்ணவே முடியாமல் அனேகம்பேர் இன்று வடக்கில் வாழ்கின்றனர். போதைக்காகத் தினமும் ஆயிரக்கணக்கில் செலவழிக்கும் சமுதாயமும் இங்கு தான் இருக்கிறது. இவற்றை எல்லாம் நினைக்கும்போது மனது கவலையடைகிறது.

**மதுக் கலாசாரத்தை உருவாக்கும் மாணவர் சமுதாயம்**

2014ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் பிரபல்ய பாடசாலையின் மாணவர்கள் குத்துச்சண்டைப் போட்டி ஒன்றுக்காகக் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைக்குச் சென்றிருக்கின்றனர். சென்ற இடத்தில் அந்தப் பாடசாலைக்கு அருகிலிருந்த இராணுவத்தினர் இலவசமாகப் போத்தல் போத்தலாக அவர்களுக்கு மது வழங்கி இருக்கிறார்கள். மாணவர்கள் மாத்திரமன்றி அவர்களுடன் கூடவே ஆசிரியரும் சேர்ந்து குடித்துக் கும்மாள அடித்திருக்கிறார். பாடசாலைக்குத் திரும்பியதும் அங்கு தாம் நடந்துகொண்டதைப் பெருமையாக கூறும் அளவுக்கு அவர்களின் சிந்தனை இருக்கின்றது.
அது மட்டும் அல்ல. பாடசாலை இல்ல விளையாட்டுப்போட்டிகளில் மாணவர்கள் மது அருந்திவிட்டு நின்றே வேலை செய்கின்றனர். இவற்றில் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை. காரணம் இதை எழுதிக்கொண்டிருக்கும் நான் படித்தகாலத்தில் இவ்வாறன செயற்பாடுகளை நேரில் கண்டிருக்கிறேன்.




**'றெட்புள்' குடிக்குமாறு அறிவுரை**

யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபல தனியார் கல்வி நிலையத்தின் ஆசிரியர் ஒருவர், மாணவர்கள் நித்திரை முழித்துப் படிப்பதற்கு 'றெட்புள்' எனப்படும் உற்சாக பானத்தை அருந்தும்படி அறிவுரை செய்திருக்கிறார். அது 'கஃபீன்' பிரித்தெடுப்பில் இருந்து உருவாக்கிய ஒரு பானம். 'கஃபீன்' என்பது சில செடி, கொடிகளில் உள்ள, உடலுக்கு ஒருவகைப் புத்துணர்வூட்டும் (விறுவிறுப்பூட்டும்) ஒரு பொருள் (போதைப் பொருள்). அற்ககோல் மூளையில் எந்த மாதிரியான மாற்றத்தைச் செய்கிறதோ அதையே இந்தக் கஃபீனும் செய்கிறது. ஆகவே இது போன்றவற்றைச் சாதாரண விடயமாக ஊக்குவிக்கும் மனநிலை எமக்குள் திட்டமிட்டே உருவாக்கப்பட்டிருக்கிறது. விடுதலைப்புலி கள் காலத்தில் அவர்கள் தமது சோதனைச் சாவடிகளில் போதைப்பொருள்களுக்கு அதிகூடிய வரியை விதித்திருந்தார்கள். அதனால் போதைப்பொருள்களை வன்னிக்குள் கொண்டு செல்பவர்கள் வரி கட்டமுடியாமல் அவற்றை எறிந்து விட்டுச் செல்லும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. 40 வயது குறைந்தவர்கள் மது அருந்துவது மிகப்பெரிய குற்றமாகக் கருதப்பட்டது. ஆனால் இன்று சர்வ சாதாரணமாக 18வயது மாணவர்கள் மதுப் போத்தல்களுடனும் உயர் 'சீ.சீ' வாகனங்களுடனும் வலம் வருகிறார்கள்.

> போதைப்பொருள் பாவனையில் யாழ்ப்பாணம் முதல் இடம். இதில் உண்மை இல்லை என்று சொல்ல முடியாது. பாடசாலை மாணவர்களில் இருந்து பல் கலை மாணவர்கள் வரை மதுவில் மூழ்கி இருக்கும் மண்.

**யாழ்ப்பாணம் முதலிடம்!**

இலங்கையில் ஒரு ஆய்வு சொல்கிறது. போதைப்பொருள் பாவனையில் யாழ்ப்பாணம் முதல் இடம். இதில் உண்மை இல்லை என்று சொல்ல முடியாது. பாடசாலை மாணவர்களில் இருந்து பல்கலை மாணவர்கள் வரை மதுவில் மூழ்கி இருக்கும் இந்த மண், இதில் முதல் இடம்பிடித்ததில் என்ன சந்தேகம். இவற்றையெல்லாம் எதிர்த்து நாம் போராட வேண்டும். மதுக்கடைகளை மூடச்சொன்னால், கடைசிவரை அதை யாரும் செய்ய மாட்டார்கள்.
மாறாக இன்னும் 100கடைகளைத் திறப்பார்கள். நாம் போராட வேண்டும். எம்மைத் தற்காக்கப் போரட வேண்டும். மது அருந்துதல் பாரதூரமானது எனப் பெற்றோர் தமது பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும். தமது பிள்ளைகளை இந்தச் சமூகத்தின் மீது தீராத பற்றுதி கொண்டவர்களாக வளர்த்தாலேபோதும். சமூகமும் போராட வேண்டும் மதுப் பாவனையாளர்களை ஒதுக்கி வைத்துத் தனிமைப்படுத்திப் போராட வேண்டும். மதுவில் இருந்து விடுதலை பெறுவதற்கான போரைத் தொடங்க வேண்டும் மதுவைச் சாகடிக்கும் வரை அந்தப்போர் தொடரவும் வேண்டும்.

---

கவிதை

கை. சரவணன்

# மண்

சில அவதானக் குறிப்புகள்

1

தாய்ப் பாலுக்கடுத்து
சுவையறிந்து
இரசித்துண்ட என்
முதலுணவு.

தாய் மடிக்கடுத்து
அனேகம் பொழுதுகள்
கிடந்து புரண்ட
படுக்கை.

தாய்
தன்மடியை அடுத்த
பேறின்பின்
தூரப்படுத்திய போதிலும்
தாங்கச் சலித்தறியா
மென்னிருக்கை.

தாய்....
அவள் தாய்
அவள் தாய்... தாய்...தாய்
என்று
நீளும் சந்ததி
முழுதுமே முழுப்பொழுதும்
தரித்திருந்தது
இங்கேதான்.

நீரிலிருந்து சலித்து
நிலமேறிய முதலுயிரி
பரிணாமம் பல கடந்து
மனிதனாகி
உலவுவது இன்றுவரை
தொடர்கிறது.

மிதித்தாலும்
வெறுத்து உதைத்தாலும்
கொத்திப் பிளந்தாலும்
நெஞ்சில் துளையிட்டு



வதைத்தாலும்
பெரும் பெரும்
குண்டுகளால் அதிர்ந்தாலும்
தாங்கச் சலித்தறியாப்
பெருமனம்
யாருக்கு வரும்?

அறிவைத் திணித்து
உப்பிப் பெருத்து
அந்தரிக்கும் மூளை
ஒருபொழுது சுமையறிச்
சாய்கையிலே
அன்பாலரவணைத்து ஆற்றிப்
புத்துயிர் கொடுக்கும்
பக்குவம்
உண்மையில் ஓர்
அதிசயந்தான்.

ஓய்வு
கட்டாயமானதுதான்.
தற்காலிகமாயும்
நிரந்தரமாயும்
உள்ளது.
இரண்டுமே சாத்தியமாவது
மண்ணில்தான்.

கட்டுரை

அல்லிதேவி அமரசிங்கம்

# அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே...




இன்றைய தமிழ் சினிமாவின் வளர்ச்சி எப்படிச் சாத்தியமானது...? அது சடுதியாக வளர்ந்தெழுந்த ஒன்றா...? இல்லவே இல்லை. ஊமைப்படங்களாக இருந்து இசைப்பாடல்கள் நிறைந்த படமாக மாறி, ஸ்ரூடியோவை விட்டு வெளியே வந்து வளர்ந்து, எழுந்ததுவே இன்றைய தமிழ் சினிமா. இன்றைக்கு அது உயர்ந்து நிற்கிறது. சினிமா மாத்திரமன்றி இலக்கியம், எழுத்துச் சூழலின் நிலையும் அவ்வாறானதே. நவீனத்துவம், பின்நவீனத்துவம், 'வாதம்'கள் பலவாக இன்றைக்குக் கிளைவிட்டுப் பரந்துள்ள இதன் ஆரம்பம் ஒரு சிலருக்கே சொந்தமானதாயிருக்கிறது. அந்த ஆரம்பம் இல்லாமல் இன்றைய வளர்ச்சி ஒருபோதும் சாத்தியமில்லை. ஆனால் எழுத்துச் சூழலில் அந்த ஆரம்பத்தையே தொடர்ந்தும் கொண்டாட வேண்டியிருக்கிறது. காரணம் அன்றைய எழுத்துக்களின் ஆரம்பமே அவ்வளவு உச்சமாக இருந்திருக்கிறது. "ஔவையும் ஆண்டாளும் சொல்லாத எதையும் நாங்கள் இப்போது புதிதாகச் சொல்லிவிடவில்லை. அவர்களின் நீட்சிதான் நாங்கள். அதன் அச்சு பெண் படைப்பாளிகளான எங்களிடம் இருக்கிறது" என்கிறார் தமிழக எழுத்தாளர் தங்கபாண்டியன் தமிழச்சி. அப்படியான ஒரு நிலையில் வைத்துத்தான் நாம் புரட்சிக் கவிஞன் பாரதியையும் பார்க்க வேண்டும். பெண்ணியம் பேசவும், விடுதலைக்காக வாதிடவும், சாதி பேதத்தை, ஏற்றத் தாழ்வை முன்னின்று எதிர்க்கவும் முதலில் துணிந்தவன் அவனே. யாரும் முன்வராத, துணியாத காலத்தில் தீண்டாமை குறித்தும் பெண்ணிய விடுதலை வேட்கைகொண்டும் தன் எழுத்துக்களால் முன்னின்று முழங்கியிருந்தவன் பாரதி. அவன் ஆரம்பித்து வைத்த மேற்போந்த உணர்வுகளே இன்றைய பெண்ணியம்பேசும் அனைவரும் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற கொள்கைகளும் கோட்பாடுகளுமாக இருக்கின்றன. காலத்துக்கு முன்பாக மாத்திரமன்றி இன்றையவர்களின் எழுத்துக்கு முன்பாகவும் பாரதியே சிரிக்கின்றான்.

*அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் அதை*
*அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்*
*வெந்து தணிந்தது காடு. தழல்*
*வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ...?*
*தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்.*

பாரதியின் வரிகளுக்கு அர்த்தங்கள் இன்றைக்கும் தேடப்படுகின்றன. அக்கினிக்குஞ்சு பற்றிய ஆராய்ச்சிகளும், பாரதி உருவகப்படுத்த முனைந்தது எது என்பது பற்றியும் முற்றுப்பெறாத ஆராய்ச்சிகள் இன்றைக்கும் உண்டு. விடுதலை வேட்கை என்று அதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்ட ஒரு பகுதியினருக்குக்கூட அது திருப்தியாக இருக்கவில்லை. இன்னும் விடைதேடுகின்றனர் 'அக்கினிக்குஞ்சு'க்கு. ஒரு ஆண் மகனாக இருந்துகொண்டு முதன் முதலில் பெண் சுதந்திரத்துக்காகக் குரல் கொடுத்தவன் என்ற பெருமையும் பாரதிக்கேயுரியது. பெண் விடு *தலை பற்றிப் பெண்கள் தான் பேசவேண்டும் என்* றில்லை. நீதியைப் பேசுவதற்கு ஆண், பெண் என்ற பேதம் தேவையற்றது. முதலில் பெண்களுக்காகக் கரம் நீட்டியதன் மூலம் பாரதி இன்றைய பெண் 'கூக்குரல்'களுக்கும் ஒரு கருத்தைச் கூறி விட்டுள்ளான். பெண்கள் ஒடுக்கப்படுவதற்கும் அவர்களுக்கான சுதந்திரங்கள் பறிக்கப்படுவதற்கும் முழு ஆண்களும் காரணமல்ல என்பதே அது. தன்னைப்போன்றே அதை எதிர்க்கும் ஏராளம் ஆண்கள் சமூகத்தில் இருக்கிறார்கள் என்பதற்கும் அவனே முன்னுதாரணம். பெண்கள் ஒடுக்கப்படுவதற்கும் ஒடுங்கிப்போவதற்கும் சில ஆண்கள் இருப்பதைப்போலவே சில பெண்களும் காரணமாகிறார்கள் என்பதை இன்றைய சமூக நிலைமைகளிலிருந்து நாமே நேரடியாக உணர்ந்து கொள்ள முடியும். சீதனம் எனும் கொடுமை நமது பெண்களைக் காவுகொண்டபடி வளர்கிறது. சீதனச் சந்தையில் தளபதியாகத் தொடர்ந்தும் சிம்மாசனத்திலேயே இருக்கிறார் "மாமி"யார்.

மாதர்க்கு வேண்டும் சுதந்திரம் என்றுரைக்கும் பாரதி ஆணும் பெண்ணும் சமமெனக் கொள்ளும் போதே இந்தச் சமூகம் நன்னிலையை அடையும் என்கிறான். தன்னினப் பெண்களின் எதிர்காலத்தில் கரிசனை கொண்டிருந்த பாரதி ஏராளம் ஏராளம் எதிர்பார்ப்புக்களுடனேயே மறைந்து போயிருக்கிறான். அதிலிருக்கும் ஆச்சரியம் என்னவெனில் அவன் கனவுகள் இன்றைக்கு மெல்ல மெல்ல நிஜமாகி வருவதே...

"...உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்,
ஓது பற்பல நூல்வகை கற்கவும்,
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்;
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்.
சாத்திரங்கள் பலபல கற்பராம்
சவுரியங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்
மூடக் கட்டுக்கள் யாவுந் தகர்ப்பராம்
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவு ளர்க்கினி தாகச் சமைப்பராம்
ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வராம்..."

என்பதாகப் பாரதி அன்று கண்ட கனவுகள் அனைத்தும் இன்றைக்கு நடந்தேறத் தொடங்கிவிட்டன.
பெண்கள் பல துறைகளிலும் கால்பதிக்கத் தொடங்கிவிட்டனர். ஆணுக்கு நிகராகச் சமூகத்தில் உயர்ந்து நிற்கின்றனர். சடுதியான வளர்ச்சியாகவும் அனைத்து சமூகங்களிலும் ஒருமித்த பரவலாகவும் இது இல்லாவிடினும் அன்றைய சமூக நிலையை *யும் இன்றைய சமூக நிலை* யையும் ஒப்பிட்டு நோக்கினால் பெண்களுடைய வளர்ச்சி தெளிவாகப் புரியும். ஆனாலோ பாரதி பெண்களோடுமட்டும்நின்றுவிடவில்லைதீண்டாமைக்காகவும் குரல் கொடுத்தான். அவன் பெண்களுக்காகக் கொடுத்த குரலுக்கு இன்றைக்கு ஓரளவாவது பயனிருப்பது உணரப்பட்டாலும் மனிதர்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வுகள் இன்னமும் அப்படியேதான் இருக்கின்றன. அல்லது அவை இன்னமும் உயர்ந்திருக்கின்றன என்றும் சொல்லலாம்.

"ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனும் இல்லை ஜாதியில்,
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தி யாவில் இல்லையே..."

என்று தொடர்கிறது அவனுடைய முழக்கம். ஆனால் இந்தியா மட்டுமன்றி தமிழர் தேசமான யாழ்ப்பாணத்திலும்கூட இந்தச் 'சாதி' எனும் தீண்



டாமை இன்றைக்கும் நீடிக்கத்தான் செய்கின்றது. அது பற்றிப் பேசுபவர்களும் எதிர்த்துக் குரல் கொடுப்பவர்களும் சாதியத்திலிருந்து கட்டுடைத்துக்கொள்ளாத அந்த விலங்குச் சமூகத்தால் நசுக்கப்பட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள். பத்திரிகையானாகவிருந்து சமூகத்தில் நல்ல பல கருத்துக்களை விதைக்க முனைந்த பாரதியின் தேசத்தில் அது இன்னமும் உச்சத்தில் இருப்பதாகவே தோன்றுகின்றது. சாதியம், இந்துத்துவத்துக்கெதிராக உரத்துக் குரல்கொடுத்த பெண் பத்திரிகையாளர் ஒருவர் அண்மையில்தான் அங்கு சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார். இப்படியாகச் சமூகத்தின் பல பேதமைகளையும் புடம்போட்டுக் காட்ட முனைந்த எழுத்துக்கள் பாரதிக்கே சொந்தமானவை.



என்றைக்குமே அவன் ஒரு புரட்சிக் கவிஞனே. அவனைப்போன்று நல்ல *தொர் உலகம் செய்ய* நாமும் இனிப் புறப்படுவோம்.

அஞ்சலி

இரா.வினோத்

"கோழையே..!
உன்னிடம் தோட்டாக்கள்
என்னிடம் அழியாத வார்த்தைகள்
எதற்கும் அஞ்ச மாட்டேன்.
நான் கவுரி லங்கேஷ்!"

# படுகொலை செய்யப்பட்ட பெண் பத்திரிகையாளர் கவுரி லங்கேஷ்



அண்மைக்காலமாகக் கவுரி லங்கேஷ் (19622017) பங்கேற்ற கூட்டங்களில் இவ்வாறு ஓங்கி முழங்கிவிட்டே, இந்துத்துவத்தைச் சரமாரியாக வெளுக்கத் தொடங்குவார்.

பெங்களூரில் நடக்கும் பெரும்பாலான முற்போக்கு அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும், மக்கள் பிரச்சினைகளுக்கான போராட்டங்களிலும் அழைக்கப்படாத விருந்தாளியாக அவரைப் பார்க்கலாம். சீராக வெட்டப்பட்ட நரைச் சிகை, ஒடிசலான தேகம், ஜோல்னாப் பையில் புத்தகங்கள், முகம் நிறையப் புன்னகையோடு ஒரு வயதான குழந்தையைப் போல இருப்பார்.

'தி இந்து'வில் தயாராகி வரும் சிறப்பு மலருக்கான கட்டுரைக்காக அண்ணன் சமஸ் நேற்று முன்தினம் மாலையில் பேசினார். அவர் சொன்ன தலைப்பைக் கேட்டதும், "இதற்கு மூத்த பத்திரிகையாளரும் இந்துத்துவ எதிர்ப்பாளருமான கவுரி லங்கேஷ் சரியாக இருப்பார். கர்நாடகத்தில் முக்கியமான அரசியல் விமர்சகராக இருக்கும் அவரிடம் கட்டுரை வாங்கலாம்" என்று சொன்னேன். அடுத்த சில நிமிடங்களில் கவுரி லங்கேஷ்க் கைபேசியில் அழைத்தேன். "அலுவலகத்தில் ஒரு கூட்டத்தில் இருக்கிறேன். நாம் விரிவாகப் பேசிய பிறகு, எழுதித் தருகிறேன்" என்றார் வழக்கமான நேசத்தோடு.

அடுத்த சில மணி நேரத்தில், "கவுரி லங்கேஷ் சுட்டுக் கொல்லப்பட்டார்" என்று ஊடகங்களில் வெளியான அவசர செய்தி என் இதயத்தைச் சுக்குநூறாக்கியது. அதிர்ச்சியில் படபடப்புடன் உடல் நடுக்கமும் உண்டானது. அம்மா வயதில் இருக்கும், கவுரி லங்கேஷ் மனசாட்சியைத் தூக்கி எறிந்துவிட்டு, ஈவிரக்கமில்லாமல் அவரது வீட்டு வாசலுக்கே வந்து சுட்டுக்கொன்றிருக்கிறார்கள். தன் வாழ்நாளில் பெரும் பகுதியை இந்துத்துவத்துக்கு எதிராகவும், மானுடத்தின் விடுதலைக்காகவும் சிந்தித்த, ஊர்ஊராய்ச் சென்று பேசிய, பக்கம் பக்கமாய் எழுதிக் குவித்த, எவருக்கும் அஞ்சாமல் செயல்பட்ட ஒரு திடமான பத்திரிகையாளரைச் சுட்டுக்கொன்றிருக்கிறார்க்ள்.

## சமூக மாற்றத்துக்கான கருவி

மறைந்த கன்னட எழுத்தாளரும், பத்திரிகையாளருமான பி. லங்கேஷ், கர்நாடக முற்போக்கு இயக்கத்தில் மிக முக்கியமான ஆளுமையாக இருந்தவர். பிராமணியமயமாக்கப்பட்ட மடங்களும், சாதி சனாதனச் சடங்குகளும் நிறைந்த கர்நாடகத்தில் தன் கவிதைகள், நாடகங்களின் மூலம் சீர்த்திருத்தக் கருத்துக்களை விதைத்தவர். சமூகநீதியை நிலைநாட்ட 'லங்கேஷ் பத்திரிகை' என்ற வார இதழைத் தொடங்கி , தீவிரமான அரசியல் கட்டுரைகளை எழுதியவர்.

தன் தந்தை பெரிய பத்திரிகை ஆசிரியராகவும் பதிப்பாளராகவும் திகழ்ந்தபோதும் அவரது நிழலில் கவுரி நிற்கவில்லை. டெல்லியில் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு, 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகையில் செய்தியாளராகப் பணிக்குச் சேர்ந்தார். சில ஆண்டுகள் 'சன்டே' இதழிலும் பணியாற்றிய பிறகு, பெங்களூர் திரும்பியதும் வேறு இதழ்களில் ஆசிரியர் குழுவில் பணியாற்றினார். தந்தையின் மறைவுக்குப் பின், 'லங்கேஷ் பத்திரிகை'யின் ஆசிரியராகப் பொறுப்பேற்ற கவுரி, தன் தந்தையைப் போலவே முற்போக்குக் கருத்துக்களுக்கு முன்னுரிமை அளித்தார். வாராவாரம் நிகழும் அரசியல், சமூகப் போக்குகளை அவதானித்து, அவற்றுள் மறைந்திருக்கும் உள் அரசியலை அம்பலப்படுத்தினார்.

இந்து மதத்தின் மனுதர்மத்தையும், ஏற்றத்தாழ்வை உருவாக்கிய சாதி அமைப்பையும், பெண்ணை அடிமையாக்கிய சடங்குகளையும் வீரியத்தோடு எதிர்த்தார். இதனால் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. விஸ்வ ஹிந்து பரிஷத் மட்டுமல்லாமல் காங்கிரஸ், மதச்சார்பற்ற ஜனதா தளம் என எல்லோரின் எதிர்ப்புக்கும் ஆளானார். 10க்கும் மேற்பட்ட அவதூறு வழக்குகளைச் சந்தித்த கவுரி லங்கேஷ், அண்மையில் பா.ஜ.க எம்.பி பிரஹலாத் ஜோஷி தொடுத்த வழக்கில் தண்டிக்கப்பட்டார். அப்போது, "மோடியின் பக்தர்கள் என்னைச் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் தள்ள முயற்சிக்கிறார்கள்' என்றார்.

இந்துத்துவ எதிர்ப்பு, சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, மூடநம்பிக்கை ஒழிப்பு உள்ளிட்டவற்றுக்காக முதல் ஆளாகக் கவுரி லங்கேஷ் களத்தில் நின்றார். பரபரப்புக்காக எதையோ எழுதித் தள்ளிவிட்டுப் போகாமல், உண்மையின் பக்கம் நின்று சம்பவங்களை அணுகினார். இதனால் பெங்களூரில் இருக்கும் பெரும்பாலான இளம் பத்திரிகையாளர்களுக்கு அவர் ஆதர்சமாக இருந்தார். 'பத்திரிகையாளர் மன்ற'த்துக்குள் அவர் நுழைந்தால், திரும்பவும் காரில் ஏறுவது வரை இளையோர் கூட்டம் அவரை மொய்க்கும்.

## நக்சலைட் மறுவாழ்வும், மூடநம்பிக்கைச் சட்டமும்

2000ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் கர்நாடகத்தில் 'பசுமை வேட்டை' என்ற பெயரில் நக்சலைட்டுகளை அழிப்பது சூடுபிடித்தது. பத்திரிகையாளர்கள் காட்டுக்குள் நுழையவும், நக்சலைட்களைப் பற்றி எழுதவும் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டன. குதிரேமுக், மங்களூர், சிக்மகளூர் பகுதியில் மலைகளில் வாழ்ந்த அப்பாவிப் பழங்குடிகளும் தலித்துக்களும் ஏழைகளும் சூறையாடப்பட்டனர்.

கெடுபிடிகளைத் தாண்டிக் காட்டுக்குள்போன கவுரி லங்கேஷ் அப்பாவிகளையும், நக்சலைட்களையும் பேட்டியெடுத்து வெளியிட்டார். அப்போது வெளியான சாகீத் ராஜன் உள்ளிட்டோரின் பேட்டிகள் அரச பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தின. இதையடுத்து கவுரி லங்கேஷ், கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி நக்சலைட் மறுவாழ்வுத் திட்டத்தை உருவாக்கினார். இதனால் மேற்குத் தொடர்ச்சி மலையில் இப்போது துப்பாக்கிகள் வெடிக்கும் சத்தம் நின்று, மக்கள் நிம்மதியாக வாழ்கிறார்கள்.

இதேபோல, எச்சில் இலைமீது தலித்துகள் உருளும் சடங்கு, அந்தரத்தில் முதுகில் அலகு குத்திக்கொண்டு தொங்குவது, நிர்வாண பூஜை, நரபலி போன்று கர்நாடகக் கோயில்களில் தொடரும் மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்கச் சட்டம் இயற்ற வேண்டும் என்று கவுரி லங்கேஷ் எழுதிவந்தார். இதற்காக முதல்வர் சித்தராமையாவை அடிக்கடி சந்தித்து வலியுறுத்திக்கொண்டே இருந்தார். சில மாதங்களுக்கு முன், 'காரின்மீது காக்கை அமர்ந்ததால், ஆட்சிக்கு ஆபத்து என்று நினைத்து சித்தராமையா காரை மாற்றிவிட்டார்' என்று ஊடகங்களில் செய்தி வெளியானது.

அன்று காலையே சித்தராமையாவின் வீட்டுக்கு நேராகச் சென்ற கவுரி லங்கேஷ், "மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம் கொண்டுவருவதாகச் சொன்ன நீங்களே இப்படிப் பண்ணலாமா?" என உரிமையோடு சண்டை போட்டார். உண்மையைக் கண்டறிந்த பிறகு, "சித்தராமையா காரை மாற்றவில்லை. ஏனென்றால் அவர் எடியூரப்பா இல்லை" என்று கட்டுரை எழுதினார்.

## கருத்துரிமைக்கான குரல்

நரேந்திர தபோல்கர், கோவிந்த் பன்சாரே, எம்.எம்.கல்புர்கி போன்றோர் சுட்டுக்கொல்லப்பட்டதைக் கண்டித்து நடந்த ஆர்ப்பாட்டத்தில் இந்துத்துவ அமைப்பினருக்கு எதிராகக் கவுரி லங்கேஷ் கர்ஜித்தார். மறைந்த கன்னட எழுத்தாளர் யு.ஆர். அனந்தமூர்த்தி கொலை மிரட்டலுக்கு ஆளானபோது, அவருக்குத் தைரியமூட்ட தினமும் வீட்டுக்குப் போய் வந்தார். 'மாதொருபாகன்' நாவலுக்காகப் பெருமாள் முருகனைச் சாதிவெறி அமைப்பினர் மன்னிப்புக் கேட்க வைத்தபோது, அவருக்காக கர்நாடகத்தில் கவுரி லங்கேஷ் குரல் கொடுத்தார். ரோஹித் வெமூலா சாம்பலாக்கப்பட்டபோது, 'குற்றவாளிகளைத் தண்டியுங்கள்' என்று துடித்தார்.

காவிரி விவகாரத்தில் பெங்களூரில் தமிழர்கள் தாக்கப்பட்டபோது, கன்னட அமைப்பினரைக் கண்டித்தார். கன்னடத் தொலைக்காட்சி அலைவரிசையில் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசிய நடிகர் பிரகாஷ் ராஜுக்கு எதிராகக் கன்னட ஊடகங்கள் கொந்தளித்தபோது, கவுரி லங்கேஷ் 'இடியட் பாக்ஸ்' என நெருப்பாகக் கொதித்தார். கடைசியாக, கொல்லப்படுவதற்கு முன்புகூட, ரொஹிங்கியா முஸ்லிம்களை இந்தியாவை விட்டு வெளியேற்றக் கூடாது என்று தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டார். இப்படி நாட்டின் எந்த மூலையில் அடக்குமுறை நடந்தாலும், அதற்கு எதிரான போர்க்குரலாகக் கவுரி லங்கேஷ் ஒலித்தார்.

## 'ஜெய் பீம்' முழக்கம்

மோடி ஆட்சிக்கு வந்த பிறகு, கவுரி லங்கேஷ் இன்னும் வேகத்தோடு இந்துத்துவத்தை எதிர்த்தார். இதனால் ஏராளமான கொலை மிரட்டல்களுக்கும் பாலியல் மிரட்டல்களுக்கும் ஆளானார். 'காந்தியைப்போல, கல்புர்கியைப்போல என்னைக் கொன்றாலும், எனது பணியை நிறுத்த மாட்டேன்.ற 'நாளை நடக்கக் கூடியது இன்றே நடக்கட்டும். இன்று நடக்கக் கூடியது, இப்போதே நடக்கட்டும். இங்கே யாரைக் கண்டு அச்சம்?" என்ற பசவண்ணரின் வசனத்தைக் கூறி, பதிலடி கொடுத்தார் கவுரி லங்கேஷ். இந்துத்துவ அமைப்புகளுக்கு எதிராக வெடித்துக் கிளம்பிய ரோஹித் வெமூலாவைக் கவுரி லங்கேஷ் ஆச்சரியத்துடன் பார்த்தார். மோடியின் பக்தர்களிடமிருந்து இளைஞர்களாலே இந்தியாவைக் காப்பாற்ற முடியும் என நம்பினார். ஜே.என்.யு. மாணவர் தலைவர் கன்னையா குமார், குஜராத் உனா தலித் போராட்ட ஒருங்கிணைப்பாளர் ஜிக்னேஷ் மேவானி, ஜெய் பீம் ஆர்மி சந்திரசேகர் ஆகியோரைத் தனது சொந்தப் பிள்ளைகளாகவே பார்த்தார். அனைவருக்கும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் வலியுறுத்தும் புரட்சியாளர் அம்பேத்கரின் 'ஜெய் பீம் கோஷமே' பன்முக இந்தியாவை மீட்டெடுக்கும் என முழங்கிக்கொண்டே இருந்தார். அந்தக் குரல் இப்போது, "நேற்று நான் கல்புர்கி, இன்று நான் கவுரி லங்கேஷ்" என திக்கெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

நன்றி - தி ஹிந்து




# உயிர் குடிக்கும் இணையத் திமிங்கிலம்

சிறுவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள் என அனைவருமே தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பங்களில் மூழ்கிப்போயிருக்கின்ற இந்தக் காலப்பகுதியில் தான் உலகை உலுக்கிக்கொண்டிருக்கின்றது நீலத் திமிங்கில விளையாட்டு. ரஷ்யாவைச் சேர்ந்த ஒருவரால் இந்த விளையாட்டு உருவாக்கப்பட்டு இருக்கின்றது.

தகாத சில செயல்களைச் செய்ததற்காக 2013ஆம் ஆண்டு பல்கலைக்கழகப் படிப்பிலிருந்து இடைநிறுத்தப்பட்ட உளவியல் மாணவன் பிலிப் புடெக்கின் என்பவராலே இந்தக் கொலை விளையாட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. சமூகத்துக்குப் பயன் இல்லாதவர்களை அழிப்பதற்கான விளையாட்டு இது என்று இதை உருவாக்கியதற்கு அவர் காரணம் கூறுகின்றார். முற்று முழுதாகச் சிறுவர்களை இலக்கு வைத்தே இது உருவாக்கப்பட்டிருக்கிறது.

## கொண்டு நடத்துகிறார் கொலையாளி

இந்த விளையாட்டின் அமைப்பானது இந்த விளையாட்டை நிர்வகிப்பவருக்கும் விளையாடுபவருக்குமான உறவு சார்ந்ததாகவே இருக்கிறது. அதாவது இணையவழித் தொடர்புடன் விளையாடுபவரை விளையாட்டை நிர்வகிப்பவர் வழிநடத்தத் தலைப்படுகிறார். விளையாட்டை நிர்வகிப்பவர் நாளுக்கு ஒரு செயல் வீதம் 50 நாள்கள் வரை விளையாடுபவருக்கு வழங்குவார். விளையாடுபவர் விளையாட்டை நிர்வகிப்பவர் சொல்லும் வேலையைச் செய்து முடித்தபின் அதை உறுதிப்படுத்தும் வகையில் அந்தச் செயலை ஒளிப்படம் எடுத்து விளையாட்டை நிர்வகிப்பவருக்கு அனுப்பவேண்டும். அதற்கடுத்தே அவர் விளையாட்டின் அடுத்த படிநிலைக்குச் செல்லலாம். இவையே இந்த விளையாட்டின் முக்கிய சட்டங்கள்.

## தகவல் திருட்டும் ஆபத்தான பணிப்புகளும்

இந்த விளையாட்டைக் அலைபேசியில் தரவிறக்கம் செய்தவுடன் அலைபேசி, அந்த விளையாட்டை நிர்வகிப்பவர்களால் ஊடுருவப்பட்டுவிடும். அதன்பின் இவர்களுடைய ஒளிப்படங்கள், குறுஞ்செய்திகள், அலைபேசி அழைப்புக்கள், ஒளிப்படக்கருவி என அனைத்தையும் கண்காணித்து வருவார்கள். விளையாடுபவர்கள் அந்த விளையாட்டிலிருந்து வெளியேற, இடைவிலக நினைத்தால் இவற்றை வைத்து மிரட்டுவார்கள். அதனால் அந்த விளையாட்டுக்குள் சென்றுவிட்டால் மீண்டு வரமுடியாது. குறிப்பாக இந்த விளையாட்டில் நாளுக்கொரு செயலைச் செய்யப் பணிக்கப்படும். அவற்றில் அதிகமானவை தன்னைத்தானே துன்புறுத்திக்கொள்ளும் விதமாகவே இருக்கும். ஆரம்பம் முதலே அதிகாலை 4.20 மணிக்கு எழும்பவேண்டும் என்ற சட்டத்தை உருவாக்கிவிடுவார்கள். அதன்பின் கையில் திமிங்கிலத்தை வரைய வேண்டும். அதுவும் கூரிய ஆயுதங்களால். பாரம் தூக்கியில் ஏறி நிற்க வேண்டும், வீட்டுக்கூரையில் ஏறி நிற்க வேண்டும், அவர்கள் அனுப்பும் திகில் காணொலிகளைத் தனியாக இருந்து பார்க்கவேண்டும். இப்படியான பல வேலைகளைச் செய்யச் சொல்லிய பின்னர், இறுதியாகத் தற்கொலை செய்துகொள்ளும்படி கட்டளை வரும். உயரமான கட்டத்தில் இருந்தே குதித்து தற்கொலை செய்ய வேண்டும். விளையாட்டிலிருக்கும் ஆர்வமேலீட்டால் சிறுவர்கள் அதையும் செய்யத் தலைப்பட்டுவிடுவார்கள்.

## தற்கொலையல்ல கொலைகள்

இந்த நீலத்திமிங்கில விளையாட்டால் 2015ஆம் ஆண்டில் ரஷ்யாவிலே முதலாவது தற்கொலை நடந்தேறியது. அதன் பின்னர் தற்செயலாக நடந்த சில தற்கொலைகளும் நீலத்திமிங்கில விளையாட்டுடன் தொடர்புபடுத்திக் கூறப்பட்டன. 2017ஆம் ஆண்டில் பிரேசிலில் 10க்கு மேற்பட்ட பதின்ம வயதுடையவர்கள் இந்த விளையாட்டில் இருந்து மீட்கப்பட்டவர்களாக இருக்கிறன்றனர். இதுவரை இந்தியா,



ரஷ்யா, சீனா உட்பட 19 நாடுகளில் இந்த விளையாட்டுத் தொடர்பாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த விளையாட்டால் பாதிக்கப்பட்ட அனைவரும் 15 தொடக்கம் 19 வரையான வயதுக்குட்பட்டவர்களே. குறிப்பாக பதின்ம வயதுடையவர்களே இந்த நீலத் திமிங்கிலத்தின் இலக்காக இருக்கிறார்கள்.

## நல்லவைகளை மாத்திரம் தேடிப்பெற வேண்டும்

இணையவழியில் பல சவால்களை எதிர்நோக்கிக் கொண்டிருப்பவர்கள் இந்தப் பதின்ம வயதினரே. குறிப்பாக இந்தியாவில் கடந்த 2மாதங்களில் மட்டும் 9க்கும் மேற்பட்ட தற்கொலைச் சம்பவங்கள் நடந்தேறி இருப்பதாகத் தெரிகிறது.

'சைபர்' பாதுகாப்பில் தென்னாசியாவிலேயே சிறிதாவது முன்னேறியி ருக்கின்ற இந்தியாவுக்கே இந்த நிலை என்றால், இப்படியான ஒரு விளையாட்டு இலங்கைக்குள் ஊடுருவினால், அதன் விளைவுகள் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாதவையாக இருக்கும். ஆகவே இணையப்பாதுகாப்பு தொடர்பாகவும் இணையத்தில் இருக்கும் தீயவைகளைத் தவிர்த்து நல்லவைகளை மாத்திரம் பயன்படுத்தக் கூடிய வல்லமையையும் எமது இளம் சமுதாயத்தினருக்கு உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

## நீலத்திமிங்கிலம் எதிர் இளஞ்சிவப்புத் திமிங்கிலம்

இந்த நீலத்திமிங்கிலத்துக்கு எதிராக சமூக ஆர்வலர்கள் இணையத்தில் இன்னொரு விளையாட்டையும் உருவாக்கி இருக்கிறார்கள். அதற்கு 'இளஞ்சிவப்புத் திமிங்கிலம்' எனப் பெயரிட்டுள்ளார்கள். இதை விளையாடுவதற்கு எந்தத் தகவலும் தேவையில்லை. ஒரு மின்னஞ்சல் மட்டும் இருந்தால் போதும்.

7 நாள்கள் மட்டுமே இதை விளையாட வேண்டும். எதையும் செய்ய வேண்டிய கட்டாயமோ, எதையும் எவருக்கும் அனுப்பவேண்டிய தேவையோ இல்லை.

இதில் வழங்கப்படும் அனைத்துப்பணிகளும் மகிழ்ச்சியாக அன்பைப் பரிமாறிக்கொள்வதற்கான பணிகளாகவே இருக்கின்றன. இதுவரை பேசாத ஒரு நண்பரிடம் பேசுதல், பிடித்த இனிப்புக்களைப் பரிசளித்தல் என மனதளவில் நீலத் திமிங்கலம் விளையாட்டுக்கு அடிமையான ஒருவரை வெளிக்கொண்டு வருவதற்கு ஏற்றவாறு இந்த இளஞ்சிவப்புத் திமிங்கில விளையாட்டை உருவாக்கியிருக்கின்றனர்.

ஆகவே இனி நீலத்திமிங்கிலத்தைப் பற்றி இணையத்தின் ஆண்டவரான கூகிளிடம் கேட்பதை விடுத்து 'பிங் திமிங்கிலம்' பற்றிக் கேளுங்கள். இணையத்தில் இருக்கும் தீயவைகளை விடுத்து நல்லவைகளைத் தேடுங்கள். உங்களையும் உங்களைச் சுற்றி இருப்பவர்களையும் வளருங்கள்.

## தொகுப்பு

அயக்கிரீவன்

# நூல் அறிமுகம்



**நூல்: காலம் தந்த வலிகள்**
**ஆசிரியர்: வ.க.பரமநாதன்**
**வெளியீடு : கலை இலக்கியக் கழகம்**

நிலம் என்பது ஒருவனுக்கு வழங்கப்பட்ட வரம். புலம்பெயர்தல் என்பது அவனுக்கு வழங்கப்பட்ட சாபம். ஒரு நுண்ணுயிர்கூட நிலத்தின் இயல்புக்கேற்றவாறே இசைவாக்கம் பெறுகிறது.

"நிலத்தில் கிடந்தமை கால் காட்டும்" என்றுதான் வள்ளுவன் சொன்னான். ஆயின் அபத்தமான சூழல்கள் ஏற்படும்போது நிலங்கடந்து புலஞ்செல்ல வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுவிடுகிறது. சைபீரிய நாரைகள் மறவன்புலவுக்கு வருகின்ற காரணங்கள் புலத்தின் அபத்தம் தந்த விளைவுதானே. அதுபோலத்தான் நம்மவரும் நிலம் தந்த அவலத்தால் நிலங்கடந்து நீண்டவழி போயினர். ஆங்காங்கே துணைகளோடும் குஞ்சுகளோடும் நிலை கொண்டனர். கூடு நிரந்தரமாயிற்று. ஆயின் மனம்?

யாரை நினைப்போம் யாம்,
யாரிடம் துயர் பகிர்வோம்..?

இந்த வலி புலம்பெயர்ந்த அனைவருக்குமான வலி. பெற்றோரை, உற்றோரை, ஊரை, கோயிலை, திருவிழாவை, பாடசாலையை, அறியா வயதில் உண்டான முதற்காதலை, அம்மா சுட்டுத் தந்த தோசையின் நெடியை, உரலில் இடித்த சம்பலின் ருசியை... அடடா எதை நினைக்கலாம், எதை விடலாம், முடியாது, அந்த நினைப்புக்கள் தந்த வலிகள் ஒவ்வொரு புலம்பெயர் பறவையின் மனத்துள்ளும்...

கணேசு பரமநாதன் டென்மார்க்கில் குடிகொண்டாலும் அவனால் காலம் தந்த வலிகளை மறக்க முடியவில்லை. நிலம், புலம் என ஊரோடு ஒத்தோடியபோதும் இந்த மனம் இருக்கிறதே...அது ஓய்வு கொள்ளவில்லை. அது அவனுள் உணர்வாகிக் கவிதையாகியது. அதன் காட்சிப் பதிவே இத்தொகுதி. தன் தனிமை மனத்து நினைவுகளில் அலைந்தபோதுதான் சுய நிலத்தின் நினைவுகள் நிலம்புகுந்த வலிகள் என்றும், தன் அடைக்கலமான நிலத்து அவலங்கள் புலம் புகுந்த வலிகள் என்றும், சமூகம் பற்றிய பொது நினைப்புக்கள் பொதுவில் புகுந்த வலிகள் என்றும் மூன்று பகுதிகளாக அவை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

(அணிந்துரை – பேராசிரியர் வ. மகேஸ்வரன்)

---



**நூல்: காலப்பழி**
**ஆசிரியர்: யாத்ரிகன்**
**வெளியீடு : வர்ணவி**
**விலை : 200**

யாத்ரிகனின் கவிதைகள் எளிமை மிக்கவை. வாழ்வும் அது தருகின்ற தீராத வலிகளுமே அவரின் கவிதைகளின் இயங்கு மையம். சமரசம் கொள்ள முடியாத வாழ்வில் இயல்பாக அமைந்துவிடும் சம்பவங்களும் அவரைப் பதட்டமடையச் செய்கின்றன. இதனால் அவரின் மன ஒழுங்கு குலைகிறது. தன்னோடு தர்க்கத்திலிருந்து ஆரம்பமாகும் அவரின் கவிதைகள், புற உலகு பற்றியதான எண்ணற்ற கேள்விகளுடன் இயங்குகின்றன.


யுத்தமும் நம்பிக்கையீனங்களும் சக மனிதர்களின் மீதான கழிவிரக்கமும் கோபமும் என யாவுமே ஒரு இயல்பான மனதைக் குழப்பிவிடக்கூடியன. யாத்ரிகனுக்கும் இதுவே நிகழ்ந்திருக்கிறது. தன்மயமான அக்கறைகளை அவர் பொதுவெளியில் அப்பட்டமாகத் திறந்து காட்டுகிறார். அவ் அக்கறைகள் ஏமாற்றங்களாலும் தோல்விகளாலும் நிரம்பப் பெற்றிருக்கின்றன. அவரது கவிதை மொழிமுதல் அதனை இயல்பான மொழிதலாக்கி விடுகின்றது. யாத்ரிகனின் கவிதை மொழியும் அதன் மொழிதல் முறையும் தமிழ்க்கவிதைச் சூழலுக்கு நன்கு பரிச்சயமானதுதான். நிலைபெற்றுவிட்டதான கவிதை சொல்லல் முறையை அவர் மீற விரும்பவில்லை. அவர் கவிதைகளில் அனுபவங்களைக் காவிச் செல்வதையே முதன்மையாகக் கொள்கிறார். அவர் காட்டும் அனுபவ வெளிப்பாடு பொதுமையான அனுபவ வெளிப்பாடாக வாசக மனதை இழுத்துச் செல்கின்றது.

(கவிஞர்: சித்தாந்தன்)

கட்டுரை

அ.அஜந்தன்

# பிள்ளைப் பருவங்களும் பொதுவான நடத்தைகளும்



**18** வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சிறுவர்கள் என்று வரையறுக்கப்படுகிறார்கள். கருவிலிருந்து பிள்ளை 18 வயதை எட்டும்வரை பெற்றோரின் பாதுகாப்பிலும், அரவணைப்பிலும் வாழ்வது அவசியம். இருந்தபோதிலும் வயது , வளர்ச்சிக்கு அமைவாக பிள்ளைகளின் நடத்தைகளும் ஆளுமையும் வளர்ந்து செல்லும். பொதுவாகப் பிள்ளை பிறந்தபின்பே நாம் அதன் வளர்ச்சியை அதிகம் பார்க்கின்றோம். அதற்காகப் பிள்ளை கருவில் இருக்கும்பொழுதே சில விடயங்களைக் கற்றுக்கொள்கிறது. அவர்களிடத்தே எவ்வாறு வளர்ச்சிமாற்றம் நிகழ்கிறது என்பதை நாம் அறிந்திருத்தல் அவசியம்.

பொதுவாகவே பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் நாளாந்த வளர்ச்சி மற்றும் நடத்தை மாற்றங்களைக் கண்டு மகிழ்வதுண்டு. இந்தப் பிள்ளைப் பருவங்களை பின்வருமாறு வகுக்கலாம். கர்ப்ப காலம், குழந்தைப் பருவம் (2 வயதுவரை), முன்பிள்ளைப் பருவம் (3–5 வயதுவரை) பாடசாலை செல்லும் பிள்ளைப் பருவம் (6 –12 வயதுவரை) மற்றும் கட்டிளமைப் பருவம் (13–18 வயதுவரை). மேற்குறிப்பட்ட பருவங்களின் பொதுவான நடத்தைகளை ஒவ்வொரு பருவ விருத்திக்கும் அமைவாகப் பிரித்தறிந்து கொள்வதன் மூலம் எம்மால் அவர்களுக்குப் பருவத்திற்கேற்ப கிடைக்க வேண்டிய உதவிகளை வழங்க முடியும்.

**கர்ப்ப காலம் (கரு)**


சுவை, வாசனை, நாற்றம், கேட்டல், பார்த்தல், வேதனை, உளத்தொடர்பாடல் போன்ற இன்னும்பல உணர்வுகளை உளவியல் ரீதியாக உணர்ந்துகொள்ளும் திறன் கருவுக்கு உண்டு. ஆதலால் கருத்தரித்திருக்கும் தருணங்களில் தாய்மாரையும் அவர்களது சூழலையும் அவதானமாகக் கையாளவேண்டும். வயிற்றிலிருக்கும்போது நல்ல புத்தகங்களைப் படிக்குமாறும் நல்ல நல்ல விடயங்களில் நாட்டமாயிருக்குமாறும் மூதாதையர்கள் வற்புறுத்தி வந்ததன் காரணம் இதுவே.

**குழந்தைப் பருவம் (2 வயது)**

புலனுறுப்புக்களை அதிகம் பயன்படுத்துவதன் மூலம், தொடுகை மூலம், கடிப்பதன் மூலம், நக்குவதன் மூலம், மணத்தல் மூலம், அவதானித்தல் மூலம், செவிமடுத்தல் மூலமாகத் தம்மைச் சூழவுள்ள உலகை அறிந்துகொள்வர். தம்மைச் சுற்றியுள்ள பொருள்களையும் அதன் பயன்பாட்டையும் அறிந்துகொள்வர். உதாரணமாக: கரண்டியைப் பயன்படுத்தல், கதிரையில் அமர்தல், பேனாவால் கிறுக்குதல் போன்றன. தன்னையும் பிற விடயங்களையும் வேறுபடுத்தி இனம்காணும் தன்மையும் ஏற்படும். எளிதான சொற்களை விள்ங்கிக்கொள்வர். அத்துடன் வளர்ச்சிக்கேற்ப சொற்கள், வாக்கியங்களை(மொழியை) விளங்கிக் கொள்வர். சைகைளினூடாகத் தமது தேவைகளைப் பிறருக்குத் தெரியப்படுத்தும் திறன் உருவாகும். பொருள்களின் பயன்பாட்டால் பெற்றுக்கொள்ளும் அனுபவத்தின்படி செயல்களில் ஈடுபடும் திறன் அதிகரிக்கும். சிந்தனைத் திறன் படிப்படியாக வளர்ச்சிபெறும் (தனது இலக்கை அடைவதற்கான சில சிந்தனையை வளர்ப்பர்). பொருள்களைத் தேடி எடுத்துக்கொள்ளும் திறன் வளர்ந்திருக்கும். முயன்று தவழும் முறையின் மூலமாகக் கற்றுக்கொள்ளும் திறனும் ஏற்படும்.

**முன்பிள்ளைப் பருவம் (3 தொடக்கம் 5 வயது வரை)**

சுயாதீனமாகச் செயற்பட முயல்வர். அடிப்படைத் தேவைகள் மற்றும் பாதுகாப்புக்காகப் பிறரின் அரவணைப்பையும் கவனத்தையும் நாடுவர். குழுவாகச் செயற்படுவர். பாதுகாப்பான உணர்வை ஏற்படுத்திக்கொள்வதற்கு உறுதியான, சீரான நடத்தையைப் பேணுவர் பெற்றோர்களை, சகோதரர்களை, சக பாடிகளை தமது உலகின் முக்கிய அங்கமாக ஏற்றுக்கொள்வர். ஒவ்வொரு பிள்ளையும் தமக்கான தனித்துவத்தை ஏற்படுத்திக்கொள்ளும். அவதானித்தலினூடாகத் தம்மைச் சூழ்ந்துள்ள சூழலை இனம்காண்பர். முனைப்போடு செயற்படுவர். பிறரைப் பார்த்து போலச் செய்வதில் ஆர்வம் காட்டுவர். பொருள்களைப் பயன்படுத்திச் செயற்படுவர். தம்மை அரவணைப்பவர்களின் கட்டளைகள் வேண்டுகோள்களுக்குத் துலங்கும் திறனை வளர்த்திருப்பர். அவர்கள் பல்வேறு அனுபவங்களைக் கொண்டிருப்பர்.



**பாடசாலை செல்லும் பிள்ளைப் பருவம் (6தொடக்கம் 12 வயது வரை)**

தன்னாதிக்கச் சிந்தனை படிப்படியாக விருத்தியடையும். சம வயதுக் குழுவினரால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முக்கியத்துவம் கொடுப்பர். சம வயதுக் குழுவினருடன் குழுவாகச் செயற்படுவர். எண்ணங்களையும், உணர்வுகளையும் வெளிப்படுத்தும் திறன் படிப்படியாக அதிகரிக்கும். சட்ட திட்டங்களைப் பின்பற்றும் திறனை வளர்ப்பர். பாராட்டை எதிர்பார்த்து முயற்சி செய்வர். போட்டிபோடும் தன்மையுண்டு. ஏனையோரின் கருத்துக்களை மதிக்கும் திறன் ஏற்படும். கவனம், ஞானம், கிரகித்தல் போன்ற ஆற்றல்கள் படிப்படியாக விருத்திபெறும். உடல் உறுப்புக்கள் பற்றியும் பாலியல் பற்றியும் கவனஞ் செலுத்த முற்படுவர். சம வயதுடைய ஒத்த பாலினருடன் பழக விரும்புவர்.

**கட்டிளமைப் பருவம் (13தொடக்கம் 18 வயது வரை)**

தாம் செய்யும்செயல்கள் அனைத்தையும் பிறர் பார்த்துக்கொண்டிருப்பதாக எண்ணுவர். பேச்சு, உடை, பாவனை போன்றவை தொடர்பாக அதிகம் அக்கறை கொள்வர். கனவுலகில் சஞ்சரிப்பர். 'பகற் கனவு' காண்பர். தம்மையும் தமது உலகில் வாழும் ஏனையோரையும், தமது கற்பனைக் கனவுலகில் வீரர்களாகவும், வீராங்கனைகளாகவும் அல்லது கதாநாயகர், கதாநாயகியாகவும் உருவகப்படுத்திக்கொள்வர். தமது தனித்துவம் பற்றி அதிக கவனஞ் செலுத்துவர். உடல் துரிதமாக வளரும் பருவமாதலால் தன்னைப் பற்றியும், தனது கடமை என்ன? என்பது பற்றியும் எண்ணிக்கொண்டிருப்பர். எதிர்காலம் பற்றியும், எதிர்காலச் செயற்பாடுபற்றியும் சிந்திப்பர். சுயாதீனமாகத் தீர்மானங்களை எடுப்பர். ஒத்த வயதுடையோரையும் தம்மால் மதிக்கப்படுவோரையும் பின்பற்றிப் போலச் செய்வர் (ஆடை அணிதல், தலைமுடியைச் சரி செய்தல்). பெற்றோர், ஆசிரியர், பெரியவர்களால் விதிக்கப்படும் கடப்பாடுகள், சட்ட திட்டங்களைப் பரிசீலித்துப்பார்ப்பர். ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றும் திறனுடன் இருப்பர். மேற்குறிப்பிட்ட பருவரீதியான நடத்தைகளைச் சாதாரணமாகவே பிள்ளைகளில் அவதானிக்கமுடியும். இருப்பினும் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களால் அவர்களுக்கு வழங்கப்படும் வயதுக்கேற்ற பயனுள்ள தூண்டல்கள் அவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றும். சிறப்புத் தேவையுடைய சிறுவர்கள், நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் தவறான கையாளுகைக்கு உட்படுத்தப்பட்ட சிறுவர்களிடையே இந்தப் பொதுவான நடத்தைகளில் சில இடர்பாடுகள் ஏற்படலாம். அவற்றைத் தகுந்த சமயத்தில் தகுந்த முறையில் நிவர்த்தி செய்வது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் கடமையாகும்.



கவிதை

# நான் தேடும் ஒற்றை வகிடு

சறோன்

கேசத்தில் எப்போதும்
மல்லிகை வாசம்

அசையும் பொழுது
தரைதட்டும் குழல்

மதம் தடையல்ல
தூய்மையான காதல்

சிரிப்பு சில்லறைச்
சிதறல்கள்
மொத்த அழகின் ஒரு
திருஷ்டிப்பொட்டு
அவள் உதட்டோர மச்சம்

அழகு நிறமல்ல
அவள் குணம்

என்னை
முழுதாய்ப் படித்தவள்
எனக்கே பாடம் சொல்பவள்
என்னைத் தாங்கும் ஒருமடி
இன்னொரு தாயாக
எப்போதும் வேண்டும்

பாசம் என்னறால் என்ன

அவளிடம்
கற்க வேண்டும்

நான் கேட்பது
அவள் இதயத்தில்
ஓரிடம்
அதற்காக கொடுப்பேன்
என் உயிரையே



# கருக்கலைப்பு

## கவலை தரும் சட்டவிரோதமும் கண்டனம் பெறும் சட்டபூர்வமும்

**கட்டுரை**

ஸுடோ ஸ்வாமி

கருக்கலைப்பு விவகாரம் மீண்டும் ஒரு முறை இலங்கையில் பேசுபொருளாகியிருக்கிறது. நடைமுறையிலுள்ள அரசமைப்பினை நீக்கி அல்லது திருத்தி புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தது போலவே கருக்கலைப்பு தொடர்பாகவும் நடைமுறையில் உள்ள சட்ட ஒழுங்குகளில் மாற்றங்கள் கொண்டுவர எத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறித்த மாற்றங்கள் பல்வேறு மார்க்கங்களில் நோக்கப்பட்டிருக்கின்றன.

**மகப்பேறு, பெண்நோயியல் மருத்துவ நிபுணரின் கருத்து**

இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டக்கோவையின் பிரகாரம், கருக்கலைப்பு சட்டவிரோத நடவடிக்கையாகும். ஆனால், இலங்கையில் ஒருநாளில் மாத்திரம் கிட்டத்தட்ட 650 கருக்கலைப்புச் சம்பவங்கள் இடம்பெறுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் சுகாதாரக் கல்விப் பணியகம் 2010ஆம் ஆண்டில் வெளிட்ட ஆய்வு முடிவொன்று சட்டவிரோதக் கருக்கலைப்பு மேற்கொள்ளப்படுகின்ற ஏறக்குறைய 3 ஆயிரம் நிலையங்கள் இலங்கையில் இனங்காணப்பட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறது. மகப்பேறு மற்றும் பெண்நோயியல் தொடர்பான மருத்துவ நிபுணர் மங்கள திசாநாயக்கா கடந்த வருடம் வெளியிட்ட கருத்துப்படி, இலங்கையில் நிகழும் தாய்மார் இறப்புக்களில் 10 தொடக்கம் 12 வீதமானவை பாதுகாப்பற்றதும் சட்டவிரோதமானதுமான கருக்கலைப்புகளினால் ஏற்படுகின்றன என்பது தெளிவாகிறது. கருக்கலைப்பு மற்றும் அதனைத் தொடரும் பிரச்சினைகள் தொடர்பான ஒழுங்கு முறையான புள்ளிவிபரங்கள் இலங்கையில் இல்லாதபோதிலும் கருக்கலைப்பில் ஈடுபடும் அரைவரசிக்கும் மேலான பெண்கள் நன்கு படித்தவர்கள் என்கிறார் அவர். அத்தோடு 70 வீதத்துக்கு மேற்பட்டவர்கள் முறையானதும் எளிமையானதுமான குடும்பத்திட்டமிடல் முறைகள் எதனையும் பயன்படுத்தியிருக்கவில்லை எனவும் அவர் கூறுகிறார்.

**கருக்கலைப்பின் பின்னான சிகிச்சைகள்**

சட்டவிரோதமான முறையில் கருக்கலைப்பில் ஈடுபடுவோர் கருக்கலைப்புக்குப் பின்னர் குருதிப் போக்கு மற்றும் தொற்றுக்களால் பாதிக்கப்படுமிடத்து அரச மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிகள் இருப்பதாகவும் மருத்துவ நிபுணர் மங்கள திசாநாயக்க வெளிப்படுத்தியிருக்கிறார். அவ்வேளையில் இவர்கள் கைது செய்யப்படவோ, தண்டனைக்குள்ளாக்கப்படவோ மாட்டார்கள் என்றும் அவர் குறிப்பிடு கிறார். அவருடைய கருத்துப்படி, கருக்கலைப்பு செய்யும் பெண்களில் 20 தொடக்கம் 50 வீதமானோர் குறுகிய மற்றும் நாட்பட்ட உடல்நிலைப் பாதிப்புக்களுக்கு உட்படுகின்றமை தெளிவாகிறது.

**கத்தோலிக்க திருச்சபையின் பிடிவாதம்**

இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த ஆயர்கள் கருக்கலைப்பு நியாயமானது என்பதைச் சட்டமாக்கும் செயற்பாட்டுக்குத் தமது எதிர்ப்பை வெளியிட்டிருக்கிறார்கள். எந்தவொரு சூழ்நிலையிலும் கருக்கலைப்பு சட்டபூர்வமாக்கப்படக்கூடாது என்ற தொனியில் அவர்கள் தமது நிலைப்பாட்டினை அறிவித்துள்ளார்கள். விலைமதிப்பற்ற மனித உயிரானது கருவாகியவுடனேயே ஆரம்பமாகிவிடுகிறது. அது புனிதமானது. அதை அழிப்பது மனிதக் கொலை என்கிறார்கள்.
இந்நிலையில், கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்குதல் தொடர்பில் அண்மையில் எழுந்த சலசலப்பை அடுத்துக் கருத்து வெளியிட்டிருக்கும் கொழும்பு மறைமாவட்டப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், சிலர் குறிப்பிடுவதைப்போல கருக்கலைப்பு மனித உரிமைக்குரிய ஒன்றல்ல என்று குறிப்பிட்டிருக்கிறார்.

**பாப்பரசர் நிகழ்த்திய தளர்வு!**

கருத்தடை மற்றும் கருக்கலைப்புத் தொடர்பாக இறுக்கமான போக்கினைக் கடைப்பிடித்து வந்த கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப்பீடம், கடந்த ஆண்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தளர்வு ஒன்றினை அறிவித்திருந்தது. அந்தத் தளர்வு எதுவெனில், தற்போதைய பாப்பரசரான பிரான்சிஸ் கடந்த நவம்பர் மாதம், கருக்கலைப்புச் செய்யும் பெண்களை மன்னிக்கும் அதிகாரத்தினைக் குருக்களுக்கு வழங்கியிருந்தார். எனினும் கருக்கலைப்பினை வத்திக்கான் 'கொடிய பாவம்' என்றே குறிப்பிடுகிறது.

**இரு சந்தர்ப்பங்களில் மாத்திரம் சட்டபூர்வ அனுமதி**

இலங்கை பிறப்புசார் விடயங்களுக்கான சங்கத்தின் இவ்வருட கல்வி அமர்வுகளின்போது கருக்கலைப்பினை வெறும் இரண்டு சந்தர்ப்பங்களில் மாத்திரம் பயன்படுத்தும் வகையில் அச்சங்கத்தினர் கருத்துக்களை முன்மொழிந்துள்ளதாகச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிக்கிறார். உற்பத்தியான கரு பாலியல் வன்புணர்வினால் பாதிக்கப்பட்ட பெண்ணுடையதாக இருக்குமிடத்திலும் மற்றும் உருவாகும் குழந்தை பிறவிக்குறைபாடுகளையுடையது எனக் கருவிலேயே கண்டுபிடிக்கப்படும் போதிலும் கருக்கலைப்புக்கு அனுமதி வழங்கும் வகையிலும் கருக்கலைப்பினை அனுமதிக்கும்படியான முன்மொழிவே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. குறித்த முன்மொழிவு தொடர்பான எழுத்துமூல ஆவணம் கிடைத்ததும் அது அமைச்சரவையின் தீர்மானத்துக்காக விடப்படும் என்கிறார் சுகாதார அமைச்சர். புதிய முன்மொழிவு சட்டமாகி நடைமுறைக்கு வருமிடத்து, குறித்த கருவை அழிப்பது அல்லது வாழ்வளிப்பது தொடர்பான தீர்மானத்தினை எடுப்பதற்கு அக்கருவைத் தாங்கும் தாய்க்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.



**முடிவு என்னாகும்...?**

கருக்கலைப்புத் தொடர்பாக எதிர்நோக்கப்படும் சட்டத் தளர்வை வரவேற்றிருக்கும் இலங்கை குடும்பத்திட்டச் சங்கம், குறித்த நகர்வு சார்ந்து பல்வேறு மட்டங்களில் தமது பங்களிப்புக்கள் இருந்ததாகக் குறிப்பிடுகிறது.
கருக்கலைப்பு அல்லது அதனுடைய மேம்பட்ட வடிவமான மருத்துவ ரீதியில் கர்ப்பத்தினை நிறுத்துதல் என்பது உலகளாவிய ரீதியில் சர்ச்சைக்குரிய விடயமாகவே இருந்து வருகிறது. குறித்த விடயத்தில் சமூக, கலாச்சார மற்றும் மத நம்பிக்கைகளின் பங்களிப்பு அழுத்தம் தரும் வகையில் அமைந்திருக்கிறது. பாதுகாப்பற்ற முறைகளில் மேற்கொள்ளப்படும் கருக்கலைப்பு முயற்சிகள் உயிருக்கு உலை வைப்பவையாக முடிவடையும் சாத்தியமும் இங்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டியிருக்கிறது. பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான போதிய அறிவின்மை, சமூக பொருளாதார நெருக்கடிகள், மாறி வரும் வாழ்க்கைச் சூழல் எனப் பல காரணிகளும் பெண்கள் மீது தாக்கம் செலுத்திவரும் நிலையில் உடல் மற்றும் சமூக ஆரோக்கியம் சார் விடயமாகச் சட்டபூர்வ கருக்கலைப்பு நோக்கப்படுகிறது. நடைமுறையில் உள்ள கருக்கலைப்புத் தொடர்பான தொன்மைச் சட்டங்கள் பாதுகாப்பற்ற கருக்கலைப்பு வீதத்தை அதிகரிக்கின்றவே அன்றி கருக்கலைப்பு வீதத்தினைக் குறைப்பவையாகத் தெரியவில்லை. பெண் பிரதிநிதிகளைக்குறைவாகக்கொண்டுள்ளநமது நாடாளுமன்றில் குறித்த சட்டமூலத்துக்கு என்ன நிகழ்கின்றது என்பதைப் பொறுத்தி ருந்துதான்பார்க்க வேண்டும்.



> உற்பத்தியான கரு பாலியல் வன்புணர்வினால் பாதிக்கப்பட்ட பெண்ணுடையதாக இருக்குமிடத்திலும் மற்றும் உருவாகும் குழந்தை பிறவிக்குறைபாடுகளையுடையது எனக் கருவிலேயே கண்டுபிடிக்கப்படும் போதிலும் கருக்கலைப்புக்கு அனுமதி வழங்கும் வகையிலும் கருக்கலைப்பினை அனுமதிக்கும்படியான முன்மொழிவே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

கட்டுரை

எம்.ஐ.முபாறக்



## ரணிலின் வார்த்தையால் அடங்கிப்போன மகிந்த

கடந்த வாரம் இறைபதம் எய்திய ஊவா மாகாண சபை உறுப்பினர் செனரத் அத்தநாயக்கவின் உடல் கொழும்பில் உள்ள மலர் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகத் தலைமை அமைச்சர் ரணில் அங்கு சென்றிருந்தார். அந்த நிகழ்வுக்கு மகிந்தவும் சென்றிருந்தார்.
இருவரும் சந்தித்து உரையாடிக்கொண்டிருந்தனர். அப்போது தேர்தல் கதையைத் தூக்கிப் போட்டார் மகிந்த.
"மக்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அதை நடத்தாமல் இரண்டு வருடங்களாக இழுத்தடிப்பட்டது ஜனநாயக மீறல் அல்லவா" என்றார் மகிந்த.
"நாம் என்ன வேண்டுமென்றா தேர்தலை நடத்தாமல் இருக்கின்றோம். இந்த இழுபறிக்கு என்ன காரணம்? யார் காரணம்? என்று உங்களுக்குத் தெரியும்தானே. தெரிந்துமா இப்படிப் பேசுகிறீர்கள்" என்றார் ரணில்.
அத்தோடு, மகிந்தவைப் பார்த்து ஒரு சிரிப்பும் சிரித்தார்.
அவ்வளவுதான். ஒரே வார்த்தையில் அமைதியானார் மகிந்த. அதன் பின் வேறு பேச்சுக்கு மாறிவிட்டார்.




# அரசியலில இதெல்லாம் சாதாரணமப்பா!

## மகிந்தவுக்கு ரணில் வைத்த ஆப்பு

தனது அரசியல் எதிரிகளைச் சத்தமின்றி நுணுக்கமாகக் கவிழ்ப்பதில் ரணில் வல்லவர் என்பதை எல்லோரும் அறிவர். அவர் அண்மையில் செய்த இவ்வாறான ஒரு வீரத்தனமே இது. இழுபறியில் இருந்த உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலம் இப்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. இதில் பலருக்குப் பல ஆப்புகள் வைக்கப்பட்டுள்ளன. முக்கியமான ஆப்பு மகிந்தவுக்குத்தான்.
சமுர்த்தி அதிகாரிகள் மற்றும் கிராம சேவகர்கள் போன்ற அரச அதிகாரிகள் அந்தத் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற சட்ட ஏற்பாடுதான் அந்த ஆப்பு.
சமுர்த்தி அதிகாரிகள் மற்றும் கிராம சேவகர்கள் வளம் என்பது மகிந்தவின் பலமாகும். கலைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளில் மாத்திரம் 300 சமுர்த்தி அதிகாரிகள் முன்னாள் உள்ளூராட்சி உறுப்பினர்களாக உள்ளனர். அதுபோக, எதிர்வரும் தேர்தலில் 500 சமுர்த்தி அதிகாரிகள் போட்டியிடுவதற்கும் திட்டமிட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் மகிந்தவின் ஆள்கள். இதை அறிந்துதான் ரணில் வைத்தார் ஆப்பு. இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதும் உடனடியாகக் கூட்டத்தைக்கூட்டிய மகிந்த இந்த விவகாரம் பற்றிப் பேசிக் கவலையடைந்தாராம்.




## எந்தப் புற்றில் எந்தப் பாம்போ?

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசு தயக்கம் காட்டி வருகின்றமைக்குத் தோல்விப் பயமே காரணம் என்று அரசியல் அரங்கில் கூறப்பட்டு வருவதில் உண்மை இல்லாமல் இல்லை. இந்தச் சபைகளில் அரசு ஏதாவது ஒரு காரியத்தைச் செய்ய முற்படுகின்றபோதுதான் அது தெரியவும் வருகின்றது.
நாடாளுமன்றில் ஒரு சட்டமூலத்தை அரசு நினைத்தவாறு நிறைவேற்றிக்கொள்ள முடியும். ஆனால் மாகாண சபைகளில் அது முடிவதில்லை. பெரும்பாலான மாகாண சபைகள் சுதந்திரக் கட்சியின் வசம் இருந்தாலும் அங்கு சட்டமூலங்கள் தோற்கடிக்கப்படுவதைக் காணலாம். மகிந்த அணியின் செல்வாக்கு அங்கு அதிகரித்து இருப்பதுதான் இதற்குக் கரணம்.
இதற்கு மகிந்த அணியினர் மாத்திரம் காரணமல்லர். மைத்திரி அணியினர் என்று சொல்லிக் கொண்டு மறைமுகமாக மகிந்தவுக்கு ஆதரவாகச் செயற்படுபவர்கள்தான் முக்கிய காரணம். அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்தும் யோசனையை உள்ளடக்கிய 20ஆவது திருத்தச் சட்டம் ஊவா மாகாண சபையில் தோற்கடிக்கப்பட்டமைக்கும் இவ்வாறான துரோகத்தனம்தான் காரணம்.
ஊவா மாகாண முதலமைச்சராக இருந்த ஹரின் பெர்னாண்டோ நாடாளுமன்றத்துக்குத் தெரிவானதும் அந்த இடத்துக்குச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சாமர சம்பத் தசாநாயக்க நியமிக்கப்பட்டார். அவர் மைத்திரியின் ஆளாகவே நியமிக்கப்பட்டார். ஆனால், அவர் மகிந்தவின் ஆள் என்பது பாவம் மைத்திரிக்குத் தெரியாமலேயே போய்விட்டது.
ஓரிரு வாரங்களுக்கு முன் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக மகிந்த அணியினர் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தனர். அந்தத் தீர்மானத்தைத் தயாரிக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்த மகிந்தவுக்கு அலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. அது மகிந்தவை மகிழ்ச்சிப்படுத்தியும் விட்டது. "சேர்! சக்சஸ். உங்கள் திட்டப்படியே செய்துவிட்டோம்."என்றது மறுமுனையில் பேசிய குரல். "அப்படியா? நன்றி.. நன்றி.. ரொம்ப ரொம்ப நன்றி..." என்று மகிழ்ச்சி கலந்த குரலில் உரத்துச் சத்தமிட்டார் மகிந்த.
மறுமுனையில் பேசியவர் வேறு யாருமல்லர். ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசாநாயக்க. மைத்திரியின் ஆள். அவர் சொன்ன தகவல் அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்தும் யோசனையை உள்ளடக்கிய 20ஆவது திருத்தச் சட்டம் ஊவா மாகாண சபையில் தோற்கடிக்கப்பட்டுவிட்டது என்பதே.

## இவர் மிகவும் நல்லவராம்...!

அரசியலுக்கு வருவதற்கு முன் ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்றில் உயர் பதவி வகித்தவர்தான் நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில. அவர் முழுநேர அரசியல்வாதியாக மாறியதும் நிதி மோசடிக் குற்றச்சாட்டுக்கு ஆளாகினார். அவர் பணியாற்றிய ஆஸ்திரேலிய நிறுவனத்திலேயே அவர் நிதியைக் கையாடினார் என்று அந்த நிறுவனத்தால் இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. ஆனால், இந்தக் குற்றச்சாட்டை திரும்ப வாங்குமாறு உதயகம்மன்பில சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் உரிமையாளருக்கு மிரட்டல் விடுத்தாராம். இந்த விடயம் வெளிவந்ததும் அதை மறுத்தார் கம்பன்பில. அது மட்டுமல்ல அவர், தான் இறுதியாக எப்போது சண்டை பிடித்தார்? எப்போது மிரட்டல் விடுத்தார்? என்பவற்றையும் கூறியுள்ளார்.
அவர் சிறுபிள்ளையாக இருக்கும்போது கொஞ்சம் சண்டைக்காரர்தானாம். ஆனால் ஐந்தாம் வகுப்பு வரைதான் அவரது சண்டித்தனம் நீடித்ததாம். ஐந்தாம் வகுப்புக்குப் பிறகு யாரையும் ஏசியதும் கிடையாதாம். அடித்ததும் கிடையாதாம். உள்ளத்தால் கூட தீங்கு நினைத்தது இல்லையாம். இப்படிப்பட்ட நானா இவர்களுக்கு மிரட்டல் விடுத்தேன் என்று கேள்வி எழுப்பியிருக்கிறார் உதயகம்மன்பில.




## எதற்கு இந்த விசப் பரீட்சை?




சுதந்திரக் கட்சியின் 66ஆவது மாநாட்டை நடத்துவது தொடர்பில் அரச தலைவர் மைத்திரி தலைமையில் பல தடைவைகள் கூடிப் பேசப்பட்டது. பிரமாண்டமாக, மகிந்த வியக்கும் அளவுக்குக் கூட்டத்தை நடத்த வேண்டும் என்பது மைத்திரி விசுவாசிகளின் விருப்பம். மே தினக் கூட்டத்தை மகிந்த பிரமாண்டமாக நடத்தியதால் சற்று கலங்கிப்போன மைத்திரி விசுவாசிகள், சுதந்திரக் கட்சியின் 66ஆவது மாநாட்டை அதைவிடவும் பிரமாண்டமாக நடத்தி மகிந்தவை ஆட்டங்காணச்செய்ய வேண்டும் என்று விரும்பினர்.
இந்த மாநாட்டை மகிந்தவைப்போல் காலிமுகத் திடலிலேயே நடத்தினால் பிரமாண்டமான ஒரு சனத் திரளை நாட்டுக்குக் காட்ட முடியும் என்று அந்த விசுவாசிகள் மைத்திரிக்கு ஆலோசனை கூறினராம்.
இதைக் கேட்டுச் சின்னதாக ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு எதுவும் பேசாமல் எழுந்து சென்றாராம் மைத்திரி.

*"எதற்கு இந்த விசப் பரீட்சை என்பதுதான் அந்தச் சிரிப்பின் அர்த்தம்"*

உலகம்

பிரகாஸ்

# ரவுண்ட் த வேள்ட்

## 'கிரீஸ்' பண்டிகை



ஏகப்பட்ட பாரம்பரியப் பண்டிகைகளைக் கொண்டது ஸ்பெய்ன். தக்காளிக் திருவிழா, காளை அடக்கும் திருவிழா ஆகியவற்றின் வரிசையில் 'கிரீஸ்' பண்டிகையும் அங்கு மிகவும் பிரபலமானது.

பண்டிகையில் கலந்துகொள்ளும் மக்கள் தமது உடல்முழுவதிலும் கிரீஸ் பூசிக்கொள்வது வழக்கம். அங்கு இந்த வருடத்துக்கான கிரீஸ் பண்டிகை அண்மையில் நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் ஒன்றுகூடி இந்தப் பண்டிகையைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

"என்னடா இது வில்லங்கமான விளையாட்டா இருக்கு..."

## இந்த வாரம் 'இர்மா'

கரீபியன் தீவுக் கூட்டத்தில் உள்ள சில தீவுகளையும், அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தையும் தாக்கியுள்ளது 'இர்மா' என்று பெயரிடப்பட்ட புயல். அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தைக் கடந்த வாரம் 'ஹார்வே' என்ற புயல் தாக்கியிருந்தது. இந்த நிலையில் இந்த வாரம் 'இர்மா' பெரும் அழிவைக் கொடுத்துவிட்டுப் போயுள்ளது. கரீபியன் தீவுக்கூட்டத்தில் உள்ள செயின்ட் மார்ட்டின், செயின்ட் பார்த்லெமி ஆகிய தீவுகளும் புளோரிடாவும் இர்மாவின் கோரத்துக்கு இலக்காகியுள்ளன. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 19 என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்துச் செல்லவும் வாய்ப்புள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.




"அடுத்த வாரம் எது வரப்போகுதோ...?"

## புதிய பகையாளிகள்...



றொஹிங்ய முஸ்லிம்களை மியன்மார் அரசு இனச் சுத்திகரிப்புச் செய்கின்ற விடயத்தில் மியன்மார் மற்றும் துருக்கி இடையே போர் மூளும் சாத்தியம் உள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பௌத்த பெரும்பான்மை நாடான மியன்மார் சிறுபான்மை இனத்தவர்களான றொஹிங்யர்களை இனச் சுத்திகரிப்புச் செய்கின்றது என்று காலாகாலமாகக் குற்றம் சுமத்தப்படுகிறது. கடந்த 25ஆம் திகதிக்குப் பின்னர் அதிகளவான றொஹிங்ய மக்கள் மியன்மார் இராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனர். கிட்டத்தட்ட ஆயிரம் பேர் அவ்வாறு கொல்லப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் றொஹிங்யர்கள் அகதிகளாக பங்களாதேஷில் தஞ்சமடைந்துள்ளனர். மியன்மாரின் இந்த அடக்குமுறைக்கு எதிராகத் துருக்கி அரசதலைவர் எர்டகன் இரண்டுமுறை குரல்கொடுத்துள்ளார். மியன்மார் அரசின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்த அவர் றொஹிங்யர்களுக்கு உதவத் தாம் தயார் என்றும் அறிவித்திருக்கிறார். மியன்மார் தனது இனச்சுத்திகரிப்பைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி வருகின்ற காரணத்தால் இந்த விவகாரத்தில் துருக்கிக்கும் மியன்மாருக்கும் இடையில் போர் வெடிக்கும் சாத்தியமுள்ளது என்று கருதப்படுகிறது.

"உயிர்களை மதிக்கும் எர்டகனுக்கு ஒரு சல்யூட்"

## மீண்டும் ஏவும் வடகொரியா

பன்னாட்டு சட்டதிட்டங்களை மீறி வடகொரியா அவ்வப்போது பல ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. அந்த நாடு அண்மையில் ஐதரசன் குண்டுச் சோதனையொன்றையும் மேற்கொண்டது. இந்தச் சோதனை நடத்தப்பட்ட வேளையில் 6.3 ரிச்டர் அளவுக்கு நில அதிர்வு உணரப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்பட்டது. இதற்காக வடகொரியாவுக்குக் கடும் கண்டனங்கள் குவிந்துவரும் நிலையில் அந்த நாடு மீண்டும் ஒரு ஏவுகணைச் சோதனையை நடத்த வாய்ப்புள்ளது என்று அறியவருகிறது. வடகொரியாவின் அயல்நாடும் எதிரி நாடுமான தென்கொரியா உலக நாடுகளுக்கு இந்த எச்சரிக்கையைப் பிறப்பித்துள்ளது.

இதையடுத்து வடகொரியாவுக்கு எதிரான நகர்வுகளைக் கடும்முனைப்புடன் ஆரம்பித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபை. அமெரிக்கா மேலும் பல பொருளாதாரத் தடைகளை வடகொரியா மீது விதிக்க வேண்டும் என்று தெரிவித்து அதற்காகச் சில திட்டங்களை வகுத்துக் கொடுத்துள்ளது. அது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை தற்போது பரிசீலித்து வருகிறது. எனினும் இந்த விடயங்களையெல்லாம் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் கண்டுகொள்ளவே இல்லையாம்.





"அந்தாள் ஒரு முடிவுகாணாம விடமாட்டார் போல"

## போராட்டங்கள் நடத்த தமிழகத்தில் தடை



இந்திய மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ள தடை தாண்டல் பரீட்சையான 'நீட்'டை எதிர்த்துப் போராட தமிழகத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது. 'நீட்' தேர்வுக்குத் தடை விதிக்க வேண்டும் என்று தெரிவித்து வழக்குத் தொடர்ந்த தமிழக மாணவி அனித்தா, தனது கோரிக்கை நிறைவுசெய்யப்படாத விரக்தியில் கடந்த முதலாம் திகதி தறவான முடிவெடுத்து தற்கொலை செய்திருந்தார். இதனால் தமிழகம் தனது இயல்பு நிலையை இழந்து கொதித்தது. 'நீட்'டுக்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தமிழகத்தில் போராட்டங்கள் பலவும் வெடித்தன. இந்தப் பின்னணியில்தான் 'நீட்' பரீட்சைக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டங்கள் நடத்த இந்திய உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

"ஜல்லிக்கட்டு நினைவுக்கு வந்துபோகுது போல..."

செய்திக்கோர்வை

அனார்கலி



# தென்கிழக்கு திசையில் இருந்து...

## "கள்வர்களுக்கு இடமளியேன்"

உள்ளூராட்சி மன்றத்தேர்தல்கள் விரைவில் நடைபெறவிருக்கின்றன. இந்த நிலையில் "நிந்தவூர் பிரதேசசபையை ஊழல் மோசடிகள் மூலம் உறுஞ்சிக் குடித்த கள்வர் கூட்டத்தை மீண்டும் உட்புக இடமளியேன்" எனப் பகிரங்கக் கூட்டமொன்றில் பதில் அமைச்சர் எம். பைஸால் காசிம் சூளுரைத்துள்ளார். கடந்தமுறை இந்தப் பிரதேச சபையின் நிர்வாகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்த பேர்வழிகளின் ஊழல் மோசடிகளை வரவிருக்கும் தேர்தல் பரப்புரைகளின்போது தான் அனைவருக்கும் தெரியப்படுத்தப் போவதாகவும் பதில் அமைச்சர் தெரிவித்துள்ளார். காலம் கடந்து தான் ஞானம் பிறக்கிறதோ. காரணம் என்னவாயிருக்கும்...?



## பெருநாள் ஒன்றுகூடல்

ஹஜ்ஜுப்பெருநாளை முன்னிட்டு 'காத்தான்குடி மீடியாபோரம்' ஏற்பாடு செய்த "முழுநிலவில் கிழக்கிலங்கை ஊடக உறவுகளின் ஒன்றுகூடல்' நிகழ்வு கடந்த 4ஆம் திகதி இரவு சிறப்பாக நடைபெற்றது.
மீடியா போரத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.நூர்தீன் தலைமையில் காத்தான்குடி 'நிஸ்மா பீச்பலஸ்' வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திருமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட செய்தியாளர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். அன்றைய தினம் மாலை 6மணி முதல் அதிகாலை வரை செய்தியாளர்கள் பங்கு கொண்ட பல கலை நிகழ்ச்சிகளும் கருத்தாடல்களும் இடம்பெற்றன.

## மாதம் ஒருமுறையாவது கூட்டம் நடத்துங்கள்

நிந்தவூர்ப் பிரதேச இணைப்புக் குழுக்கூட்டம் உரிய காலப்பகுதியில் நடத்தப்பட வேண்டுமென பிரதேச இணைப்புக் குழுவின் இணைத்தலைவரும், கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான எம்.எஸ்.உதுமாலெப்வை வலியுறுத்தியுள்ளார்.
கடந்த வாரம் நடைபெற்ற இந்தப் பிரதேச இணைப்புக்குழுக்கூட்டத்தில் இதனை வலியுறுத்திய இணைத்தலைவர் ஐந்து மாதங்களின் பின்னரே அன்றைய அந்தக் கூட்டம் இடம்பெறுவதாகவும் கவலை தெரிவித்தார்.
சமூக மட்டத்திலான அபிவிருத்தி மற்றும் பிரச்சினைகளை ஆராயும் இந்த முக்கிய கூட்டம் மாதாந்தம் நடத்தப்பட வேண்டுமெனவும் பிரதேச செயலாளரைக் கேட்டுக் கொண்டார். அவர் என்ன தான் செய்வது. அரசியல்வாதிகளல்லவா ஒத்துழைக்க வேண்டும்?

## 'ஒசுசல'க்கள் மக்களுக்கு உதவட்டும்

அம்பாறை மாவட்டத் தமிழ் பேசும் மக்களுக்கு இதுவரை காலமும் எட்டாக் கனியாக இருந்து வந்த அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் ஒசுசல மருந்து விற்பனை நிலையமொன்று நிந்தவூரில் கடந்த வாரம் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
பதில் சுகாதார அமைச்சர் எம்.பைஸால் காசிமின் முயற்சியால் இந்த ஒசுசல கிளை திறந்து வைக்கப்பட்டதாகவும் விரைவில் அக்கரைப்பற்று மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களிலும் ஒவ்வொரு ஒசுசல கிளைகளைத் திறப்பதற்குத் தாம் ஆவன செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மக்களுக்கு நியாயமான விலையில் மருந்துகளைக் கிடைக்கச் செய்யும் அரச மருந்துக் கடைகளைப் பெயருக்குத் திறந்து வைப்பது மாத்திரமன்றி மக்களின் அனைத்து மருந்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வசதிகளையும் அது சார்ந்த அறிவூட்டல்களையும் மக்களுக்கும் பயன்பாட்டளர்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்கவும், ஒசுசலவைப் பயன்படுத்திக் கொள்வது தொடர்பில் மக்களுக்கு அறிவூட்டிக்கொள்ளவும் அது சார்ந்தவர்கள் முன்வர வேண்டும்.






## அட்டாளைச்சேனை முட்டாள்களின் பிரதேசமா...?

"அட்டாளைச் சேனைப் பிரதேசத்துக்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி ஒன்றை நிச்சயம் வழங்குவேன் என்ற முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் பகிரங்க வாக்குறுதி காலத்துக்குக் காலம் நீண்டு கொண்டே செல்கின்றது. அவ்வப்போது வந்து அந்தவாக்குறுதியைப் புதுப்பித்துச் செல்வதையே அவர் வழக்கமாக்கிக் கொண்டுள்ளார்.
தலைவரின் வாக்குறுதியை அடுத்து அந்தத் தேசியப்பட்டியல் நியமனம் தமக்கே கிடைக்க வேண்டுமென அந்தப் பிரதேசத்தில் நான்கு முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்கள் இலவு காத்த கிளியாகளாகவுள்ளனர்.
பாவம் அண்மையிலும் அட்டாளைச் சேனையில் இடம்பெற்ற விழா ஒன்றில் கலந்து கொண்டதலைவூர் ஹக்கீம் மீண்டும் தேசியப் பட்டியல் வாக்குறுதியைப் புதுப்பித்துச் சென்றுள்ளார். இது அதற்காகக் காத்திருப்போரின் உள்ளக்குமுறலைக் கிளறி விட்டுள்ளது. இதில் ஒருவர் "அட்டாளைச்சேனை முட்டாள்களின் பிரதேசமா?" எனக் கேட்டு பொங்கி எழுந்திருக்கிறார்.
என்னதான் செய்வது தலைவரின் அரசியல் சாணக்கியத்திற்கு நிகர்தான் ஏது?

## இலவச மூக்குக் கண்ணாடி

சமூக வலுவூட்டல் அமைச்சி அனுசணையுடன் நிந்தவூர்ப்பிரதேசத்தைச் சேர்ந்த வறிய மக்களில் ஆயிரம் பேரைத் தெரிவு செய்து அவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.
நிந்தவூர் எமரேல்ட் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வில் அம்பாறைப் பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.டபிள்யூ.டி.சூரியாராச்சி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

## பதில் அமைச்சருக்கு புகழாரம்!

"மத்திய அரசின் சுகாதார அமைச்சராக நான் இருக்கின்ற போதிலும் கிழக்கு மாகாணத்துக்கான முழு அமைச்சராக எனது பதில் அமைச்சர் பைஸால் காசிமையே வரித்துக் கொண்டுள்ளேன்"
இவ்வாறு சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன நிந்தவூரில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கூறியுள்ளார்.
கிழக்கிலுள்ள மருத்துவமனைகள் சுகாதார நிறுவனங்கள் அனைத்தையும் அந்தப் பதில் அமைச்சரின் பொறுப்பிலேயே கொடுத்துள்ளதாகவும் அங்கு கூறிய அமைச்சர் ராஜித, சுறுசுறுப்பான ஆற்றல், அனுபவமிக்க மக்கள் சேவையாளராகவும் பதில் அமைச்சர் திகழ்வதாகவும் புகழாரம் சூட்டினார்.

**மனைவி:**
"கல்யாணத்துக்கு முன்னாடி சினிமா, பீச், ஹோட்டல் எல்லாம் அழைச்சிட்டு போனீங்க, கல்யாணத்துக்கு அப்புறம் ஏன் எங்கேயும் அழைச்சிட்டு போறதே இல்ல..."

**கணவன்:**
"தேர்தல் முடிஞ்சதுக்கப்புறம் எவனாவது பரப்புரைக்குப் போவானாடீ.. "




சார், என்னோட பொண்ணைக் காலைல இருந்து காணல்லை! முறைப்பாடு கொடுக்கணும்..

அதோ போறாரே.. அவர்தான் உங்க சம்பந்தியா இருக்கணும்.. முதல்ல அவர்கிட்ட போய் பேசுங்க...

என்ன சார் நீங்க.. பொண்ணக் காணலைன்னு சொல்றேன்.. நீங்க என்னடான்னா அவர்கிட்ட பேசச் சொல்றீங்க?

அவரோட பையனக் காணோம்னு இப்போதான் முறைப்பாடு கொடுத்துட்டு போறாரு.. அதான்.

# விரைவில் 'சாமி - 2'




## சினிமா

சிங்கம் படத்துக்குப் பிறகு, இயக்குநர் ஹரி இயக்கப் போகும் அடுத்த படத்தில் விக்ரம் நடிக்கவுள்ளார் என்ற அறிவிப்பு வெளிவந்தது. மேலும், இந்தப் படம் சாமி படத்தின் இரண்டாம் பாகம் எனவும் படக்குழுவின் தரப்பிலி ருந்து அறிவிப்பு வந்தது. அந்த நாளிலிருந்து படம் பற்றிய எதிர்பார்ப்பு அதிகமாகக் காணப்படுகிறது.

சாமி 2 படத்தில் விக்ரமுக்கு ஜோடியாக முதல் பாகத்தில் நடித்த த்ரிஷா மற்றும் கீர்த்தி சுரேஷ் நடிக்கின்றனர். மேலும், படத்தின் வில்லனாக முதல் பாகத்தில் இருந்த பெருமாள் பிச்சை கேரக்டரை விட பத்து மடங்கு மிரட்ட லாக சிம்ஹா நடிக்கிறார் என்று கூறப்பட்ட நிலையில், தற்போது இந்தப் படத்தின் படப்பிடிப்பு வடமாநிலங்களிலும் நடை பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்துக்கான இசையமைப்பாளராக ஹாரிஸ் ஜெயராஜ் இருப்பார் என்று நினைத்த நிலையில், படத்தில் தேவி ரீ பிரசாத் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். சாமி-2 படத்தின் படப்பிடிப்பு இந்த மாத இறுதியில் ஆரம்பமாகும் எனக் கூறப்படுகிறது.

twitter.com/jiyashrin22

அவமானத்திற்கு இரண்டு குணங்கள் உள்ளது கோழையை தற்கொலை செய்ய வைக்கிறது. வீரனை வாழ்ந்து காட்ட வைக்கிறது .

twitter.com/MLayan

ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை. முயற்சியில்லாத ஆசையாலும் பயனில்லை.

twitter.com/Kozhiyaar

காரியம் முடிந்ததும் கழட்டி விடுவான் மனிதன் என்பதை நன்கு உணர்ந்தவை நம் செருப்புக்களாகத்தான் இருக்கும்!!

twitter.com/Nivethee

பேரழுகையின் முடிவில் வெளியேறும் ஒரு பெருமூச்சுக்காற்றின் வழியே மனப் பாரமும் வெளியேறிவிடுகிறது!

மனைவி தோசை சுடும்போது வாக்குவாதம் செய்யாதீர்கள்....



பின்னர் அது கொத்து ரொட்டியைவிட மோசமாயிருக்கும்....



Blue + Tooth = Bluetooth

எல்லாப் பிரச்சினைகளும் கடந்து போவதில்லை...



சில பிரச்சினைகள் பழகிப் போகின்றன.....

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பெரியவர்களின் அறிவுரையை ஏற்று நடப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் புதிய உத்தி யால் இலாபம் சீராகும். பெண்கள் வீட்டுக்குத் தேவை யான பொருட்கள் வாங்குவர்.

**இடபம்:** வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். இலாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**மிதுனம்:** வீண் பேச்சைக் குறைப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவை. பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்ல நேரிடும்.

**கடகம்:** சாதனை நிகழ்த்தும் வாய்ப்பு தேடி வரும். தொழில் வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர்.

**சிங்கம்:** சமனதில் அன்பு நிறைந்திருக்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் பெருகும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர்.

**கன்னி:** நண்பர்களின் தொந்தரவுக்கு ஆளாக லாம். தொழில் வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**துலாம்:** மற்றவர் விஷயத்தில் தலையிட வேண்டாம். தொழில் வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தி னரின் சட்டதிட்டங்களை மதிப்பது நல்லது.

**விருச்சிகம்:** மனதில் இருந்த எண்ணம் செயல் வடிவம் பெறும். தொழில் வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவீர்கள். வருமானம் பெருகும்.

**தனுசு:** சிலரது பேச்சால் அதிருப்திக்கு ஆளா வீர்கள். தொழில் வியாபாரத்தில் உருவாகிற குளறுபடியை தாமதமின்றி சரி செய்வது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

**மகரம்:** வாழ்வில் இனிய அனுபவம் உண்டாகும். உறவினர்களிடம் நெருக்கம் அதிகரிக்கும். சமூகத்தில் மதிப்பு உயரும். தொழில் வியா பாரத்தில் இருந்த போட்டி குறையும்.

**கும்பம்:** அவசரப்பணியால் சிரமத்திற்கு ஆளா கலாம். பணியாளர்கள் சக ஊழியர்களுடன் கருத்துவேறுபாடு கொள்வர். உடல்நலனில் அக்கறை தேவை.

**மீனம்:** தாமதமான செயலில் முன்னேற்றம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் அபரி, மிதமான வளர்ச்சி உண்டாகும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர்.

## சுடோக்கு என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | | 5 | | 4 | | | 9 |
| | 3 | | | | | 7 | 8 | 4 |
| 9 | | 4 | 2 | | | | 5 | |
| | | 1 | 6 | | | | | 8 |
| | 9 | | | | | | 7 | |
| 7 | | | | | 2 | 9 | | |
| | 5 | | | | 1 | 8 | | |
| | | 3 | | | | | 9 | |
| 6 | | | 7 | | 5 | | 3 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 4 | 8 | 2 | 5 | 1 | 6 | 3 |
| 6 | 8 | 1 | 3 | 9 | 7 | 2 | 5 | 4 |
| 3 | 2 | 5 | 6 | 1 | 4 | 8 | 9 | 7 |
| 7 | 4 | 8 | 5 | 6 | 3 | 9 | 2 | 1 |
| 2 | 6 | 9 | 1 | 7 | 8 | 4 | 3 | 5 |
| 5 | 1 | 3 | 2 | 4 | 9 | 7 | 8 | 6 |
| 1 | 9 | 2 | 4 | 3 | 6 | 5 | 7 | 8 |
| 8 | 3 | 7 | 9 | 5 | 1 | 6 | 4 | 2 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 2 | 3 | 1 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.



# இது புதுசு

பெண்களுக்கான 'சாறி புறோச்' வகைகள் நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. இவை ஆயிரத்து 300ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# எண்ணெய் சருமத்தினரை பொலிவாக்கும் இயற்கை வழிகள்

எண்ணெய்த் தன்மையான சருமம் இருந்தால் அதிக வெப்பம் எண்ணெய்த் தன்மையை மேலும் அதிகரிக்கச் செய்து முக அழகை மாற்றிவிடும். அதனைப் போக்க பின்வரும் இயற்கை வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

வெள்ளரிக்காயை தினமும் காலை வேளையில் முகத்தில் தேய்த்து வர முகத்தில் அதிக எண்ணெய் வழிவது நீங்கும். வெள்ளரிச்சாற்றுடன், பால் பவுடர் கலந்து பூசினாலும் எண்ணெய் வழியாமல் முகம் பிரகாசமாக காணப்படும். இதை தொடர்ந்து ஒரு மாத காலமாவது பின்பற்ற வேண்டும்.



தக்காளிப் பழத்தை நன்கு பிழிந்து சாறாக எடுத்து முகத்தில் பூசி காய்ந்த பின், முகத்தை அலம்பும் போது எண்ணெய் வழிவது கட்டுப்படும். தக்காளியுடன், வெள்ளரிப்பழம் அல்லது ஓட்ஸ் சேர்த்து அரைத்து முகத்தில் பூசி 20 நிமிடங்கள் கழித்து கழுவலாம்.

பால் மற்றும் முட்டையின் வெள்ளைக்கருவுடன், கரட் துருவலை கலந்து முகத்தில் பூசினால் அதிகமாக எண்ணெய் வழிவது குறையும். எண்ணெய் தன்மையுடைய சருமத்தினர், அடிக்கடி குளிர்ந்த தண்ணீர் கொண்டு முகம் கழுவ வேண்டும். கடலைமாவைப் பயன்படுத்தலாம்.

எண்ணெய்த் தன்மையுடைய சருமம் உள்ளவர்கள் மோரை முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவினால் எண்ணெய் வழிவது குறையும். வெள்ளரிக்காய் சாறு, எலுமிச்சம் பழச்சாறு, சந்தனத் தூள், பாதாம் பவுடர், தயிர், உருளைக்கிழங்குச் சாறு ஆகியவற்றை சம அளவில் எடுத்து அவற்றை முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால், எண்ணெய் வழிவது குறையும்.

சோளத்தை நன்கு பொடியாக்கி தயிர் மற்றும் எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து கழுவினால் முகத்தின் எண்ணெய்ப் பசை நீங்கும். எண்ணெய்ப் பசை சருமத்தினர் வெயிலில் சென்றுவிட்டு வீட்டிற்கு வந்ததும் சிறிது தயிர், கடலைமாவு மற்றும் எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து கழுவினால் அதிகப்படியாக எண்ணெய் வழிவது குறைந்து முகம் பளபளக்கும்.

எலுமிச்சை சாறு, முட்டையின் வெள்ளைக்கரு, திராட்சை சாறு ஆகியவற்றை சம அளவு எடுத்துக் கொண்டு அவற்றை நன்றாக கலக்கி, முகத்தில் பூச வேண்டும். சிறிது நேரம் கழித்து முகத்தை தண்ணீரால் கழுவ வேண்டும்.

பப்பாளிக் கூழ், வேப்பிலை பொடி ஆகியவற்றை நன்றாகப் பசை போல் குழைத்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து வெதுவெதுப்பான தண்ணீரில் கழுவ வேண்டும். இவ்வாறு வாரம் இரண்டு முறை செய்தால், முகத்தில் வழியும் அதிகப்படியான எண்ணெய்த் தன்மை குறையும்.

# வாயுத் தொல்லையை குணமாக்கும் பூண்டு, எலுமிச்சைக் குடிநீர்

**தேவையான பொருள்கள் :**

பூண்டு - 3 பல்
எலுமிச்சைச் சாறு - 4 கரண்டி
தேன் - சிறிதளவு
தண்ணீர்-ஒருகோப்பை



**செய்முறை :**

பூண்டை நன்றாக அரைத்து வைக்கவும். அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைத்து அதில் தண்ணீர் ஊற்றி கொதிக்க ஆரம்பித்தவுடன் பூண்டை சேர்த்து கொதிக்க விடவும். நன்றாக கொதித்து பூண்டுச் சாறு இறங்கியதும் கலவையை வடிகட்டவும்.

வடிகட்டிய பூண்டுச் சாறுடன் எலுமிச்சைச் சாறு, தேன் கலந்து பருகலாம்.

# மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 60 | 80 | 70 | 60 |
| கத்தரி | 100 | 100 | 100 | 100 | 100 |
| மரவள்ளி | 80 | 80 | 80 | 60 | 80 |
| பயிற்றை | 120 | 80 | 100 | 100 | 140 |
| பாகல் | 140 | 150 | 200 | 180 | 160 |
| க.கிழங்கு | 100 | 120 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 130 | 120 | 130 | 150 | 120 |
| சி.வெங்காயம் | 200 | 200 | 180 | 240 | 220 |
| பூசணி | 30 | 50 | 40 | 40 | 40 |
| தக்காளி | 140 | 160 | 180 | 150 | 160 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 70 | 50 |
| கீரை | 40 | 40 | 40 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 300 | 300 | 300 | 300 | 250 |
| புடோல் | 80 | 120 | 80 | 100 | 80 |
| கோவா | 80 | 60 | 100 | 100 | 70 |
| வெண்டி | 70 | 60 | 50 | 80 | 40 |
| போஞ்சி | 140 | 150 | 200 | 160 | 140 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 | 120 |
| தேங்காய் | 60 | 75 | 80 | 90 | 70 |
| உ.கிழங்கு | 120 | 120 | 120 | 120 | 100 |
| தேசிக்காய் | 200 | 250 | 300 | 180 | 300 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 120 | 220 | 160 | 120 | 120 |
| கரட் | 100 | 160 | 200 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 80 | 20 | 40 |


# இறைச்சி சமைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை

இறைச்சி சமைக்கும் போது என்னென்ன விடயங்களை கவனிக்க வேண்டும். எப்படி சமைக்க வேண்டும்? எப்படிச் சாப்பிட வேண்டும் போன்ற தகவல்களை தெரிந்து கொள்ளுதல் நன்று.

இறைச்சி உணவுகளை எடுத்துக் கொள்ளும் போது குழம்பு வடிவத்தில் எடுப்பது தான் சிறந்தது.

கோழியை தோலுடன் சமைப்பதே சிறந்தது. நாட்டுக் கோழியின், தோலுக்கும் சதைக்கும் இடையிலான கொழுப்புப் படிவம் மிக மெல்லியதாக இருக்கும். இது சமைக்கும்போது தனியாகத் திரளாமல் குழம்புடன் கலந்துவிடும். சமிபாடு அடைவதில் பிரச்சினை தராது. கொழுப்பு உடலுக்கு நேரடியாக ஊக்கம் தருவதாகவே இருக்கும்.

அதிகளவில் வேகும் உணவுப் பொருள் தனது சத்துக்களை இழத்துவிடும். அவற்றை உண்ணும் போது சமிபாடு தொடர்பான செயல்நிலை தாமதமடையும். இறைச்சியை சமைக்கும் மண் சட்டியைத் தேர்வு செய்வது நல்லது. மண் சட்டியில் சமைக்கும் போது, அடுப்பின் வெப்பம் அடிப்பகுதியுடன் தங்கி விடுவதில்லை. பாத்திரம் முழுவதும் சீராகப் பரவி உணவுப் பொருளை ஒரே சீராக வேக வைக்கிறது.



எந்த இறைச்சியாக இருந்தாலும் அதன் குருதியை நீக்கி விட்டுச் சமைப்பதே உடலுக்கு நன்மை தரும். இதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகிறது அதில் முக்கியமானது, இறந்தவுடன் குருதியில் உள்ள கலங்கள் உடனடியாக அழுகத் தொடங்கிவிடும். ஆக, நீங்கள் வாங்கும் கறி உடனடியானதா என்பதை அதிலிருக்கும் குருதியை வைத்தே கண்டுபிடிக்கலாம். நல்ல உடல்நலத்துடன் இருக்கும் ஆட்டை வெட்டப்படும் போது அதிலிருந்து குருதி முழுவதும் வடிந்துவிடும். இறைச்சியில் குருதிஇருக்காது.

அதிக அசைவுகள் உள்ள தசைகள் கடினமானதாக இருக்கும். நெஞ்சுப்பகுதி மற்றும் முதுகுப்பகுதி தசைகள் மென்மையானதாக இருக்கும் என்பதால் அவற்றை வாங்கலாம்.

# கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 400 | 600 | 200 |
| கணவாய் | 600 | 600 | 800 | 1000 |
| பாரை | 500 | 500 | 700 | 800 |
| சுறா | 500 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 400 | 500 | 400 |
| விளை | 600 | 400 | 500 | 700 |
| முரல் | 350 | 350 | 450 | 400 |
| கும்பிளா | 300 | 300 | 400 | – |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஓரா | 300 | 300 | 500 | 300 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 150 | 400 | – |
| சூடை | 150 | 100 | 200 | 200 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 250 |
| திருக்கை | 250 | 200 | 400 | 200 |
| மதனம் | 200 | 150 | 250 | 700 |
| கொய் | 150 | 70 | 80 | 100 |
| பாலை | 200 | 200 | 500 | 300 |
| வாளை | 250 | 200 | 400 | 300 |

C M Y K

# தென்னையை நட்டால்...

*(28ஆம் பக்கத் தொடர்ச்சி)*

வெளிநாட்டுக்கு அனுப்பினன். இப்ப அவைக்கு இஞ்ச வர மனமில்லை. ரெண்டுபேரும் கலியாணம் கட்டிப் பிள்ளையளோட சந்தோசமாய் இருக்கினம். தகப்பன் செல்லடிபட்டுப் பிள்ளைகள் சின்ன வயசாக இருக்கும்போதே போய்ச்சேந்திட்டார். பிள்ளையளை வளர்க்கப் படாதபாடுபட்டன். கூலித்தொழிலுக்குக்கூடப் போனன். அப்ப என் உடம்பிலை தெம்பு இருந்திச்சு. கஸ்ரப்பட்டு படிப்பிச்சு விட்டன். அதுக்குப் பலன் கிடைச்ச மாதிரிப் பிள்ளையள் படிச்சு நல்ல நிலைக்கு வந்திட்டினம். நாட்டுப் பிரச்சினைக்குப் பயந்து தான் மாமனவையின் உதவியுடன் வெளிநாடு அனுப்பி வைச்சன். இப்பதான் கடன் எல்லாம் கட்டி முடிஞ்சுது. ஆனால் அவர்கள் தங்கள் பிள்ளையளின்ர படிப்பு என்று காரணம் காட்டி இஞ்ச வர விரும்பினமில்லை. இந்தக் கிழவியைப் பார்க்க அவைக்கு விருப்பமில்லையோ என்னவோ? அவர்களைப் பார்க்கவேணும் எண்டு என்ர மனசு துடிக்குது" என்று கதறி அழுதாள். தமிழ் சிலையானாள்.

"அடுத்த தை மாதம் வருவதாகப் பேர்த்தி சொன்னாள். இப்படித்தான் போன வருசமும் சொன்னவை. இன்னும் ரெண்டு மாதங் கிடக்கு. வருவினமோ? இல்லையோ? தெரியாது. போனில பேரப் பிள்ளையளின்ர குரலை மட்டும் தான் கேட்டிருக்கிறன். எனக்கு இப்ப இருக்கிற ஒரு ஆறுதல் நீ தான். எனக்குக் கடவுள் நம்பிக்கை அதிகம் அதாலை தான் உன் வடிவிலை எனக்கு அவர் ஆறுதலைக் கொடுத்திருக்கிறார் என நினைக்கிறன். பணம், பொருள் இருந்தென்ன பாசம் எண்டது எல்லோருக்கும் கிடைக்காது என்ன" ? புலம்பி முடித்தாள் பார்வதியம்மா.

" பாட்டி கவலைப் படாதைங்கோ. உங்கட பேரப் பிள்ளையள் இந்த முறை கண்டிப்பா வருவினம். சும்மா மனசைப்போட்டுக் குழப்பாதையுங்கோ!" என்று ஆறுதல் கூறினாள் தமிழ்.

"அதுகள் ஒருக்கா வந்தால், அதுகளைப் பார்த்திட்டுச் சந்தோசமாய்ப் போய்ச் சேந்திடுவன். என்னாலை ஒருத்தருக்கும் தொல்லையிருக்காது." என்றாள் பாட்டி "ஏன் பாட்டி உங்களை தொல்லை என்று ஆர் சொன்னது? சொந்தங்களைக் கஸ்ரப்படுத்தக்கூடாதெண்டு இங்கை வந்திருக்கறீங்கள் சும்மா மனப் போட்டுக் குழப்பாமல் இருங்கோ பாட்டி நானும் ஒரு பேத்தி தானே" எனக் கூறியபடி பாட்டியின் மடியில் தலை சாய்த்தாள்.

மாலையானதும் தனது வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்ற தமிழின் மனதில் கேள்விகள் எழுந்தன. என்ன பிள்ளைகள் இவர்கள்! பாட்டிக்குப் பிள்ளைகள் மீதுள்ள பாசம் ஏன் அவர்களுக்கு இல்லாமல் போனது? உறவுகள் எல்லாம் இப்படித்தானா? தன் தாயிடம் நடந்தவற்றைக் கூறினாள்.

தமிழ், தாய்க்கு ஒரேயொரு பிள்ளை. தந்தை வெளிநாட்டில் இருக்கிறார். அவளது தாத்தா தான் அவர்களுக்குத் துணையாக இருக்கிறார்.

தமிழ் வீட்டில் மட்டுமல்ல அந்த ஊருக்கே செல்லப்பிள்ளை. எல்லோருடனும் பாசமாகப் பழகுவாள். அவளது பெயர் தமிழரசி அவளது முழுப் பெயரைப் பாடசாலையில் மட்டுமே பயன்படுத்துவர். அவள் க.பொ.த உயர்தரப் பரீட்சை எடுத்து விட்டுப் பெறுபேறுக்காக காத்திருக்கிறாள். தற்போது கணினி, ஆங்கிலம் கற்று வருகிறாள். கிடைக்கும் நேரங்களில் அவளால் பார்வதியம்மாவைப் பார்க்க முடிகிறது. தனது பாட்டி இருந்தால் எப்படிப் பார்த்துக் கொள்ளுவாளோ அப்படியே பார்வதியம்மாவையும் அவள் கவனிக்கிறாள். ஆனால் பார்வதியம்மாவின் குடும்பப் பின்னணி தெரிந்த பின் அவளுக்கு அவரின் பிள்ளைகள் மீது கோபம் எழுந்தது. இப்படியும் பிள்ளைகளா? எந்தவொரு பிள்ளைக்கும் தகப்பனை விடத் தாய் மீது தானே அதிக அக்கறை, பாசம் இருக்கும். அதுவும் தகப்பன் இறந்துபோக வியர்வை சிந்தி உழைத்துப் படிக்க வைத்து ஆளாக்கி விட்ட தாய்க்கு இப்படிச் செய்வது நியாயமா? ஒரு தடவை வந்து அவரைப் பார்த்து விட்டுப் போனால் தான் என்ன? மனம் வெதும்பினாள்.

இப்படியே இரண்டு மாதங்கள் ஓடி தை பிறந்து விட்டது. பார்வதியம்மா இலவு காத்த கிளிபோல பிள்ளைகளின் வரவுக்காய்க் காத்திருந்தாள். அவளுக்கு தொலைபேசியில் "அம்மா உன்னட்ட வாறதுக்கு ஒழுங்குகள் செய்யிறம். ஒரு வாரத்தில சரியா வந்திடுவம்" என மகள் கூறினாள். செய்தி கேட்ட அந்த நிமிடம் தொடக்கம் வானத்தில் பறப்பதுபோல் உணர்ந்தாள் பார்வதியம்மா. அந்த விசயத்தைத் தமிழுக்குத் தொலைபேசியில் தெரிவித்தாள்.

"பாட்டி நான் சொன்னானல்லோ. உங்களைப் பார்க்கக் கட்டாயம் பிள்ளையள் வருவினம் எண்டு நம்பிக்கை வீண்போகேலை எனக்கு நல்ல சந்தோசம்' என்றாள் தமிழ்.

அன்றிரவு திடீரென இரண்டாவது தடவையாக நெஞ்சு வலி. வைத்தியசாலையில் பார்வதியம்மா அனுமதிக்கப்பட்டாள். அவருக்கு உதவியாக இல்லத்துப் பெண்ணொருத்தி இருந்தாள். விடயம் அறிந்த தமிழ் வைத்தியசாலையும் வீடுமாக மாறி மாறித் திரிந்தாள். பார்வதியம்மாவின் உடல்நிலை கவலைக்கிடமாக இருந்தது. பார்வதியம்மாவால் கதைக்கக் கூட முடியாத நிலை. தமிழைப் பார்த்து ஏதோ சொல்ல வாயெடுத்தாள் முடியவில்லை. கண்களில் இருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்தபடி "பாட்டி உங்களுக்கு ஒண்டும் நடக்காது எண்டு டொக்டர்மார் சொன்னவை. அழாதையுங்கோ நான் பக்கத்திலை இருக்கிறன்" என ஆறுதல் படுத்தினாள். தமிழின் மனதில் பாட்டிக்கு ஏதுவும் ஆயிடுமோ என்ற அச்ச உணர்வு மெல்லக் கிளம்பியது. வெளியே காட்டிக் கொள்ளாது பக்கத்தில் இருந்தாள். நான்கு நாள்கள் கழிந்தன. ஐந்தாம் நாள் பார்வதியம்மாவின் நிலை மோசமானது. செயற்கைச் சுவாசம் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தது. சுய நினைவை இழந்து அசைவின்றிக் கிடந்தார். தமிழ் "பாட்டி, பாட்டி" என அழைத்தபடி கைகளை வருடிக்கொண்டு அருகிருந்தாள். அவளது கடைசி மூச்சு இது என்று அறியாத தமிழ், பாட்டி தூங்குகிறாள் என எண்ணியபடி பக்கத்துக் கதிரையில் அமர்ந்தபோது டொக்டர் வந்து கூறிய செய்தி தமிழை அதிர வைத்தது. பாட்டி இறந்து விட்டார். தமிழ் கதறி அழுதாள்.

அப்போது யாரோ பாட்டியைப் பார்க்க வந்திருந்தனர். தமிழ் அழுகொண்டிருப்பதைப் பார்த்து யார்? என விசாரித்தனர். அவர்கள் தான் அவளது மகளும் பேரப் பிள்ளைகளும். இப்போது வந்து என்ன பயன்? உயிரோடு இருக்கும்போது அவள் எத்தனை தடவை கெஞ்சி அழுதாள். தன்னை ஒரு தடைவை வந்து தன்னைப் பார்த்து விட்டுப் போகும்படி. போன உயிர் திரும்பி வருமா? மகள் "அம்மா உன்னை உயிரோட பாக்க முடியேலையே" எனக் கதறினாள். அப்போது அவருடன் கூட இருந்தவர் இனி நீங்கள் அழுதாப்போல அம்மா என்ன எழும்பி வரப்போறாவா? என்றார். "எத்தனை தரம் பார்க்க ஆசையாய் இருக்கு வா என்று அவா கேட்டபோது அவவின் வார்த்தைகளுக்கு மதிப்பு கொடுக்கலையே" என நியாயத்தைக் கூறிக் கதறினாள் மகள். தமிழ் அவர்களது முகத்தைப் பார்க்கப் பிடிக்காதவளாய் விலகியே நின்றாள்.

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 488

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | 6 | |
| | | ■ | 7 | | | | ■ |
| | ■ | 8 | | | | ■ | 9 |
| 10 | 11 | | ■ | | ■ | 12 | |
| ■ | 13 | | 14 | ■ | 15 | | |
| 16 | ■ | ■ | 17 | | | | ■ |
| | ■ | 18 | | 19 | | ■ | 20 |
| 21 | | | ■ | ■ | ■ | 22 | |

அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................................................

கையொப்பம்:........................................................

**இடமிருந்து வலம்**

1. சிலம்பின் கதை கூறும் காப்பியம்
7. நடந்ததை அறிந்து கொள்ளும் வகையில் கிடைக்கும் சிறு ஆதாரம்
8. பரவாயில்லை வை என்ற ஏவல்
10. ஒன்று கூட
12. முகத்தில் (சீழ் உள்ள) சிறு கட்டி
13. பஞ்சபாண்டவர்களில் தருமரைச் சூதாடத் தூண்டுதல் கொடுத்தவர்
15. [illegible]
[illegible]
19. [illegible]
21. [illegible]

**மேலிருந்து கீழ்**

1. தனது உமிழ் நீரால் வலை பின்னும் ஓர் உயிரினம்
2. மனம் ஒன்றி ரசித்தல்
3. நடனத்தில் பயன்படுத்தப்படும் சொல்
4. பலமான
5. உலரவை என்ற ஏவல்
6. மேல்நாட்டு மதுபான வகையொன்று
8. அரிசி புடைக்க உதவுவது
9. காய்ந்த இலைகளை இப்படிச் சொல்வர்
11. சைவ உணவகங்களில் தாராளமாகக் கிடைப்பது
12. கனி
14. ஒரு கிரகம் (தலைகீழாக)
15. மதில் ஓரமாக வெட்டப்பட்டிருக்கும் கிடங்கு
16. சொண்டு
18. பழம்
20. ஊளையிடும் மிருகம்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 486 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) கவசவாகனம் (5)வழிபாடு (7)நாதம் (8)பொதி (9)முயல் (10)வடிய (11)பருக (12)கணி (13)ரகர் (14)பாகம் (15)தேன் (16)சலம் (18)முகாம் (19)உறு

**மேலிருந்து கீழ்**

(1)கவலை (2)வழி (3)சபாநாயகர் (4)வாடுதல் (6)வேதியன் (8)பொடி (9)முருகன் (10)வணிகம் (11)பரதேசி (12)கபாலம் (16) சகா (17) ஆறு

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.488**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர் (20.09.2017 ஆம் [illegible]) [illegible] வெற்றி பெறுவோரது விவரம் 24.09.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 486 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

செ.விசாகன்,
சாயீவாசா, அரசடிலேன், [illegible]

**2 ஆம் பரிசு**

[illegible]
[illegible] கைதடி.

**3 ஆம் பரிசு**

திருமதி சுகன்யா வினோதன்,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

**4 ஆம் பரிசு**

யாதவி விஜயகுமார்,
பழமுதிர்சோலை, ஏழாலை வடக்கு ஏழாலை.

**5 ஆம் பரிசு**

[illegible]

[illegible]
அ.லேரிங்குசன்,
இல. 41/2 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

ந.செல்வராணி,
சிவன் வீதி,
காரைநகர்.

வ.இரத்தினசிங்கம்,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில் போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 486 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

## மேடம்



சுக்கிரன், குரு, சந்திரனால் நன்மை உண்டாகும். பேச்சில் வசீகரம் அதிகரிக்கும். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தாய்வழி உறவினர் பாசமுடன் நடந்து கொள்வர். பிள்ளைகள் நற்செயல்களில் ஈடுபட்டு பெருமை சேர்ப்பர். ஆரோக்கியம் சீராகும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் ஆலோசனை மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தும். வெளியூர் பயணம் மூலம் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பால் பணவரவு அதிகரிக்கும். பெண்கள் மகிழ்ச்சிகரமான வாழ்வு நடத்துவர். மாணவர்களுக்கு படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.

## இடபம்



ராகு, புதன், சுக்கிரன் அளப்பரிய நன்மை தருவர். தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கும். புத்துணர்வுடன் அன்றாடப்பணிகளை நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். வீடு, வாகனத்தில் வளர்ச்சிப் பணி மேற்கொள்வீர்கள். பிள்ளைகள் படிப்பு, வேலை வாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். ஆரோக்கியம் பலம் பெறும். வெளியூர் பயணத்தில் உரிய பாதுகாப்பு மேற்கொள்வது அவசியம். மனைவியின் செயல்பாடு வளர்ச்சிக்கு துணை நிற்கும். தொழிலில் தங்களின் இனிய அணுகுமுறையால் லாபம் உயரும். பணியாளர்கள் பொறுப்புடன் செயல்பட்டு நற்பெயர் பெறுவர். பெண்கள் சேமிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

## மிதுனம்



பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். கடந்த கால உழைப்பிற்கான நற்பலன் கிடைக்கும். குடும்பத்தில் சுப விஷய பேச்சு நடக்கும். வாகனப் பயணத்தால் பராமரிப்புச் செலவு கூடும். பிள்ளைகள் விரும்பி கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள். வழக்கு, விவகாரத்தில் சுமுகத் தீர்வு கிடைக்கும். மனைவியின் பாசம் மனதில் நெகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகும். நிலுவைப் பணம் வசூலாகும். பணியாளர்கள் சுறுசுறுப்பாக பணியில் ஈடுபடுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் நல்ல தேர்ச்சி பெறுவர்.

## கடகம்



சுக்கிரன், சந்திரன் மட்டுமே ஓரளவு நன்மை வழங்குவர். நற்பண்பு நிறைந்தவர்களின் நட்பு கிடைக்கும். வாழ்வில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு உருவாகும். தம்பி, தங்கை எதிர்பார்ப்புடன் அணுகுவர். வாகனத்தில் பராமரிப்பு செலவு கூடும். பிள்ளைகளின் செயல்களை உன்னிப்பாக கவனித்து நல்வழியில் நடத்தவும். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவுகளைத் தவிர்க்கவும். மனைவி, உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பு தேவைப்படும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்ட திட்டம் தவறாமல் பின்பற்றுவது நல்லது. பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வேண்டாம். மாணவர்கள் படிப்புடன் விளையாட்டிலும் ஈடுபடுவர்.

## சிங்கம்



சுக்கிரன், கேது, சந்திரன் நற்பலன் தருவர். வாழ்வில் முன்னேற புதிய வழிகளைக் கண்டறிவீர்கள். நண்பரின் உதவி கிடைக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். பிள்ளைகள் சில விஷயங்களில் பிடிவாத குணத்துடன் செயல்படுவர். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். ஒவ்வாத உணவுகளை தவிர்க்கவும். மனைவி வழி சார்ந்த உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டியை மாற்று உபாயத்தால் சரி செய்வீர்கள். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பு மூலம் வருமானம் காண்பர். பெண்கள் தாய் வீட்டு உதவியை கேட்டுப் பெறுவர். மாணவர்களுக்கு படிப்பில் கூடுதல் கவனம் வேண்டும்.

## கன்னி



ராகு, சுக்கிரன், குரு, சனீஸ்வரர் அனுகூல அமர்வில் உள்ளனர். பணிகளில் உற்சாகம் நிறைந்திருக்கும். உறவினர் பாசத்துடன் சொந்தம் பாராட்டுவர். புதிய வீடு, வாகனம் வாங்கும் முயற்சி நிறைவேறும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். உடல்நலம் சீராக இருக்கும். மனைவியின் ஜாதக யோகம் அதிர்ஷ்ட பலன் தரும். தொழில், வியாபாரத்தில் புதியவர்களின் ஆதரவால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து நிர்வாகத்தினரின் பாராட்டு பெறுவர். அரசியல்வாதிகளுக்கு எதிர்ப்பு விலகி பதவி கிடைக்கும். பெண்கள் பணவசதிக்கேற்ப புத்தாடை, நகை வாங்குவர். மாணவர்கள் படிப்புடன் பொது அறிவிலும் மேம்படுவர்.

# வார ராசிபலன் உங்களுக்கு எப்படி?

## 10.09.2017 தொடக்கம் 16.09.2017 வரை

## துலாம்




சூரியன், புதன், செவ்வாய் ஆதாய பலன் தருவர். எவரிடமும் நிதானித்து பேசுவீர்கள். தம்பி, தங்கை ஓரளவு உதவுவர். வீடு, வாகனத்தில் விழிப்புடன் இருப்பது நல்லது. பிள்ளைகளின் நற்செயல்களுக்கு ஊக்கம் தருவீர்கள். சேமிப்பு பணம் வீட்டுச் செலவுக்கு பயன்படும். உடல்நலனில் அக்கறை தேவை. வம்பு, வழக்கில் ஓரளவு நல்ல முடிவு கிடைக்கும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் அளித்தால் குடும்ப ஒற்றுமை சீராகும். தொழில், வியாபாரத்தில் போட்டியால் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து பணிபுரிவது நல்லது. பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்களுக்கு படிப்பில் விடாமுயற்சி தேவை.

## விருச்சிகம்



சூரியன், புதன், கேது, சுக்கிரன் அளப்பரிய நற்பலன் தருவர். பொது நிகழ்ச்சிகளில் விருப்பமுடன் பங்கேற்பீர்கள். உடன்பிறந்தவர்கள் அன்பு பாராட்டுவர். வாகனப்பயணம் ஓரளவு நன்மை தரும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். இஷ்டதெய்வ அருளால் முக்கியமான செயல் நிறைவேறும். மனைவியின் செயல்பாட்டால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து பணவரவு கூடும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் முயற்சியுடன் படித்து தரத்தேர்ச்சி காண்பர்.

## தனுசு



குரு, சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். பொது இடங்களில் சூழல் உணர்ந்து செயல்படுவது நல்லது. எண்ணங்களில் புதுமையான கருத்து உருவாகும். குடும்பத்தில் விரைவில் சுப நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டாகும். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை அதிகரிக்கும். பிள்ளைகள் பெற்றோரின் சொல் கேட்டு நடப்பர். நண்பரிடம் கடனாக கொடுத்த பணம் கிடைக்கும். மனைவியின் கருத்து ஒற்றுமை குடும்பத்தில் மகிழ்ச்சியளிக்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறு மறைந்து லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர். பெண்களுக்கு தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.

## மகரம்



புதன், சனீஸ்வரரால் நன்மை ஏற்படும். தகுதியறிந்து பிறருக்கு வாக்குறுதி அளிப்பது நல்லது. நண்பரின் கருத்தை விமர்சிக்க வேண்டாம். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி தாமதமாக கிடைக்கும். பிள்ளைகள் படிப்பில் முன்னேற்றம் பெற விடாமுயற்சி தேவைப்படும். சொத்து பராமரிப்பில் கவனம் வேண்டும். சத்தான உணவு உண்பதால் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியிடம் விவாதம் செய்ய வேண்டாம். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கத் தாமதமாகலாம். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்தவும்.

## கும்பம்



ராகு, குரு, சந்திரனால் ஓரளவு நற்பலன் உண்டாகும். வாழ்வில் முன்னேற புதிய வாய்ப்பு கிடைக்கும். குடும்பத்திற்கான பணச்செலவு அதிகரிக்கும். வெளியூர் பயணத்தால் ஓரளவு நன்மை கிடைக்கும். பிள்ளைகள் பெற்றோர் சொல்லைக் கேட்காமல் பிடிவாத குணத்துடன் செயல்படுவர். சொத்து ஆவணம் பிறர் பொறுப்பில் தரக்கூடாது. விருந்து, விழாவில் அடிக்கடி பங்கேற்பீர்கள். மனைவியின் செயலால் குளறுபடி ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள இடையூறுகளை தாமதமின்றி சரி செய்யவும். பணியாளர்கள் பணிமாற்றத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பர். பெண்கள் பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்களுக்கு படிப்பில் விடாமுயற்சி தேவைப்படும்.

## மீனம்




பெரும்பான்மை கிரகங்கள் அனுகூலமாக உள்ளன. நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சமூகத்தில் மதிப்பு மரியாதை கூடும். வாகனத்தின் பயன்பாடு திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். இஷ்டதெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். எதிர்ப்பு விலகி வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு, மனதை நெகிழ வைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிறைந்திருக்கும். தொழில், வியா பாரத்தில் போட்டி குறைந்து இலாபம் கூடும். பணி யாளர்கள் தொழில்நுட்ப அறிவில் மேம்படுவர். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர். சுற்றுலா செல்ல வாய்ப்புண்டு.

கட்டுரை

ஏ.ஜே.ஞானேந்திரன்







# வெறும் கோப்பை பசி தீர்க்குமா?

வான் முட்டும் கட்டடங்கள் நிறைந்த நிலத்தில் எப்படிப் பயிர் செய்வது...? கணினிப் படிப்போடு குளிரூட்டப்பட்ட அறைகளில் வேலை செய்யும் கனவுகளே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மேலோங்கியிருக்கின்றன. ஏர் பிடிக்கும் ஆசை யாரிடமும் இல்லை. 'மவுஸ்' பிடிக்கும் ஆசைதான் பரவியிருக்கின்றது. "வெறுங்கை முழமிடுமா...?" என்று கேட்பதுபோல, "வெறும் கோப்பை பசி தீர்க்குமா" என்று கேட்க வேண்டிய நிலையே இன்றைக்கு வந்து சேர்ந்திருக்கின்றது. இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில், அதாவது 2050இல் உலக சனத்தொகை 9பில்லியனைத் தொட்டுவிடும். இன்றிருக்கும் உணவுத் தேவைவ்யைவிட 60 வீதம் அதிகமான உணவு அன்றைக்குத் தேவைப்படும். விவசா யத்துக்கு வேண்டிய மூலதனங்கள் அருகிக் கொண்டு போகும் இந்தத் தருணத்தில், மேலும் மேலும் விவசாய உற்பத்திகளை எதிர்பார்க்கும்போது, ஓர் அழுத்தம் உருவாகும். எல்லோருமே நகர வாழ்வு என்று படையெடுக்க ஆரம்பித்துள்ளதால் இனிவருங்காலங்களில் நிலத்துக்கும் குடி நீருக்குமான போராட்டம் வலுப்பெறவே செய்யும்.

**2030 இல் நிலைமை எப்படியிருக்கும்...?**

மாசடைந்து செல்லும் இயற்கை, அழிந்து செல்லும் காட்டு வளங்கள், மனிதனின் பேராசையினால் அருகிவரும் வன விலங்குகள் என்று சங்கிலித் தொடராக நீளும் பிரச்சினைகள் நமக்குச் சோறு போடும் பூமித்தாயை வயிற்றில் ஏறி மிதிப்பது போன்ற நிலையையே நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. எல்லோரும் பட்டினம் போனால், கிராமங்களில் இருப்பது யார்? விவசாயம் செய்வது யார்? வைரமுத்து எழுதிய கருவாச்சி காவியங்கள் இனி எப்படிப் புதிதாகப் பிறக்கும்? நடிகர் கமலஹாசன் சொல்வது போல, இனி மொட்டைமாடிகளைத் தான் நாம் காய்கறித் தோட்டங்கள் ஆக்க வேண்டும். அது அதுவாகவே இருந்தால் எல்லாம் நலமே! ஆனால் அது அதுவாக இருக்கிறதா...? இதற்கு ஐ.நா சபை ஒரு கணக்குப் போடுகிறது. 17 நிலையான அபிவிருத்தித் திட்டங்களை முன்வைக்கின்றது. அதன் இலக்கை 2030இல் அடையவேண்டும் என்றும் சொல்கிறது. அதன் கணக்குப்படி, இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தினால், விவசாயம் பெருகி, 2030ஆம் ஆண்டளவில் பட்டினியைப்போக்கி, உணவு விடயத்தில் ஒரு ஸ்திரமான நிலையைக் கொண்டுவந்துவிடலாம் என்கிறார்கள்

**இது சாத்தியப்படுமா...?**

உணவு விடயத்தில் மேம்பட்ட நிலை ஏன் தேவைப்படுகின்றது...? இதற்குரிய முதன்மைக் காரணி துரித வளாச்சி காணும் சனத்தொகையே. சுருக்கமாக நிலையை நோக்குவோம். 2050இல் ஆபிரிக்காவின் சனத்தொகை 1 தொடக்கம் 2 பில்லியன் வரை அதிகரிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில், நகரங்களை நோக்கி படை எடுப்பவர்கள் தொகை வேகமாக அதிகரிக்கின்றது. அவ்வேளை ஆபிரிக்காவிலும், ஆசியாவிலும் மேலதிகமாக 2.5பில்லியன் மக்கள் நகரவாசிகளாகிவிடுவார்கள்.

அக்காலத்தில் சனத்தொகை கூடுவது மட்டுமல்ல. அதிகரிக்கும் சனத்தொகை அனைத்தும் நகர வாழ்க்கைக்கு அடிமையாகிவிடும். அத்துடன் மனிதனின் சுவையும் மாறுபடத் தொடங்கி இருக்கின்றது. சத்துள்ள பதப்படுத்தப்பட்ட உணவு வகையறாக்களை மனிதன் தேட ஆரம்பித்துள்ளான். இதன் எதிரொலியாக நிறையப் பாலும், மாமிசமும் அவசியப்படுகின்றன. இந்தப் பாலுக்கும், இறைச்சிக்கும், தானியம் நிறையத் தேவைப்படுகின்றது. அதாவது விவசாயம் வளரவேண்டும். வானம் பொய்த்திருப்பது இதில் தர்மசங்கடமான நிலையைத் தோற்றுவித்திருக்கிறது. இப்படியான வளர்ச்சிப்போக்கில் எதிர்பார்த்திருக்கும் திட்டங்கள் அனைத்தும் வெற்றியளிக்கும் என்பதையும் உறுதியாகச் சொல்லிவிட முடியாது.

**காலநிலையும் கை கொடுக்காது.**

வெயில் காலத்தில் 'சோ'வென்ற மழையும், மழை காலத்தில் அனல் வெயிலுமாகக் காலநிலை தலைகீழாக மாறியிருக்கிறது. உலகின் 40சதவிகித நிலங்கள் வறண்டு போய்க்கிடக்கின்றன. வறட்சி இந்த அளவை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கச் செய்யலாம். இன்றைய உணவு உற்பத்தி அளவு, இப்படியே தொடர்ந்தால்கூட 2050களில் பாதி சனத்தொகைக்குரிய உணவுதான் கிடைக்கும். அடுத்தது குடிநீர் பிரச்சினை தண்ணீர்த் தேவை கூடிய பகுதிகளில் தான் உலகின் 28சதவிகித விவசாயம் செய்யப்படுகின்றது. ஒரு கிலோ கோதுமை விளைவதற்குக் கிட்டத்தட்ட ஆயிரத்து 500 லீட்டர் தண்ணீர் தேவை. ஒரு கிலோ மாட்டிறைச்சியைப் பெறுவதற்கு 16 ஆயிரம் லீற்றர் தண்ணீரைச் செலவு செய்யவேண்டியிருக்கிறது. இதுவே மலைக்க வைக்கும் புள்ளி விபரமாக இருக்க, 2050இல் இப்போதைய தேவையை விட இரண்டு மடங்கு அளவு தண்ணீர் தேவைப்படும் என்கின்றன ஆராய்ச்சிகள். ஆகையால் வருங்காலத்தில் உணவு உற்பத்திக்கு காலநிலை கைகொடுக்குமா? என்பதும் கேள்வியாகவுள்ளது.

**உணவு விடயத்தில் சில நாடுகள்**

அபிவிருத்தியடைந்த நாடுகளில் விவசாயம் செய்பவர்கள் மற்றும் கால்நடைகளை வளர்ப்பவர்கள் இரண்டு வீதமளவில் அருகிப் போயுள்ளதாகவும் கணித்திருக்கிறார்கள். இனிவரும் காலங்களில் அவர்களின் தொகை மேலும் குறைவடையும் வாய்ப்புக்கள் இருக்கின்றனவே தவிர அதிகரிக்கும் வாய்ப்புக்கள் சற்றும் இல்லை.

இன்றைக்கு உணவு விடயத்தில் ஒரு ஸ்திரமான நிலையோடு முதலாவது இடத்தையும், இரண்டாம் இடத்தையும் பிடிப்பது அமெரிக்காவும், சிங்கப்பூரும் தான். ஒன்றைச் செய்யக்கூடிய பணபலம் தேவைப்படுவது. அது தேவைப்படும் நேரத்தில் கிடைப்பது. உற்பத்திகள் தரமானவையாக இருப்பதுடன் பாதுகாப்புத் தன்மை கொண்டவையாகவும் இருப்பது என்பது போன்ற காரணிகளை அடிப்படையாக வைத்தே இதற்கான கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் உலக நாடுகளில், பிரதான உணவு உற்பத்தி நாடுகளாக மலேசியா, பிரேசில், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளையும் குறிப்பிடுகிறார்கள்.

**தெற்காசியாவின் நெல் களஞ்சியம் என்ன செய்யப்போகிறது?**

ஒரு நாட்டின் தேசிய உணவுப் பாதுகாப்பு என்பது உள்ளூர் உற்பத்தி, இறக்குமதி என்ற இரண்டிலுமே தங்கி இருக்கின்றது. பயனளிக்கும் விதத்தில் விநியோகம், சரிவரப் பரவலாக்குதல், நீண்டகாலத் திட்டம் என்று எல்லாமே சிறப்பாக இருப்பதாலேயே சிங்கப்பூர் உணவு விடயத்தில் முன்னணியில் நிற்கின்றது. இத்தனைக்கும் தனக்குத் தேவையான பெரும்பான்மை உணவைச் சிங்கப்பூர் இறக்குமதி செய்கிறது என்பதே நிஜம்! மக்கள் தொகை, விவசாய உற்பத்திகள் எப்படியான நிலையிலிருந்தாலும் பஞ்சத்தையும் பட்டினியையும் தவிர்க்க முடியும் என்பதற்கு சிங்கப்பூரை விட வேறு உதாரணம் எமக்குத் தேவை இல்லை. இயற்கையைச் சிதைக்காது, விளை நிலங்களைப் பாதுகாத்து, விவசாயிகளை உருவாக்கும் பல வகையான திட்டங்களை மேற்கொண்டால் நாமது நாடும் உணவு விடயத்தில் முன்னனியில் நிற்பதற்கு வாய்ப்புக்களுள்ளன. எப்போதும் 'தெற்காசியாவின் நெல் களஞ்சியம்' என்பதாகவும் திகழ முடியும். இதற்குக் காலந்தான் பதில் சொல்லவேண்டும்.

---

கவிதை

## தலைநிமிர்ந்து வாழ்வாய் தமிழனே!

நா.நவராஜ்


*நாட்டுநிலைமையைப் பார்த்தும் அறிகிலை*
*கூற்றுவழியிலே நிற்பதறிகிலை*
*சேட்டையனுதினம் செய்துஅலைகிறாய் தின(ம்)மானம்*
*காற்றில் போவதைக்காண விளைகிலை*
*காலைப்பிடித்துமே வாழ்ந்து கழிக்கிறாய்*
*இழிந்த பிறவியாய் இங்குசுற்றுறாய் நீநல் வழிபோக*
*முயற்சி செய்கிலை மீண்டும் மீண்டுமே*
*மாட்டிக் கொண்டிங்கே முடங்கிவாழ்கிறாய்*
*மண்ணுக்கிரையாகி மறைந்துபோகிறாய் நீமீள*
*நல்ல மனிதனாய் எம் மண்ணில் வாழ்ந்திட*
*மான உணர்வினை மனத்தில் வளர்ந்திடு*

*தீமை தனையிங்கு தூரவிரட்டிடு எம்மண்ணை*
*மாசுஇன்றியே மாற்றி யமைத்திடு*
*கொலைகள் வீழ்வதை அழித்து மகிழ்ந்திடு*
*பெண்மை தனையிங்கு போற்றி வாழ்ந்திடு உன்னை*
*நல்ல மகனெனத் தமிழ் அன்னை போற்றுவாள்*
*தன் துன்பம் நீங்கியே நன்கு மகிழுவாழ்*
*தலையும் நிமிர்ந்து நீ நன்கு வாழுவாய் தமிழனே.*



# லெஜண்டரி சுப்பர் ஸ்பை

## தயாராகிறது அடுத்த ஜேம்ஸ் பாண்ட்




ஹொலிவூட் சினிமா

கோமளவண்ணன்

உலகம் முழுவதும் இரசிகர்களைக் கொண்ட ஜேம்ஸ் பாண்ட் படவரிசையின் அடுத்த படைப்பு அடுத்த வருடம் வெளியாக வுள்ளது. அதாவது ஜேம்ஸ் பாண்ட் துப்பறியும் படவரிசையின் 25ஆவது படமான 'லெஜண்டரி சுப்பர் ஸ்பை' அடுத்த வருடம் நவம்பர் மாதம் 8ஆம் திகதி வெளியாக இருப்பதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

இதற்கு முன்னர் ஜேம்ஸ் பாண்ட் கதாபாரத்திரத்தில் நடித்த டேனியல் கிரேக்க திலும் தொடர்வாரா? அல்லது வேறு ஒருவர் ஜேம்ஸ் பாண்ட் கதாபாத்திரத்தில் நடிக்கிறாரா? பட்டத்தின் இயக்குநர் மற்றும் படக்குழுவினர் யாவர்கள் என்று எந்தத் தகவல்களும் இல்லாமலேயே இந்தப் படம் குறித்த தகவல்கள் கசியத் தொடங்கியிருக்கின்றன. இந்த நிலையில்தான் புதிய ஜேம்ஸ் பாண்ட் படத்தை இயக்குவதற்காகத் தன்னிடம் பேச்சு நடத்தப்பட்டு வருவதாக இயக்குநர் கிறிஸ்டோபர் நோலன் செய்திகளை வெளியிட்டிருக்கிறார். இது ஜேம்ஸ் பாண்ட் ரசிகர்களையும், நோலன் ரசிகர்களையும் இன்ப அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

ஜேம்ஸ் பாண்ட் பட வரிசைகளைத் தயாரித்துவரும் ஜ.எம்.டி.பி தளம் இணை நிறுவனங்களில் ஒன்றாகக் கிறிஸ்டோபர் நோலனின் நிறுவனத்தையும் சேர்த்திருந்தது. இதனாலே நோலனே புதிய ஜேம்ஸ்பாண்ட்டைத் தாயாரிக்கக் கூடும் எனும் வியூகங்கள் முன்னரே கிளம்பிருந்தன. தற்போது நோலனே அதை வெளிப்படுத்தியுமுள்ளார். படத் தயாரிப்பாளர்கள் தன்னிடம் பேசி வருவதாகவும், ஜேம்ஸ் பாண்ட் படத்தை இயக்குவதில் தனக்கு விருப்பமே என்றும் கிறிஸ்டோபர் நோலன் தெரிவித்துள்ளார்.

"தயாரிப்பாளர்கள் பார்பரா மற்றும் மைக்கேல் வில்சன் ஆகியோர் கடந்த சில வருடங்களாகவே இதுபற்றி என்னிடம் பேசி வருகின்றனர். எனக்கு அந்தக் கதாபாத்திரம் மிகவும் பிடிக்கும். அவர்கள் அதை வைத்து எடுக்கும் படங்களையும் ஆர்வத்துடன் எதிர்நோக்குவேன். ஒருவேளை, ஒருநாள் நான் அதை இயக்கலாம். நாம் அந்த வேலைக்குத் தேவைப்பட வேண்டும். அதற்கு ஒரு மறு ஆரம்பம் தேவைப்படும். அதற்கு நீங்கள் தேவைப்பட வேண்டும்" என நோலன் கூறியுள்ளார்.


இயக்குநர்: நோலன்

இறுதியாக வெளிவந்த நோலனின் படம் 'டங்கிர்க்' இற்கு அடுத்து அவருடைய அடுத்த படமான 'லெஜண்டரி சுப்பர் ஸ்பை'யை எதிர்பார்த்திருக்கும் இரசிகர்களுக்கு மத்தியில் அடுத்துள்ள கேள்வி 'ஜேம்ஸ் பாண்ட்' யார் என்பதே. இதுவரை ஜேம்ஸ் பாண்டாக நடித்து வந்த டேனியல் க்ரெய்க், அந்த கதாபாத்திரத்திலிருந்து விலகுவதாக அறிவித்துவிட்டார். எனவே புதிய இயக்குநர் ஜேம்ஸ் பாண்ட் படத்துக்குக் கிடைத்திருப்பதுபோல புதிய நாயகனும் தேடப்படும் நிலை தயாரிப்புத் தரப்புக்கு உள்ளது. ஆனாலும் அதன் பின்னரான தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் ஜேம்ஸ் பாண்ட் பாத்திரத்தில் நடிக்கச் சம்மதம் என டேனியல் க்ரெய்க் அறிவித்திருக்கிறார்.

இதற்கு முன், இதே சூழ்நிலையில் உருவான 'பட்மன்' படத்துக்குக் கிறிஸ்டோபர் நோலன் இயக்குநராயிருந்தார். பட்மனின் மறு துவக்கமாக அவர் இயக்கிய 'பேட்மேன் பிகின்ஸ்', 'டார்க் நைட்', 'டார்க் நைட் ரைசஸ்' ஆகிய படங்கள் பட்மேன் கதாபாத்திரத்துக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்ததோடு, பாராட்டையும், வசூலையும் அள்ளிக்குவித்தன.

தற்போது கிறிஸ்டோபர் நோலன், ஜேம்ஸ் பாண்ட் படத்தை இயக்கும் பட்சத்தில், அவரது பார்வையில் அது எப்படித் திரையில் விரியும் என்பதைப் பார்க்கும் ஆவல் பலருக்கு உருவாகியுள்ளது. பேச்சுவார்த்தை நடக்கிறது என்பதை மட்டுமே நோலன் உறுதியாகச் சொல்லியுள்ளார். எனவே உறுதியான தகவலுக்கு ரசிகர்கள் இன்னும் சில நாட்கள் காத்திருக்க வெண்டும். ஆக அடுத்த ஜேம்ஸ் பாண்ட் படம் 2018ஆம் வருட ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டு வருட இறுதியில் திரைக்கு வரும் எனத் தெரிகிறது.

# ஆம்பியன்ஸ்

“ஆண்ட்ரூ வெப்பர்க்கின் கனவுப் படமாக உருவாகியுள்ள இந்தத் திரைப் படம் 2020ஆம் ஆண்டு தானாம் இதன் அனைத்து வேலைகளும் முற்றுப்பெறும் அதற்குப் பிற்பட்ட காலத்திலேயே நாம் அந்தத் திரைப்படத் தைத் திரையரங்குகளில் பார்க்கலாம்.”

## உலகின் மிக நீளமான திரைப்படம்

### முன்னோட்டக் காட்சி மட்டும் 72மணித்தியாலயங்கள்

ஒரு படம் 2மணித்தியாலய நேரத்தைத் தாண்டினாலே சலிப்பு ஏற்பட்டுத் திரையரங்கிலிருந்து வெளியேறும் பார்வையாளர்கள் உள்ள காலத்தில் உலக சினிமா வரலாற்றில் நீளமான படம் என்ற சாதனையை ஏற்படுத்தத் தயாராகியுள்ளது 'ஆம்பியன்ஸ்' என்ற திரைப்படம். இது கிட்டத்தட்ட 30 நாட்கள் (730 மணித்தியாலயங்கள்) வரை ஓடக்கூடியது. சுவீடனைச் சேர்ந்த ஆண்ட்ரூ வெப்பர்க் இந்தத் திரைப்படத்தை உருவாக்கியுள்ளார்.

72 நிமிடங்கள் வரை ஓடுகின்ற இந்தப் படத்தின் சிறியதொரு காட்சி 2014ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதை ஒரு கோடிக்கும் அதிகமான பார்வையாளர்கள் ஆவலுடன் பார்வையிட்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் இந்தப்படத்தின் பெரும்பாலான காட்சிகள் படமாக்கப்பட்டு காட்சித்தொகுப்புப் பணியும் முடிவடைந்திருக்கிறது. இதனைத் தொடர்ந்து இந்தப் படத்தின் 72மணி நேரம் ஓடக்கூடியதான முன்னோட்டக் காட்சியையும் 2018ஆம் ஆண்டில் அதிகாரபூர்வமாக வெளியிடப்போவதாகப் படக்குழு அறிவித்திருக்கிறது. படத்தின் கதைச் சுருக்கம் குறித்து இயக்குநர் ஆண்ட்ரூ கூறும்போது, 'விண்வெளி, காலம் இவற்றுக்கு இடையே பிணைக்கப்பட்ட ஒரு கனவுப் பயணம்தான் இந்தப் படம்' என்று தெரிவித்திருக்கிறார். ஆகவே ஆம்பியன்ஸ் என்பது பெரியதொரு விண்வெளிப் புனைவுக்கதை என்று நாம் நம்பலாம். ஆண்ட்ரூ வெப்பர்க்கின் கனவுப் படமாக உருவாகியுள்ள இந்தத் திரைப் படம் எப்போது திரைக்கு வருகிறது தெரியுமா? 2020ஆம் ஆண்டுதானாம் இதன் அனைத்து வேலைகளும் முற்றுப்பெறும் அதற்குப் பிற்பட்ட காலத்திலேயே நாம் இந்தத் திரைப்படத்தைத் திரையரங்குகளில் பார்க்கலாம். அதுகூடச் சாத்தியமா என்பது தெரியவில்லை. ஏன் சொல்லுங்கள் பார்க்கலாம்...? மாதக்கணக்கில் அமர்ந்திருந்து தொடர்ச்சியாக ஒரு சினிமாவைப் பார்ப்பது என்பது எம்மவருக்கு எவ்வளவு சாத்தியமளிக்குமோ...? பொறுத்திருந்து தான் பார்ப்போமே.



# மெஸ்ஸிக்கு வந்த சோதனை

விளையாட்டு

பிரகாஸ்

ரஷ்யாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதி பெறுவதற்கு ஆர்ஜென்ரீனா அணி கடும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது. மெஸ்ஸியின் தலைமையில் ஆர்ஜென்ரீனா அணி எதிர்கொள்ளும் மற்றொரு மோசமான காலகட்டமாக இது உள்ளது.



இந்த உலகக்கிண்ணத் தொடருக்கான தகுதி காண் ஆட்டங்கள் உலகெங்கும் பரவலாக நடைபெற்று வருகின்றன. தென்னமரிக்க நாடுகளுக்கு இடையிலான பிரிவில் பிரேசில் 37 புள்ளிகளுடன் உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றுள்ளது. உருகுவே 27 புள்ளிகளுடனும், கொலம்பியா 26 புள்ளிகளுடனும், பெரு 24 புள்ளிகளுடனும் முறையே அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. ஆர்ஜென்ரீனா 24 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும், சிலி 23 புள்ளிகளுடன் ஆறாவது இடத்திலும் உள்ளன.

தென்னமரிக்கக் கண்டத்தில் முதல் நான்கு இடங்களில் உள்ள அணிகள் மட்டுமே தகுதிபெற முடியும். ஐந்தாவது இடத்தில் இருக்கும் அணி 'பிளே ஓவ்' சுற்றின் மூலம் செல்ல வாய்ப்புண்டு. இந்த வகையில் ஆர்ஜென்ரீனா மற்றும் சிலி அணிகள் உலகக்கிண்ணத் தொடருக்குச் செல்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. உலகின் ஆகச் சிறந்த கால்பந்தாட்ட வீரர்க ளில் ஒருவரான மெஸ்ஸியின் தலைமையின் கீழ் ஆர்ஜென்ரீனா தடுமாறுவது இது முதல் முறையல்ல. கடந்த வருடம் நடைபெற்ற கோப்பா அமெரிக்கத் தொடரில் (தென்னமரிக்க நாடுகளுக்கு இடையிலான தொடர்) ஆர்ஜென்ரீனா அணி சிலியுடன் இறுதியாட்டத்தில் மோதியது. ஆர்ஜென்ரீனாவை வீழ்த்தி கிண்ணம் வென்றது சிலி.

தோல்வியின் விரக்தியில் பன்னாட்டு அரங்கில் இருந்து ஓய்வு பெறுகிறேன் என்று அறிவித்தார் மெஸ்ஸி. பின்னர் அவரின் ரசிகர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தி, மெஸ்ஸி தனது முடிவை திரும்பப் பெறவேண்டும் என்று வலியுறுத்தினர். கால்பந்தாட்ட ஜாம்பவான்கள் பலரும் இவ்வாறான கருத்தையே பதிவுசெய்தனர். இதனால் தனது ஓய்வு முடிவை திரும்பப் பெற்று மீண்டும் களமிறங்கினார் மெஸ்ஸி. ஆனாலும் மெஸ்ஸியின் தலைமையில் ஆர்ஜென்ரீனா தொடர்ந்தும் தடுமாற்ற மடைந்தே வருகிறது. இந்தத் தடுமாற்றங்களின் உச்சமாக அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதி பெறுவதில் சிக்கல்களை எதிர் கொண்டுள்ளது. இன்னும் இரண்டு லீக் ஆட்டங்கள் எஞ்சி யுள்ளன. அவை இரண்டும் ஆர்ஜென்ரீனாவின் தலைவிதியைத் தீர்மானிக்க் வல்லவையாக அமையும்.



முதலாவது இலக்கு



500ஆவது இலக்கு

# அன்டர்சன் 500

இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் அன்டர்சன் டெஸ்ட் அரங்கில் தனது 500ஆவது இலக்கை எட்டினார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. இந்த ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகளின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பிரீத்வைட்டை போல்ட் முறையில் வெளியேற்றி அன்டர்சன் தனது 500ஆவது இலக்குப் பெறுதியை எட்டினார்.

அன்டர்சன் 2003ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி தனது முதலாவது டெஸ்ட் இலக்கை வீழ்த்தியிருந்தார். வெர்முலனை போல்ட் முறையில் வெளியேற்றியே தனது முதலாவது இலக்கை அவர் பதிவுசெய்தார்.



# மற்றொரு அணியின் உரிமையாளராக ஜிந்தா

ஐ.பி.எல். தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் உரிமையாளராக இருக்கும் பிரீத்தி ஜிந்தா, தென்னாபிரிக்க ரி–20 தொடரான ரி–20 குளோபல் லீக்கில் ஓர் அணியை வாங்கியுள்ளார். இந்தத் தகவலை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

“பிரீத்தி ஜிந்தா பார்ல் பகுதியை மையமாக கொண்டு உருவாக்கப்பட்ட ஸ்டெலன்போஷ் மொனார்ச்ஸ் அணியை வாங்கியுள்ளார் என்ற தகவலை அறிவிப்பதில் நான் மிகவும் பெருமையடைகிறேன். தென்னாபிரிக்கா மற்றும் ரி20 குளோபல் லீக் குடும்பத்திற்கு அவரை வரவேற்கிறேன்” என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் தலைமை நிர்வாகி ஹாரூண் லார்கட் தெரிவித்துள்ளார்.

# பெடரர் 'அவுட்'



அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் இருந்து பெடரர் அதிர்ச்சிகரமாக வெளியேற்றப்பட்டுள்ளார். பன்னாட்டு அந்தஸ்துபெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கப் பகிரங்கத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் முன்னணி வீரரான பெடரர் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியுள்ளார்.

இந்தத் தொடர் ஆரம்பமாகும் போது கிண்ணத்தைக் கைப்பற்றத் தகுதியான வீரர்களில் ஒருவராக பெடரர் அடையாளம் காணப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவர் காலிறுதியுடன் வெளியேற்றப்பட்டுள்ளமையானது பல அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. பெடரர் வெளியேற்றப்பட்டதால் தரப்படுத்தலில் அடுத்த சில மாதங்களுக்கு தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கக்கூடிய வாய்ப்பு நடாலுக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் சுமார் ஆறு மாதங்கள் வரை காயம் காரணமாக ஓய்வில் இருந்த பெடரர், இந்த வருடத்தின் ஆரம்பத்திலேயே களத்துக்குத் திரும்பியிருந்தார். கடந்த ஜனவரியில் நடைபெற்ற ஆஸ்திரேலியத் தொடரின்போது பெடரர் கிண்ணம் வென்றார். இதனால் அமெரிக்கத் தொடர் தொடர்பாக அவர்மீது மிகப்பெரியளவில் எதிர்பார்ப்புக்கள் ஏற்பட்டிருந்தன. இந்த நிலையில் பெடரரின் ரசிகர்களுக்கு ஏமாற்றமே எஞ்சியுள்ளது.

பெடரர் வெளியேற்றப்பட்டதால் தரப்படுத்தலில் அடுத்த சில மாதங்களுக்கு தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கக்கூடிய வாய்ப்பு நடாலுக்கு ஏற்பட்டுள்ளது.

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நடத்தும்

# உயர்கல்வி, தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு-2017

## க.பொ.த
## சாதாரண / உயர்தரத்தின் பின்னர்....

- அரச, தனியார் துறையில் உயர்கல்வி வாய்ப்புக்களை எவ்வாறு தெரிவு செய்வதெனவும்,
- எதிர்காலத்தில் உயர் வருவாய் தரும் தொழில் வாய்ப்புக்களை இன்றே இனங்காணவும்
- உங்கள் விருப்பு, வெறுப்பு, இயலுமை மற்றும் பொருளாதார அடிப்படைப் பாடநெறிகளை இலகுவாக கண்டறிவதற்கும்
- இலங்கையில் உயர்கல்வி திட்டங்கள், கொள்கைகள், சவால்களை எதிர்கொண்டு வெற்றியடைவதற்கான வழிவகைகளும்.
- சர்வதேச கற்கைநெறிகளும் அதனை இலகுவாக அடைவதற்கான வழி வகைகளும்

மேற்கூறப்பட்ட அனைத்தும் அனுபவமிக்க வளவாளர்களால் ......



## எதிர்காலத்தில்

**கௌரவமான தொழில்வாய்ப்பொன்றை கண்டறிவதற்கான நேரடி வாய்ப்பு**

நேரம் : முற்பகல் 10 மணி
திகதி : 16.09.2017 (சனிக்கிழமை)
இடம் : 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

SMS

பதிவுகளுக்கு உங்கள் முழுப்பெயர், விலாசத்தை
076 753 1111 இற்கு SMS செய்யவும்.



வடமாகாண ஆரம்பப் பாடசாலைகளில் பிரகாரக் கற்பித்தல் , பல் மட்டக் கற்பித்தல் செயற்றிட்டம் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திட்டத்தின் முதன்மைப் பிரதியை யுனிசெப் நிறுவன நிபுணத்துவ ஆலோசகர் எஸ்.சிப்லி முதன்மை வளவாளர் கலாநிதி.பா.தனபாலனிடம் கையளித்தார். (ஜ-29)





யாழ்.மாவட்ட சர்வோதய நிலையத்தில் இயங்கும் தேசோதய சபையின் பிரதேச காரியாலயங்கள் கோப்பாய், உடுவில், சாவகச்சேரி, பாசையூர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (ஜ)





யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரிக்கும், பாடசாலை சமூகத்துக்குமான உறவுச் செயற்றிட்ட நிகழ்வு மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் நூல்களை அன்பளிப்புச் செய்தனர். பாடசாலையை அழகுபடுத்தும் திட்டத்தில் மர நடுகையும் இடம்பெற்றது. (ஜ-29)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்றிட்டத்தின் கீழ் போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 20 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' சிறப்புச் செயற்குழுவினர் நேரில் சென்று உபகரணங்களைக் கையளித்தனர். (ஜ)



முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் போரால் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றுக்கு வாழ்வாதார உதவியாக பால்மாடு ஒன்று வழங்கி வைக்கப்பட்டது. பிரான்ஸ் தமிழர்களுக்கு உதவும் அமைப்பினருக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க அந்த அமைப்பு இந்த உதவியை வழங்கியுள்ளது. (ஜ)



வவுனியா செட்டிகுளம் பிரிவுக்கு உட்பட்ட குருக்கள் புதுக்குளத்தை அண்மித்த புளியங்குளம் கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு வவுனியா மாவட்ட மாகாணசபை உறுப்பினரும், முன்னாள் வடக்கு மாகாண சுகாதார அமைச்சருமாகிய மருத்துவர். பத்மநாதன் சத்தியலிங்கம் தனது வருடாந்த நிதியொதுக்கீட்டில் ஒலிபெருக்கி உபகரணத்தொகுதி மற்றும் தளபாடங்களை வழங்கினார். கையளிக்கும் நிகழ்வு கிராம அபிவிருத்தி சங்க செயலாளர் திரு.கரன் தலைமையில் நடைபெற்றது. (ஜ)







'நாங்கள் மாறுவோம்' என்னும் தொனிப்பொருளில் பொலித்தீன் பாவனையைக் குறைப்பது தொடர்பான தெரு வெளி ஆற்றுகை நிகழ்வு வட்டுக் கோட்டை வேரம் பகுதியில் அண்மையில் இடம்பெற்றது. வேள்ட்விஸன் நிறுவன அனுசரணையில் புத்தாக்க அரங்க இயக்கத்தின் தயாரிப்பில் இந்த ஆற்றுகை நிகழ்வு இடம்பெற்றது. எஸ்.ரி.குமரன் எஸ்.ரிஅருள்குமரன் எழுத்துருவாக்கம் மற்றும் நெறியாள்கையில் உருவான ஆற்றுகை இது. இந்தத் தெரு வெளி ஆற்றுகை நிகழ்வின் நிறைவில் பொலித்தீன் பாவனையை தவிர்க்கும் பொருட்டு துணிப் பைகள் வழங்கப்பட்டன. (ஜ)

கட்டுரை

ஜி.ஆர்.இரவீந்திரநாத்



# அனித்தாவின் சாவுக்கு நீட் மட்டும்தான் காரணமா...?

அனித்தாவின் சாவு 'நீட்'டின் விளைவு. ஆனால், 'நீட்' மட்டுமேதான் அவளுடைய சாவுக்குக் காரணமா? அனைவரும் சிந்திக்க வேண்டும். பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டமும், ஏழ்மையும் சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பற்ற மனநிலையை மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகிறது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை நல்ல வருமானம் ஈட்டக்கூடிய, படிப்புகளைத் தெரிவு செய்து படிக்க வைக்க முனைகின்றனர். இதனால் மருத்துவம், பொறியியல் போன்ற ஒரு சில பிரிவுகளுக்குக் கடும் போட்டி நிலவுகிறது. போட்டிக்கேற்ப இத்துறைகளில் அதிக இடங்கள் இல்லை. இதுவே பிரச்சினைகளை உருவாக்குகிறது.

எந்தப் படிப்பைப் படித்தாலும் வேலைகிடைக்கும். எந்த வேலைக்குப் போனாலும் நல்ல ஊதியம் கிடைக்கும். சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பு கிடைக்கும் என்ற நிலை இருந்தால், ஒரு குறிப்பிட்ட படிப்புக்கு ஏராளமானோர் போட்டியிடும் நிலை உருவாகுமா...?

**மருத்துவ மோகம்**

மருத்துவப் படிப்பின்மீது மக்களுக்குப் பெரும் மோகம் உள்ளது. இந்தியாவில் மருத்துவம் தனியார் மயமானதும், வியாபாரமயமானதும், வருவாய் ஈட்டும் தொழிலாக மாறியதும், அரசுப் பணியுடன் தனியாகத் தொழில்செய்யும் வாய்ப்பும், ஓய்வுபெற்ற பின்னரும் வாழ்நாள் முழுவதும் வருமானம் ஈட்டலாம் என்ற நிலையும், அது வழங்கும் சமூக மரியாதையும், மருத்துவப் படிப்பில் சேர வேண்டும் என்ற ஆர்வத்தை அதிகரிக்கிறது. அதனால், மருத்துவப் படிப்பில் இடம் கிடைக்காதபோது, கடும் ஏமாற்றம் ஏற்படுகிறது.

வாழ்க்கைக்குப் பல்வேறு படிப்புகளும் அவசியம் என்ற மனநிலையை எமது கல்விமுறை உருவாக்கத் தவறிவிட்டது. மருத்துவப் படிப்பு மட்டுமே மிக உயரிய படிப்பு என்ற கருத்தாக்கம், மாணவர்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதியவைக்கப்பட்டுள்ளது. இதனால், மருத்துவப் படிப்புக்குக் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. அந்தப் படிப்பு மிக வேகமாகத் தனியார் மயமாக்கப்படுகிறது. வியாபாரமாக்கப்படுகிறது. இதுபோன்று உயர்.கல்வி 70சதவீதத்துக்கும் மேல் தனியார்மயமாகிவிட்டது. உயர் கல்வியில் சேரத் தகுதி உள்ள மாணவர்களில் 28சதவிதத்துக்கும் குறைவானவர்களுக்கே உயர் கல்வி வாய்ப்பு கிட்டுகிறது.

பன்னாட்டு நிதி மூலதனம், உலக வங்கி போன்றவற்றின் நிர்ப்பந்தத்தால் மருத்துவமும், மருத்துவக் கல்வியும் இந்தியாவிலும் தனியார் மயமாக்கப்படுகின்றன. பெருநிறுவனமயமாகின்றன. அதற்கு உதவும் வகையிலேயே தேசிய நலக்கொள்கை2017 மத்திய அரசால் உருவாக்கப்பட்டுள்ளது.


அதற்கேற்ப, மருத்துவக் கல்லூரிகளைத் தனியார் தொழில் நிறுவனங்களும் தொடங்கலாம் என இந்திய மருத்துவக் கழகம் தனது விதிமுறைகளை மாற்றியுள்ளது. தனியார் நிறுவனங்கள் மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கிட, அரச மருத்துவமனைகள் தாரைவார்க்கப்படுகின்றன. ஆந்திராவிலும் குஜராத்திலும் இது நடக்கத் தொடங்கியுள்ளது.

**தனியார் மயமாகும் மருத்துவக் கல்வி**

'இந்திய மருத்துவக் கழக'த்தை ஒழித்துவிட்டு, அதற்குப் பதிலாக 'தேசிய மருத்துவ ஆணையம்' உருவாக்கப்பட உள்ளது. தற்போது மாநில அரசுகளின் கட்டண நிர்ணயக் குழுக்கள் தனியார் கல்லூரிகளின் அனைத்து இடங்களுக்கும் கட்டணத்தை நிர்ணயிக்கின்றன. அதை ஒழித்துக்கட்டும் வேலையை மத்திய அரசு செய்துள்ளது. அதற்காக, தேசிய மருத்துவ ஆணைய மசோதாவில், 40சதவீதத்துக்கும் குறைவான மருத்துவ இடங்களுக்கு மட்டுமே அரசால் கட்டணங்கள் நிர்ணயிக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. அதிர்ச்சியளிக்கிறது.

ஏற்கெனவே, தனியார் கல்லூரிகளில் சேரும் மாணவர்கள், கட்டணங்களைச் செலுத்த முடியாமல் தவிக்கின்றனர். கேரளா போன்ற மாநிலங்களில் இடங்களைத் திரும்ப ஒப்படைக்கின்றனர். நாடு முழுவதும் உள்ள தனியார் நிகர்நிலை மருத்துவக் கல்லூரிகளில் 5ஆயிரத்து 200 எம்.பி.பி.எஸ். இடங்கள் 3.09. 2017 வரை வெற்றிடமாக இருந்தன. ஒருபுறம், மருத்துவ இடம் கிடைக்காததால் தற்கொலை. மறுபுறம், மருத்துவ இடங்கள் வெறுமையாக இருக்கும் நிலை. கல்விக் கட்டணம் மிக அதிகமாக இருப்பதே இதற்குக் காரணம். எனவே, குறைவாக உள்ள அரசு மருத்துவக் கல்வி இடங்களில் சேர, மிக அதிகமானோர் போட்டிபோடுகின்றனர். இதனால், நீட் போன்ற பரீட்சைகள் புகுத்தப்பட்டு, அனித்தா போன்ற மாணவர்கள் வடிகட்டப்படுகின்றனர்.

இத்தகைய காரணங்களால் கல்வி, வேலைவாய்ப்புக்குக் கடுமையான போட்டி நிலவுகிறது. உதாரணத்துக்கு புதுச்சேரி ஜிப்மர் மருத்துவக் கல்லூரியின் 200 எம்.பி.பி.எஸ். இடங்களுக்கு 1 இலட்சத்து 89 ஆயிரம் பேர் விண்ணப்பித்தனர். வேலைவாய்ப்பிலும் இதே நிலைதான். உத்தரபிரதேசத்தில் 368 அலுவலக உதவியாளர் வேலைக்கு 23 இலட்சம் பேர் போட்டியிட்டனர். அதில் 255 பேர் பி.ஹெச்டி.. முடித்தவர்கள். இத்தகைய நிலைமைகளே மருத்துவப் படிப்பை நோக்கி மாணவர்களைத் தள்ளுகின்றன. இந்நிலையில், மாநிலப் பாடத்திட்டத்தில் படிக்கும் மாணவர்களையும், மாநில உரிமைகளையும், கூட்டாட்சிக் கோட்பாட்டையும் பாதிக்கும் வகையில், சமூக நீதிக்கும், இட ஒதுக்கீட்டுக்கும் எதிராக, மத்திய அரசு நீட் நுழைவுப் பரீட்சையைப் புகுத்தி உள்ளது.



**இலாபம் ஈட்டும் பரீட்சைத் தொழில்**

தமிழக அரசின் ஒதுக்கீட்டு மருத்துவ இடங்களுக்கு, 'நீட்'டிலிருந்து விலக்குக் கொடுக்க முடியாது என மத்திய அரசு பிடிவாதமாக இருக்கிறது. இதன் பின்னால் பரீட்சைகளையே இலாபம் ஈட்டும் தொழிலாக மாற்றும் அரசியல் உள்ளது. ஆண்டுதோறும், இந்தியாவில் 40 இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்வேறு நுழைவுப் பரீட்சைகளை எழுதுகின்றனர். அவற்றைத் தனியார் பெருநிறுவனங்களே நடத்துகின்றன. நீட் பரீட்சையை புரோமெட்ரிக் என்ற அமெரிக்க நிறுவனம் நடத்தியது. மாணவர்கள் செலுத்திய கட்டணம் இந்நிறுவனத்துக்குச் சென்றது. நுழைவுப் பரீட்சையால் வரும் வருவாய் தங்களுக்கு வேண்டிய நிறுவனங்களுக்குச் செல்ல வேண்டும் என்ற நோக்கில்தான், நீட்டிலிருந்து விலக்கு வழங்க மத்திய அரசு மறுக்கிறது.

இந்தநிறுவனங்களுக்குக் கூடுதல் வருவாய் கிடைத்திடவே, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி, சித்தா போன்ற படிப்புகளுக்கும், பொறியியல் படிப்புகளுக்கும் நீட் நுழைவுப் பரீட்சை கட்டாயமானது என மத்திய அரசு அறிவித்துள்ளது. வெளிநாடுகளில் போய் மருத்துவம் படிக்க விரும்புவர்களும் 'நீட்' பரீட்சையில் தேர்ச்சி பெற வேண்டும் என்கிறது. மருத்துவப் படிப்பை முடித்து, பயிற்சி மருத்துவத்தையும் முடித்த உடன் 'நெக்ஸட்' என்ற 'எக்ஸிட்' பரீட்சையை எழுத வேண்டும் எனக் கூறுகிறது. நீதிபதி நியமனத்துக்கும் பரீட்சை கொண்டுவரப்படும் என்கிறது. போட்டிப் பரீட்சைகளை நடத்துவதற்காகவே, 'தேசிய தேர்வு முகாமை' என்ற அமைப்பை மத்திய அரசு உருவாக்கியுள்ளது. இந்த அமைப்பின் கீழ் பன்னாட்டு நிறுவனங்களே போட்டித் தேர்வுகளை நடத்த உள்ளன. 'மேக் இன் இந்தியா' திட்டத்தைப் பற்றிப் பேசும் அரசு போட்டித் தேர்வுகளை நடத்திட அமெரிக்க நிறுவனங்களைச் சாந்திருக்கின்றது.

நன்றி தி ஹிந்து

> மருத்துவ இடம் கிடைக்காததால் தற்கொலை. மறுபுறம், மருத்துவ இடங்கள் வெறுமையாக இருக்கும் நிலை. கல்விக் கட்டணம் மிக அதிகமாக இருப்பதே இதற்குக் காரணம்.

> வாழ்க்கைக்குப் பல்வேறு படிப்புகளும் அவசியம் என்ற மனநிலையை எமது கல்விமுறை உருவாக்கத் தவறிவிட்டது. மருத்துவப் படிப்பு மட்டுமே மிக உயரிய படிப்பு என்ற கருத்தாக்கம், மாணவர்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதியவைக்கப் பட்டுள்ளது. இதனால், மருத்துவப் படிப்புக்குக் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது

# ட்ரம்ப் - பாப்பரசர் இடையேயான சந்திப்பின் அர்த்தமும் மாற்றமும்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை



திருத்தந்தை பிரான்சிஸ் மற்றும் அமெரிக்க அரச தலைவர் ட்ரம்ப் ஆகியோரிடையே இடம்பெற்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்புக் குறித்து இவ்வாக்கம் பேசுகிறது.

**அதிகாரம் கொண்ட மனிதர் டொனால்ட் ட்ரம்ப்**

டொனால்ட் ட்ரம்ப் கொண்டுள்ள அதிகாரமும் பலமும் எல்லையற்றது என்றே கூறலாம். 1946ஆம் ஆண்டு பிறந்த டொனால்ட் ஜோண் ட்ரம்ப் குடியரசுக் கட்சி வேட்பாளராக 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இடம்பெற்ற தேர்தலில் போட்டியிட்டு மக்களாட்சிக் கட்சி வேட்பாளர் கிலாரி கிளின்டனை தோற்கடித்தார். அமெரிக்க வரலாற்றில் அதிக வயதில் (70) தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது அரச தலைவராகத் திகழ்கிறார்.

**பாப்பரசர் பிரான்சிஸ்**

உரோமை நகரத்தின் வத்திக்கான் நகரம் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைப் பீடம் ஆகும். வத்திக்கான் நகர் இத்தாலி நாட்டின் உரோமை நகரிலுள்ள ஒரு தன்னாட்சியுடைய சுதந்திர நாடாகும். இதன் மொத்தப் பரப்பளவு 108.7 ஏக்கர். கத்தோலிக்க, கிறிஸ்தவத்தின் தலைமை மையமாக வத்திக்கான் நகரம் திகழ்கிறது. பரப்பளவு மற்றும் மக்கள் தொகை அடிப்படையில் உலகின் மிகச்சிறிய நாடாக விளங்குகிறது. உரோமாபுரியின் ஆயரும் உலக கத்தோலிக்க திருச்சபையின் தலைவருமான பாப்பரசர் இதன் அரசியல் தலைவராவர். 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் கத்தோலிக்கத் திருச்சபையின் 266 ஆவது பாப்பரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**டொனால்ட் ட்ரம்ப், பாப்பரசர் இடையேயான உறவு**

ட்ரம்ப் தனது தேர்தல் பரப்புரைகளின் போது கூறிய வார்த்தைகள் அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்தன. ஆனாலும் அவருக்கெதிராக குரல் எழுப்பவோ, கண்டனம் தெரிவிக்கவோ எவரும் முயலவில்லை. திருத்தந்தை துணிந்து பேசினார். அன்பை முறிக்கிறோம் என்றோ, சர்ச்சையை ஏற்படுத்துகிறோம் என்றோ, வெறுப்பை சாதிக்கிறோம் என்றோ அவர் எண்ணவில்லை.
இதன் பின்னரும் அன்பாக இருக்க முடியும். பண்பாக உறவாட முடியும் என்பதை நிரூபித்தார். இதனால் ட்ரம்ப் தனது செயற்பாடுகளை மாற்றிக் கொண்டார் அல்லது இலகுபடுத்திக் கொண்டார்.

**கத்தோலிக்கத் திருச்சபையின் கண்டனம்**

டொனால்ட் ட்ரம்ப் அரச தலைவர் பதவி ஏற்றதன் பின்பு உலகின் கவனம் முழுமையும் அவர் பக்கமே திரும்பியது. அவரின் அதிரடியான அறிவிப்புக்களும், அட்டகாசமான நடவடிக்கைகளும் முழு உலகின் கவனத்தையும் அவர்பால் ஈர்த்தன. உலகின் அதிகாரம் மிக்க அரச தலைவரின் இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராக கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் பாப்பரசர் பிரான்சிஸ் துணிவான கண்டனத்தை வெளியிட்டமை பலராலும் வரவேற்கப்பட்டது.
ஏழு இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவினுள் நுழைவதற்கு அனுமதியை மறுத்து அரச தலைவர் ட்ரம்ப் வெளியிட்ட அரசாணையை கண்டித்து கலிபோர்னியா மற்றும் ஒரேகான் மாநிலங்களின் இயேசு சபைத் தலைவர்கள்; அறிக்கையை வெளியிட்டனர். பாப்பரசரின் கண்டனத்துக்கு வலுச்சேர்த்தனர். சமய சுதந்திரத்தை ஊக்குவிக்கும் அரசாணையில் ட்ரம்ப் கையெழுத்திட வேண்டுமென ஆயர்கள் கேட்டுக்கொண்டனர். இந்த நிலையிலே திருத்தந்தை, "எனது கவலையெல்லாம் புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் குடிபெயர்ந்தவர்களைப் பற்றியதாகவே உள்ளது" எனத் தெரிவித்தார்.

**ட்ரம்பின் எல்லைச் சுவர்திட்டம் மெக்சிகோ ஆயர்கள் கண்டனம்**

அமெரிக்காவுக்கம் மெக்சிக்கோவுக்கும் இடையே சுவர் எழுப்பும் திட்டத்திற்கு அமெரிக்க அரச தலைவர் டொனால்ட் ட்ரம்ப் ஒப்புதல் அளித்துள்ளமை குறித்து தங்களது கண்டனத்தை வெளியிட்டுள்ள மெக்சிக்கோ ஆயர்கள் ட்ரம்பின் இந்த ஒப்புதல் குறித்து அறிக்கை வெளியிட்டனர்.
மெக்சிக்கோ ஆயர்கள் இவ்விரு நாடுகளுக்கும் இடையே சுவர் எழுப்புவதால் ஏராளமான மக்கள் தங்கள் குடும்பம், வேலை, விசுவாசம் மற்றும் நட்பு என்பவற்றை இழக்க வேண்டியிருக்கும் என எச்சரித்தனர். எல்லைச் சுவரைக் கட்டுவதற்குப் பதிலாக பாதுகாப்பையும் வேலைவாய்ப்பையும் உருவாக்குவது குறித்து சிந்திக்குமாறு அழைப்பு விடுத்தனர். மெக்சிக்கோ வழியாக அமெரிக்காவுக்குள் செல்லும் மத்திய மற்றும் தென் அமெரிக்க மக்களுக்கு தங்களின் ஆதரவைத் தொடர்ந்து வழங்கவிருப்பதாகவும் உறுதி கூறினர்.

> உரோமை நகரத்தின் வத்திக்கான் நகரம் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைப்பீடம் ஆகும். வத்திக்கான் நகர் இத்தாலி நாட்டின் உரோமை நகரிலுள்ள ஒரு தன்னாட்சியுடைய சுதந்திர நாடாகும். இதன் மொத்தப் பரப்பளவு 108.7 ஏக்கர். கத்தோலிக்கத்தின் தலைமை மையமாக வத்திக்கான் நகரம் திகழ்கிறது. பரப்பளவு மற்றும் மக்கள் தொகை அடிப்படையில் உலகின் மிகச்சிறிய நாடாக விளங்குகிறது. உரோமாபுரியின் ஆயரும் உலக கத்தோலிக்க திருச்சபையின் தலைவருமான பாப்பரசர் இதன் அரசியல் தலைவராவர்.

**ட்ரம்பிற்கு திருத்தந்தை வாழ்த்து**

இவ்வாண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி அமெரிக்காவின் 45ஆவது அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட டொனால்ட் ட்ரம்பிற்கு பாப்பரசர் பிரான்சிஸ் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில், "அமெரிக்காவில் புதிய அரச தலைவராகப் பதவியேற்றுள்ள டொனால்ட் ட்ரம்பிற்கு இறைவன் ஞானத்தையும் வல்லமையையும் வழங்க செபிக்கிறோம்" எனக் குறிப்பிட்டிருந்தார்.
மேலும் அவ்வாழ்த்துச் செய்தியில், " ட்ரம்ப் எடுக்கும் தீர்மானங்கள் அமெரிக்க மக்களின் வரலாற்றை வடிவமைத்துள்ள வழமையான ஆன்மீக மற்றும் நன்னெறி விழுமியங்களால் வழிநடத்தப்படும் எனநம்புகிறோம். மனித சமுதாயம் கடும் மனிதாபிமான நெருக்கடிகளால் சூழ்ந்துள்ள இக்காலத்தில் தொலைநோக்குப் பார்வையும், ஒன்றிணைந்த அரசியல் நடவடிக்கைகளும் தேவைப்படுகின்றன. ஏழைகள் மற்றும் எம் கதவுக்கு முன் நிற்கும் இலாசரைப் போன்ற தேவையில் அமெரிக்கா தொடர்ந்து செயற்படும் என நம்புகிறோம்" எனச் சுட்டிக்காட்டியிருந்தார்.

**சுவர்களை இடித்து பாலங்களைக் கட்டுவோம்**

தனிப்பட்ட அரசியல்வாதிகளை நான் தீர்ப்பிடுவதில்லை மாறாக அவர்களின் கொள்கைகள் ஏழைகளையும், சமுதாயத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்டவர்களையும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதைத்தான் பார்க்க விரும்புகிறேன் என தெரிவித்த பாப்பரசர் பிரான்சிஸ் சமத்துவமற்ற சுவர்களை இடித்துப் பாலங்களைக் கட்டுவதன் வழியாக அனைவருக்கும் அதிக சுதந்திரமும் மனித உரிமைகளும் கிடைப்பதற்கு வழியமைக்க முடியும் என தெரிவித்தார். அமெரிக்க அரசியலில் மாற்றம் ஏற்பட்டுள்ள சூழலில் பாப்பரசராக எனது கவலையெல்லாம் புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் குடி பெயர்ந்த வர்களைப் பற்றியதாகவே உள்ளது. வறுமை மற்றும் போரால் மக்கள் புலம்பெயர்வது ஒருபுறமிருக்க பணக்கார நாடுகளிலும் ஏராளமான ஏழைகள் உள்ளனர். மேலும் இந்த நாடுகள் புதிதாக வருகை தரும் புலம்பெயர்ந்தவர்களால் அச்சம் கொள்கின்றன. வெறுப்பையும் தீமையையும் தகர்க்க முடிந்த ஒரே கருவி அன்புதான்.

**நீதிமன்றத் தீர்ப்புக்கு வரவேற்பு**

புலம்பெயர்ந்தோரை நாட்டில் குடியமர்த்துதல் மற்றும் முஸ்லிம் நாடுகளைக் குறிவைத்து பயணங்களுக்குத் தடை விதித்தல் போன்ற விவகாரங்கள் தொடர்பாக அமெரிக்க அரச தலைவர் டொனால்ட் ட்ரம் நிர்வாகம் வெளியிட்ட உத்தரவுகளுக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதை வரவேற்றனர் அமெரிக்க கத்தோலிக்க ஆயர்கள். ட்ரம்பின் நிர்வாகம் தடை விதித்திருந்த நாடுகளைச் சேர்ந்த எவரும் அமெரிக்காவில் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டதற்கு எவ்விதச் சான்றுகளையும் அரசு சார்பில் சமர்ப்பிக்க முடியவில்லை என்று நீதிமன்றம் தெரிவித்தது. அரசின் தடை உத்தரவுக்கு எதிராகத் தீர்ப்பளித்தது. ட்ரம்ப் பிறப்பித்த சில நிர்வாக உத்தரவுகளின்படி சிரியா, லிபியா, சோமாலியா, சூடான், ஏமன் என ஏழு நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவினுள் வருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள் ளது.
இந்த நிலையில் பாப்பரசர் பிரான்சிஸ் மற்றும் அமெரிக்க அரசுத்தலைவர் டொனால்ட் ட்ரம்ப் ஆகியோர் கடந்த மே மாதம் 24 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு திருப்பீடத்தில் சந்தித்தனர்.
முன்னதாக ட்ரம்ப் தனது தேர்தல் பரப்புரையின் போது கறுப்பினத்தவர்களுக்கு எதிராகவும் அகதிகள் மற்றும் முஸ்லீம்களுக்கு எதிராகவும் தொடர்ச்சியாக வெறுப்பை கக்கும் பேச்சை உதிர்த்து வந்தார். இதனைக் கவனித்த பாப்பரசர் பிரான்சிஸ் வேறெரு நாட்டினரை உள்ளே அனுமதிக்க கூடாது என்ற எண்ணத்தில் எல்லையில் சுவர் எழுப்புவது பற்றி யோசிக்கும் ஒரு நபர் உண்மையில் கிறிஸ்தவர் அல்லர் என்று துணிந்து கடுமையாகச் சாடினார். இதனால் இருவருக்கும் இடையில் இணக்கமான சூழல் இல்லாத நிலை இருந்தது. இந்த நிலையில் அவர்கள் இருவருக்குமான சந்திப்பு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், பெரிதும் எதிர்பார்க்கப்பட்டதாகவும் இருந்தது. பாப்பரசர் எந்த வேறுபாடும் இன்றி அன்போடும் மதிப்போடும் அமெரிக்க அரச தலைவரைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது ட்ரம்ப், "எமக்கு அமைதி பயனளிக்கும். உங்களுடனான சந்திப்பை மறக்கவே மாட்டேன். அனைத்துக்கும் நன்றி. நீங்கள் சொன்னதை நினைவில் வைத்துக்கொள்வேன்"எனக்குறிப்பிட்டார்.



ஆக, அரசத்தலைவர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் பாப்பரசர் இடையேயான உறவு மேலும் வளரவும் அதன்வழி உலக நடவடிக்கைகள் என்றும் புதுமைப்படுத்தப்பட வும் இறைவரம் வேண்டுவோம்.

## வாடகைக்குண்டு

பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

**077 562 5812**

## காணி, வீடு விற்பனைக்கு

அரியாலை, மாம்பழம் சந்தியில் இருந்து 500m தூரத்திற்குட்பட்டு 1 1/4 பரப்பு காணியும் சகல வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு.

**தொடர்பு - 077 254 3121**

## மருந்து இல்லா மருந்து வைத்தியம்

நாட்பட்ட வாதம், Asthma, Psoriasis, கடி, Kidney failure ஆரம்பக்கட்டம், இருதயவலி, குழந்தைவாதம், முள்ளந்தண்டு நோய்கள், சத்திர சிகிச்சை தேவையில்லை, சத்திர சிகிச்சை செய்து தோல்வி கண்டவர்கள், சத்திர சிகிச்சை செய்ய பயந்தவர்கள், இயலாதவர்கள், குழந்தை வேண்டுபவர்கள், பக்கவிளைவுகள் அற்ற சிறப்பு மூலிகை சிகிச்சை. விவரம் அறிய

**Dr.R.Sivagurunathan**
**077 730 1669**
**No.54, 33rd Lane, Wellawatte.**
**(யாழ்ப்பாணத்திலும் சந்திக்கலாம்)**

## மணமகள் தேவை (Girl)

Australiya இல் வங்கியிலும், குடிவரவு சம்பந்தப்பட்ட திணைக்களத்திலும் வேலைபார்த்து தற்சமயம் சொந்தமாக தொழில் புரியும் 30 - 35 வயது மதிக்கத்தக்க 40 வயதை தாண்டிய நற்பண்புகளை கொண்ட இலங்கை வந்துள்ள 7 வருடங்களுக்கு முன் விவாகரத்தாகிய MBA பட்டதாரி மகனுக்கு கௌரவ குடும்பத்தை சேர்ந்த கொழும்பிலுள்ள பெற்றோர் நற்குணங்களையும் உயர்ந்த பண்பு களையும் கொண்ட பெண்ணை தேடுகின்றார்கள்.

076 889 2133, 011 236 2396

ananthasoruban@yahoo.com.au/
+ 614 017 97858

## சேவை

உங்களின் வீட்டை அமைத்துக் கொள்ளவும் இருக்கும் வீட்டினை புனரமைப்பு செய்யவும் வரைபடம் தயாரித்தல், வர்ணம் பூசுதல் போன்ற சேவைகளை பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.

**Dushhomes and Construction**
தொடர்புகளுக்கு - சுகந்தன்
T. P : 077 296 0017, 075 622 9565, 077 6165 290

## மரண அறிவித்தல்



**திருமதி அம்பிகை (தங்கம்) கணேசலிங்கம்**

ஊர்காவற்றுறை, நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான திருமதி அம்பிகை கணேசலிங்கம் 08.09.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நாரந்தனை வடக்கு காலஞ்சென்ற திரு திருமதி வைரமுத்து - இராசம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் சரவணை மேற்கு காலஞ்சென்ற திரு திருமதி குழந்தைவேலு - பராசக்தி தம்பதிகளின் அன்பு மருமகளும் குழந்தைவேலு கணேசலிங்கம்(ஓய்வு நிலை அதிபர் வேலணை மத்திய கல்லூரி) இன் அன்பு மனைவியும் உமையாள், கலைவாணி, சரவணன், சிவகாமி ஆகியோரின் அன்புத் தாயாரும் குலதீபன், சதீஸ்கரன், அனுஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - தர்மநாயகி மற்றும் பரஞ்சோதி - இந்திரா, சபாநாதன் - ஈஸ்வரி, ராதாதேவி - இராஜலிங்கம் ஆகியோரின் சகோதரியும், மைத்துனியும் வள்ளிநாயகி - திருநாவுக்கரசு, குறிஞ்சிவேந்தன் - சாந்தி, பகீரதி - கந்தப்பிள்ளை, மகாதேவன் - திருமணச்செல்வி, சுந்தரமூர்த்தி -வசந்தா, புஷ்பராணி - கணேசமூர்த்தி, செவ்வேள் -வளர்மதி ஆகியோரின் மைத்துனியும், சகலியும் தானியா, அனீரா, சமரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 4.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று மாலை 6.00 மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: கு.கணேசலிங்கம் (கணவர்)**
**குடும்பத்தினர்.**
**32, 4/6, மாதங்கவத்தலேன்,**
**வெள்ளவத்தை, கொழும்பு - 06**
**011 236 7217 / 077 580 5500**

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2927 திகதி 09.09.2017

| வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து | | | | | போனஸ் இல. | திங்கட்கிழமை ஜக்பொட் |
|---|---|---|---|---|---|---|
| 26 | 34 | 49 | 74 | D | 13 | 40, 895, 925/- |

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 07 31 54 71

நீல நிற டிக்கட்டுக்கள் 2017.09.11 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## நுரையீரல் பாதிப்பிலிருந்து விடுபடுங்கள்

**இருமல், இழுப்பு நோய், மார்பு இறுக்கம், சுவாசக்குறைபாடு ஆகியன சுவாசத் தொகுதியின் செயற்பாட்டிற்கு பாதிப்பு ஏற்படுத்தும்.**

நாட்பட்ட மூச்சுக்குழல் அழற்சி, இழுப்பு நோய், சயரோகம், நிமோனியா, நுரையீரல் புற்றுநோய் என்பன சுவாசம் இழப்பு தொடர்பான நோய்களுக்கு வழிவகுக்கும்.

எமது உன்னதமான ஆயுர்வேத மருந்தானது சுவாசப்பாதையின் சளியை அகற்றுவதன் மூலம் சுவாசத்தை இலகுபடுத்துவதும் **வைரஸ் மற்றும் பக்டீரியா** தொற்று நோய்களிலிருந்தும் குணப்படுத்துவதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.



**FAIR PHARMA (PVT) LTD**
செலிங்கோ ஹவுஸ், 10ஆம் மாடி, கிழக்கு கோபுரம், இல.69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01.
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

Hotline: 0777 555 600 / 0777 708 310 / 0777 708 330
Office 011 4 388 200/ 4 388 100 / 4 388 101/4 388 102

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மழலையாய் மண்ணில் 18.05.1981

தெய்வமாய் விண்ணில் 10.09.2010

அமரர்

**இராசரத்தினம் செந்தில்பிரகாஸ்**

மனிதப்பிறப்பு விட்டு வானுலகேகிய எம்மகனே
குனித்த புருவமும் கொவ்வைச்செவ்வாயில்
குமிண் சிரிப்பும் பனித்த சடையும் பவளம்போல் மேனியில்
பால்வெண்ணீறும் இனித்தமுடைய எடுத்த பொற் பாதமும்
காணப் பெற்றாய்
நினைத்து அவர்பாதத்து இன்புற்றிருக்க இறைஞ்சுகின்றோம்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.
077 220 9634

## அறை வாடகைக்கு

யாழ்.வைத்தியசாலைக்கு அண்மையில் ஒருவர் அல்லது 4பேர் தங்கக்கூடிய அறை வாடகைக்கு உண்டு.

**077 923 8376**

## மணமகள் தேவை

கௌரவ கிறிஸ்தவ பிரபல கவிஞர் குடும்பத்தைச் சேர்ந்த 38+ வயதுடைய Software Developer க்கு (6 - 12) வயது வித்தியாசத்தில் மணப்பெண் தேவை.

View www.Seaaav.com/ME/then Call 077 242 0337

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் வீடு வாடகைக்குண்டு. உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 0767347397**

## Personal Classes

**Java, DOT NET, PHP, MYSQL, A/L ICT, MS office** ஏனைய **ICT** பாடங்கள் விசேடமாக வீட்டில் வந்து கற்பித்துக் கொடுக்கப்படும்

**தொடர்பு - 077 4086 936**

## SUPER BALL — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் ▸ 700
சீட்டிழுப்பு திகதி ▸ 09.09.2017 சனிக்கிழமை

| எழுத்து | இலக்கம் | இலக்கம் | இலக்கம் | இலக்கம் | சுப்பர் ஜக்பொட் |
|---|---|---|---|---|---|
| Y | 03 | 28 | 67 | 69 | ரூ. 58, 872, 864/= |

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 05 18 29 70

ஊதா நிற டிக்கட்டுகள் 2017.09.11 ஆம் திகதி திங்கட்கிழமை கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.20ம், 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ.50,000 வெல்லமுடியும்.

தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

சம்வர்தன வாசனாவ — Development Fortune — அபிவிருத்தி அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு வாரம் ▸ 073
சீட்டிழுப்பு திகதி ▸ 09.09.2017 சனிக்கிழமை

| வெற்றி இலக்கங்கள் | | | | சுப்பர் இலக்கம் | அதிர்ஷ்ட மாதம் |
|---|---|---|---|---|---|
| 02 | 08 | 15 | 46 | 01 | மே |

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| ரூ. 16, 574, 818/= | ரூ. 3, 286, 901/= | ரூ. 2, 770, 686/= |

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 27 36 48 54


2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.20ம் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ 50,000ம் வெல்ல முடியும்

2017.09.14 ஆம் திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## Baraka — கருஞ்சீரக எண்ணெய் (Black Seed Oil)

ஆரோக்கியமான வாழ்க்கை, நாளாந்தம்




- ஆஸ்துமா
- பீனிசம்
- இருமல்
- தும்மல்

½ தேக்கரண்டி வீதம் தினமும் காலையில் குடித்து வருவதோடு, எண்ணையின் சிறிய அளவை சூடாக்கி பூச வேண்டும். கொதிக்கும் நீரில் கருஞ்சீரக எண்ணெய் சிறிதளவு விட்டு ஆவி பிடிக்கவும். 3 தொடக்கம் 7 நாட்கள் வரை மேற்கொள்ள வேண்டும்.

GMP, HACCP, ISO 22000 & 14001 CERTIFIED COMPANY
☎ 0117 772277
www.baraka.lk

## கண்ணீர் காணிக்கை



சரவணை தேவபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் பரிபாலன சபைத் தலைவரும் திருப்பணிச் சபைத்தலைவரும் ஓய்வுபெற்ற அதிபரும் (வேலணை மத்திய கல்லூரி) ஆகிய

கு.கணேசலிங்கம்

அவர்களின் அன்பு மனைவி

**திருமதி அம்பிகை கணேசலிங்கம்**

இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல சரவணை - ஸ்ரீ கதிர் வேலவனை வேண்டிநிற்பதோடு அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் துயரிலும் பங்கு கொள்கின்றோம்.

**பரிபாலன சபையினரும் திருப்பணிச் சபையினரும்,**
**சரவணை - தேவபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவில், சரவணை வேலணை.**

# 1,500 குடும்பங்களுக்கு மன்னாரில் அரச காணி

## அரச தலைவர் செயலணி நேற்று ஆராய்வு

மன்னார், செப். 10

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் காணி அற்ற 1500 குடும்பங்களுக்குக் காணி வழங்குவது மற்றும் அதற்கான இடம் தொடர்பில் அரச தலைவர் செயலணியின் தலைவர் பொரளஸ் தலைமையிலான குழுவினர் மன்னார் மாவட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தினர்.

இந்தக் கலந்துரையாடலில் மீள்குடியேற்றச் செயலணியின் உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவினரும் கலந்துகொண்டனர். காணி அற்றவர்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்ததோடு நகர்ப் பிரதேசத்தில் எந்த அரச காணியும் இன்மையால் மேற்கொள்ளக்கூடிய மேலதிக வழிவகைகள் தொடர்பிலும் ஆராய்ந்தனர்.

இதேபோன்று கடற்கரையோரங்களை வன உயிரினங்கள் திணைக்களம் வர்த்தமானி அறிவித்தல் மூலமாகச் சுவீகரித்துள்ளதால் மீனவர்கள் பெரும் நெருக்கடியை எதிர் கொள்வது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அந்த நெருக்கடியால் மீனவர்களுக்கான மேம்பாடுகள் தடைப்படுவதாகவும் குறிப்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் மன்னாரில் 8 இறங்குதுறைகளின் சீரமைப்புக்கு நிதி அனுமதிக்கப்பட்டபோதும் 4 இறங்குதுறைகள் வன உயிரினங்கள் திணைக்களம் உரிமைகோரும் பகுதிக்குள் அகப்பட்டமையால் அபிவிருத்திக்குத் தடையாகவுள்ளது என அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது. (மற்றொரு செய்தி 2ஆம் பக்கம்) (வ-4101)

# அனைவருக்கும் வீடு

## அரச தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 10

தற்போதைய அரசின் ஆட்சிக் காலத்தில் நாட்டின் அனைத்து மக்களுக்கும் வீட்டுக்கான உரிமை பெற்றுக்கொடுக்கப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



திம்புலாகலை மீவத்புர சதரெஸ்கம மாதிரிக் கிராமத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேசிய வீடமைப்பு திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 40ஆவது மாதிரிக் கிராமம் சதரெஸ்கம மாதிரிக் கிராமமாகும். இது பொலன்னறுவை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட 4ஆவது கிராமமாகும். நாடெங்கிலும் 454 கிராமங்களின் நிர்மாணப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்து 34 வீடுகளைக் கொண்ட சதரெஸ்கம மாதிரிக் கிராமத்தை மக்களிடம் கையளித்த அரச தலைவர், முதலாவது வீட்டு உரிமையாளருக்கான வீட்டை வழங்கிவைத்தார். நாடாவை வெட்டி வீட்டைத் திறந்துவைத்த அரச தலைவர் அந்த குடும்ப உறுப்பினர்களுடன் சுமுகமாக கலந்துரையாடினார்.

ஏனைய வீட்டு உரிமையாளர்களிடம் வீடுகளின் திறப்புகளை அரச தலைவர் வழங்கிவைத்தார். சதரெஸ்கம மாதிரிக் கிராமத்தின் நினைவு வெளியீடு அமைச்சர் சஜித் பிரேமதாசவால் அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டு வீட்டுத் தேவைகள் குறித்த ஆய்வறிக்கை அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டது. (5)



# பௌத்த மக்களுக்கு ஆற்றிய பணிக்காகவே லலித் சிறைக்குள்

## மகிந்த கூறுகின்றார்

கொழும்பு, செப். 10

தமது முன்னாள் செயலராகப் பணியாற்றிய லலித் வீரதுங்க எந்தத் தவறையும் செய்யவில்லை. நாட்டின் பௌத்தர்களுக்கு அவர் ஆற்றிய பணிக்காகவே இந்த நிலைக்கு உள்ளாகியுள்ளார். இவ்வாறு முன்னாள் ஆட்சியாளர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அரசுக்குச் சொந்தமான 600 மில்லியன் ரூபா நிதியை தவறான முறையில், தேர்தல் பரப்புரைக்காகப் பயன்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதை அடுத்து, மகிந்த ராஜபக்சவின் முன்னாள் செயலரான லலித் வீரதுங்கவுக்கும், தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் அனுஷ பெல்பிட்டவுக்கும், தலா 3 ஆண்டு சிறைத்தண்டனையை கொழும்பு மேல் நீதிமன்றம் விதித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள மகிந்த ராஜபக்ச, லலித் வீரதுங்க எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை என்று கூறியுள்ளார். குற்றம்சாட்டப்பட்டுள்ள லலித் வீரதுங்கவும், அனுஷ பெல்பிட்டவும் அப்பாவிகள் என்று குறிப்பிட்டுள்ளார். (5)

---

### அதிகாரங்கள்...

சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குதல் போன்ற முக்கிய விடயங்கள் அரசமைப்புத் திருத்தச் செயற்பாட்டின்போது பேசப்படுகின்றன.

13ஆவது திருத்தச் சட்டம் இந்த நாட்டில் 100வீதம் நடைமுறையில் இல்லை. போர் முடிவுக்குவந்தபோதிலும், தேசியப்பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. இந்தப் பிரச்சினையை முழுமையாகத் தீர்ப்பதற்கான ஒரே வழி 13ஆம் திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுதான்.

13ஆம் திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது ஒரு பிரச்சினை உண்டு. அன்று இந்தத் திருத்தச் சட்டம் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்டபோது நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமை நடைமுறையில் இருப்பதால்தான் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதிதருகின்றோம் என்று நீதிமன்றம் அறிவித்தது.

நிறைவேற்று அதிகாரம் இருக்க வேண்டும் என்பதைத்தான் இது கூறுகின்றது. மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிரும்போது அந்த அதிகாரங்களை நிர்வகிப்பதற்கு நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமை இல்லாவிட்டால் நிலமை மோசமாகிவிடும்.

நிறைவேற்று அதிகாரத்தைத் தக்கவைப்பது தொடர்பில் நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசினோம். மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்படும்போதும் அந்த அதிகாரங்கள் ஏதோவோர் இடத்தில் நிர்வகிக்கப்படுவதை அவர்கள் விரும்புகின்றனர். அந்தப் பொருத்தமான இடம் நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர்தான்.

அதிகாரம் பகிரப்பட்டதன் பின் இனப் பிரச்சினைகள் தோன்றாதிருப்பதற்கு பகிரப்பட்ட அதிகாரம் வேறோர் இடத்தில் நிர்வகிக்கப்பட வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும். இப்போது இருக்கின்ற நிறைவேற்று அதிகாரம்தான் இருக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. பகிரப்படும் அதிகாரத்தை நிர்வகிக்கக்கூடிய ஒரு பொருத்தமான நிறைவேற்று அதிகாரம் இருந்தால் போதும். தேவையற்றமோசமான நிறைவேற்று அதிகாரங்கள் நீக்கப்பட்டால் பரவாயில்லை, என்றார். (வ-5,3)

### செயலாளர்களை...

றப்பட்டன. இதற்கு அமைவாக அமைச்சுச் செயலாளர்களும் மாற்றப்பட்டிருந்தனர்.

புதிய அமைச்சர்கள் இருவர் தமது அமைச்சுச் செயலாளர்களை மாற்றுமாறு, மூன்றாம் தரப்புக்கள் ஊடாக அழுத்தம் கொடுத்து வருவதாக அறிய முடிகின்றது. தமக்கு வேண்டிய சிலரது பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களைத் தங்களின் செயலாளர்களாக நியமிக்குமாறு கோரியிருப்பதாகவும் தெரியவருகின்றது.

வடக்கு மாகாண முதலமைச்சரும் தனது செயலாளரை மாற்றுமாறு, வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரியிருப்பதாக அறிய முடிகின்றது. (வ-5,101)

### தவராசாவை...

மாகாண சபை மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருந்தார். இதற்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி பதிலளித்திருந்தார். அதில் அவர் எதிர்கட்சித் தலைவர் சி.தவராசாவை மிகக் கடுமையாகச் சாடியிருந்தார்.

இது தொடர்பிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, அலைபேசி ஊடாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைத் தொடர்பு கொண்டு தனது பாராட்டைத் தெரிவித்துள்ளார். விரைவில் நேரில் பேசுவதாகவும் இதன்போது டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார். (வ-5,101)

### கிளிநொச்சியில்...

"இரண்டு கும்பல்களுக்கு இடையேயான முரண்பாடே வாள்வெட்டுச் சம்பவத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. தீ வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் வாள்வெட்டுக் கும்பல் ஒன்றைச் சேர்ந்தவருடையதாக இருக்கலாம். மோட்டார் சைக்கிளுக்குத் தீ வைக்கப்பட்டபோதும் அதனை அணைக்காததால் அது எரிந்து நாசமாகியது" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவத்தால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (வ-46)

### பெற்றோல்...

நேற்று இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த ரமேஸ்குமார் (வயது 28) என்பவரும் அவரது மகன் சுயன் (வயது - 2) ஆகியோரே எரிகாயமடைந்தனர். சிறுவனின் உடலில் அதிகளவில் தீ பட்டு எரிகாயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4-101)

### மல்வத்து...

றனர். அங்குள்ள மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு நாம் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றோம். அங்குள்ள நிலமையை தென்னிலங்கையில் உள்ளவர்கள் சரியாக உணர வேண்டும். எங்களுக்குள்ள குறைபாடுகளை அரசுக்கு நீங்கள் எடுத்துக் கூற வேண்டும். எந்தப் பிரச்சினையையும் கலந்துரையாடித் தீர்வைக்காண வேண்டும்" என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சந்திப்பில் எடுத்துக் கூறியுள்ளார்.

சந்திப்பின் முடிவில், மகாநாயக்க தேரர் புத்தர் சிலையொன்றையும் தம்மபத போதனைகள் அடங்கிய நூல் ஒன்றையும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு வழங்கினார்.

தமிழ் மக்கள் பேரவையால் வெளியிடப்பட்ட தீர்வுத் திட்டம் இந்தச் சந்தர்ப்பத்தில் கையளிக்கப்பட்டதாக தெரியவருகின்றது.

சந்திப்பின் முடிவில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், "நாங்கள் பயங்கரவாதிகள் இல்லை. நாட்டைப் பிளவுபடுத்தக் கேட்கவில்லை. கூட்டாட்சி என்பது நாட்டைப் பிரிப்பதற்கானது அல்ல. அது நாட்டை ஒன்றிணைப்பதற்கானதுதான். இதனை அவரிடம் எடுத்துக் கூறினேன். அரசியல்பற்றி அதிகம் பேசவில்லை. வடக்கு மாகாண சபை ஆரம்பித்ததிலிருந்து அவர் வடக்கு மாகாணத்துக்கு வரவில்லை. அவரை வருமாறு கேட்டுக் கொண்டேன்" என்றார்.

இந்த மாதம் 21ஆம் திகதி நாடாளுமன்றில் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், மகாநாயக்க தேரர்களை, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சந்திக்கத் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-5,101,102)

### வட மாகாண...

விடுத்திருந்தது. இந்த ஆண்டு அதில் 110 மில்லியன் ரூபாவை மாத்திரம் அதிகமாகக் கோரியுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் கீழான திணைக்களங்களுக்கு ஆயிரத்து 493 மில்லியன் ரூபாவும், விவசாய அமைச்சுக்கு ஆயிரத்து 783 மில்லியன் ரூபாவும், கல்வி அமைச்சுக்கு 3 ஆயிரத்து 364 மில்லியன் ரூபாவும், சுகாதார அமைச்சுக்கு 2 ஆயிரத்து 149 மில்லியன் ரூபாவும், மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சுக்கு ஆயிரத்து 520 மில்லியன் ரூபாவும் தேவை என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு அரசால் 2016ஆம் ஆண்டு, ஊழியர்களின் சம்பளம் மற்றும் அபிவிருத்திக்காக 32 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா தேவை என்று கொழும்பு அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. கொழும்பு அரசால் 22 ஆயிரத்து 94.851 மில்லியன் ரூபா நிதியே ஒதுக்கப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிடம் எந்தவொரு முன்மொழிவும் பெற்றுக் கொள்ளப்படாமலேயே, கொழும்பு அரசிடம் அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டதுக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-5,101)

### 3 லட்சம்...

வித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை வரை ஒரு லட்சத்து 64 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்திருந்தனர். மேலும் பல பகுதிகளில் அந்த மக்கள் வந்து சேர்ந்திருப்பது கண்டறியப்பட்ட நிலையில், 2 லட்சத்து 70 ஆயிரம் பேர் நேற்றுவரை பங்களாதேஷுக்குப் புலம்பெயர்ந்துள்ளனர் என பன்னாட்டுச் செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சூழ்நிலை "மிகவும் அச்சமூட்டுவதாக" தெரிவிக்கப்படும் அதேவேளை, மியன்மாரில் நிலவும் சூழ்நிலைக்குத் தீர்வு காண உடனடியாக நடவடிக்கை தேவை என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தங்கள் கிராமங்களை தீ வைத்துக் கொளுத்தும் மியன்மார் இராணுவத்தினர், தங்களையும் தாக்குவதால்தான் நாட்டை விட்டு தப்பிச் செல்வதாக ரோஹிங்யா முஸ்லிம்கள் கூறுகிறார்கள்.

ரோஹிங்யா முஸ்லிம்களின் வீடுகளுக்குத் தீ வைப்பது யார்?

கடந்த ஓகஸ்ட் 25ஆம் தேதி மியன்மாரின் வடக்கே உள்ள ரகைன் மாநிலத்தில் சோதனைச் சாவடியை ரோஹிங்யாக்கள் தாக்கியதால் இந்த வன்முறை வெடித்தது.

பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் மியன்மாரில், நாடற்ற, பெரும்பாலும் முஸ்லிம் சிறுபான்மையினரான ரோஹிங்யாக்கள், தங்களை இராணுவம் மற்றும் பௌத்தர்கள் மோசமான முறையில் நடத்துவதாகக் கூறுகிறார்கள்.

இந்தக் குற்றச்சாட்டை மறுக்கும் மியன்மார் அரசு, தனது இராணுவம் ரோஹிங்யா கிளர்ச்சியாளர்களை மட்டுமே தாக்குவதாகத் தெரிவித்துள்ளது.

"பங்களாதேஷுக்குள் வந்துள்ள ரோஹிங்யாக்களின் எண்ணிக்கையானது கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் புதிதாக வந்தவர்களால் உயர்ந்து விடவில்லை என்றும், இதுவரை அறியப்படாத பல்வேறு பகுதிகளில் மக்கள் வந்துள்ளது தற்போதுதான் தங்களுக்குத் தெரியவந்துள்ளதாகவும் அதனால், இந்த எண்ணிக்கை உயர்ந்துள்ளதாகவும்" ஐ.நா. அகதிகள் நிறுவனத்தைச் சேர்ந்த செய்தித் தொடர்பாளர் விவியன் டான் தெரிவித்தார். (வ)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 10

**திக்கம் மத்தியின் கால்பந்துத் தொடர்**

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்பட்டுவரும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜோசவாஸ் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிவாந்தா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி ஏ.எல். விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**சென். அன்ரனிஸின் கால்பந்துத் தொடர்**

மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஏழாலை பை ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**சரஸ்வதி ச.ச.நி. கால்பந்தாட்டம்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் வருடாந்தம் நடத்தும் 'யாழின் கில்லாடி' கால்பந்தாட்டத் தொடரில் நடப்பு வருடத்துக்கான ஆட்டங்கள் யாழ்ப்பாணம் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சிநிலையமைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றன.

இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொற்றவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இருதயராஜா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மதியம் 12 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞானாராசா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 1.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். ஐக்கியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதய சூரியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம- 422-108-23)




# ஆவரங்கால் மத்தி. வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், செப். 10

அரியாலை திருமகள் சனசமூக நிலையம் தனது 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நல்லையா சதீஸ்குமார் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்திய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

குறித்த கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதியது.

முதல் இரு செற்களிலும் ஆதிக்கம் செலுத்திய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25:22, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற்களைக் கைப்பற்றியது. ஆனால் அடுத்த மூன்று செற்களிலும் ஆதிக்கம் செலுத்திய ஆவரங்கால் மத்திய அணி 25:20, 25:22, 16:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அவற்றைக் கைப்பற்றி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. ஆட்ட நாயகனாக ஆவரங்கால் மத்திய அணியின் நித்தியானந்தன் தெரிவுசெய்யப்பட்டார். (ம-422)

# சென். ஜோசப், சுடரொளி அடுத்த சுற்றுக்குத் தகுதி

மன்னார், செப். 10

மன்னார் கடற்பூக்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் சென். ஜோசப், புதிய சுடரொளி அணிகள் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

கடற்பூக்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் ஆண்டான்குளம் சென். தோமஸ் 'பி' அணியை எதிர்த்து அரிப்பு சென். ஜோசப் அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளின் வீரர்களும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடிக் கொண்டிருந்தனர். கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் சென். ஜோசப் அணியின் ஆதிக்கம் மெலோங்கியது. ஆட்டத்தின் 5ஆவது, 8ஆவது நிமிடங்களில் சென். ஜோசப் அணியின் அருள்ராஜ் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவு செய்தார். 12ஆவது நிமிடத்தில் நிதர்சன் 18ஆவது நிமிடத்தில் நிதுசன் ஆகியோர் அடுத்தடுத்து கோலைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் அரிப்பு சென். ஜோசப் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் வட்டக்கண்டல் புதிய சுடர்ஒளி அணியை எதிர்த்து இணையும் கரங்கள் அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல்பாதி. இடைவேளைக்கு பின்னரான ஆட்டத்திலும் விடாப்போராட்டம் நீடித்தது. ஆட்டத்தின் 16ஆவது நிமிடத்தில் புதிய சுடரொளி அணியின் அந்தோனி ஒரு கோலைப் பதிவு செய்ய அதுவே ஆட்டத்தின் இறுதிக் கோலாகவும் அமைய முடிவில் புதிய சுடரொளி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

(ம - 422)

# அன்ரனிஸ் டயமன்ஸ் இறுதிக்கு

யாழ்ப்பாணம், செப். 10

உரும்பிராய் சென். மைக்கல் வினையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் சென். மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதவுள்ளது. உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று இரவு 8 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

(ம-23)

# சாதிக்குமா வீரகத்திப்பிள்ளை மகா வித்தி. .

யாழ்ப்பாணம், செப். 10

இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட அஞ்சலோட்டத்தில் 18 வயதுப்பிரிவில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணி இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட அஞ்சலோட்டப்போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. 4 வீரர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது. இறுதிப்போட்டி இன்று நடைபெறவுள்ளது.

(ம-422)

# நீர்கொழும்பு மரியாள் கல்லூரி வென்றது தங்கம்



யாழ்ப்பாணம், செப். 10

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட அஞ்சலோட்டத்தில் 12 வயது பெண்கள் பிரிவில் நீர்கொழும்பு ஆவே மரியாள் கல்லூரி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. 12 வயதுப் பிரிவு பெண்களுக்கான 4 நபர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் நீர்கொழும்பு ஆவே மரியாள் பாடசாலை அணி 58.90 செக்கன்களில் ஓடிமுடித்து தங்கப் பதக்கத்தையும், கண்டி மகமாய பெண்கள் வித்தியாலய அணி 59.20 செக்கன்களில் ஓடிமுடித்து வெள்ளிப் பதக்கத்தையும் நாவலப்பிட்டிய சென். அன்ரூஸ் பெண்கள் பாடசாலை அணி 59.60 செக்கன்களில் ஓடிமுடித்து வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தன. (ம-23)



# சென். பெனடிக்ற் வென்றது தங்கம்

யாழ்ப்பாணம், செப். 10

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட அஞ்சலோட்டத்தில் 16 வயது ஆண்கள் பிரிவில் சென். பெனடிக்ற் கல்லூரி அணி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இந்தப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. 16 வயதுப்பிரிவில் 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் கொழும்பு சென். பெனடிக்ற் கல்லூரி அணி 44.60 செக்கன்களில் ஓடிமுடித்து தங்கப்பதக்கத்தையும், சென். தோமஸ் கல்லூரி அணி 45.20 செக்கன்களில் ஓடிமுடித்து வெள்ளிப் பதக்கத்தையும், கண்டி திரித்துவக் கல்லூரி அணி 45.30 செக்கன்களில் ஓடிமுடித்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றின. (ம-23)

# நடாலுடன் மோதுகிறார் அன்டர்சன்

அமெரிக்க ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார் தென்னாபிரிக்க வீரர் அன்டர்சன்.

அமெரிக்க ரென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் 28ஆம் இடத்தில் உள்ளவரான அன்டர்சன், தரப்படுத்தலில் தன்னைவிட முன்னிலையில் உள்ளவரான ஸ்பெய்ன் வீரர் பஸ்டாவை எதிர்த்து மோதினார். 4:6 என்ற செற் கணக்கில் முதல் செற்றை இழந்தார் அன்டர்சன். ஆனால் அவர் சரிவில் இருந்து மீண்டு அடுத்த மூன்று செற்களையும் முறையே 7:5, 6:4, 6:3 என்ற பள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:! என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)





# மற்றொரு இறுதியில் கால்பதித்தார் நடால்

அமெரிக்க ரென்னிஸ் தொடரில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிக்குத் தகுதி பெற்றார் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால்.

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான நடாலை எதிர்த்து பன்னாட்டுத் தரப்படுத்தலில் 24ஆவது இடத்தில் உள்ளவரான டெல்போட்ரா மோதினார்.

முதலாவது செற்றை 4:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார் நடால். ஆனால் அவர் அடுத்த மூன்று செற்களிலும் மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி அவற்றை 6:0, 6:3, 6:4 என்ற புள்ளி களின் அடிப்படையில் கைப்பற்றினார்.

இதனால் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார்.

அமெரிக்கத் தொடரைப் பொறுத்தவரை கடந்த 4 ஆண்டுகளுக்குப் பின்னர் நடால் இறுதியாட்டத்துக்கு வந்துள்ளார். இந்த வருடத்தில் அவர் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். ஆஸ்திரேலியத் தொடரில் இறுதியாட்டம் வரை முன்னேறியிருந்தார். பிரான்ஸ் தொடரில் சம்பியனாகியிருந்தார். தற்போது அமெரிக்கத் தொடரிலும் அவர் இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார். (ம)

# தற்போது ஓய்வில்லை என்கிறார் கோக்லி

'அடுத்த பத்து வருடங்களுக்கு ஓய்வுபெறும் எண்ணமில்லை' இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி. டெல்லியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

'இந்திய வீரர்கள் அனைவரும் தற்போது சிறந்த திறனில் உள்ளனர். எத்தனை காலம் எம்மால் விளையாட முடியும் என்பதை யாராலும் கணிக்க முடியாது. எனது திட்டங்கள் அனைத்தும் சரியாக அமைந்தால் குறைந்தது அடுத்த பத்து ஆண்டுகளுக்கு நான் தொடர்ந்தும் களமிறங்குவேன். ஆஸ்திரேலிய அணியை எதிர்கொள்ள சிறப்பான தயார்நிலையில் உள்ளோம்' என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)



# மெடிசன் கீஸ் - ஸ்ரீபன்ஸ் இறுதிக்குத் தகுதி





அமெரிக்க ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிக்குத் தகுதி பெற்றனர் அமெரிக்க வீராங்கனைகளான மெடிசன் கீஸ் மற்றும் ஸ்ரீபன்ஸ்.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தல் வீனஸ் வில்லியம்ஸை எதிர்த்து 83ஆம் நிலை வீராங்கனை ஸ்ரீபன்ஸ் மோதினார். முதலாவது செற்றை 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் ஸ்ரீபன்ஸ்.

அடுத்த செற்றை 6:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் வீனஸ். இறுதிக்குத் தகுதிபெறுபவரைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஸ்ரீபன்ஸ் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றார்.

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் 16ஆவது இடத்தில் உள்ள மெடிசன் கீஸ் 6:1, 6:2 என்ற நேர் செற் கணக்கில் வன்டேவெஜை வீழ்த்தி இறுதிக்குத் தகுதி பெற்றார். அரையிறுதிக்குத் தகுதிபெற்றிருந்த நால்வரும் அமெரிக்க வீராங்கனை கள்.

இவ்வாறு அரையிறுதியில் அமெரிக்க வீராங்கனைகள் நால்வர் விளையாடுவது 36 வருடங்களுக்குப் பின்னர் இதுவே முதல்முறை. (ம)

## கால்பந்துத் தொடர்

இலங்கை சிரேஷ்ட கால்பந்தாட்டச் சங்கம் தேசிய ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. இதன்படி காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வவுனியா சீனியர் ஸ்ரார் அணியை எதிர்த்து வடமராட்சி சொக்கர் மாஸ்டர் அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வடமராட்சி சொக்கர் மாஸ்டர் அணியை எதிர்த்து திருகோணமலை சொக்கர் மாஸ்டர் அணி மோதவுள்ளது. (ம-23)

**Win Repair**

சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும் A/C களும் உங்கள் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். - 077 964 8942

**மின்னிணைப்பாளர்களுக்கான வேலைவாய்ப்பு**

மின்சாரவேலை தெரிந்தவர்களும், ஓரளவு மின்சார வேலை பயிற்சி பெற்றவர்களும் தேவை.
(யாழ்.நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:-
077 315 1289

**தேவை**

எமது சிறுவர் இல்லத்துக்கு
முகாமையாளர் - ஆண் (40 வயதுக்கு மேல்)
உடன் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே - 071 535 4504 / 071 535 4500
எமது முகவரி - செஞ்சோலை சிறுவர் இல்லம். கிளிநொச்சி.
மின்னஞ்சல் முகவரி :- sencholai1992@gmail.com
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
(நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

**விற்பனைக்கு**

மின்தறி (நெசவு) இயந்திரங்கள்
**(Weaving Machineries)**
செயலிழந்த மின்தறி நெசவுத் தொழிற்சாலை இயந்திரங்கள் (25+) விற்பனைக்குண்டு.
பழைய இரும்பு மொத்த வியாபாரிகளும் தொடர்பு கொள்ளலாம்.
077 190 0781

**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணம் நியூமைதிலி ஜுவலர்ஸில்
உடனடி வேலைவாய்ப்பு. (ஆண்/பெண்) இருபாலாரும்
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை
குறிப்பு: தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண்களும் தேவை. (சகல வசதிகளும் செய்து தரப்படும்.)
ஆர்வமுள்ளவர்கள் எமது ஜுவலர்ஸுக்கு நேரில் வரவும்.
**நியூ மைதிலி ஜுவலர்ஸ்**
இல.38-40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**தென்னிந்திய யாத்திரை**

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியுடான யாத்திரை
ஆரம்பம்: 28.09.2017 யாத்திரீகர் 10 நாள்கள் 16

தரிசிக்கும் இடங்கள்: மலைக்கோட்டை விநாயகர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மா கோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வர், காளகஸ்திதி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவானைக்காவல், மேல்-மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷாணம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழ பகவான், செவ்வாய், ராகு, கேது, சனிபகவான், திருநள்ளாறு, நளன் குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், கோடி லிங்கேஸ்வரர், மைசூர் சாமூண்டீஸ்வரி, நந்தி கோயில், கன்னியாகுமரி, சுசீந்திரம், மணக்குழவிநாயகர், திருக்கடையூர், பஞ்சவடி பிள்ளையார், பட்டிவிநாயகர், வடபழனிமுருகன் உட்பட 60 இக்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR ஜெயலலிதா, அண்ணா சமாதிகளையும், மைசூர் பலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல்கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.

தாங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை: இருவழி விமான ரிக்கட், மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள் AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி. இவை அனைத்தும் எமது சேவை.

மேலும் விவரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும். சகல ஆலயங்களும் பூஜை நேரத்தில் தரிசிக்கலாம். (இத்துடன் யாழ் - கொழும்பு - யாழ் - போக வர வாகன வசதி செய்து தரப்படும்.

மேல் விவரங்களுக்கு:
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
#59,3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11 -
T.P: 077 768 0102, 077 736 2154




## தேசியமட்ட கராத்தே; வடக்குக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், செப். 10

விளையாட்டுத்துறை அமைச்சால் நடத்தப்படும் 43ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண்களுக்கான கராத்தேயில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்த எம். குமார வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றினார்.

தேசிய மட்ட கராத்தே தொடர் கண்டி திகன பிரதேசத்தில் கடந்த புதன் மற்றும் வியாழக் கிழமைகளில் நடைபெற்றது. இதில் 75-84 கிலோ நிறைப் பிரிவில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த முல்லைத்தீவு மாவட்ட வீரர் எம்.குமார வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-422)



## சென். பீற்றர்ஸுக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், செப். 10

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட அஞ்சலோட்டத்தில் 14 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரி அணி தங்கப்பதக்கம் வென்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் நடைபெற்ற 14 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டத்தில கொழும்பு சென். பீற்றர் கல்லூரி அணி48.20செக்கன்களில்ஓடிதங்கப்பதக்கத்தையும் கொழும்பு சென். ஜோசப் கல்லூரி அணி வெள்ளிப் பதக்கத்தையும் மரட்டா ராகுல கல்லூரி அணி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றின.

(ம-422)

# மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தி கிண்ணம் வென்றது இங்கிலாந்து

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெற்று 2:1 என்ற அடிப்படையில் கிண்ணத்தைக் கைப்பற்றியது இங்கிலாந்து.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. முன்னதாக முடிவடைந்த முதல் இரண்டு ஆட்டங்களில் இரண்டு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்றிருந்தமையால் கடந்த 7ஆம் திகதி ஆரம்பமான மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே கிண்ணம் வெல்லும் என்ற நிலை இருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 123 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பவல் 39 ஓட்டங்களையும், கோப் 29 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்ரோக்ஸ் 6 இலக்குகளையும், அன்டர்சன், றோலன்ட் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி 194 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஸ்ரோக்ஸ் 60 ஓட்டங்களையும், புரோட் 38 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில்



றோச் 5 இலக்குகளையும், கோல்டர் 4 இலக்குகளையும், கபிரியேல் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் 177 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக கோப் 62 ஓட்டங்களையும், பவல் 45 ஓட்டங்களையும், கோல்டர் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அன்டர்சன் 7 இலக்குகளையும், புரோட் 2 இலக்குகளையும், றோலன்ட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றமை கைகொடுக்க இங்கிலாந்துக்கு 107 ஓட்டங்களே இலக்காக வைக்கப்பட்டது. அலிஸ்டர் குக் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும், ஸ்ரோன்மன், வெஸ்லி இருவரும் நிலைத்துநின்று சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினர். பிறிதொரு இலக்கை இழக்காமல் வெற்றிபெற்றது இங்கிலாந்து.

இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் அன்டர்சன் இந்த ஆட்டத்தில் தனது 500ஆவது டெஸ்ட் இலக்கை எட்டியமை குறிப்பிடத்தக்கது.

(ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.